# அறிமுகம்

அரேபியாவைச் சமஸ்கிருதத்தில் “யவன” என்றும் பாளியில் “யொன்” என்றும், தமிழில் “சோனகம்” என்றும் கூறப்படுகிறது. இதனால்தான் அரேபிய வம்சாவழியினரான இலங்கை முஸ்லிம்களைச் சிங்களத்தில் “யோனக மினிஸ்ஸு” என்றும் தமிழில் “சோனகர்” என்றும் அழைக்கின்றனர்.

சிங்கள மன்னர்கள் ஒல்லாந்தரை எதிர்த்துப் போராடியவேளையில் அகதிகளாக்கப்பட்ட முஸ்லிம்கள் கிழக்கு மாகாணத்தில் ஏற்கனவே இருந்த சோனகக் குடியிருப்பு பகுதிகளில் குடியேறினர். இப்பிரதேசங்கள் தொலமி தேசப்படத்தில் வத்திக்கான் கைப்பிரதியில் ‘அராபித்த சிவித்த’ என விபரிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

2012இன் குடிசனத்தொகை 20,000,000 என அனுமானிக்கப்படுமானால், இலங்கை முஸ்லிம்களின் ஜனத்தொகை 10% ஆக 2,000,000 பேர் இருப்பர். சிங்கள மொழி பேசப்படும் பிரதேசங்களில் 1,300,000 பேரும் எஞ்சிய 700,000 முஸ்லிம்கள் தமிழ்மொழி பேசப்படும் வட-கிழக்கு மாகாணங்களிலும் வாழ்ந்துவருவர். கிழக்கு மாகாணத்தில் மட்டும் 600,000க்கும் கூடுதலான முஸ்லிம்கள் தமது பாரம்பரிய வசிப்பிடங்களில் இருப்பர்.

இலங்கையின் வரலாற்றில் முஸ்லிம்கள் நாட்டின் சுதந்திரத்தையும் இறைமையையும் பாதுகாக்க சுதேச மக்களோடு ஒன்றிணைந்தே செயல்பட்டிருக்கின்றார்கள். 1505இல் இலங்கையில் போத்துக்கேயர் வருகையைப் புரட்டிப்பார்த்தால், நாட்டைக்காக்க முஸ்லிம்கள் ஆற்றிய முக்கிய பங்கினைக் காணலாம். சிங்களவர் சிலர் போத்துக்கேயருக்கு நாட்டைக் காட்டிக் கொடுத்தபோது, இலங்கைக்காகப் போரிட முஸ்லிம்கள் மாயதுன்னையுடன் இணைந்தனர். மண்ணையோ, பொன்னையோ அல்லது மதிப்பையோ பெற்றுக்கொள்வதற்காக இலங்கை சோனகர் மதம் மாறவுமில்லை மாற்றானுக்கு நாட்டைக் காட்டிக் கொடுக்கவுமில்லை. இந்த தேச விசுவாசத்தை நாங்கள் கடைசிவரை கடைப்பிடித்து வந்துள்ளோம்.

அரசியல்சுயநலவாதிகள் இலங்கை இனப் பிரச்சினையால் பெரிதும் இலாபம் பெற்றுக்கொண்டனர். திரு. பண்டாரநாயக திரு. செல்வநாயகம் இருவரும் பேச்சுவார்த்தை நடத்தி நடைமுறைச்சாத்தியமான தீர்வுகளை அடைந்தவேளை இச்சுயநலவாதிகள் அதனை ‘சிங்களவரை வஞ்சிப்பது’ என வர்ணித்தனர். பின்னர் திரு. டட்லி சேனநாயக – திரு. செல்வநாயகத்தோடு ஒரு உடன்பாட்டுக்கு வந்ததும், அவர் ஒரு தேசத் துரோகி என அழைக்கப்பட்டார். ஜனாதிபதி ஜே. ஆர். ஜயவர்தன அவர்களின் இனப்பிரச்சினை தீர்வுக்கான சர்வகட்சி மாநாட்டுத் தீர்மானங்கள் இலங்கையின் ஒருமைப்பாட்டைச் சிதைப்பதற்கான திட்டமிட்ட சதி எனக் கூறி இனத்துவேசத்திற்குத் தூபமிட்டனர்.

சிறுபான்மை இனத்தவர்களின் உரிமைகளையும், பிரச்சினைகளையும் பெரும்பான்மையினர் தொடர்ந்து புறக்கணித்து வருவதே இன்று இலங்கையில் ஏற்பட்டுள்ள பயங்கரவாத நடவடிக்கைகளுக்கும் பிரிவினைக் கோரிக்கைகளுக்கும் முக்கிய காரணங்களாகும்.

வடக்கு கிழக்கு முஸ்லிம்களால் தெரிவு செய்யப்பட்டு இன்றய அரசாங்கத்தில் உள்ள அமைச்சர்களும் பாராளுமன்றம் மற்றும் மாகாணசபை உறுப்பினர்களும் இனக்கலவரத்தால் நேரடியாகப் பாதிக்கப்பட்ட முஸ்லிம்களின் முக்கிய பிரச்சினைகள்பற்றி இலங்கை இனப்பிரச்சினை தீர்வுக்காக ஏற்படவிருக்கும் பேச்சுவார்த்தையின் போது சுதந்திரமாகவும், உறுதியாகவும் முன்வைப்பார்களா? இதுதான் இன்று கிழக்கு முஸ்லிம்களுக்குள்ள பெரும் சந்தேகமாகும்.

கிழக்கு மாகாண முதலமைச்சர், பொத்துவில் முஸ்லிம்கள் படுகொலை, அக்கரைப்பற்று நுறைச்சோலையில் சவுதி அரேபிய நன்கொடையால் கட்டப்பட்ட சுனாமி வீடுகள், கருங்கொடித்தீவுப் பிரதேசம் அநியாயமாகப் பிரிக்கப்பட்டமை, கல்முனைக் கரையோர மாவட்டம், காத்தான்குடி முஸ்லிம் எல்லைக் கிராமங்கள், மட்டக்களப்பு முஸ்லிம் கொலனி, இனச்சுத்திகரிப்பின் போது சட்டவிரோதமாக அபகரிக்கப்பட்டுள்ள வடகிழக்கு முஸ்லிம்களின் விவசாயக்காணிகள், வீடுவாசல்கள், சொத்துக்கள், மீள்குடியேற்றம், மூதூர் முஸ்லிம்களுக் கெதிராக நடத்தப்பட்ட போர்குற்றங்கள், கிண்ணியா குரங்குபாஞ்சான் பள்ளிவாசல் ஆகிய வடகிழக்கு முஸ்லிம்களின் முக்கிய பிரச்சினைகள்பற்றி வடக்கு கிழக்கு முஸ்லிம்களால் தெரிவு செய்யப்பட்ட முஸ்லிம் பிரதிநிதிகளின் நடவடிக்கைகள் சம்பந்தமாக நாம் கற்றுக்கொண்ட கசப்பான பாடங்கள் ஏராளம் ஏராளம்.

இலங்கை இனப்பிரச்சினை தீர்வுக்காக அரசியல்யாப்பின் 13வது திருத்தத்திற்கும் கூடுதலான அதிகாரங்களைப் பகிர்ந்தளிப்பதற்கும், கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை அமுல் படுத்துவதற்கும் சகல பிரிவினரோடும் பேச்சுவார்த்தை நடத்தி இறுதித் தீர்மானம் எடுப்பதற்க்காக ஒரு பாராளுமன்றத் தெரிவுக்குழுவினை ஏற்படுத்துவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்து வருகிறது.

உத்தேச பாரளுமன்றத் தெரிவுக்குழுப் பேச்சுவார்த்தையின் போது முஸ்லிம் பிரதிநதிகளால் முன்வைக்க வேண்டிய முக்கிய விஷயங்கள் இனப்பிரச்சினையினால் நேரடியாகப் பாதிக்கப்பட்ட வடக்கு கிழக்கு முஸ்லிம்கள் சம்பந்தமாக இருக்கவேண்டியது மிக மிக முக்கியமானதாகும். உடனடியாக நடைமுறைப்படுத்த வேண்டிய அரசியல்யாப்பின் 13வது திருத்தம் - மாகாணங்களுக்கு இன்னும் பகிர்ந்தளிக்கப்படாமல் இருக்கும் காணி, பொலிஸ் அதிகாரங்கள், வடகிழக்கு ஒன்றிணைப்புக்கு கிழக்குமாகாணத்தில் நடத்தபட வேண்டிய சர்வஜன வாக்கெடுப்பு, கிழக்கில் ஏற்படுத்த வேண்டிய முஸ்லிம் பெரும்பான்மை மாகாணசபை போன்ற பிரச்சினைகளே பேச்சுவார்த்தையின் போது வடகிழக்கு முஸ்லிம்கள் சார்பாக முன்வைக்க வேண்டிய அதி முக்கிய விஷயங்களாகும்.


இப்பேச்சுவார்த்தையின் போது சுயஇலாபத்துக்காக அல்லது தனிப்பட்ட அக்கறைகளுக்காக எவரின் தலையீடோ அல்லது நிற்பந்தமோ இருக்கக்கூடாது.

இனப்பிரச்சினை தீர்வுக்கான பேச்சுவார்த்தையில் கலந்துகொள்ள வேண்டிய முஸ்லிம் பிரதிநிதிகள் பற்றிய இறுதி முடிவினை இனக்கலவரத்தினால் நேரடியாகப் பாதிக்கப்பட்ட வடகிழக்கு முஸ்லிம்கள்தான் எடுக்கவேண்டும். அதேசமயம் வடகிழக்குக்கு வெளியில் வாழும் முஸ்லிம்களின் பிரச்சினைகள் பற்றிப்பேசுவதற்கான பிரதிநிதிகளை அப்பிரதேச முஸ்லிம்களே தீர்மானிக்கவேண்டும் என்பதும் ஒரு முக்கிய விஷயமாகும்.

எம்.ஐ.எம். முஹியத்தீன் 02 மே 2012

# 1. கிழக்கு மாகாணம்

கிழக்கு மாகாணம் வடக்கில் மாஓயா(பேராறு)வையும், கிழக்கில் வங்காள விரிகுடாக் கடலையும், தெற்கில் கும்புக்கன் ஓயாவையும், மேற்கில் மொனராகல, பதுளை, மாத்தளை, பொலன்னறுவை மற்றும் அனுராதபுரம் மாவட்டங்களையும் எல்லையாகக் கொண்டுள்ளது.




### தேர்தல் ஆசனங்கள்

**திருகோணமலை மாவட்டம்**

| | | |
|---|---|---|
| 93. சேருவில | சிங்களவர் | - 1 |
| 94. திருகோணமலை | தமிழர் | - 1 |
| 95. மூதூர் | முஸ்லிம் | - 1 |
| மொத்த ஆசனங்கள் | | - 3 |

**மட்டக்களப்பு மாவட்டம்**

| | | |
|---|---|---|
| 96. கல்குடா | தமிழர் | - 1 |
| 97. மட்டக்களப்பு | தமிழர் | - 1 |
| | முஸ்லிம் | - 1 |
| 98. பட்டிருப்பு | தமிழர் | - 1 |
| மொத்த ஆசனங்கள் | | - 4 |

**அம்பாறை மாவட்டம்**

| | | |
|---|---|---|
| 99. அம்பாறை | சிங்களவர் | - 1 |
| 100. சம்மாந்துறை | முஸ்லிம் | - 1 |
| 101. கல்முனை | முஸ்லிம் | - 1 |
| 102. பொத்துவில் | முஸ்லிம் | - 1 |
| | தமிழர் | - 1 |
| மொத்த ஆசனங்கள் | | - 5 |

மொத்த ஆசனங்கள் **-12**

### சனத்தொகை

**திருகோணமலை மாவட்டம்**

| | 1971 | % | 1981 | % |
|---|---|---|---|---|
| பௌத்தர் | 53,533 | 27.9 | 83,143 | 32.4 |
| இந்து | 62,828 | 32.7 | 81,684 | 31.8 |
| முஸ்லிம் | 62,163 | 32.7 | 75,761 | 29.5 |
| கிறிஸ்தவர் | 13,379 | 7.0 | 15,363 | 6.0 |
| வேறு சமயத்தவர் | 86 | 0.0 | 839 | 0.3 |
| மொத்தம் | 191,989 | 100.0 | 256,790 | 100.0 |

**மட்டக்களப்பு மாவட்டம்**

| | 1971 | % | 1981 | % |
|---|---|---|---|---|
| பௌத்தர் | 9,624 | 3.7 | 8,864 | 2.7 |
| இந்து | 167,597 | 64.9 | 219,343 | 66.3 |
| முஸ்லிம் | 62,519 | 24.2 | 79,662 | 24.1 |
| கிறிஸ்தவர் | 18,316 | 7.1 | 22,725 | 6.8 |
| வேறு சமயத்தவர் | 0 | 0.0 | 305 | 0.1 |
| மொத்தம் | 258,056 | 100.0 | 330,899 | 100.0 |

**அம்பாறை மாவட்டம்**

| | 1971 | % | 1981 | % |
|---|---|---|---|---|
| பௌத்தர் | 81,762 | 30.0 | 144,779 | 37.2 |
| இந்து | 57,346 | 21.0 | 74,328 | 19.1 |
| முஸ்லிம் | 126,033 | 46.2 | 161,754 | 41.6 |
| கிறிஸ்தவர் | 7,625 | 2.8 | 7,665 | 2.0 |
| வேறு சமயத்தவர் | 24 | 0.0 | 261 | 0.1 |
| மொத்தம் | 272,790 | 100.0 | 388,787 | 100.0 |

**கிழக்கு மாகாண மொத்தம்**

| | 1971 | % | 1981 | % |
|---|---|---|---|---|
| பௌத்தர் | 144,919 | 20.0 | 236,756 | 24.2 |
| இந்து | 287,771 | 39.8 | 375,355 | 38.4 |
| முஸ்லிம் | 250,715 | 34.8 | 317,177 | 32.6 |
| கிறிஸ்தவர் | 39,320 | 5.4 | 45,753 | 4.7 |
| வேறு சமயத்தவர் | 110 | 0.0 | 1,405 | 0.1 |
| மொத்தம் | **722,835** | **100.0** | **976,476** | **100.0** |

இம்மாகாணம் தற்போது 3,839 சதுர மைல் நிலப்பரப்பையும், திருகோணமலை, மட்டக்களப்பு மற்றும் அம்பாரை மாவட்டங்களையும் உள்ளடக்குகிறது. நாடு சுதந்திரமடைந்த காலகட்டத்தில் 1959 குடிசன மதிப்பு விபரங்களின்படி கிழக்கு மாகாணத்தில் ஜனத்தொகை பின்வருமாறு அமைந்திருந்தது.

| | **திருகோணமலை மாவட்டம்** | **மட்டக்களப்பு மாவட்டம்** | **கிழக்கு மாகாணம்** |
|---|---|---|---|
| தமிழர்கள் | 33,796(46.47%) | 102,264(51.15%) | 136,060(49.90%) |
| முஸ்லிம்கள் | 23,219(31.93%) | 85,805(42.92%) | 109,024(40.00%) |
| சிங்களவர் | 15,706(21.60%) | 11,850(5.93%) | 27,556(10.10%) |

1981இல் குடிசன மதிப்பு இடம்பெற்றபோது மட்டக்களப்பு மாவட்டம், தற்போதைய மட்டக்களப்பு மற்றும் அம்பாரை மாவட்டங்களாக பிரிக்கப்பட்டிருந்தது.

## 1981இல் கிழக்கு மாகாணத்தின் ஜனத்தொகை விபரம் பின்வருமாறு

| | **திருமலை மாவட்டம்** | **மட்டக்களப்பு மாவட்டம்** | **அம்பாரை மாவட்டம்** | **கிழக்கு மாகாணம்** |
|---|---|---|---|---|
| தமிழர்கள் | 93,510(39.78%) | 238,216(72.59%) | 79,725(20.57%) | 411,451(42.42%) |
| முஸ்லிம்கள் | 74,403(29.26%) | 79,317(24.17%) | 161,465(41.66%) | 315,185(32.49%) |
| சிங்களவர்கள் | 89,341(33.96%) | 10,646(3.24%) | 146,388(37.77%) | 246,375(25.09%) |
| மொத்தம் | 257,254 | 328,179 | 387,578 | 973,011 |


1949க்கும் 1981க்குமிடையில் தமிழர் ஜனத்தொகை 136,059ல் இருந்து 411,451ஆக 302% அதிகரிப்பும், முஸ்லிம் ஜனத்தொகை 109,024ல் இருந்து 315,201ஆக 289% அதிகரிப்பும், சிங்களவர் ஜனத்தொகை 27,556ல் இருந்து 243,358ஆக 883% அதிகரிப்பும் ஏற்பட்டிருப்பதை அவதானிக்கலாம். குறிப்பிட்ட காலகட்டத்தில் நாடளாவிய ரீதியில் சிங்கள மக்களின் ஜனத்தொகை அதிகரிப்பு 238% மாத்திரமே.

## மாவட்ட ரீதியாகவும் தேர்தல் தொகுதி ரீதியாகவும் 2004ஆம் ஆண்டு பதிவு செய்யப்பட்ட முஸ்லிம் வாக்காளர் எண்ணிக்கை

| | **தொகுதி** | **பதியப்பட்ட வாக்கு** | **மொத்தம்** | **முஸ்லிம்கள் %** | **எண்ணிக்கை** |
|---|---|---|---|---|---|
| **(1) தேர்தல்** | **மாவட்ட இல. 13 திகாமடுல்ல** | | | | |
| A. | அம்பாரை | 1 | 132,371 | 0.08 | 1,058 |
| B. | சம்மாந்துறை | 1 | 63,166 | 74.8 | 47,248 |
| C. | கல்முனை | 1 | 60,456 | 69.6 | 42,077 |
| D. | பொத்துவில் | 2 | 123,051 | 50.6 | 62,263 |
| | **மொத்தம்** | **5** | **379,044** | **39.8** | **152,646** |
| **(2) தேர்தல்** | **மாவட்ட இல. 12 மட்டக்களப்பு** | | | | |
| A. | கல்குடா | 1 | 86,626 | 29.3 | 25,381 |
| B. | மட்டக்களப்பு | 2 | 141,190 | 34.2 | 48,286 |
| C. | பட்டிருப்பு | 1 | 76,112 | 0.7 | 532 |
| | **மொத்தம்** | **4** | **303,928** | **24.6** | **74,199** |
| **(3) தேர்தல்** | **மாவட்ட இல. 14 திருகோணமலை** | | | | |
| A. | சேருவாவில | 1 | 63,161 | 13.7 | 8,653 |
| B. | திருமலை | 1 | 86,277 | 18.7 | 16,133 |
| C. | மூதூர் | 1 | 74,869 | 66.1 | 49,488 |
| | **மொத்தம்** | **3** | **224,307** | **33.2** | **74,274** |

சிங்களச் சனத்தொகையின் இப்பாரிய அதிகரிப்பு அரச உதவியோடு மேற்கொள்ளப்பட்ட பிரதான நீர்ப்பாசனத் திட்டங்களின் கீழான கல்ஓயாத் திட்டம், பன்னல ஓயாத்திட்டம், அம்பலம் ஓயாத் திட்டம் போன்ற அம்பாரை மாவட்டத் திட்டங்களின் கீழும், கந்தளாய்த் திட்டம், அல்லைத் திட்டம், மொரவெவ முதலிக்குளத் திட்டம், பதவிய திட்டம் (பகுதி) மற்றும் மஹாதியுலுவெவ முதலிக்குளம் திட்டம் போன்ற திருகோணமலை மாவட்டத் திட்டங்களின் கீழும் ஏற்படுத்தப்பட்ட சிங்களக் குடியேற்றங்களின் விளைவாகும்.


## பழைய மட்டக்களப்பு மாவட்டம்




சனத்தொகை

| | 1971 | % | 1981 | % |
|---|---|---|---|---|
| பௌத்தர் | 91,386 | 17.2 | 153,643 | 21.3 |
| இந்து | 224,943 | 42.4 | 293,671 | 40.8 |
| முஸ்லிம் | 293,630 | 55.3 | 241,416 | 33.5 |
| கிறிஸ்தவர் | 25,941 | 4.9 | 30,390 | 4.2 |
| வேறு சமயத்தவர் | 24 | 0.0 | 566 | 0.1 |
| மொத்தம் | 530,846 | 100.0 | 719,686 | 100.0 |

# அம்பாரை மாவட்டம்




## தேர்தல் ஆசனங்கள்

| | | |
|---|---|---|
| 99. அம்பாரை | சிங்களவர் | - 1 |
| 100. சம்மாந்துறை | முஸ்லிம் | - 1 |
| 101. கல்முனை | முஸ்லிம் | - 1 |
| 102. பொத்துவில் | முஸ்லிம் | - 1 |
| | தமிழர் | - 1 |
| மொத்த ஆசனங்கள் | | - 5 |


## சனத்தொகை

| | 1971 | % | 1981 | % |
|---|---|---|---|---|
| பௌத்தர் | 81,762 | 30.0 | 144,779 | 37.2 |
| இந்து | 57,346 | 21.0 | 74,328 | 19.1 |
| முஸ்லிம் | 126,033 | 46.2 | 161,754 | 41.6 |
| கிறிஸ்தவர் | 7,625 | 2.8 | 7,665 | 2.0 |
| வேறு சமயத்தவர் | 24 | 0.0 | 261 | 0.1 |
| மொத்தம் | 272,790 | 100.0 | 388,787 | 100.0 |

# மட்டக்களப்பு மாவட்டம்

### தேர்தல் ஆசனங்கள்


| | | | |
|---|---|---|---|
| 96. | கல்குடா | தமிழர் | - 1 |
| 97. | மட்டக்களப்பு | தமிழர் | - 1 |
| | | முஸ்லிம் | - 1 |
| 98. | பட்டிருப்பு | தமிழர் | - 1 |
| | மொத்த ஆசனங்கள் | | **- 4** |




### சனத்தொகை

| | 1971 | % | 1981 | % |
|---|---|---|---|---|
| பௌத்தர்கள் | 9,624 | 3.7 | 8,864 | 2.7 |
| இந்து | 167,597 | 64.9 | 219,343 | 66.3 |
| முஸ்லிம் | 62,519 | 24.2 | 79,662 | 24.1 |
| கிறிஸ்தவர் | 18,316 | 7.1 | 22,725 | 6.8 |
| வேறு சமயத்தவர் | 0 | 0.0 | 305 | 0.1 |
| மொத்தம் | 258,056 | 100.0 | 330,899 | 100.0 |

# திருகோணமலை மாவட்டம்





## தேர்தல் ஆசனங்கள்

| | | |
|---|---|---|
| 93. சேருவில | சிங்களவர் | - 1 |
| 94. திருகோணமலை | தமிழர் | - 1 |
| 95. மூதூர் | முஸ்லிம் | - 1 |
| மொத்த ஆசனங்கள் | | **- 3** |

## சனத்தொகை


| | 1971 | % | 1981 | % |
|---|---|---|---|---|
| பௌத்தர் | 53,533 | 27.9 | 83,143 | 32.4 |
| இந்து | 62,828 | 32.7 | 81,684 | 31.8 |
| முஸ்லிம் | 62,163 | 32.7 | 75,761 | 29.5 |
| கிறிஸ்தவர் | 13,379 | 7.0 | 15,363 | 6.0 |
| வேறு சமயத்தவர் | 86 | 0.0 | 839 | 0.3 |
| மொத்தம் | 191,989 | 100.0 | 256,790 | 100.0 |

## அம்பாரை மாவட்ட பிரதேச செயலாளர் பிரிவுகள் காணி விஸ்தீரணமும் சனத்தொகையும் - 2007





| இல. | டி.எஸ். பிரிவு | மொத்த சனத்தொகை | மாவட்ட % | உள்ள காணி விஸ்தீரணம் ச.கி.மீ | உரித்தான காணி விஸ்தீரணம் ச.கி.மீ | சிங்களவர் | | முஸ்லிம்கள் | | தமிழர் | | பதிவு செய்யப்பட்ட முஸ்லிம் வாக்காளர்கள் 2008 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | % | | % | | % | |
| | பாணமபற்று | | | | | | | | | | | |
| 01 | லஹுகல | 8259 | 1.35 | 616.87 | 59.95 | 7500 | 90.8 | - | - | 758 | 9.2 | |
| 02 | பொத்துவில் | 33625 | 5.51 | 367.50 | 244.09 | 667 | 2.0 | 26493 | 78.8 | 6444 | 19.2 | 18,264 |
| | அக்கரைப்பற்று | | | | | | | | | | | |
| 03 | திருக்கோவில் | 24972 | 4.09 | 190.65 | 181.28 | 27 | 0.1 | - | - | 24934 | 99.8 | |
| 04 | ஆலயடிவேம்பு | 22289 | 3.65 | 127.50 | 161.80 | 142 | 0.6 | 42 | 0.2 | 22085 | 99.1 | |
| 05 | அக்கரைப்பற்று | 37070 | 6.07 | 102.18 | 269.10 | 119 | 0.3 | 36864 | 99.4 | 79 | 0.2 | 25,402 |
| 06 | அட்டாளைச்சேனை | 39721 | 6.50 | 52.50 | 288.35 | 1967 | 5.0 | 37349 | 94.0 | 404 | 1.0 | 25,671 |
| | நிந்தவூர்-கரவாகுப்பற்று | | | | | | | | | | | |
| 07 | நிந்தவூர் | 25652 | 4.20 | 55.62 | 186.22 | 9 | 0.0 | 24506 | 95.5 | 1129 | 4.4 | 16,833 |
| 08 | காரைதீவு | 16656 | 2.73 | 31.25 | 120.91 | 23 | 0.1 | 6534 | 39.2 | 10098 | 60.6 | 4,629 |
| 09 | சாய்ந்தமருது | 25147 | 4.12 | 66.87 | 704.46 | 3 | 0.0 | 25144 | 100.0 | - | - | 17,254 |
| 10 | கல்முனை | 42852 | 7.02 | | | 48 | 0.1 | 42689 | 99.6 | 115 | 0.3 | 29,458 |
| 11 | கல்முனை தமிழ் | 29025 | 4.75 | | | 248 | 0.9 | 1957 | 6.7 | 26818 | 92.4 | 1,263 |
| | சம்மாந்துறைபற்று | | | | | | | | | | | |
| 12 | நாவிதன்வெளி | 18436 | 3.02 | 256.70 | 631.67 | 61 | 0.3 | 6026 | 32.7 | 12349 | 67.0 | 4,208 |
| 13 | சம்மாந்துறை | 55592 | 9.10 | | | 81 | 0.1 | 48566 | 87.4 | 6939 | 12.5 | 33,667 |
| 14 | இறக்காமம் | 13006 | 2.13 | | | 759 | 5.8 | 11948 | 91.9 | 296 | 2.3 | 8,248 |
| | வெவகம்பற்று | | | | | | | | | | | |
| 15 | உஹன | 53262 | 8.72 | 415.62 | 386.64 | 53222 | 99.9 | 13 | 0.0 | 19 | 0.0 | |
| 16 | அம்பாரை | 39268 | 6.43 | 225.00 | 285.06 | 38668 | 98.5 | 317 | 0.8 | 245 | 0.6 | |
| 17 | தமண | 35705 | 5.85 | 426.25 | 259.19 | 35560 | 99.6 | 116 | 0.3 | 16 | 0.0 | |
| | பிந்தனபற்று | | | | | | | | | | | |
| 18 | தெஹியத்தகண்டி | 55930 | 9.16 | 432.50 | 406.01 | 55716 | 99.6 | 116 | 0.2 | 87 | 0.2 | |
| 19 | பதியதலாவ | 16451 | 2.69 | 466.37 | 119.42 | 16365 | 99.5 | 50 | 0.3 | 28 | 0.2 | |
| 20 | மஹஓய | 17801 | 2.91 | 600.00 | 129.22 | 17753 | 99.7 | 36 | 0.2 | 12 | 0.1 | |
| | மொத்தம் | **610719** | **100.00** | **4433.38** | **4433.38** | **228938** | 37.5 | **268766** | 44.0 | **112855** | 18.5 | **184,897** |

## மட்டக்களப்பு மாவட்ட பிரதேச செயலாளர் பிரிவுகள் காணி விஸ்தீரணமும் சனத்தொகையும் - 2007




| இல. | டி.எஸ். பிரிவு | மொத்த சனத்தொகை | மாவட்ட % | உள்ள காணி விஸ்தீரணம் ச.கி.மீ | உரித்தான காணி விஸ்தீரணம் ச.கி.மீ | சிங்களவர் | | முஸ்லிம்கள் | | தமிழர் | | பதிவு செய்யப்பட்ட முஸ்லிம் வாக்காளர்கள் 2008 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | 2007 | % | 2007 | % | 2007 | % | |
| | கோரலைப்பற்று | | | | | | | | | | | |
| 01 | கோரலைப்பற்று வடக்கு | 21263 | 3.80 | 550.00 | 100.01 | 1 | 0.0 | - | - | 21262 | 100.0 | |
| 02 | கோரலைப்பற்று மத்தி | 24510 | 4.38 | | 115.33 | 84 | 0.3 | 23421 | 95.6 | 1005 | 4.1 | 14,014 |
| 03 | கோரலைப்பற்று | 44226 | 7.90 | 484.50 | 208.01 | 76 | 0.2 | 35 | 0.1 | 44115 | 99.7 | |
| 04 | கோரலைப்பற்று மேற்கு | 45495 | 8.12 | 176.00 | 213.98 | 87 | 0.2 | 44253 | 97.3 | 1155 | 2.5 | 26,358 |
| 05 | கோரலைப்பற்றுதெற்கு (கிரான்) | 19659 | 3.51 | | 92.41 | 7 | 0.0 | - | - | 19652 | 100.0 | |
| | ஏராவூர்பற்று | | | | | | | | | | | |
| 06 | ஏராவூர் நகரம் | 25024 | 4.47 | 3.74 | 117.69 | 4 | 0.0 | 21447 | 85.7 | 3573 | 14.3 | 12,678 |
| 07 | ஏராவூர்பற்று | 75886 | 13.55 | 634.10 | 356.91 | 1430 | 1.9 | 13333 | 17.6 | 61123 | 80.5 | 8,007 |
| | மண்முனைப்பற்று | | | | | | | | | | | |
| 08 | மண்முனை வடக்கு | 88459 | 15.80 | 75.90 | 416.05 | 226 | 0.3 | 3925 | 4.4 | 84308 | 95.3 | 2,336 |
| 09 | காத்தான்குடி | 39523 | 7.06 | 3.89 | 185.89 | - | - | 39517 | 100.0 | 6 | 0.0 | 23,689 |
| 10 | மண்முனைப்பற்று | 30747 | 5.49 | 31.72 | 144.61 | 1 | 0.0 | 6541 | 21.3 | 24205 | 78.7 | 4,004 |
| | மண்முனை மேற்கு | | | | | | | | | | | |
| 11 | மண்முனை மேற்கு | 25025 | 4.47 | 292.70 | 117.70 | 1 | 0.0 | - | - | 25024 | 100.0 | |
| 12 | மண்முனை தென்மேற்கு | 23988 | 4.28 | 161.60 | 112.82 | 199 | 0.8 | - | - | 23789 | 99.2 | |
| | மண்முனை எருவில்பற்று | | | | | | | | | | | |
| 13 | போரைதீவுப்பற்று | 38282 | 6.84 | 167.20 | 180.05 | 354 | 0.9 | - | - | 37928 | 99.1 | |
| 14 | மண்முனைதெற்கு எருவில்பற்று | 57917 | 10.34 | 52.50 | 272.40 | 18 | 0.0 | 3 | 0.0 | 57896 | 100.0 | |
| | மொத்தம் | **560004** | **100.00** | **2633.85** | **2633.85** | **2488** | 0.4 | **152475** | 27.2 | **405041** | 72.3 | **91,086** |

## திருகோணமலை மாவட்ட பிரதேச செயலாளர் பிரிவுகள் காணி விஸ்தீரணமும் சனத்தொகையும் - 2007




| இல. | டி.எஸ். பிரிவு | மொத்த சனத்தொகை 2007 | மாவட்ட % | உள்ள காணி விஸ்தீரணம் ச.கி.மீ | உரித்தான காணி விஸ்தீரணம் ச.கி.மீ | சிங்களவர் | | முஸ்லிம்கள் | | தமிழர் | | பதிவு செய்யப்பட்ட முஸ்லிம் வாக்காளர்கள் 2008 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | 2007 | % | 2007 | % | 2007 | % | |
| | கட்டுக்குளம்பற்று கிழக்கு | | | | | | | | | | | |
| 01 | குச்சவெளி | 26327 | 7.87 | 313.30 | 207.14 | 412 | 1.6 | 18971 | 72.1 | 6935 | 26.3 | 13,503 |
| 02 | பதவிசிறிபுர | 10666 | 3.19 | 217.10 | 83.92 | 10664 | 100.0 | 0 | 0.0 | 1 | 0.0 | |
| | கட்டுக்குளம்பற்று மேற்கு | | | | | | | | | | | |
| 03 | கோமரங்கடவல | 5879 | 1.76 | 285.00 | 46.26 | 5855 | 99.6 | 0 | 0.0 | 22 | 0.4 | |
| 04 | மொரவெவ | 5563 | 1.66 | 322.40 | 43.77 | 4065 | 73.1 | 954 | 17.1 | 544 | 9.8 | 723 |
| | நகரும் சார்ந்த இடமும் | | | | | | | | | | | |
| 05 | நகரும் சார்ந்த இடமும் | 89046 | 26.63 | 148.00 | 700.62 | 16837 | 18.9 | 12483 | 14.0 | 59633 | 67.0 | 8,922 |
| | கிண்ணியா பிரிவு | | | | | | | | | | | |
| 06 | கிண்ணியா | 61558 | 18.41 | 146.90 | 484.34 | 0 | 0.0 | 59055 | 95.9 | 2503 | 4.1 | 42,681 |
| 07 | தம்பலகாமம் | 27572 | 8.25 | 244.40 | 216.94 | 6005 | 21.8 | 16802 | 60.9 | 4352 | 15.8 | 12,057 |
| | கொட்டியார்பற்று | | | | | | | | | | | |
| 08 | மூதூர் | 47132 | 14.10 | 179.40 | 370.84 | 146 | 0.3 | 34080 | 72.3 | 12531 | 26.6 | 24,596 |
| 09 | சேருவில | 11142 | 3.33 | 279.00 | 87.67 | 7152 | 64.2 | 2079 | 18.7 | 1876 | 16.8 | 1,447 |
| 10 | ஈச்சிலம்பற்று | 6617 | 1.98 | 98.00 | 52.06 | 0 | 0.0 | 0 | 0.0 | 6617 | 100.0 | |
| | கந்தளாய் பிரிவு | | | | | | | | | | | |
| 11 | கந்தளாய் | 42861 | 12.82 | 397.30 | 337.23 | 33630 | 78.5 | 7595 | 17.7 | 1605 | 3.7 | 5,546 |
| | மொத்தம் | **334363** | **100.00** | **2630.80** | **2630.80** | **84766** | 25.4 | **152019** | 45.5 | **96619** | 28.9 | **109,475** |

# 2. இலங்கை முஸ்லிம்களும் அரசியலமைப்புச் சீர்திருத்தங்களும்

முஸ்லிமகள் எப்பொழுதும் நாட்டுக்கு விசுவாசமாக இருந்து வந்துள்ளனர். அவர்கள் அந்நிய ஆக்கிரமிப்பாளர்களுக்கெதிரான போராட்டங்களில் எப்பொழுதும் முன்னணியில் இருந்துள்ளனர். இழந்த சுதந்திரத்தை மீட்டெடுப்பதிலும், வென்றெடுத்த சுதந்திரத்தை வலுப்படுத்துவதிலும் கணிசமான பங்களிப்புச் செய்துள்ளனர். போர்த்துக்கேயர் இலங்கையை ஆக்கிரமித்தபோது முஸ்லிம்கள் மாயாதுன்னையின் படைகளோடு இணைந்து போரிட்டனர். கோட்டையிலாயினும் சரி, கண்டியிலாயினும் சரி சிங்களவரின் எதிர்ப்பு இயக்கங்கள் அனைத்திலும் முஸ்லிம்களும் இடம்பெற்றிருந்தனர். இதனால் முஸ்லிம்கள் குடியேற்றவாத ஆட்சியாளரின் தொடர் தொல்லைகளுக்கு ஆளாயினர்.

சுமார் மூன்று நூற்றாண்டு காலமாக 1505 இல் போர்த்துக்கேயரின் வருகை முதல் 1795 இல் ஒல்லாந்தர் நாட்டைவிட்டு நீங்கியது வரையில் கரையோர மாகாண முஸ்லிம்கள் ஆக்கிரமிப்பாளரின் கரங்களில் சொல்லொணாத் துயர்களுக்காளாயினர். போர்த்துக்கேயரும் ஒல்லாந்தரும் முஸ்லிம்கள் மீது விதித்திருந்த வேண்டாத குடியியல் மற்றும் பொருளாதார கட்டுப்பாடுகளை பிரித்தானியர் நீக்கினர். ஆயினும் சட்ட மன்றத்தில் முஸ்லிம் மக்கள் அப்பொழுது தமிழ்பேசும் மக்கள் அனைவரினதும் தலைவர் என்று கருதப்பட்ட திரு. பொன்னம்பலம் இராமநாதன் அவர்களால் பிரதிநிதித்துவப்படுத்தப்பட்டனர். தமது நலன்களை ஒரு தமிழர் பிரதிநிதித்துவப்படுத்துவதை விரும்பாத முஸ்லிம்கள் நாட்டின் சட்டமன்றத்தில் தமது சொந்தப் பிரதிநிதித்துவத்திற்காகக் கிளர்ச்சி செய்யத் தொடங்கினர். இக்கிளர்ச்சி 1898 இல் பலனளித்ததோடு, திரு. டபிள்யூ. எம். ஆப்துல் ரகுமான் முஸ்லிம் நலன்களைப் பிரதிநிதித்துவம் செய்வதற்காக நியமிக்கப்பட்டார்.

இலங்கையில் பிரித்தானியர் ஆட்சிக்காலத்தில் நிலவிய இன அமைதியும் சமாதானமும். 1915 இல் இடம்பெற்ற சிங்கள – முஸ்லிம் கலவரங்களால் சின்னாபின்னமாகியது. 1915 இன் கலவரங்களின் பிரதான விளைவு இலங்கை வாழ் முஸ்லிம்கள் அநாதரவாக விடப்பட்டுள்ள உணர்வாகும். 1915 கலகத்தின் தாக்கமும் அதனால் ஏற்பட்ட கசப்பான ஞாபகங்களும் முஸ்லிம்களிடையே பெரும் விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தியதோடு, இலங்கை முஸ்லிம்களின் இனத்துவ உரிமைகளைப்பாதுகாப்பதற்கெனப் பல்வேறு அமைப்புகளை உருவாக்க அவர்களுக்கு ஊக்கமளித்தன. அகில இலங்கை சோனகர் சங்கமும், அகில இலங்கை முஸ்லிம் லீக்கும் முறையே 1922, 1924 ஆம் ஆண்டுகளில் ஸ்தாபிக்கப்பட்டன.

1924 இல் மனிங் சீர்திருத்தங்களின் பிரகாரம் சட்டமன்றத்திலிருந்த உத்தியோகப் பற்றற்ற அங்கத்தினரின் தொகை 37 ஆக அதிகரிக்கப்பட்டது. அவர்களில் 6 பேர் இன அடிப்படையில் நியமிக்கப்படவிருந்தனர். தீவின் முழு முஸ்லிம் சமூகத்தினராலும் 3 முஸ்லிம்கள் தெரிவு செய்யப்பட்டனர். 1924 இற்குப் பின் சட்ட மன்றத்தில் இன அடிப்படையில் நியமனம் பெற்ற அங்கத்தினர்கள் முஸ்லிம்களின் நலன்களைப் பிரதிநிதித்துவம் செய்யத் தொடங்கிய காலகட்டத்தில்தான் முஸ்லிம் மக்களுக்கான கல்வி குறித்துச் சிறிது சிந்திக்கப்பட்டதோடு, முஸ்லிம் விவசாயிகளுக்குப் பயிர்ச் செய்கைக்கான காணிகளும் வழங்கப்பட்டன. நீதியரசர் எம்.ரீ. அக்பரின் தலைமையில் முஸ்லிம் சட்டக்குழு ஏற்படுத்தப்பட்டு முஸ்லிம் விவாக, விவாகரத்துக் கட்டளைச் சட்டம், முஸ்லிம் மரணசாதனமில்லாப் பின்னுரிமைப்பேறு மற்றும் வக்பு கட்டளைச் சட்டங்கள் நிறைவேறின.

டொனமூர் ஆணைக்குழு இன அடிப்படையிலான பிரதிநிதித்துவங்களை நீக்கி, 21 வயதுக்கு மேற்பட்ட அனைவருக்கும் வாக்குரிமை வழங்கி, தேர்தல் மாவட்டங்களை உருவாக்குவதற்கான விதந்துரைப்பைச் செய்து, சட்டமன்றத்துக்குப் பதிலாக அரச மன்றத்தைப் பதிலீடு செய்தது. 1931 மே – ஜூனில் நடந்த தேர்தலின்போது அரச மன்றத்துக்கு மட்டக்களப்பு தெற்கிலிருந்து ஒரே ஒரு முஸ்லிம் அங்கத்தவர் மாத்திரம் தெரிவாகினார். டொனமூர் ஆணைக்குழு முஸ்லிம் மக்களின் நிலையை மோசமாக்கியது குறித்து முஸ்லிம் சமூகம் திருப்தி கொள்ளவில்லை.

1936 இல் அரச மன்றத்துக்குத் தேர்தல் இடம் பெற்றபோது முஸ்லிம் வேட்பாளர் எவருமே வெற்றி பெறவில்லை. ஆயினும், ஏ.ஆர்.ஏ ராஸிக் அவர்களும், ரீ.பி. ஜாயா அவர்களும் முஸ்லிம் பிரதிநிதிகளாக நியமனம் பெற்றனர். சிங்கள பௌத்தர்களின் ஆதிக்கத்தின் கீழிருந்த மந்திரி சபையின் மதியுரையின்பேரில் தேசாதிபதி இந்த நியமனங்களைச் செய்தார். வேறுவார்த்தைகளில் கூறுவதாயின் முஸ்லிம் பிரதிநிதிகள் சிங்கள சமூகத்தின் தலைவர்களாலேயே தேர்ந்தெடுக்கப்பட்டனர். இதனால் அந்த முஸ்லிம் பிரதிநிதிகளின் விசுவாச உணர்வு கூடுதலாக அவர்களின் காப்பாளர் மீதான ஒன்றாகவிருந்ததேயொழிய, அவர்கள் பிரதிநிதித்துவம் செய்ய வேண்டுமென்று எதிர்பார்க்கப்பட்ட முஸ்லிம் சமூகம் மீதான ஒன்றாகவிருக்கவில்லை. இந்த முறைமை முஸ்லிம் சமூகத்தின் அபிலாஷைகளோடு சிறிதும் பரிச்சயமற்ற முஸ்லிம் பிரதிநிதிகள் தோன்றுவதற்கு வழிசமைத்தது. ஆகவே டொனமூர் ஆணைக் குழு இனரீதியான பிரதிநிதித்துவத்தை நீக்கியவுடன், நேரடியாகத் தெரிவுசெய்யப்படும் முஸ்லிம் பிரதிநிதித்துவத்துக்கான கிளர்ச்சி ஆரம்பித்தது.

முஸ்லிம்கள் மத்தியிலிருந்த சகல அரசியல் பிரிவுகளையும் ஒன்றிணைத்த அகில இலங்கை முஸ்லிம் அரசியல் மாநாடு 1945 பெப்ரவரி 05 ஆந் திகதி சோல்பரி ஆணைக்குழுவைச் சந்தித்தது அவர்கள் இலங்கை முஸ்லிம்களின் இனத்துவ உரிமைகளை பாதுகாப்பதற்கு இன ரீதியான பிரதிநிதித்துவம் மீண்டும் கொண்டுவரப்படல் வேண்டுமென்று கோரினர்.

சோல்பரி ஆணைக்குழுவினர் புதிய அரசியலமைப்பின் கீழ் சிறுபான்மையினர் நிலைமை குறித்துப் பெருங்கரிசனையை வெளியிட்டதோடு, தேர்தல் தொகுதிகளில் சிறுபான்மையினர் பலம் குறைவாக இருக்குமிடங்களில், பல அங்கத்தினர் தொகுதிகளை ஏற்படுத்தும் விதத்தில் தேர்தல் தொகுதி எல்லைகளை வரைந்து சிறுபான்மையோருக்குப் போதிய பிரதிநிதித்துவம் வழங்க முடியுமென்று நம்பிகை தெரிவித்தனர். குறிப்பாக முஸ்லிம்கள் நாடு முழுவதும் சிதறிக்கிடந்தமையால் இதைச் செய்ய எண்ணினர். அது, பெரும்பான்மையோர் சிறுபான்மையினங்களின் நலன்களுக்கு விரோதமாகச் சட்டவாக்க நடவடிக்கைகளில் இறங்கத் தூண்டப்படும்போது அத்தகைய சட்டவாக்கங்களுக்கெதிராகச் சிறுபான்மையினங்களுக்குப் பாதுகாப்பு ஏற்பாடுகளையும் வழங்கியது.

1970 மே 27 ஆம் திகதி இடம்பெற்ற பொதுத் தேர்தலில் சோல்பரி அரசியலமைப்பை நீக்குமாறு பணிப்பாணை பெற்ற ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி ஒரு புதிய அரசியலமைப்பை வரைந்தது. ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி பாராளுமன்றத்தைத் தேசிய அரசுப் பேரவையாகப் பிரகடனம் செய்ததோடு, சோல்பரி அரசியலமைப்பு சிறுபான்மையினங்களின் பாதுகாப்புக்கென வழங்கியிருந்த சில முக்கிய ஏற்பாடுகளையும் நீக்கியது.

சோல்பரி அரசியலமைப்பில் சிறுபான்மையினங்களுக்குச் சில பாதுகாப்புகளை வழங்கவென வடிவமைக்கப்பட்டிருந்த பிரிவு 29(2) மற்றும் (3) இன் ஏற்பாடுகள் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி குடியரசு அரசியலமைப்பில் இடம்பெறவில்லை. பிரதிநிதித்துவம் பெறாத நலன்களைப் பிரதிநிதித்துவம் செய்வதற்கு அங்கத்தினர்களை நியமனஞ் செய்யும் ஏற்பாடுகளும் குடியரசு அரசியலமைப்பில் மீள இடம்பெறவில்லை. சிறுபான்மையின மக்கள் தமது கருத்துக்களையும் மனக்குறைகளையும் வெளியிடுவதற்கு ஒரு மேடையாக உபயோகித்துவந்த ‘செனட்’ சபையும் புதிய அரசியலமைப்பில் இல்லாதொழிக்கப்பட்டது.

1977 ஜூலை 21 ஆந் திகதி இடம்பெற்ற பொதுத் தேர்தலில் வெற்றிபெற்ற ஜே.ஆர். ஜயவர்தனவின் தலைமையிலான ஐக்கிய தேசியக் கட்சி 1978 செப்டம்பர் 7 ஆம் திகதி ஒரு புதிய அரசியலமைப்பை வரைந்தது. சிறுபான்மையினருக்கான பாதுகாப்புகள் 1972 இன் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி அரசியலமைப்பை ஒத்ததாகவே இருந்தது. இரு அரசியலமைப்புகளுமே சோல்பரி அரசியலமைப்பின் 29 ஆம் பிரிவின் ஏற்பாடுகளை மீளக் கொணர்வதையும் நியமன அங்கத்தவர் கோட்பாட்டை மீளவும் ஏற்படுத்துவதையும் மறுத்தன, தேர்தல் மாவட்ட எல்லைகள் மீள்வரைவு, விகிதாசாரப் பிரதிநிதித்துவத் தேர்தல் முறைமை என்பவை ஐ.தே.க. – ஜயவர்தன அரசியலமைப்பினால் அறிமுகம் செய்யப்பட்ட சிறுபான்மையினருக்குக் கூடுதலான தீங்கு

விளைவிக்கும் போக்கிலான ஏற்பாடுகளாகும். இவை முஸ்லிம் சமூகம் ஒன்றரை நூற்றாண்டு காலத்துக்கு மேலாக இந்த நாட்டில் அனுபவித்துவந்த உரிமைகளைச் சிதைத்துச் சீர்குலைத்துவிட்டது.

## சுதந்திர இலங்கையில் முஸ்லிம்களின் அவல நிலை

பிரித்தானிய அரசு இலங்கைக்குச் சுதந்திரம் வழங்குவதற்கு, டொமினியன் அந்தஸ்துச் சட்டவரைவுக்கு 75% ஆதரவை வலியுறுத்தியது. சிறுபான்மையோர். தமது ஆதரவை வழங்கினாலன்றி இது நடைபெற்றிருக்க முடியாத ஒரு விடயமாகும். வேறு சிறுபான்மையினரைப் போலன்றி, முஸ்லிம்கள் தமக்குப் பாதுபாப்புக்கள் தேடுவதைவிட இலங்கைக்குச் சுதந்திரம் பெற்றுக்கொள்வது முக்கியமென நினைத்தனர். இதனால் ஒரு தீர்க்கமான நேரத்தில் துரோகம் செய்யாது சிங்களவர்களோடு சேர்ந்து உறுதியாக நின்றனர்.

ஆரசியல் அதிகாரம் சனத்தொகை யதார்த்தங்களின் பிரகாரம் எப்பொழுதும் பெரும்பான்மை இனத்தவராகிய சிங்களவரின் கைகளிலேயே இருந்து வந்துள்ளது. இது சுதந்திரம் பெற்ற நாள் தொடக்கம் அடுத்தடுத்துப் பதவிக்கு வந்த அரசாங்கங்களினால் சிறுபான்மையினராகிய தமிழ், முஸ்லிம் மக்களுக்குப் பாரதூரமான முறையில் பாரபட்சம் விளைவிக்கும் நிலைக்கே இட்டுச் சென்றுள்ளது. சிறுபான்னையினரின் தேவைகள், அபிலாஷைகளை ஏற்று அங்கீகரித்து அவற்றை உரிய முறையில் வழங்குவதற்குச் சிங்களப் பெரும்பான்மையினம் தவறியமையே இன்று அதிருப்தியும் பிரிவினைக் கோரிக்கைக்கும் இட்டுச் சென்றுள்ளது.

### (அ) பிரஜாவுரிமைச் சட்டம்

சுதந்திரம் கிடைத்த நேரத்தில், சோல்பரி அரசியலமைப்பின் கீழ் தெரிவு செய்யப்படும் 95 அங்கத்தினர்களில் 42 பேர் சிறுபான்மையினங்களிலிருந்து தெரிவு செய்யப்ப்டுவர் என்று கூறப்பட்டது. சுதந்திரம் கிடைத்து நான்கு வருடங்களுள் சிறுபான்மையினருக்கு முக்கியத்துவமளிக்கும் முழுப் பிரதிநிதித்திட்டமும் பூரணமாகத் திரிபு படுத்தப்பட்டது. சுமார் பத்து இலட்சம் முஸ்லிம்களினதும் தமிழர்களினதும் குடியுரிமை மற்றும் வாக்குரிமையைப் பறித்து, பாராளுமன்றத்தில், அவர்களின் பிரதிநிதித்துவத்தை இல்லாமற்செய்ய பிரஜாவுரிமைச்சட்டம் நிறைவேற்றப்பட்டமையே இந்நாட்டில் சிறுபான்மையினங்களுக்கு எதிராக விழுந்த முதல் அடியாகும். இது அந்த நேரத்தில் 68% மானோராகவிருந்த பெரும்பான்மைச் சிங்களச் சமூகம் பாராளுமன்றத்தில் 80% ஆசனங்களைக் கைப்பற்ற வழிவகுத்தது. பிரஜாவுரிமைச்சட்டங்களை, இந்த நாட்டிலுள்ள முஸ்லிம்களையும், தமிழர்களையும் சந்தேகத்துக்குரிய குடிமக்களாக்கியது. வாக்காளர் நிரல்களில் பெயர்களைப் பதிவுசெய்தல், தேசிய அடையாள அட்டைகளைப் பெற்றுக்கொள்ளுதல் மற்றும் சிங்கள மக்களுக்கு எவ்விதத் தொல்லையும் தராத பல்வேறு விடயங்களில் நாம் பல கஷ்டங்களை இன்று அனுபவித்துக்கொண்டிருக்கிறோம். இது மிகவும் பாரபட்சம் நிறைந்த, ஓரவஞ்சனையான ஒரு சட்டவாக்கமாகும். இது நிறைவேற்றப்படடு, சந்தேகத்திற்குரிய பிரஜைகளுக்கு வேலை வழங்கப்படக்கூடாதென்று திணைக்களங்களுக்குச் சுற்றுநிருபங்கள் அனுப்பப்பட்டதோடு, முஸ்லிம்களுக்கும் தமிழர்களுக்கும் உணவுப்பங்கீட்டுப் புத்தகம் வழங்கும் விடயத்திலும் பிரஜாவுரிமை நிரூபிக்கப்பட வேண்டியதாயிற்று. இன்றுள்ள சட்டங்களின் பிரகாரம் எதிர்காலத்தில் பிறக்கும் முஸ்லிம்களும், தமிழர்களும் கால ஓட்டத்தில் தமது பிரஜாவுரிமையை நிரூபிக்க வேண்டுமெனில் அவர்கள் இலங்கையில் தமது பிறப்பையும், இன்னும் ஒரு தொடரான தமது முன்னோர்களின் பிறப்பையும் நிரூபிக்கவேண்டிய நிலையில் இருப்பர்.

### (ஆ) அரசகரும மொழிச் சட்டம்

1956 இல் அரசகரும மொழிச் சட்டம் நிறைவேற்றப்பட்டு, சிங்களமும் தமிழும் பாடசாலைகளில் போதனா மொழிகளாக்கப்பட்டதும் முஸ்லிம்கள் இந்த மாற்றத்தை ஏற்றுச் சிங்களம் கற்றுக்கொள்ள விரும்பினர். குறிப்பாகச் சிங்கள மொழி பேசும் பிரதேசங்களில், நகர்ப்புறங்களில் வசித்த பலர் தமது பிள்ளைகளுக்குச் சிங்கள மொழிமூலக் கல்வியை வழங்கினர். இதன் விளைவாகச் சிங்கள மொழி பேசும் பிரதேசங்களில் ஒரு புதிய தலைமுறை முஸ்லிம்

இளைஞர்கள் தோன்றியுள்ளனர். இவர்கள் தமிழை மிகவும் குறைவாகவே பேசுகின்றனர், அல்லது அறவே பேசுவதில்லை. அவர்கள் இப்பொழுது பள்ளிவாசல்களில் இஸ்லாமியப் போதனைகளும் தமக்கு விளங்கக்கூடிய ஒரே மொழியாகிய சிங்களத்திலேயே இடம்பெற வேண்டுமென்று கோருகின்றனர். இம்மாற்றம், இப்பொழுது முஸ்லிம்களை சிங்கள மொழியில் போதிய மார்க்க நூல்கள் மற்றும் வாசிப்பு பொருட்களைத் தேடிப் பெற்றுக் கொள்ள வேண்டிய பிரச்சினைக்கும் சமூகத்தில் சிங்களம் பேசுவோருக்கும் தமிழ் பேசுவோருக்குமிடையில் ஏற்படக்கூடிய பிளவைத் தடுப்பதற்கும் வழிவகைகள் காணவேண்டிய நிலைக்கு தள்ளியுள்ளது.

## (இ) காணி அபிவிருத்திச் சட்டம்

எமது பொருளாதார அபிவிருத்தியைப் பொறுத்தவரையில் நிலமும், நீரும் பெரும் முக்கியத்துவம் வாய்ந்த தேசிய வளங்களாகும். சுதந்திரம் கிடைத்த கையோடு அவை அபிவிருத்தி செய்யப்பட்டது. இந்த மூலவளங்களைச் சகல இலங்கையர் மத்தியிலும் நியாயப்படி பங்கீடு செய்யும் ஒரு உணர்விலாகும். துர்அதிஷ்டவசமாக சுதந்திரத்தின் பின்னர் இதுவரை அடுத்தடுத்துப் பதவிக்கு வந்த அரசாங்கங்கள் பின்பற்றிய காணிக்கொள்கைகள் சிறுபான்மையினருக்குப் பாரிய பின்விளைவுகள் கொண்ட பாதகமான தாக்கங்களை ஏற்படுத்தியுள்ளன.

அபிவிருத்தி செய்யப்பட்ட அரச காணிகளில் சிறுபான்மையோருக்கு நியாயப்படி சேரவேண்டிய பங்கு மறுக்கப்பட்டுள்ளது. காணிப்பங்கீடு இடம்பெறும் மாவட்டங்களில் சிறுபான்மை மக்களின் சனத்தொகை பெருமளவுக்கு மாற்றமடைந்துள்ளது. இது பல்வேறு இன மக்களிடையே பகைமை உணர்ச்சி வளர்ச்சிக்கு வித்திட்டு இனத்துவ வன் செயல்களுக்கும் இட்டுச்சென்றது. அநேகமான சந்தர்ப்பங்களில் இத்தகைய வன்செயல்களுக்குப் பலியானோர் சிறுபான்மை இனத்தவர்களே.

சுதந்திரத்துக்குச் சற்று பின்னராகக் கிழக்கில் பாரிய நீர்ப்பாசனத்திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டபோது விவசாயப் பூமிகளாக மாற்றப்படவிருந்த காணிகள் உள்ளூர் விவசாயிகள் மற்றும் குடியேறும் சிங்கள மக்களிடையே 50:50 அடிப்படையில் பகிர்ந்தளிக்கப்படுமென்று அன்று பிரதமராக இருந்த திரு. டி.எஸ். சேனாநாயக்க கூறியிருந்தார். அடுத்தடுத்துப் பதவிக்கு வந்த ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி அரசாங்கங்கள் அவ்வாக்குறுதியைக் காற்றில் பறக்கவிட்டு, கிழக்கு மாகாண முஸ்லிம்களையும் தமிழரையும் பொருளாதார மற்றும் அரசியல் ரீதியாகப் பலவீனப்படுத்துவதை உறுதிசெய்யும் வகையில் பல்வேறு நடவடிக்கைகளைக் கையாண்டனர். மாவட்ட காணி அலுவலகங்களிலிருந்து கிடைக்கும் தகவல்களின் பிரகாரம் முஸ்லிம்களுக்கு நியாயப்படி கிடைக்கவேண்டிய பங்கில் நான்கில் ஒன்று கூட அவர்களுக்குக் கிடைக்கவில்லை என்பது நிரூபிக்கப்பட்டுள்ளது. ஆனால் மக்கள் ஜனத்தொகையில் 74% ஆகவுள்ள பெரும்பான்மையினச் சிங்களவர்களுக்கு நாட்டிலுள்ள சகல குடியேற்றத் திட்டங்களிலும் 85% இற்கு மேற்பட்ட அரசு அபிவிருத்தி செய்த காணிகள் வழங்கப்பட்டுள்ளன.

அம்பாறை மாவட்டத்தில் கல்லோயாத் திட்டமும் திருகோணமலை மாவட்டத்தில் அல்லை, கந்தளாய், மொரவெவ மற்றும் பதவியா திட்டங்களும் கிழக்கு மாகாணத்தில் நன்கு திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்களுக்கான உதாரணங்களாகும். 1921 ஆம் ஆண்டின் குடிசன மதிப்புக்கான உதாரணங்களின்படி திருகோணமலை மாவட்டத்தின் சனத்தொகையில் சிங்களவர் 3% ஆகவும், இணைந்த மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களில் சிங்களவர் 4.5% ஆகவும் இருந்தனர். கிழக்கு மாகாணத்தை எடுத்துக் கொண்டால் அங்கு 4% குறைவான சிங்கள மக்களே இருந்தனர். ஆயினும் 1981 ஆம் ஆண்டின் குடிசன மதிப்புப் புள்ளிவிபரங்களின் பிரகாரம் கிழக்கு மாகாணத்தில் சிங்கள மக்களின் சனத்தொகை 25% ஆக அதிகரித்திருந்தது. அம்பாறை மாவட்டத்தில் முதற் பெரும்பான்மையினராக விளங்கிய முஸ்லிம்கள் அரசாங்கத்தால் திட்டமிடப்பட்ட சிங்களக் குடியேற்றங்கள் மூலம் இன்று சிறுபான்மையினராக்கப் பட்டுள்ளனர்.

கல்லோயா திட்டம் ஆரம்பிக்கப்பட்டமை இலங்கை மக்களுக்குக் கிடைத்த ஒரு பெரும் வரப்பிரசாதம் என்றே கூறவேண்டும். ஆயினும் அம்பாறை மாவட்ட முஸ்லிம்களைப் பொறுத்த மட்டில் இத்திட்டம் முஸ்லிம் மக்கள் காணிகளைச் சொந்தமாக வைத்திருப்பதைக் கட்டுப்படுத்தும்

ஒரு திட்டமிட்ட சதி என்று கூறினால் அது மிகையாகாது. சுதந்திரம் பெற்ற காலத்திலிருந்து கடைப்பிடிக்கப்பட்டு வந்துள்ள குடியேற்றக் கொள்கைகள் இதை நிரூபிக்கப் போதுமானவையாகும்.

### (ஈ) திட்டமிட்ட குடியேற்றம்

சிறுபான்மை இனத்தவர்கள் கூடுதலாக உள்ள மாவட்டங்களில் வெளி மாவட்டப் பெரும்பான்மை இனத்தவர்களான சிங்களவர் குடியேற்றப்பட்டதால் சொந்த மாவட்ட தமிழர் முஸ்லிம்களுக்கு கடுமையான காணித்தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது அல்லாமல் அந்தந்த மாவட்டங்களில் உள்ள இனவிகிதாசாரத்தில் பெரும் ஏற்றத் தாழ்வும் ஏற்பட்டு அரசியற் பிரதிநிதித்துவத்தில் சிறுபான்மை இனத்தவருக்குப் பாதகமான மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன.


### (i) அம்பாரை மாவட்டம்.

அன்று இலங்கை கிழக்கின் தானியக் குதமாக இருந்தால், கல்முனை - அம்பாரைப், பிரதேசத்தை இலங்கையின் தானியக் குதமென நாம் அழைக்கலாம். அம்பாரை முஸ்லிம்கள் அடர்ந்த காடுகளை அழித்து நெல்வயல்களாக்குவதில் கைதேர்ந்தவர்கள். இங்கினியாகலையிலும் அதனைத் சூழவும் உள்ள புராதன கிராமங்களிலும் முஸ்லிம்களே விவசாயம் செய்துவந்தனர். நாடு 1930ஆம் ஆண்டில் அதிக உணவு பயிரிடல் திட்டத்தை ஆரம்பித்ததும், முஸ்லிம்கள் மேலும் பல அடர்ந்த காடுகளைத் திறக்க நிர்ப்பந்திக்கப் பட்டனர். எல்.டி.ஓ. உத்தரவுப்பத்திரங்களோடு பின்வரும் இடங்களைச் செழிப்பான வயல்களாக்கி விவசாயம் செய்துவந்தனர். தாலிபோட்ட ஆற்றுக்கண்டம், அம்பலத்தாறு, சேனைக்கண்டம், வேலாமரத்து வெளி, சோலைவட்டை, சீயாத்தரவட்டை, நுறைச்சோலை, திராய் ஓடை, கொச்சிக்காலந்து, பொன்னன்வெளி, குடுவில்வட்டை, தொட்டாச் சுருங்கிவட்டை, கொண்டவெட்டுவான், மகாகண்டிய, வெள்ளக்கல் தோட்டம்.

இக்காணிகள் திருத்துவதில் எத்தனையோ முஸ்லிம்கள், யானை, புலி, கரடி போன்ற கொடிய விலங்குகளாலும் விஷப் பாம்புகளாலும் தாக்கப்பட்டு மாண்டு மடிந்துள்ளனர். கண், கால், கையிழந்து அங்கவீனர்களான பலர் இன்றும் வயோதிபகாலத்தில் வாழ்ந்து கொண்டிருக்கின்றனர்.

1965இல் இக்காணிகளை சீனிக் கூட்டுத்தாபனம், ஆற்றுப்பள்ளத்தாக்கு அபிவிருத்திச் சபையிடம் அங்கீகாரம் பெற்றுக்கொண்டு ஏறத்தாள எல்லா முஸ்லிம்களையும் அவர்கள் அதுவரை அரசாங்க அங்கீகாரத்தோடு விவசாயம் செய்துவந்த காணிகளைவிட்டும் பலவந்தமாக வெளியேற்றியது. நுறைச் சோலைக்கண்டத்து முஸ்லிம் விவசாயிகளை புல்டோசர் மூலமாக ஒதுக்கித்தள்ளிவிட்டனர். இதனால் பாதிப்புக்குள்ளான முஸ்லிம்களுக்கு மாற்று நிலமும் நஷ்டஈடும் தருவதாகக் கொடுத்த வாக்குறுதி கடந்த நாற்பது வருடங்களாகப் புறக்கணிக்கப்பட்டு வருகிறது. இக்காணிகளில் கரும்பு செய்வதற்கெனத் தென்னிலங்கையிலிருந்து சிங்களவர்கள் கொண்டுவரப்பட்டுக் குடியமர்த்தப்பட்டுள்ளார்கள். இப்படியாக அம்பலம் ஓயா, சேனைக்கண்டம், சோலைவட்டை, வேலாமரத்து வெளி, சீயாத்தரவட்டை முதலிய வயல்களிலிருந்தும் முஸ்லிம்கள் விரட்டியடிக்கப்பட்டுள்ளார்கள். அக்கரைப்பற்று, நிந்தவூர், சம்மந்துறை, கல்முனை பகுதி முஸ்லிம்கள் விவசாயத்தில் தலைசிறந்தவர்கள் என்று அரசாங்கமே ஏற்றுக்கொள்கிறது. கரும்பு செய்கை பண்ணுவதிலும் இவர்கள் எவருக்கும் சளைத்தவர்களல்ல. கல்ஓயா அபிவிருத்திச் சபையின் அதிகாரத்திற்குட்பட்ட ஒரு பகுதியில் கரும்புச் செய்கை மேற்கொள்ள அரசாங்கம் திட்டமிட்டால் அக்கரும்பை ஏன் முஸ்லிம்கள் அவரவர் காணிகளில் செய்கை பண்ணி அரசாங்கத்துக்குக் கொடுக்கக்கூடாது? **சுதந்திர இலங்கையின் பிதாவாகிய டி.எஸ். சேனாநாயகா முஸ்லிம் மக்களுக்குக் கொடுத்த வாக்குப்படி கரும்பு செய்யும் காணியில் ஐம்பது வீதத்தை இப்பகுதிப் பூர்வீக குடிகளான முஸ்லிம்களுக்குக் கொடுத்துப் பிரச்சினையைத் தீர்த்திருக்கலாம். நியாயம் செய்ய வேண்டியவர்களே அநியாயம் செய்துவிட்டார்கள், நாற்பது வருடங்களாக இப்பிரச்சினை தீர்க்கப்படவில்லை. இன்று எழுந்துள்ள பிரச்சினைகளைப் பேச்சுவார்த்தைகளால் தீர்க்கலாம் என்று பேச்சளவிலேயே நிற்கும் பெரும்பான்மை இனத்தவரை இப்பகுதி முஸ்லிம்கள் தட்டிக்கேட்கும் காலம் வந்துவிட்டது.**

# அம்பாரை மாவட்டத்தில் திட்டமிட்ட அரசாங்கச் சிங்களக் குடியேற்றம்




# குடிசன மதிப்பீடு - 1981

| மாகாணம் மாவட்டம் | அனைத்துஇன மொத்தம் | சிங்களவர் மொத்தம் | % | இலங்.தமிழர் மொத்தம் | % | இந்தி.தமிழர் மொத்தம் | % | தமிழர் மொத்தம் | % | சோனகர் மொத்தம் | % | பரங்கியர் மொத்தம் | % | யாவுவர் மொத்தம் | % |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| **மேல் மாகாணம்** | **3,903,414** | **3,325,635** | **85.20** | **220,360** | **5.65** | **60,746** | **1.56** | **281,106** | **7.20** | **240,774** | **6.17** | **27,069** | **0.69** | **28,830** | **0.74** |
| 1.கொழும்பு | 1,689,613 | 1,322,658 | 78.28 | 165,952 | 9.82 | 21,504 | 1.27 | 187,456 | 11.09 | 140,461 | 8.31 | 18,997 | 1.12 | 20,041 | 1.19 |
| 2.கம்பஹா | 1,386,867 | 1,280,902 | 92.36 | 45,807 | 3.30 | 5,732 | 0.41 | 51,539 | 3.72 | 38,607 | 2.78 | 7,742 | 0.56 | 8,077 | 0.58 |
| 3.களுத்துறை | 826,934 | 722,075 | 87.32 | 8,601 | 1.04 | 33,510 | 4.05 | 42,111 | 5.09 | 61,706 | 7.46 | 330 | 0.04 | 712 | 0.09 |
| **மத்திய மாகாணம்** | **2,000,041** | **1,317,119** | **65.85** | **147,082** | **7.35** | **376,055** | **18.80** | **523,137** | **26.16** | **152,556** | **7.63** | **2,954** | **0.15** | **4,275** | **0.21** |
| 4.கண்டி | 1,121,942 | 844,325 | 75.26 | 55,675 | 4.96 | 104,840 | 9.34 | 160,515 | 14.31 | 112,052 | 9.99 | 2,402 | 0.21 | 2,648 | 0.24 |
| 5.மாத்தளை | 357,134 | 285,514 | 79.95 | 20,936 | 5.86 | 24,084 | 6.74 | 45,020 | 12.61 | 25,836 | 7.23 | 250 | 0.07 | 514 | 0.14 |
| 6.நுவரெலியா | 520,965 | 187,280 | 35.95 | 70,471 | 13.53 | 247,131 | 47.44 | 317,602 | 60.96 | 14,668 | 2.82 | 302 | 0.06 | 1,113 | 0.21 |
| **தென் மாகாணம்** | **1,881,349** | **1,792,260** | **95.26** | **11,564** | **0.61** | **25,308** | **1.35** | **36,872** | **1.96** | **47,085** | **2.50** | **533** | **0.03** | **4,599** | **0.24** |
| 7.காலி | 813,360 | 769,928 | 94.66 | 6,093 | 0.75 | 11,069 | 1.36 | 17,162 | 2.11 | 25,896 | 3.18 | 216 | 0.03 | 158 | 0.02 |
| 8.மாத்தறை | 643,988 | 609,367 | 94.62 | 3,918 | 0.61 | 13,931 | 2.16 | 17,849 | 2.77 | 16,457 | 2.56 | 254 | 0.04 | 61 | 0.01 |
| 9.அம்மாந்தோட்டை | 424,001 | 412,965 | 97.40 | 1,553 | 0.37 | 308 | 0.07 | 1,861 | 0.44 | 4,732 | 1.12 | 63 | 0.01 | 4,380 | 1.03 |
| **வட மாகாணம்** | **1,109,637** | **33,149** | **2.99** | **959,797** | **86.50** | **63,431** | **5.72** | **1,023,228** | **92.21** | **52,638** | **4.74** | **505** | **0.05** | **117** | **0.01** |
| 10.யாழ்ப்பாணம் | 831,015 | 4,615 | 0.56 | 792,246 | 95.33 | 20,001 | 2.41 | 812,247 | 97.74 | 13,757 | 1.66 | 350 | 0.04 | 46 | 0.01 |
| 11.மன்னார் | 105,416 | 8,710 | 8.26 | 54,106 | 51.33 | 14,072 | 13.35 | 68,178 | 64.68 | 28,464 | 27.00 | 41 | 0.04 | 23 | 0.02 |
| 12.வவுனியா | 95,701 | 15,876 | 16.59 | 54,541 | 56.99 | 18,592 | 19.43 | 73,133 | 76.42 | 6,640 | 6.94 | 21 | 0.02 | 31 | 0.03 |
| 13.முல்லைத்தீவு | 77,505 | 3,948 | 5.09 | 58,904 | 76.00 | 10,766 | 13.89 | 69,670 | 89.89 | 3,777 | 4.87 | 93 | 0.12 | 17 | 0.02 |
| **கிழக்கு மாகாணம்** | **974,127** | **242,358** | **24.88** | **399,406** | **41.00** | **12,045** | **1.24** | **411,451** | **42.24** | **315,201** | **32.36** | **4,154** | **0.43** | **963** | **0.10** |
| 14.மட்டக்களப்பு | 330,528 | 10,646 | 3.22 | 234,348 | 70.90 | 3,868 | 1.17 | 238,216 | 72.07 | 79,317 | 24.00 | 2,300 | 0.70 | 49 | 0.01 |
| 15.அம்பாரை | 388,399 | 146,371 | 37.69 | 78,315 | 20.16 | 1,410 | 0.36 | 79,725 | 20.53 | 161,481 | 41.58 | 643 | 0.17 | 179 | 0.05 |
| 16.திருகோணமலை | 255,200 | 85,341 | 33.44 | 86,743 | 33.99 | 6,767 | 2.65 | 93,510 | 36.64 | 74,403 | 29.15 | 1,211 | 0.47 | 735 | 0.29 |
| **வடமேல் மாகாணம்** | **3,433,052** | **3,117,395** | **90.81** | **72,625** | **2.12** | **11,321** | **0.33** | **83,946** | **2.45** | **227,149** | **6.62** | **1,723** | **0.05** | **2,839** | **0.08** |
| 17.குருணாகலை | 1,211,561 | 1,128,548 | 93.15 | 13,438 | 1.11 | 6,427 | 0.53 | 19,865 | 1.64 | 61,342 | 5.06 | 605 | 0.05 | 1,201 | 0.10 |
| 18.புத்தளம் | 522,920 | 437,453 | 83.66 | 33,218 | 6.35 | 2,964 | 0.57 | 36,182 | 6.92 | 47,959 | 9.17 | 444 | 0.08 | 882 | 0.17 |
| **வடமத். மாகாணம்** | **849,332** | **775,702** | **91.33** | **12,981** | **1.53** | **990** | **0.12** | **13,971** | **1.64** | **58,924** | **6.94** | **337** | **0.04** | **398** | **0.05** |
| 19.அநுராதபுரம் | 587,076 | 536,889 | 91.45 | 7,113 | 1.21 | 735 | 0.13 | 7,848 | 1.34 | 41,833 | 7.13 | 280 | 0.05 | 226 | 0.04 |
| 20.பொலன்னறுவை | 262,163 | 238,803 | 91.09 | 5,875 | 2.24 | 205 | 0.08 | 6,080 | 2.32 | 17,091 | 6.52 | 57 | 0.02 | 132 | 0.05 |
| **ஊவா மாகாணம்** | **920,950** | **700,070** | **76.02** | **41,618** | **4.52** | **144,959** | **15.74** | **186,577** | **20.26** | **32,130** | **3.49** | **721** | **0.08** | **1,452** | **0.16** |
| 21.பதுளை | 641,384 | 440,245 | 68.64 | 36,595 | 5.71 | 135,795 | 21.17 | 172,390 | 26.88 | 26,808 | 4.18 | 641 | 0.10 | 1,300 | 0.20 |
| 22.மொனராகலை | 279,566 | 259,825 | 92.94 | 5,023 | 1.80 | 9,164 | 3.28 | 14,187 | 5.07 | 5,322 | 1.90 | 80 | 0.03 | 152 | 0.05 |
| **சப்ர. மாகாணம்** | **1,477,348** | **1,263,332** | **85.51** | **32,074** | **2.17** | **132,304** | **8.96** | **164,378** | **11.13** | **48,363** | **3.27** | **614** | **0.04** | **661** | **0.04** |
| 23.இரத்தினபுரி | 795,456 | 674,657 | 84.81 | 17,979 | 2.26 | 88,429 | 11.12 | 106,408 | 13.38 | 13,531 | 1.70 | 450 | 0.06 | 410 | 0.05 |
| 24.கேகாலை | 681,892 | 588,675 | 86.33 | 14,095 | 2.07 | 43,875 | 6.43 | 57,970 | 8.50 | 34,832 | 5.11 | 164 | 0.02 | 251 | 0.04 |
| **மொத்தம்** | **15,699,918** | **11,791,318** | **75.10** | **1,884,526** | **12.00** | **826,169** | **5.26** | **2,710,695** | **17.27** | **1,115,896** | **7.11** | **38,273** | **0.24** | **43,736** | **0.28** |

சிங்களப்பகுதிகளில், எம்பிலிப்பிட்டிய-செவனகல சீனி அபிவிருத்தித் திட்டத்தில் முற்றிலும் மாறான கொள்கையை அரசாங்கம் அமுல்படுத்துகிறது. சட்டவிரோதமாக எந்தவித பேமிட்டும் இல்லாமல் அத்துமீறிக் குடியேறிய ஆயிரக்கணக்கான சிங்களவர்கள் எவரையும், கரும்புச் செய்கைக்காக கல்லோயாப் பகுதியில் முஸ்லிம்களை விரட்டியது போன்று விரட்டாமல் அவர்கள் காணிகள் கரும்புச் செய்கைக்காகத் திருத்தியமைக்கும்போது தொழில் இழந்தாரென மாதம் ஒன்றுக்கு ரூபா. 550/- மானியம் வழங்கப்பட்டு குறிப்பிடப்பட்ட காணிகள் கரும்புச்செய்கைக்குத் தயார் செய்யப்பட்டபின், ஒவ்வொருவருக்கும் மூன்று தொடக்கம் ஐந்து ஏக்கர் வரை பங்கிட்டுக் கொடுத்து அத்தோடு ஒரு ஏக்கர் திருத்தப்பட்ட மேட்டு நிலமும் குடியிருக்க வீடும் நன்கொடையாகக் கட்டி அன்பளிப்புச்செய்யப்பட்டுள்ளன. கரும்புச்செய்கை காரணமாக எந்தச் சிங்களவர்களும் வெளியேற்றப்பட்வில்லை. கல்வோயாவில் நடந்தது போன்று வெளியிடங்களிலிருந்து எந்த ஒரு முஸ்லிமையோ, தமிழரையோ அங்கு கொண்டு குடியேற்றவுமில்லை. சிங்களவரைப் பொறுத்தமட்டில் கரும்புச்செய்கை பெரும் வரப்பிரசாதம். ஆனால் முஸ்லிம்களுக்கு அது ஒரு பெரும் கசப்பான நெஞ்சைவிட்டு அகலாத திட்டமிட்ட புறக்கணிப்பாகும்.


அரசாங்கம் நாட்டின் அதிவிசாலமான நீர்ப்பாசனத்திட்டமான கல்ஓயாத்திட்டத்தை முஸ்லிம்கள் பெரும்பான்மையாகச் செறிந்து வாழும் கல்முனைப் பகுதியில் நடைமுறைப் படுத்தியதாகவும் அதனால் முஸ்லிம்கள் பெரும்பாலும் பயனடைந்துள்ளார்கள் என்றும் சிங்களவர்கள் கதை கட்டியுள்ளார்கள்.

உண்மையில் கல்ஓயாத் திட்டம் முஸ்லிம்களின் உரிமைகளை அபகரிக்கச் சிங்களவர் திட்டமிட்டு நடத்திய ஒரு பெரும் சதி என்று கூறினால் அது மிகையாகாது. இத்திட்டத்தில் ஏற்படுத்தப்பட்ட 44 குடியேற்றக் கிராமங்களில் 38 கிராமங்கள் வெளிப்பகுதிகளிலிருந்து வந்த சிங்களவருக்கும், ஆக 6 கிராமங்கள் மட்டும் இப்பகுதியின் பூர்வீகக் குடிகளான முஸ்லிம்களுக்கும் தமிழர்களுக்கும் கொடுக்கப்பட்டது. குடியேற்றக் காணிப்பங்கீடு, நீர் வினியோகம் அமுல்நடத்தத் தொடங்கியபோது, சுதந்திர இலங்கையின் பிதாவான டி.எஸ். சேனாநாயகா அவர்கள் கூறியது கைவிடப்பட்டு இப்பகுதிப் பூர்வீகக் குடிகளான முஸ்லிம்களுக்கும், தமிழருக்கும் நூற்றுக்கு ஐம்பது வீதம் எந்தவகையிலும் பகிர்ந்தளிக்கப்படவில்லை. எம்மைத்திட்டமிட்டு ஏமாற்றிவிட்டார்கள். கொடுக்கப்பட்ட ஆறு குடியேற்றக்கிராமங்களுக்குக் கோடைகாலங்களில் சேனாநாயக சமுத்திரத்திலிருந்து குடிக்கக்கூட நீர் வினியோகிக்கப்படுவதில்லை என்பது அனேகமானோருக்கு வெளிப்படையாகத் தெரியாத உண்மை. **திரு. டி.எஸ். சேனாநாயகா அவர்களின் வாக்குப்படி கல்ஓயாத் திட்டத்தின் காணி, நீர் வினியோகம், பாய்ச்சல் வடிச்சல் மற்றும் கரும்புச் செய்கை ஆகிய எல்லாவித வாய்ப்பிலும் பூர்வீகக் குடிகளுக்கு உரித்தான நூற்றுக்கு ஐம்பது விகிதத்தைப் பெற்றுக்கொள்வதுதான் இப்பகுதி முஸ்லிம்களின் இன்றைய இலட்சியம்.**

1982 ஜனவரியில் அரசாங்க அதிபர் பொத்துவிலுக்குச் சமீபத்தில் உள்ள அறுகம்பை, உல்லைக் குடியேற்றக் கிராமங்களிலிருந்து எல்லா முஸ்லிம்களையும் வெளியேறுமாறு பொத்துவில் உதவி அரசாங்க அதிபருக்குக் கட்டளையிட்டிருந்தார். இந்த முஸ்லிம்கள் அனைவரும் இப்பகுதியில் குடியிருப்பதற்காகத் தெரிவுசெய்யப்பட்டு 1968இல் எல்.டி.ஓ. பேர்மிட் பத்திரங்களும் வழங்கப்பட்டிருந்தனர். ஒரு சந்தர்ப்பத்தில் பொத்துவில் உதவி அரசாங்க அதிபர் போலிசாரின் உதவியோடு இங்கிருந்த சில வீடுகளைத் தீவைத்துக் கொழுத்தியுள்ளார். பொறுப்புவாய்ந்த அரசாங்க உத்தியோகத்தர்களின் அட்டகாசம் முஸ்லிம் பகுதிகளில் தலைவிரித்தாடுவது இப்போதெல்லாம் சகஜமாகிவிட்டது.

அம்பாரை மாவட்டம் 1,775 சதுர மைல் பரப்பைக் கொண்டது. 1981ஆம் ஆண்டுக் குடிசன மதிப்பின்படி சிங்களவர் 37.2 சதவீதமான அல்லது 660 சதுர மைல் பரப்புக்கு உரிமையுடையவர்கள் (ஆனால் 1921ஆம் ஆண்டுக் கணிப்புப்படி கிழக்கு மாகாணத்தில் சிங்களவர் எண்ணிக்கை 4 சதவீதமாக இருந்தது இதன்படி அம்பாரையிலுள்ள பூர்வீக சிங்களக் குடிமக்கள் 100 சதுர மைலுக்கும் குறைவான காணிக்கே உரிமையுடையவர்கள். மற்றச்


சிங்களவர்யாவரும் பிற மாகாணங்களிலிருந்து திட்டமிட்ட குடியேற்றக் கிராமங்களில் அண்மைக்காலத்தில் வந்தவர்கள்.) ஆனால் சிங்களப்பிரதேசத்தில் ஏறக்குறைய 75 சதவீதமான ,340 சதுரமைல் விஸ்தீரணமுள்ள காணிகள் உண்டு. முஸ்லிம்கள் 41.6 சதவீதமான 728 சதுர மைல் பரப்புக்கு உரித்துடையவர்கள் இருந்தாலும் முஸ்லிம்கள் பகுதியில் 263 சதுர மைல் காணி மட்டுமே உள்ளன. இது அம்பாறை மாவட்ட விஸ்தீரணத்தின் 15 சதவீதமான பரப்பாகும்.




# அம்பாறை மாவட்டம் சனத்தொகை

| | 1971 | % | 1981 | % |
|---|---|---|---|---|
| பௌத்தர் | 81,762 | 30.0 | 144,779 | 37.2 |
| இந்து | 57,346 | 21.0 | 74,328 | 19.1 |
| முஸ்லிம் | 126,033 | 46.2 | 161,754 | 41.6 |
| கிறிஸ்தவர் | 7,625 | 2.8 | 7,665 | 2.1 |
| வேறு மதத்தவர் | 24 | 0.0 | 261 | 0.1 |
| மொத்தம் | **272,790** | **100.0** | **388,786** | **100.0** |

| ஆண்டு | முஸ்லிம் | வாக்காளர் அதிகரிப்பு | சிங்கள | வாக்காளர் அதிகரிப்பு |
|---|---|---|---|---|
| 1947 | 37,000 | | 2,394 | |
| 1952 | 42,000 | 15% | 3,119 | 30% |
| 1956 | 44,000 | 5% | 3,905 | 25% |
| 1960 | 52,000 | 9% | 23,000 | 500% |
| 1965 | 57,000 | 9% | 31,000 | 35% |
| 1970 | 62,000 | 9% | 39,000 | 36% |
| 1977 | 68,000 | 10% | 46,000 | 13% |
| 1980 | 78,000 | 14% | 68,000 | 48% |




சிங்களப் பிரதேசம்

தமிழ் பிரதேசம்

முஸ்லிம் பிரதேசம்

உண்மை நிலை இப்படி இருக்க முன்னைய அரசாங்கத்தின் அரசியல் அதிகாரியும் அன்றைய அரசாங்கத்தின் மாவட்ட மந்திரியும், சீர்திருத்தப்பட்டுத் தயாரான நிலையில் முஸ்லிம் பகுதிகளிலுள்ள முஸ்லிம்களுக்குச் சொந்தமான நெல்வயல்களை அவர்களிடமிருந்து அபகரிப்பதிலும் ஏனைய மாவட்டங்களிலிருந்து சிங்கள உறவினர்களைக் கொண்டுவந்து குடியேற்றுவதிலும் அதிக அக்கறையுடையவர்களாக இருந்தனர். இந்தச் சூழ்ச்சித்திட்டம் அம்பாரை மாவட்ட பூர்வீகக் குடிகளான முஸ்லிம் தமிழ் மக்களின் பொருளாதாரத்தையும், அரசியல் அந்தஸ்தையும் பாரதூரமாகப் பாதித்துள்ளது.

## (ii) திருகோணமலை மாவட்டம்

திருகோணமலைப் பகுதியில் கந்தளாய் அல்லைக் குடியேற்றங்களை அமுல்நடத்துவதற்கு முன்பு கந்தளாயில் பெரும்பகுதியில் தம்பலகாமம் பகுதியில் பொத்தானை என்னும் இடத்தில் 4,000 ஏக்கர் காணியில் முஸ்லிம்கள் நெல் சாகுபடி செய்துவந்தனர். 1952ஆம் ஆண்டு கந்தளாய் குடியேற்றத்திட்டம் ஏற்படுத்தப்பட்டபோது அரசாங்கம் இங்குள்ள காணிகளில் 50% உள்ளூர் மக்களுக்குப் பகிர்ந்தளிப்பதாக வாக்குறுதி கொடுத்தது. ஆனால் படிப்படியாக இங்கு 30 வருடங்களாக விவசாயம் செய்த முஸ்லிம்கள் யாவரும் எதுவித நஷ்டஈடுமின்றி விரட்டியடிக்கப்பட்டனர். 1954ஆம் ஆண்டு இக்காணிகள் யாவும் வெளியிடங்களிலிருந்து குடியேறிய சிங்களவருக்கு பகிர்ந்தளிக்கப்பட்டன.

இப்போது அக்பர்புரம் என்று அழைக்கப்படும் வட்டுக்கச்சிப்பகுதி இங்குள்ள முஸ்லிம்களின் கால்நடைகளுக்கிருந்த மேய்ச்சல் நிலம் இங்கிருந்த முஸ்லிம்கள் சிங்களவர்களால் விரட்டியடிக்கப்பட்டுள்ளனர். பள்ளிவாசலும் ஒரு சிறு பாடசாலையும் சில முஸ்லிம் குடும்பங்களும் இப்போது இங்கு இன்னும் மிஞ்சி இருக்கின்றன. 1958இல் கந்தளாய் சீனிக் கூட்டுத்தாபனம் நிறுவியதோடு கூடுதலான சிங்களவர்கள் வெளியூரிலிருந்து இங்கு வந்து அல்லைக் கந்தளாய் றோட் இருமருங்கிலும் குடியேறியுள்ளார்கள். 1965ஆம் ஆண்டிற்குமுன் இப்பகுதி உள்ளூராட்சி மன்றத் தலைவர்களாக முஸ்லிம்கள் இருந்து வந்தது குறிப்பிடத்தக்கது.

திருகோணமலை மாவட்டத்தில் ஆகக்கூடுதலான முஸ்லிம்கள், ஏறக்குறைய 40,000 பேர் கிண்ணியாவில் வாழ்கின்றனர். கந்தளாய் குடியேற்றத்தில் காணிகளைப் பறிகொடுத்த முஸ்லிம் விவசாயிகள் அருகாமையிலுள்ள வன்ஆறு என்னும் பகுதியில்வந்து காடுவெட்டி விவசாயம் செய்தார்கள். 3,000 முஸ்லிம் குடும்பங்கள் சுமார் 10,000 ஏக்கர் காணியை விவசாயத்திற்கு வன்ஆறு, சுண்டிஆறு, மணிஅரசன்குளம், சாவாறு, கல்அறுப்பு, வாளமடு, வண்ணாத்திப்பாலம், கற்குழி, நடுலூத்து, குறுஞ்சிப்பொத்தானை ஆகிய இடங்களில் காடுவெட்டி நிலம் திருத்தி வயல் நிலங்களாக மாற்றினர்.

1967ஆம் ஆண்டு அரசாங்கம் 'குமரன்கட வன்எலத்திட்டம்' ஒன்றை இங்கு ஏற்படுத்தி முஸ்லிம் விவசாயிகளை இங்கிருந்தும் விரட்டியடித்தது. இதனால் இங்கு புதிதாகக் குடியமர்த்தப்பட்ட சிங்களவர்களுக்கும் முஸ்லிம்களுக்குமிடையில் கலவரம் ஏற்பட்டது. இந்தச் சந்தர்ப்பத்தில்தான் இங்கு நடுக்காட்டு வயல் வெளிக்குள் வன்எல பொலிஸ் நிலையம் நிறுவப்பட்டு முஸ்லிம்கள் அவர்கள் காணிகளிலிருந்து வெளியேற்றப்பட்டுச் சிங்களவர்கள் குடியேறினர்.

1970 - 1977ஆம் ஆண்டுக்காலத்தில் மூடப்பட்டிருந்த வன்எல பொலிஸ் நிலையம் நிரந்தரக் கட்டிடம் அமைக்கப்பட்டு மிக விமர்சையாக மீண்டும் 1977ஆம் ஆண்டு திறக்கப்பட்டுள்ளது. இந்த பொலிஸ் நிலையம் முஸ்லிம்களைக் காவல்செய்யும் கடமைக்காகவே ஏற்படுத்தப்பட்டுள்ளது.

கிண்ணியா தம்பலகாமம் றோட்டுக்கும் அல்லைக்கந்தளாய் றோட்டுக்கும் இடைப்பட்ட காணி கிண்ணியா, குறிஞ்சான்கேணி, ஆலங்கேணி, தம்பலகாமம் ஆகிய ஊர்கள் எதிர்கால அபிவிருத்திக்காக ஒதுக்கப்பட்ட காணிகள் அண்மைக்காலத்தில் புகையிலைக் கூட்டுத்தாபனத்திற்கு 'சொண்டன் காடு' என்னும் இடத்தில் புகையிலை செய்வதற்காக வெளியூர்களிலிருந்து வந்த சிங்களவர்கள் மேற்படி கிராமங்களுக்காக ஒதுக்கீடு செய்த

காணிகளில் அத்துமீறிக் குடியேறியதால் மீண்டும் முஸ்லிம்களின் காணிகள் பறிபோயின. வாழமடு' என்னுமிடத்தில் முஸ்லிம்களுக்கும் சிங்களவர்களுக்கும் காணித்தகராறு. திருகோணமலைக் கச்சேரியில் சிங்களவருக்கு எந்தக்காணிக்கும் எப்போது வேண்டுமானாலும் புது பேமிட் கொடுக்கப்படுகிறது. ஆனால் முஸ்லிம்களுக்கு கொடுத்த ஏராளமான பேமிட்டுகள் வெட்டப்பட்டுக் காணிகளை விட்டு வெளியேற்றப்படுகின்றனர்.

இவாறு, சொண்டன் காட்டுப் பகுதியில் முஸ்லிம்கள் கால் நடைகளுக்காக ஒதுக்கப்பட்ட 5,000 ஏக்கர் மேய்ச்சல் நிலம் சிங்கள முதலாளிகளுக்கு விஷேட அனுமதியில் கொடுக்கப்பட்டுள்ளது. வன்எல பொலிஸ் நிலைய உத்தியோகத்தர்கள் உதவியோடு இங்குள்ள முஸ்லிம்கள் விரட்டப்பட்டுள்ளனர்.

1943க்கு முன் கிண்ணியாவிலிருந்து பொலன்னறுவைக்கு ஒரு பாதை இருந்தது. பொலன்னறுவை கிண்ணியா முஸ்லிம்களின் நெருங்கிய உறவுக்கு உதவிய இப்பாதையைத் தடை செய்து முஸ்லிம்கள் கால் நடைகள் மேய்த்து வந்த 26,000 ஏக்கர் மேய்ச்சல் நிலத்தையும் அபகரித்துக் கொண்டனர்.

திட்டமிட்ட குடியேற்றத்தாலும், காணிச் சுவீகரிப்பாலும் கிழக்கிலங்கையில் குறிப்பாக அம்பாரை, திருகோணமலை மாவட்டங்களில் இனங்களுக்கிடையில் ஏற்பட்ட ஏற்றத்தாழ்வும் மனக்கசப்பும் ஏராளம்! ஏராளம்!!

**(iii) பௌத்தமதத்தின் பெயரில் முஸ்லிம்களின் காணிகளை அபகரித்தல்.**


1984 ஜனவரி முதலாம் திகதிய 'சிலுமின' என்னும் சிங்களப் பத்திரிகையில், புதைபொருள் கொமிஷனர் இலங்கையின் வடக்கு கிழக்கு மாகாணங்களில் 273 பௌத்த சின்னங்கள் அகழ்ந்தெடுத்து அடையாளம் காணப்பட்டதாகவும் இவைகளைப் புனரமைத்துப் பாதுகாப்பதற்கு விரைவில் பௌத்த குருமாரும் சிங்களப் பௌத்த மக்களும் இவ்விடங்களில் குடியேற்றப்படுவார்கள் எனவும் அறிவித்துள்ளார்.

1983 ஒக்டோபர் 7ம் திகதி வெளியான பாராளுமன்ற "ஹன்ஸாட்" தொகுதி 25ம் இலக்கம் 10இல் பிரசுரிக்கப்பட்டிருக்கும் படத்தில் அம்பாரை மாவட்டத்தில் முஸ்லிம் பகுதிகளில் மட்டும் 43 பௌத்த சிதைவுச் சின்னங்கள் அகழ்ந்து அடையாளம் காணப்பட்ட இடங்களெனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

பௌத்த சிங்களவர்கள் இந்தச் சிதைந்த சின்னங்களைச் சூழ்ந்த காணிகளுக்கு உரிமைகோரி அவ்விடங்களில் தற்போதுள்ள முஸ்லிம்களை வெளியேற்றித் தாங்கள் குடியேற முயல்வது பலஸ்தீன முஸ்லிம்களை அவர்கள் காணிகளை விட்டு விரட்டியடிக்க இஸ்ரேலியர்கள் கையாண்ட கபட நாடகம் போல் தோன்றுகின்றது.

ஏற்கனவே நடைபெற்றுள்ள திட்டமிட்ட குடியேற்றம், கரும்புச்செய்கை, ஓட்டுக்கூட்டுத்தாபனச் சுவீகரிப்பு ஆகிய நடவடிக்கைகளால் பெருமளவு காணிகளைப் பறிகொடுத்துப் பரிதவிக்கும் முஸ்லிம்களுக்கு இந்த நவீன பௌத்த சின்னப் பரிபாலனைக் குடியேற்றம் பெரும் பதட்டத்தை ஏற்படுத்தியுள்ளது.

1940ஆம் ஆண்டுதான் பாழடைந்த தீகவாப்பி விகாரைக்கு பௌத்த பிக்கு ஒருவர் வந்தார். இவருக்குத் தானம் கொடுப்பதற்கு இங்கு சிங்களப் பௌத்தர்கள் எவரும் இருக்கவில்லை. இப்பகுதியில் விவசாயம் செய்த முஸ்லிம்களே இந்தச்சாதுவுக்குப் பல சௌகரியங்களைச் செய்தனர். தீகவாப்பி விகாரையைச் சுற்றியுள்ள தென்னைகளை நட்டவர்களும் முஸ்லிம்களே. திடீரென 1960ஆம் ஆண்டு சில சிங்களப் பௌத்தர்கள் விகாரையைச் சுற்றியுள்ள முஸ்லிம்களுக்குச் சொந்தமான வயல் நிலங்களை பௌத்தமத அலுவல்களுக்காகச் சுவீகரிக்க முற்பட்டனர்.




MAP SHOWING THE PLACES OF
ARCHAEOLOGICAL INTEREST IN
அம்பாரை மாவட்டத்தில்
சிதைந்த பௌத்த சின்னங்கள்
அடயாளம் காணப்பட்ட இடங்கள்
BATTICALOA
LAGOON
AMPARAI DISTRICT
ARUGAM BAY
SANCTUARY
Y A L A
AMPARA DISTRICT:
234: Ragagala
235 Bakkiella
236. Samanagala
237: Kadurugoda
238. Pansalgoma - Bakkiela
239.
240. Vaharagpulana
241.
242.
243.
244. Musangala
245 Malayadikanda
246. Kokmagara (Colony)
247. Gonagama Temple
248. Kalangama
249 Panatgoda (Temple)
250. Bakpitiya
251. Vanama
252. Degpitiya
253 Kotavehera
254 Dighavapiya
255 Mullikulamangala
256. Kanjikudiaru
257. Karamala
258 Moranwatta
259. Chenumedikulam
260. Tallpotaru
261. Mantottam
262 Sanganmankande
263 Rangama
264
265 Atgala
266. Kummataru
267. Pottuvil
268 Mudumahavihara (Temple)
269. Ellama
270. Lahugala Kotavehera
271. Magulmahavihara (Temple)
272 Jayarampola
273 Lahugala
274. Ndagulaeya
275. Rassawela Temple
276. Kudumbigala
ALTITUDE TINT
1000 FT & ABOVE
(ABOVE M. S. L.)

இந்த விஷயத்தில் பல பிரச்சினைகள் தலைதூக்கியதால், 1968ஆம் ஆண்டு முன்னாள் நில அளவை நாயகமான திரு. ரட்ணதுங்க அவர்கள் தலைமையில் ஒரு குழு நியமிக்கப்பட்டுச் சமரசத் தீர்வுக்கான அறிக்கை தயாரிக்கப்பட்டது. பல பௌத்த ஸ்தாபனங்களும், இயக்கங்களும் விடுத்த கோரிக்கைகளை அலசி ஆராய்ந்த குழுவின் சிபாரிசின்பேரில் 585 ஏக்கர் நிலம் பௌத்த மத கலாசார அபிவிருத்திக்காக முஸ்லிம்களிடமிருந்து சுவீகரிக்கப்பட்டது. **எதிர்காலத்தில் முஸ்லிம்களின் காணிகள் சுவீரிக்கப்படக்கூடாது என்ற நிபந்தனையின் பேரிலும் வாக்குறுதியிலுமே முஸ்லிம்கள் இந்த 585 ஏக்கரை விட்டு வெளியேறினர்.**

இந்த 585 ஏக்கர் காணியில் இருபத்தைந்து ஆண்டுகளாக எதுவித பௌத்த மத கலாசார புனருத்தாரண வேலைகளும் நடைபெறவில்லை. அதற்கு மாறாக இக்காணியின் ஒருபகுதியில் முன்னாள் அரசாங்கத்தின் அம்பாரைத் தொகுதிப் பிரதிநிதியும், உதவி அமைச்சரும், அம்பாரை மாவட்ட அரசியல் அதிகாரியுமான திரு. சோமரத்தினாவின் சொந்தக்காரர்கள் தென்னிலங்கையிலிருந்து வரவழைக்கப்பட்டு இங்கு குடியமர்த்தப்பட்டனர். தீகவாப்பி விகாரைக்கு வருமானம் பெறும் நோக்கத்தோடு கிட்டத்தட்ட 300 ஏக்கர் காணி குடிவகை தயாரிக்கும் தனியார் நிறுவனத்திற்குக் குத்தகைக்குக் கொடுக்கப்பட்டு, இங்கு கரும்புச்செய்கை செய்யப்பட்டு வந்தது. இங்கு உற்பத்தியாகும் கரும்புகள் விஷேட ஏற்பாட்டின்படி ஹிங்குரானையிலுள்ள அரசாங்க சீனிக் கூட்டுத்தாபனத்தில் பிழியப்பட்டு மதுரபானங்கள், மதுபானங்கள் உற்பத்திக்கும் மற்றும் பாவனைக்கும் உபயோகப்படுத்தப்பட்டு வந்தன.

பௌத்த மதத்தின் பெயரில் முஸ்லிம்களிடமிருந்து அபகரிக்கப்பட்ட காணிகளில் நடவடிக்கை இவ்வாறு நடை முறைப் படுத்தப்பட்டிருக்கும் வேளையில் பகிரங்கமாக ஏற்றுக்கொண்ட நிபந்தனைகளை உதாசீனம் செய்துவிட்டு, கொடுத்த வாக்குறுதிக்கு முற்றும் மாறாக மீண்டும் ஆயிரத்துக்கு அதிகமான ஏக்கர் விஸ்தீரணமுள்ள முஸ்லிம்கள் விவசாயம் செய்யும் காணிகளைத் தீகவாபி பகுதியில் கொச்சிக்காய்லந்து, திராய்ஓடை, பொன்னன்வெளி, குடுவில் வட்டை ஆகிய இடங்களில் அபகரிக்கப்பட்டது.



சட்டத்துக்கும், நியாயத்துக்கும் எந்தவிதமதிப்பும் கொடுக்காமல் அம்பாரை அரசாங்க அதிபர் பெரிய விசாரக் கண்டத்தில் உள்ள 185 ஏக்கர் வேளாண்மைப் பயிர்களை புள்டோசரைக் கொண்டு ஒதுக்கித் தள்ளிவிட்டார். இக்காணிகள்யாவும் முஸ்லிம்களுக்கு அரசாங்க உறுதி மூலம் உரித்தானவை என்பது குறிப்பிடத்தக்கது.

கல்லோயா அபிவிருத்திச் சபையின் வாரிசாக வந்த ஆற்றுப் பள்ளத்தாக்குகள் அபிவிருத்திச் சபை, ஹிங்குராணையிலும், கந்தளாயிலுமுள்ள இலங்கை சீனிக் கூட்டுத்தாபனம், கைத்தொழில் அமைச்சின் கீழுள்ள இறக்காமம் ஓட்டுத்தொழிற்சாலை என்பவை எல்.டீ.ஓ. அனுமதிப்பத்திரங்களோடு முஸ்லிம்கள் அபிவிருத்தி செய்து பயிரிட்ட செழிப்பான வயல் நிலங்களைப் பறித்தெடுத்து அவர்களுக்கு நஷ்டஈடோ, வேறு மாற்று நிலமோ வழங்காது அவர்களை நடுத்தெருவில் நிற்கவைத்தன. கிழக்கு மாகாணத்தில் இவ்வாறு எல்.டீ.ஓ. அனுமதிப்பத்திரங்களோடு 80,000 ஏக்கருக்கு மேற்பட்ட காணிகளை வைத்திருந்த முஸ்லிம் மக்கள் அவற்றிலிருந்து விரட்டியடிக்கப்பட்டுள்ளார்கள்.

**சுதந்திரம் பெற்ற காலந்தொட்டு அடுத்தடுத்துப் பதவிக்கு வந்த அரசாங்கங்கள், பாலஸ்தீனத்தில் யூதர்கள் அரபுமக்களை அவர்களின் நிலங்களிலிருந்தும் வீடுகளிலிருந்தும் விரட்டியடிப்பதற்குக் கையாண்ட கொள்ளைகளையே கையாண்டன.**

## (உ) பாதுகாப்பு

கிரிந்த, இரத்தினபுரி, காலி, களுத்துறை, பாணந்துறை, களனி, தெஹிவளை, புத்தளம், பேருவலை போன்ற இடங்களில் கடந்த காலங்களில் முஸ்லிம் மக்களுக்கெதிராகக் கட்டவிழ்த்துவிடப்பட்ட வன்செயல்கள், இலங்கை முழுவதும் சிதறுண்டு வாழும் முஸ்லிம் மக்களின் உயிர்களுக்கும், உடமைகளுக்கும் இந்நாட்டில் பாதுகாப்பு இல்லை என்பதை மீண்டும் ஊர்ஜிதப்படுத்தியுள்ளன. 1983 ஜுலை வன்செயல் நிகழ்வுகளின் பின்னர், முஸ்லிம்கள் மீது தாக்குதல் தொடுக்கும் இரண்டாவது திட்டமொன்று குறித்து தகவல்கள் வெளியாகின. இவற்றினால் ஏற்பட்ட ஆழமான பாதுகாப்பின்மை மற்றும் அந்நியப்படுத்தல் உணர்வு குறித்து முஸ்லிம்கள் சிந்திக்க வேண்டும்.

1983 வன்செயல்களின் போது நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் பாதிக்கப்பட்ட முஸ்லிம்கள் 298 பேர் எனவும், சுமார் 258 மில்லியன் ரூபா பெறுமரியுள்ள நஷ்டம் அவர்களுக்கு விளைவிக்கப்பட்டதெனவும் மதிப்பீடுகள் தெரிவிக்கின்றன. அவ்வன்செயலின்போது, ஒலிபெருக்கிகள் மூலம் இடம்பெற்ற "அதான்" தொழுகை அழைப்புகளின் சத்தத்தைக் குறைக்காவிடில் அல்லது முற்றாக நிறுத்தாவிடில் பள்ளிவாசல்களைத் தாக்கப்போவதாகச் சிங்களவர்கள் மிரட்டியுள்ளனர்.

புத்தளத்தில் 1975 ஆம் ஆண்டு பள்ளிவாசலில் ஐந்து முஸ்லிம்கள் ஆயதந்தாங்கிய பொலிஸ் உத்தியோகத்தர்களால் சுட்டுக் கொல்லப்பட்டனர். 1984 ஜனவரியில் கண்டியில் மாவில்மடவில் ஸியாரம் ஒன்றோடு கூடிய ஒரு பள்ளிவாசல் நாசமாக்கப்பட்டது. 1986 மே 17 ஆம் திகதி கொழும்பு சிலேவ் ஐலன்ட் பகுதியிலும் சில முஸ்லிம்கள், இராணுவ உத்தியோகத்தர்களால் தாக்கப்பட்டுள்ளனர். இது ரமழான் மாதத்தில் அவர்கள் தராவீஹ் தொழுகைக்குப் போய்விட்டுத் திரும்பி வருகையில் இடம்பெற்றது. சில வருடங்களுக்கு முன்னர் இதே பள்ளிவாசலில், பள்ளிவாசல் ஒலிபெருக்கி இஸ்லாமியக் கோட்பாடுகளுக்கெதிரான விடயங்களுக்கு உபயோகிக்கப்படுவதற்கு எதிர்ப்புத் தெரிவித்தவேளையில் பல முஸ்லிம்கள் பொலிஸாரின் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகினர்.

வரலாற்று ரீதியாகத் தமிழ் பேசும் மக்களாகிய தமிழர்களும் முஸ்லிம்களும் வாழ்ந்துவந்த பிரதேசங்களாக 1987 இலங்கை - இந்திய ஒப்பந்தத்தில் இனங்காணப்படும் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் ஆயிரக்கணக்கான முஸ்லிம் ஆண்களும், பெண்களும், சிறுவர்களும்

கொல்லப்பட்டும் காயமுற்றுமுள்ளனர். இலங்கையில் சமாதானத்தை நிலைநாட்ட இந்தியர்கள் வந்ததுமுதல் அகதிகளாக்கப்பட்ட முஸ்லிம்களின் தொகை 200,000 ஐத் தாண்டிவிட்டது. முஸ்லிம்களுக்குச் சொந்தமான நூற்றுக்கணக்கான கோடி ரூபாய் பெறுமதியான சொத்துக்கள் இனத்துவ உரிமைகளுக்காகப் போராடுவோரென்று கூறப்படும் தமிழ்ப் போராளிகளினால் கொள்ளையிடப்பட்டன.

சிங்களவர், தமிழர் போன்று ஏனைய சமூகங்களும் இன்னல்களை அனுபவித்துள்ளனர். ஆயினும் முஸ்லிம்களின் விடயம் வித்தியாசமானதாகும். ஆரசாங்கமும் அதன் ஆயுதப்படைகளும் நிவாரணங்களையும் பாதுகாப்பையும் வழங்குகின்றன. ஆயுதந்தாங்கிய தமிழ்ப் போராளிக் குழுக்களும், இந்திய அரசும், சர்வதேச தமிழர் சமூகமும் தமிழர்களுக்குப் பூரண ஆதரவு வழங்குகின்றன. ஆயினும், நிராயுதபாணிகளான முஸ்லிம்கள் இனப் போராட்டத்தில் எதுவித உதவியற்றோராக அகப்பட்டுள்ளனர். மிகவும் மோசமாகப் பாதிக்கப்பட்டோர் முஸ்லிம்களாகவிருந்தபோதிலும் **வெளியுலகும், குறிப்பாகச் சர்வதேச முஸ்லிம் சமூகமும், ஒருசில முஸ்லிம்கள், பாராளுமன்ற உறுப்பினர்களாகவும் இலங்கை அரசாங்கத்தில் அமைச்சர்களாகவும் இருக்கும் காரணத்தால் இலங்கைவாழ் முஸ்லிம்களுக்கு எவ்விதமான மனக் குறைகளும் இல்லையென்றும், இங்கு அவர்கள் மிகவும் மகிழ்ச்சிகரமாக வாழ்வு நடத்துகின்றனர் எனவும் நினைத்துக் கொண்டிருக்கின்றனர்.**

1987 செப்டம்பர் மூதூர் உதவி அசாங்க அதிபர் ஜனாப். ஹபீப் முஹம்மத் தமிழ்ப் போராளிகளால் ஈவிரக்கமற்ற முறையில் படுகொலை செய்யப்பட்டார். 1987 நவம்பரில் முன்னைநாள் பாராளுமன்ற உறுப்பினரும் பிரதியமைச்சருமான ஜனாப் ஏ.எல்.ஏ. மஜீட் கொல்லப்பட்டார். 1987 டிசம்பரில் மட்டக்களப்பு மாவட்டத்தில் முஸ்லிம் பெரும்பான்னைக் கிராமமாகிய ஓட்டமாவடியில் இந்திய அமைதிப் படையினரின் எறிகணைத்தாக்குதலில் 26 முஸ்லிம்கள் கொல்லப்பட்டு மேலும் 200 பேர் காயமடைந்தனர் சுமார் 14,000 முஸ்லிம்கள் அகதிகளாக்கப்பட்டு வடமத்திய மாகாணத்திலுள்ள பொலன்னறுவைக்கு தப்பியோடினர்.

1987 டிசம்பரில் மட்டக்களப்புக்குத் தெற்குப் புறமாக நான்கு மைல் தூரத்திலுள்ள 40,000 இற்கும் கூடுதலான முஸ்லிம்களின் ஊராகிய காத்தான்குடி ஆயுதந்தாங்கிய தமிழ் போராளிகளின் தாக்குதலுக்குள்ளாகியது. இப்பயங்கரத்தாக்குதலில் 60 முஸ்லிம்கள் உயிரிழந்தனர், மேலும் 200 பேர் காயமுற்றனர். 200 மில்லியன் ரூபா பெறுமதியுள்ள முஸ்லிம்களின் சொத்துக்கள் அவர்களால் தீயிட்டுக் கொளுத்தப்பட்டு நாசமாக்கப்பட்டன. இவையனைத்தும் இந்திய அமைதிப்படையினரின் கண்களுக்கெதிரிலேயே நடந்தன.

1988 மார்ச் 6 ஆம் திகதி காத்தான்குடி நகரசபையின் முன்னாள் தலைவர் அல்ஹாஜ் அகமட் லெப்பை படுகொலை செய்யப்பட்டார். 1990 இல் காத்தான்குடிப் பள்ளிவாசலில் தொழுகையிலீடுபட்டிருந்த 106 முஸ்லிம்கள் எல்.ரீ.ரீ.ஈ. இனால் சுட்டுக்கொல்லப்பட்டனர். அதே வாரத்தில் ஹஜ் யாத்திரையிலிருந்து திரும்பிக் கொண்டிருந்தோர் உட்பட 86 முஸ்லிம்கள் கஞவாஞ்சிகுடியில் வைத்துத் தமிழ்ப் போராளிகளால் கடத்திச் செல்லப்பட்டுக் கொல்லப்பட்டனர்.

இரு வாரங்கள் கழித்து ஏறாவூரிலுள்ள சதாம் ஹுசைன் கிராமம் தமிழர்களால் தாக்கப்பட்டு 100 ஆண்களும், பெண்களும், சிறுவர்களும் கொல்லப்பட்டனர்.

1989 நவம்பரில் ரீ.என்.ஏ. எனப்படும் தமிழ்த் தேசிய இராணுவம் காரைதீவு பொலிஸ் காவலரணைச் சுற்றிவளைத்தனர். அவர்களிடம் கனரக மோட்டார்களும் இந்திய அமைதிகாக்கும் படையினரிடமிருந்து பெற்றுக்கொண்ட வேறு உபகரணங்களும் இருந்தன. அவர்கள் தமிழர்களைப் போகும்படி கட்டளையிட்டுவிட்டு, 41 முஸ்லிம் றிசவ்பொலிஸாரைத் தனியாகப் பிரித்து, கைதிகளாக்கி ஈவிரக்கமற்ற முறையில் கொலை செய்தனர். மன்னாரில் 200 இற்கும் மேற்பட்ட முஸ்லிம்கள் தமிழப் பயங்கரவாதிகளினால் கடத்திச்செல்லப்பட்டு ஈவிரக்கமற்றமுறையில் கொலை செய்யப்பட்டுள்ளனர். 1990 அக்டோபரில் வடமாகாணத்தில் 100 இற்கும் மேற்பட்ட முஸ்லிம் கிராமங்களில் வசித்த சகல மக்களையும் எல்.ரீ.ரீ.ஈ. துரத்தியது. பல தலைமுறைகளாக

வடமாகாணத்தில் வாழ்ந்த சுமார் 50,000 அப்பாவி முஸ்லிம் மக்கள் இன்று புத்தளம், குருணாகல் மற்றும் அநுராதபுரம் ஆகிய மாவட்டங்களில் அகதிமுகாம்களில் வாடுகின்றனர்.

1992 அக்டோபரில் பொலன்னறுவை மாவட்டத்தின் அக்பர்புரம், அகமட்புரம், பள்ளியகொடல்ல மற்றும் பங்குரானை ஆகிய கிராமங்களில் சுமார் 200 முஸ்லிம்களை எல்.ரீ.ரீ.ஈ. ஈவிரக்கமின்றிக் கொலைசெய்தது.

## வடக்கு கிழக்கு ஒன்றிணைந்திருந்தபோது தமிழ் பயங்கரவாதிகளால் படுகொலை செய்யப்பட்ட முஸ்லிம் பொதுமக்கள் எண்ணிக்கை

| | | | | |
|---|---|---|---|---|
| 26 | முஸ்லிம்கள் | - ஓட்டமாவடி | - டிசம்பா | 1987 |
| 41 | முஸ்லிம்கள் | - காரைதீவு | - நவம்பர் | 1987 |
| 35 | முஸ்லிம்கள் | - கிண்ணியா | - ஏப்ரல் | 1987 |
| 52 | முஸ்லிம்கள் | - மூதூர் | - ஒக்டோபர் | 1987 |
| 21 | முஸ்லிம்கள் | - சம்மாந்துறை பள்ளிவாயல் | - ஏப்ரல் | 1989 |
| 67 | முஸ்லிம்கள் | - வாழைச்சேனை - ஏப்ரல் 1985 | - ஜூலை | 2002 |
| 67 | முஸ்லிம்கள் | - காத்தான்குடி | - டிசம்பர் | 1987 |
| 168 | முஸ்லிம்கள் | - காத்தான்குடி | - ஜூலை | 1990 |
| 147 | முஸ்லிம்கள் | - காத்தான்குடி பள்ளிவாயல் | - ஒகஸ்ட் | 1990 |
| 58 | முஸ்லிம்கள் | - அக்கரைப்பற்று | - ஜூலை | 1990 |
| 14 | முஸ்லிம்கள் | - காத்தான்குடி பள்ளிவாயல் | - ஜூலை | 1990 |
| 19 | முஸ்லிம்கள் | - ஆலிம்நகர் | - ஒகஸ்ட் | 1990 |
| 126 | முஸ்லிம்கள் | - ஏறாவூர் | - ஒகஸ்ட் | 1990 |
| 53 | முஸ்லிம்கள் | - அம்பலாந்துறை | - ஒகஸ்ட் | 1990 |
| 23 | முஸ்லிம்கள் | - சாய்ந்தமருது | - செப்டம்பர் | 1992 |
| 15 | முஸ்லிம்கள் | - அட்டாளைச்சேனை | - மே | 1990 |
| 37 | முஸ்லிம்கள் | - பள்ளித்திடல், அக்பர்புரம் | - ஒக்டோபர் | 1992 |
| 200 | முஸ்லிம்கள் | - கல்முனை,அக்கரைப்பற்று,பொத்துவில் | - ஜூன் | 1990 |
| 33 | முஸ்லிம்கள் | - அம்பாரை | - ஒகஸ்ட் | 1990 |
| 147 | முஸ்லிம்கள் | - அழிஞ்சிபொத்தானை | - ஏப்ரல் | 1992 |
| 30 | முஸ்லிம்கள் | - பொத்துவில் | - ஜூன் | 1991 |

### (ஊ) உள்ளூராட்சி

புதிதாக இயற்றப்பட்ட பிரதேச சபைகள் சட்டம் மற்றும் உள்ளூராட்சி அதிகார சபைகளுக்கான தேர்தல் (திருத்தச்) சட்டம் என்பனவற்றின் கீழ் உருவாக்கப்பட்ட பிரதேச சபைகள், நகர சபைகள் மற்றும் மாநகர சபைகளின் நிர்வாகம் மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகள் சம்பந்தப்பட்டவிடயங்களில் தீர்மானமெடுக்கும் செயல்முறைகளில் முஸ்லிம்கள் பங்கேற்கும் சந்தர்ப்பம் மறுக்கப்பட்டன.

1984 பெப்ரவரி 20 ஆம் திகதி சர்வகட்சி மாநாட்டுக்கு ஐக்கிய தேசியக் கட்சி சமர்ப்பித்த பிரேரணைகளில் 200-250 பிரதேச சபைகள் உருவாக்கப்படுமெனக் கூறப்பட்டது. அவற்றுக்குத் தேவையான அதிகாரங்களும் கருமப்பாடுகளும் வழங்கப்படுமென்றும் கூறப்பட்டது. அவற்றின் சனத்தொகையையும் மற்றும் மூலவளங்களையும் கருத்திற் கொண்டே, பிரதேச சபை எல்லைகள் கவனமாக வரையறை செய்யப்பட்டு அவற்றின் பொருளாதார நிலைத்தகவு மற்றும் ஸ்திரப்பாடு என்பவை உறுதி செய்யப்படுமெனவும் கூறப்பட்டது.

1986 ஜூன் 25 ஆம் திகதியிடப்பட்ட தமது அறிக்கையில் மேதகு ஜனாதிபதியவர்கள், சகல சமூகத்தினதும் அச்சத்தைப் போக்கும்வகையில் மாகாண அரசாங்கத்தின் கட்டுப்பாட்டின் கீழ் ஜனசமூக திசைமார்க்கம் கொண்ட உதவி அரசாங்க அதிபர் பிரிவு, உ.அ.அ. பிரிவுகளில் பிரதேச சபைகள் மற்றும் உள்ளூர் தன்னாட்சியின் வேறு அலகுகள் போன்ற, இனத்துவக்

குழுக்களுக்குப் பெருமளவிலான உள்ளூர்த் தன்னாட்சியை வழங்கும் அமைப்புகளைத் தாபிப்பது குறித்து ஆராய்வதற்கு அரசாங்கம் தயாராகவுள்ளதெனக் குறிப்பிட்டார்.

1981 இல் அபிவிருத்திச் சபைகளைத் தாபிப்பதற்கு முன்னர் 7,316 அங்கத்தினர்களைக் கொண்ட 546 கிராம சபைகளும், 528 அங்கத்தினர்களைக் கொண்ட 83 பட்டின சபைகளும் இருந்தன. உள்ளூராட்சி அமைச்சின் கீழ் நேரடியாக உள்ளூர் நிர்வாகத்துக்கென 241 உ.அ.அ. பிரிவுகள் தாபிக்கப் படுமுன்னர் 138 டி.ஆர்.ஓ. (பிரதேச இறைவரி உத்தியோகத்தர்) பிரிவுகள் இருந்தன. அரசாங்கம் எல்லைகள் மீள வரையும் குழுவொன்றை நியமித்து உள்ளூராட்சி அமைப்புகளின் நிர்வாகப் பிரதேச எல்லைகள் மீள் வரைவு குறித்துத் தமது விருப்பங்களைக் கூறும்வகையில் கருத்துச் சமர்ப்பணங்கள் செய்யுமாறு பொதுமக்களை அழைப்பதை விடுத்து, நாட்டின் 25 மாவட்டங்களிலும் 3,695 அங்கத்தினர்களைத் தெரிவுசெய்யவேண்டிய 257 பிரதேச சபைகளையும், 416 அங்கத்தவர்களைத் தெரிவு செய்ய வேண்டிய 39 நகரசபைகளையும் 255 அங்கத்தவர்களைத் தெரிவுசெய்ய வேண்டிய 12 மாநகர சபைகளையும் தாபித்தது. பிரத்தியேகமாக இந்த உப-தேசிய அலகுகள் உள்ளூர் மட்டத்தில் சிறுபான்மையினரின் அதிகாரப் பகிர்வுக்கு இடமளிக்கும் வகையில் அமையவேண்டுமென்பது ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கையில், இந்த முக்கியமான நடவடிக்கை அரசாங்கத்தினால் மக்களைக் கலந்தாலோசிக்காது ஒருதலைப்பட்சமாக எடுக்கப்பட்டுள்ளது.

**உள்ளூராட்சி சபைகளின் நிரலையும் உள்ளூராட்சி சபைகள் அமைக்கப்பட்ட முறைகளையும் பார்க்கும்போது முஸ்லிம் சமூகத்தின் நலன்கள் வேண்டுமென்றே புறக்கணிக்கப்பட்டுள்ளதை நாம் காணலாம்.** முஸ்லிம்களாகிய எமக்கு, எமது தேசிய இன விகிதாசாரப்படி அமையவேண்டிய பிரதேச சபைகளோ, நகர சபைகளோ, மாநகர சபைகளோ இன்று இல்லை. முஸ்லிம்கள் முழு சனத்தொகையில் 8% ஆகவிருப்பதால், உள்ளூர் மட்டத்தில் சிங்களவர் போன்றும், தமிழர் போன்றும் நிர்வாக மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகளில் பயனுள்ள வகையில் பங்கேற்பதாயின் முஸ்லிம்கள் பெரும்பான்மையான 21 பிரதேச சபைகளில் 281 அங்கத்தினர்களையும், 3 நகர சபைகளில் 32 அங்கத்தினர்களையும், ஒரு மாநகர சபையில் 19 அங்கத்தினர்களையும் தெரிவுசெய்யும் சட்டநிலைத் தகவுள்ள உரிமை எமக்கு இருத்தல் வேண்டும். 1981 இல் கிழக்குமாகாணத்துக்குரிய குடிசன மதிப்புப் புள்ளிவிபரம் 42% தமிழர்கள், 33% முஸ்லிம்கள், 25% சிங்களவர்கள் இருப்பதைக் காட்டுகின்றது. ஆயினும் தற்பொழுது கிழக்கு மாகாணத்தில் உருவாக்கப்பட்டுள்ள உள்ளூராட்சி அதிகாரசபை நிரலில் 25% மான சிங்களவர்களுக்கு 12 பிரதேச சபைகளும், ஒரு நகர சபையும் கொடுக்கப்பட்டுள்ளன. இந்த அடிப்படையில் 33% மான முஸ்லிம்களுக்கு 16 பிரதேச சபைகளும், ஒரு நகர சபையும் தரப்படல் வேண்டும். திருகோணமலை மாவட்டத்தில் 34% ஆகவுள்ள சிங்களவர்களுக்கு 5 பிரதேச சபைகள் வழங்கப்பட்டுள்ளபோதும், 40% மான முஸ்லிம்களுக்குக் குறைந்தது 6 பிரதேச சபைகளாவது வழங்கப்பட வேண்டும். ஆயினும் முஸ்லிம்களுக்குக் கிடைத்திருப்பது 4 பிரதேச சபைகள் மாத்திரமே.

கிழக்கு மாகாணத்திலுள்ள 12 முஸ்லிம் பிரதேச சபைகளுக்கும் பொருளாதார மூலவளங்கள் ஒதுக்கீடு விடயத்திற்கூட மாபெரும் அநீதி இழைக்கப் பட்டுள்ளதால் அவற்றுள் அநேகமானவை பொருளாதார ரீதியில் நிலைத்தகவு அற்றவையாக விளங்குகின்றன. அக்கரைப்பற்று உதவி அரசாங்க அதிபர் பிரிவில் இன ரீதியாக முஸ்லிம்களுக்கு சொந்தமான இயற்கை மூலவளங்கள் பிரித்தெடுக்கப்பட்டு, புதிய தமிழ்ப் பிரதேச சபையாகிய ஆலையடிவேம்போடு சேர்க்கப்பட்டன. 13,000 தமிழர்களுக்குரிய ஆலையடிவேம்பு பிரதேச சபைக்கு 37 சதுர மைல்கள் நிலப்பரப்பும் கருங்கொடித்தீவு என இப்பொழுது அழைக்கப்படும் அக்கரைப்பற்று உதவி அரசாங்க அதிபர் பிரிவின் எஞ்சிய பகுதியில் 23,000 முஸ்லிம்களுக்கும் 20 சதுர மைல் நிலப்பரப்பும் வழங்கப்பட்டுள்ளது. தமிழ் பிரதேச சபையின் ஆதிக்க அதிகாரத்தின்கீழ் வரும் 37 சதுர மைல் பிரதேசத்தில் 20 சதுர மைல்கள் இப்பொழுது முஸ்லிம் பிரதேச சபையின் கீழிருக்கும் முஸ்லிம்களுக்குச் சொந்தமான வயல் காணிகளாகும். முஸ்லிம் பெரும்பான்மை அக்கரைப்பற்று உதவி அரசாங்க அதிபர் பிரிவில் முஸ்லிம்களின் பிரதேச சபைக்கு அவர்கள் விரும்பிய பெயர் கூட வைக்கப்படாமல் தவிர்க்கப்பட்டுள்ளது.

இலங்கையின் நிறைவேற்று ஜனாதிபதியாக இருந்த உள்ளூராட்சி அமைச்சரிடம், உள்ளூராட்சி சபைகளின் நிரல் வர்த்தமானியில் பிரசுரிக்க முன்னர் நேரடியாக இது பற்றி புகார் செய்யப்பட்டபோதும், அவர் தமது தீர்மானத்தை மாற்ற மறுத்துவிட்டதால், அக்கரைப்பற்றைப் பிரதிநிதித்துவம் செய்த இரு ஐக்கிய தேசியக் கட்சி முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்களால் இந்த அநீதியைப் போக்கும் விதத்தில் எதுவும் செய்ய முடியவில்லை. ஆயினும் ஒரேயொரு தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினரின் சக்தி கூடுதலாகவிருந்தது. இப் பெண் அங்கத்தவர் தான் விரும்பிய பிரகாரம் விடயங்களைச் சாதிக்கக்கூடியவராக இருந்தார். அவர் ஐக்கிய தேசிய கட்சி அதிகாரப் படிமுறையினரின் ஆசிர்வாதத்தோடு அக்கரைப்பற்று உதவி அரசாங்க அதிபர் பிரிவில் தமிழ் மக்களுக்கென ஆலையடிவேம்பு பிரதேச சபையை நீதி நியாயத்திற்கு முரணான முறையில் பெற்றுக் கொடுத்தார்.

**அம்பாறை மாவட்டத்தில் ஜனத்தொகை அடிப்படையில் பார்க்கும்போது சிங்கள பிரதேச சபைகளுக்கு ஒதுக்கப்பட்ட நிலப்பரப்பு, முஸ்லிம் பிரதேச சபைகளுக்கு ஒதுக்கியளிக்கப்பட்ட நிலப்பரப்பைவிட 13 மடங்கு அதிகமானதாகும். மட்டக்களப்பு மாவட்டத்தில் காத்தான்குடி, ஏறாவூர், ஓட்டமாவடி மற்றும் வாழைச்சேனையிலும், திருகோணமலை மாவட்டத்தில் மூதூர், கிண்ணியா, தம்பலகாமம், தோப்பூர் மற்றும் குச்சவெளியிலும் மிகவும் மோசமான பாரபட்சங்கள் இடம்பெற்றுள்ளன.**

## (எ) மாகாண சபைகள்

இனத்துவ மனக்குறைகள் ஒரு சமூகத்துக்கோ அல்லது ஒரு மதத்தைப் பின்பற்றுவோருக்கோ மாத்திரம் உரியவையன்று. இலங்கையில் சிங்களவர்களுக்கும், தமிழர்களுக்கும் மனக்குறைகள் உள்ளன. இனத்துவ மனக்குறைகளைத் தீர்த்து வைப்பதற்குப் பல்வேறு அரசியல் தீர்வுகள் முன்வைக்கப்பட்டுள்ளன. இப்பிரேரணைகள் அனைத்துக்கும் பொதுவான அம்சமாகவிருப்பது அதிகாரப்பகிர்வின் அலகும் அதிகாரப் பகிர்வுமாகும்.

அரசியலமைப்புக்கான 13 ஆம் திருத்தத்தினதும் மாகாண சபைகள் சட்டத்தினதும்ஏற்பாடுகள் இலங்கையில் இனத்துவ மனக்குறைகளைத் தீர்ப்பதற்கான, அநேகமாகத் தீர்க்கப்படாதவையும் அரைகுறையானவையுமான பிரேரணைகளின் தொகுதியாகவே கொண்டுள்ளன. இவ்வேற்பாடுகளில் வழங்கப்பட்டுள்ள மாகாணசபைச் சட்டம் வடக்கு-கிழக்கில் வாழும் தமிழர்கள் மற்றும் முஸ்லிம்களின் மனக்குறைகளைத் தனித்தனியாகத் தீர்க்கக்கூடிய முறையில் அமையவில்லை. மாகாணசபை முறைமை கிழக்கு மாகாண முஸ்லிம்களின் சட்டநிலைத் தகவுள்ள உரிமைகளை அங்கீகரிக்கத் தவறிவிட்டது. அது அவர்களின் இனத்துவ மற்றும் அரசியல் அபிலாஷைகளை அங்கீகரிக்கவில்லை. அது அவர்களின் சமூக, பொருளாதார நலன்களைப் பேணவில்லை. அது அவர்களுக்குப் பாதுகாப்பை உறுதிப்படுத்தவில்லை.

முன்னைநாள் நிறைவேற்று ஜனாதிபதி ஜே.ஆர். ஜயவர்தனவும் அவரின் அடியாட்களும் கிழக்கு மாகாண முஸ்லிம்களின் அடிப்படை உரிமைகளை நாசமாக்கிவிட்டனர். 1987ஆம் ஆண்டின் 42 ஆம் இலக்க மாகாண சபைகள் சட்டம், போராளிகளினால் ஆயுதக் கையளிப்பு மற்றும் பகை நடவடிக்கைகள் நிறுத்தம் ஏற்பட்டாலன்றித் தற்காலிக இணைப்புக் குறித்த ஜனாதிபதியின் பிரகடனத்தைத் தடை செய்கின்றது. இதை அப்பட்டமாக மீறி, நிறைவேற்று ஜனாதிபதி ஜே.ஆர். ஜயவர்தன அவசரகால நிலையின்கீழ் பொதுமக்கள் பாதுகாப்புக்கட்டளைச் சட்டத்தை உபயோகித்துத் தற்காலிக இணைப்பொன்றைச் செய்வதற்குத் தனது அதிகாரங்களைப் பயன்படுத்தியுள்ளர். இதன் மூலம் கிழக்கு மாகாண முஸ்லிம் சமூகத்தைத் தமிழர்களின் ஆதிக்கத்தின் கீழ் அரசியல் அடிமைகளாக மாற்றினார். வட மாகாண ஜனத்தொகையில் தமிழர்கள் 90% இற்கு மேற்பட்டோராயிருக்கின்றனர். **வட மாகாண இணைப்பின் குறிக்கோள் தமிழ் மக்களைப் பூரண பெரும்பான்மையினராக்குவதோடு, கிழக்கு மாகாணத்தின் 33% மான முஸ்லிம்களை இணைந்த அலகில் 70% தமிழர் ஆதிக்கத்தில், ஒரு பொருட்டல்லாத 18%, சிறுபான்மையினராக ஆக்குவதாகும்.**

70% தமிழ்ப் பெரும்பான்மையோடு கூடிய வட-கிழக்கு மாகாணசபைக்கு அரசியலதிகாரம் மாற்றப்படுவது இப்பிரதேசத்தில் தமிழர்களைப் போன்று சம உரிமைகள் கொண்ட சுதந்திரம், முஸ்லிம் சமூகத்துக்குரிய போதிய பாதுகாப்புகளோடு செய்யப்படவில்லை. தனித்தனியான அதிகாரப் பகிர்வு அரசியல் மற்றும் நிர்வாக அலகுகள் உருவாக்கப்படாமையால், பிரத்தியேகமாகச் சட்டமும் ஒழுங்கும் மற்றும் காணிக்குடியேற்றம் குறித்த பெருமளவு அதிகாரங்கள் ஒரு சாதகமற்ற நிலையில் இருக்கும். இணைந்த வட-கிழக்கு மாகாண சபை முழுக்க முழுக்கத் தமிழ் போராளிகளைக் கொண்டிராவிடினும், பிரதானமாக அவர்களைக் கொண்ட ஒரு பொலிஸ் படை இருக்கும். வரலாற்று ரீதியாகத் தாம் வாழ்ந்துவந்த பிரதேசங்களில் தொடர்ந்தும் தமிழர்களின் பயங்கரவாதத்தினால் ஆக்கிரமிக்கப்படுவதை முஸ்லிம்கள் விரும்பவில்லை. அத்தோடு இணைந்த மாகாணத்தில் அரச காணிகளில், பாரிய நீர்ப்பாசனத் திட்டங்கள் அமைந்த காணிகள் நீங்கலாக குடியேற்றம் 70% தமிழ் ஆதிக்க மாகாண சபையின் கட்டுப்பாட்டின்கீழ் வரும். ஆதலால் இணைந்த பிரதேசத்தில் வரலாற்று ரீதியாக முஸ்லிம்கள் வசித்துவந்த காணிகள் இனங்காணப்பட்டு, தமிழர் குடியேற்றம் இடம்பெறாதவாறு பாதுகாக்கப்படுதல் வேண்டும்.

முஸ்லிம்களாகிய நாம் இலங்கைப் பிரசைகளென்றவகையில் சட்டநிலைத் தகவுப்படி எமக்கு உரியதைவிட மேலதிகமாக எதையும் கேட்டதில்லை. ஒவ்வோர் இனத்துவச் சமூகமும் தனது உரிய பங்குக்கு உரித்துள்ளதாகும். நாம் தனிநாடு கேட்கவுமில்லை, எமது மனக் குறைகளைத் தீர்த்துக்கொள்ளப் பயங்கரவாத நடவடிக்கைகளை நாடவுமில்லை. இலங்கையில் முதல் தடவையாகச் சிறுபான்மை இனங்களோடு அதிகாரத்தைப் பகிர்ந்துகொள்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படுதலை முஸ்லிம்களாகிய நாம் உதாசீனப்படுத்தப்படுவதையும், எமது சட்டநிலைத்தகவுள்ள உரிமைகள் மறுக்கப்படுவதையும் விரும்பவில்லை.

இனத்துவ மனக்குறைகளைத் தீர்க்கும் அதிகாரப் பகிர்வின் அலகு மாகாண சபையொன்றால், 74% மான சிங்களவருக்கு 7 மாகாண சபைகளும், 18% மான தமிழர்களுக்கு 2 மாகாண சபைகளும், 8% முஸ்லிம்களுக்கு 1 மாகாண சபையும் ஏற்படுத்துவதே நீதியான ஓர் ஏற்பாடாகும். இலங்கையிலுள்ள முக்கிய இனத்துவ சமூகங்களிலொன்று என்ற வகையில், சிங்களவர் மற்றும் தமிழரைப் போன்று முஸ்லிம்களும் எமது சொந்த முதலமைச்சர் மற்றும் அமைச்சர் சபையைத் தெரிவுசெய்யக்கூடிய ஒரு முஸ்லிம் பெரும்பான்மை மாகாணசபையைப் பெற்றுக்கொள்வது எமது சட்டநிலைத்தகவுள்ள உரிமையாகும்.

இன்று இலங்கையில் நிலவுவது இனத்துவப் பிரச்சினைகளேயன்றித் தமிழர் பிரச்சினைகள் அன்று. சிங்களவர்கள், தமிழர்கள் முஸ்லிம்கள் அனைவருக்கும் இனத்துவ மனக்குறைபாடுகள் உண்டு. எனவே, அதிகாரப் பகிர்வின் வகையும், அலகும் சூழ்நிலைக்குப் பொருத்தமாக இருப்பதோடு, அனைவரின் அபிலாஷைகளையம் நிறைவேற்றுவதாகவும் அமைதல் வேண்டும். அங்குமிங்கும் ஓட்டுப்போடுதலும் அரைகுறை நடவடிக்கைகளும் தீர்வை மேலும் சிக்கலாக்கவே உதவும். இவ்வாறு கைமாறும் அதிகாரங்கள் இனத்துவச் சிறுபான்மையினராகிய தமிழரும் முஸ்லிம்களும் தாம் பெரும்பான்மையாக வாழும் பிரதேசங்களில் பொறுப்புகளை ஏற்றுக்கொள்ளவும், தீர்மானமெடுக்கும் செயல்முறைகளில் பூரணமாகப் பங்கேற்க உதவுவதாகவும் இருத்தல் வேண்டும்.

கிழக்கு மாகாண நிலப் பிரதேசங்களை 1981 ஆம் ஆண்டின் இனத்துவ விகிதாசாரத்துக்கு ஏற்ப மீள்வரையறை செயவதே சாத்தியமான ஒரேயொரு தீர்வாகும். கிழக்கு மாகாணத்தின் மொத்த நிலப்பரப்பு 3,839 சதுரமைல்களாகும். 24% மான சிங்களவர்களுக்கு 960 சதுர மைல்களும், 42% மான தமிழர்களுக்கு 1762 சதுர மைல்களும், 33% மான முஸ்லிம்களுக்கு 1267 சதுர மைல்களும் வழங்கப்பட வேண்டும். அம்பாறை மாவட்டத்தில் பிந்தனைப்பற்றுவும், வெவகம்பற்று வடக்கும், திருகோணமலைத் தேர்தல் தொகுதியின் சிங்களப் பெரும்பான்மைப் பிரதேசங்களும் சிங்கள அலகாக விளங்கமுடியம். முஸ்லிம் பெரும்பான்மைத் தேர்தல் தொகுதிகளாகிய அம்பாறை மாவட்டத்தின் பொத்துவில், கல்முனை, சம்மாந்துறையும், மட்டக்களப்பு, திருகோணமலை மாவட்டங்களின் பிரதேச சபைப் பிரதேசங்களான காத்தான்குடி,

ஏறாவூர், ஓட்டமாவடி, வாழைச்சேனை, மூதூர், கிண்ணியா, குச்சவெளி மற்றும் தம்பலகாமம் முஸ்லிம் அலகாக நிர்ணயிக்கப்படலாம். கிழக்கு மாகாணத்தின் எஞ்சிய பிரதேசங்கள் தமிழ் அலகாக இருக்கமுடியும்.

### (ஏ) முஸ்லிம் அல்லாத அரசியற் கட்சிகளிலிருக்கும் முஸ்லிம்கள்

**ஒரு அரசியற் கட்சியின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் முஸ்லிம் சமூகத்தின் அல்லது இஸ்லாத்தின் நலன்களுக்கு எதிரான பிரேரணைகள் சிலவெனினும் இடம் பெற்றிருப்பின் ஓர் உண்மையான முஸ்லிம் அத்தகைய ஓர் அரசியற் கட்சியின் விசுவாசமுள்ள ஓர் உறுப்பினராக விளங்க முடியாது. முஸ்லிம் சமூகத்துக்குத் தீங்கு ஏற்படுத்தும் விடயம் ஏதாவது இடம் பெறும்போது முஸ்லிம் அல்லாத அரசியற் கட்சிகளிலுள்ள முஸ்லிம் உறுப்பினர்கள் தமது சமூகத்தைப் பாதுகாக்கும் முறையில் பேசத் திராணியற்றோராய் இருக்கின்றனர். இது கட்சி அதிகாரப்படிமுறையில் தமது ஸ்தானம் பறிபோய்விடுமென்னும் அச்சம் காரணமாக ஏறட்படுவதாகும். ஆயினும் கட்சியில் அவர்களின் அங்கத்துவமும் அதன்கீழ் அவர்கள் பதவி வகிப்பதும், ஆளுங்கட்சியின் அரசியல் தயாளம் எத்துணை உயர்ந்ததென்று வெளியுலகத்திற்குப் பறைசாற்றுவதற்கு உபயோகிக்கப்படுகின்றன.**

முஸ்லிம் அல்லாத தேர்தல் தொகுதிகளில் தெரிவு செய்யப்படும் முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்களைப் பொறுத்தவரையில், இவர்களை வாக்காளர் தெரிவுசெய்வது, அவர்கள் முஸ்லிம்கள் என்பதற்காகவல்ல என்பதும், மாறாக அவர்களதும் முஸ்லிம்கள் அல்லாத வாக்காளர்களினதும் அரசியல் கண்ணோட்டங்கள் பூரணமாகச் சங்கமிப்பதாலேயே என்பதும் பொது அறிவுள்ள எவருக்கும் விளங்கக்கூடிய ஒரு விடயமாகும். உண்மையைக் கூறுவதாயின், முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்கள் தமது வாக்காளர்களோடு தமது புரிந்துணர்வை வளர்த்துக் கொள்வதற்கும், வாக்காளர் மனங்களில் தாங்கள் நேர்மையானோர் என்னும் நல்லெண்ணத்தைத் தாபித்துக் கொள்வதற்கும் அவர்களுக்குச் சேவை செய்வதற்குத் தம்மாலியன்ற அனைத்தையும்செய்கின்றனர். முஸ்லிம் சமூகத்தைப் பொறுத்தவரையில் இப்பாராளுமன்ற உறுப்பினர்கள் அவர்களைத் திரும்பியும் பார்ப்பதில்லை. தமது பாணின் எந்தப் பக்கத்தில் பட்டர் தடவப்பட்டுள்ளது என்பதை அக்கனவான்கள் நன்கு அறிந்துவைத்துள்ளனர். ஓர் அங்கத்தவர் முஸ்லிம் சமூகத்தைச் சேர்ந்தவராக இருப்பினும், ஒரு முஸ்லிம் அல்லாத கட்சியின் நிரலில் அவர் சட்டசபைக்குத் தெரிவு செய்யப்படும்போது, அவரது கண்ணோட்டங்களுக்கும் அவரது சமூகத்தின் கண்ணோட்டங்களுக்குமிடையில் ஒற்றுமை இருப்பது இயலாத விடயமாகும். அவரின் குரல் நிச்சயமாக அவரது சமுதாயத்தின் அதிகாரக் குரலாக ஒலிக்க முடியாது. கட்சி ஒழுக்கம், ஆளுங்கட்சியின் கீழ் பதவி அதிகாரத்தை அனுபவித்தல் மற்றும் பதவியோடு சேர்ந்துவரும் சலுகைகள் என்பவை, அவர் தமது சமூகத்தின் உணர்வுகள் குறித்துப் பேசாமல் கட்சிப் போக்கை ஒட்டி நடப்பதை உறுதிசெய்கின்றன.

இதற்கு முந்திய அரசுகளின் காலத்தில் பலவேறு இடங்களில் நூற்றுக்கணக்கான இனக்கலவரங்களின் காரணமாக முஸ்லிம் சமூகம் பல்வேறு இன்னல்களை அனுபவித்தது. அதன் உச்சகட்டமாக புத்தளம் பள்ளிவாசலினுள்வைத்து ஆறு முஸ்லிம்களைப் பொலிசார் சுட்டுக் கொன்றனர். பாராளுமன்ற உபசபாநாயகரும் ஒரு பிரதியமைச்சருமாக இரு முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்கள் ஆளுங்கட்சியின் உயர்பீடத்தினால் நிலைமையை அவதானித்து அறிக்கை சமர்ப்பிக்கவெனச் சம்பவம் நடந்த இடத்துக்கு அனுப்பிவைக்கப்பட்டனர். பாதிப்பு நடந்த இடத்திலிருந்து திரும்பியதும் அவர்கள் குற்றவாளிகளுக்கு வெள்ளையடிக்கும் அறிக்கையொன்றையே சமர்ப்பித்தனர்.

ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி முஸ்லிம் பிரதிநிதிகள் 1948 ஆம் ஆண்டின் குடியுரிமைச் சட்டம், 1956 ஆம் ஆண்டின் மொழிச் சட்டம், 1963 ஆம் ஆண்டின் நிதிச் சட்டம் என்பவற்றை நிறைவேற்றுவதில் உடந்தையாகவிருந்தனர். புதிய அரசியலமைப்புகளில், சோல்பரி அரசியலமைப்பிலிருந்த 29ம் பிரிவு மற்றும் செனட் சபை போன்றவற்றை அகற்றி, வெஸ்ட்மினிஸ்டர் பாராளுமன்ற முறைமைக்குப் பதிலாக விகிதாசார பிரதிநிதித்துவத்தையும், நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி பதிவியையும்

ஏற்படுத்துவதற்கும் உடந்தையாகவிருந்தனர். இந்நடவடிக்கைகள் அனைத்தும் இலங்கை முஸ்லிம்களை ஓர் அரசியல் மற்றும் சமூக அடிமைகளாக மாற்றியுள்ளன.

இப்பல்லின, பல ஜாதி, பல மத, பன்மொழித் தேசத்தில் தீர்மானங்களை எடுக்கும் பாராளுமன்றத்தில் தனது தேவைகள் மற்றும் அபிலாஷைகளைப் பெற்றெடுக்கும் வகையில் பிரதிநிதித்துவம் செய்ய வழியின்றி முஸ்லிம் சமூகம் ஓரப்படுத்தப்பட்டுள்ளது. ஏனைய சமூகங்களைப் போலவே முஸ்லிம்களும் தமது மனக்குறைகளைச் சரியான மேடைகளிட்டுக் கூறவும் அவற்றுக்குப் பரிகாரம் தேடவும் விரும்புகின்றனர்.

பாராளுமன்ற ஜனநாயக மொன்றில் ஒரு சமூகம் சதந்திரமாகத் தெரிவுசெய்த தனது பிரதிநிதிகளுடாக நாட்டின் அரசாங்கத்தில் பங்குகொள்ளுகின்றது. இது ஒரு மனித உரிமையாகும், 1978 ஆம் ஆண்டின் ஜயவர்தன அரசியலமைப்பின் காரணமாக இந்த மனித உரிமை பெரும்பான்மை முஸ்லிம் சமூகத்திடமிருந்து அபகரிக்கப்பட்டுள்ளது.

## (ஒ) சிங்கள ஆட்சியாளரினால் கிழக்கிலங்கை முஸ்லிம்களுக்கு இழைக்கப்பட்ட அநியாயங்கள்

**ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி ஆட்சிக்காலத்தில் கிழக்கு மாகாண அரசியற் பிரதிநிதித்துவத்திற்கான பாராளுமன்றத் தொகுதி எல்லைகள் நிர்ணயிக்கப்பட்டபோது இருந்த தமிழ் முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்களால் தமிழர்களுக்கும் முஸ்லிம்களுக்கும் நியாயப்படி சேரவேண்டிய பெரும்பகுதி காணி நிலம் சிங்களவர் தொகுதிகளாக மாற்றப்பட்டு அபகரிக்கப்பட்டதைத் தடுத்து நிறுத்த முடியவில்லை.**

திருகோணமலை மாவட்டத்தில் உள்ள 1,016 சதுரமைல் நிலப்பரப்பில் 70 சதவீதமான 700 சதுரமைல் காணியை சேருவலைத் தொகுதியாகவும், அம்பாரை மாவட்டத்தில் உள்ள 1,725 சதுரமைல் நிரப்பில் 50.7 சதவீதமான 900 சதுரமைல் காணியை அம்பாரைத் தொகுதியாகவும் சிங்களவர் அபகரித்துக் கொண்டனர்.

தமிழ் பேசும் மக்களான தமிழர்களினதும், முஸ்லிம்களினதும் பாரம்பரிய வசிப்பிடமும் சுதந்திரமான தொழில்துறைகளை உள்ளடக்கிய பிரதேசமுமான கிழக்கு மாகாணத்தில் இருந்து சிங்களவர் ஏறக்குறைய 1600 சதுரமைல், முழுமாகாணத்தின் மொத்த நிலப்பரப்பான 3,837 சதுரமைல் நிலப்பரப்பில் ஏறக்குறைய 42 சதவீதமான பொன்விளையும் பூமியை அபகரித்துக் கொண்டதுமல்லாமல் ஆதிக்கம் செலுத்துகின்றனர். இந்த அநியாயத்தை தடுத்து நிறுத்த அன்றைய யு.என்.பீ, எஸ்.எல்.எப்.பீ கிழக்கு மாகாண தமிழ் முஸ்லிம் பிரதிநிதிகளால் முடியவில்லை.

புதிதாகக் குடியேறிய சிங்களவரின் நலனுக்காகவே அம்பாறைத் தொகுதி ஏற்படுத்தப்பட்டது. புதிய நிருவாக மாவட்ட எல்லைகள் பிரிக்கப்பட்டபோது நியாயப்படி பிந்தனைப்பற்று மட்டக்களப்பு மாவட்டத்துடன்தான் இணைக்கப்பட்டிருக்க வேண்டும். ஆனால் முஸ்லிம் பெரும்பான்மையைத் திட்டமிட்டுச் சிதறடிக்கும் நோக்கத்தோடு அம்பாறை மாவட்டத்தோடு இணைக்கப்பட்டது. அப்படிப் பிரிக்கப்பட்டும்கூட அம்பாறை மாவட்டத்தில் 80 சதவீதத்துக்கும் கூடுதலான தமிழர்களும் முஸ்லிம்களும் கிழக்குக் கரையோரப் பகுதியில்தான் வாழ்ந்து வந்தனர். இவர்கள் நலனில் எதுவித அக்கறையும் இல்லாமல் குடியேற்றப் புதிய நகரமான அம்பாரையிலேயே மாவட்ட நிருவாகக் கச்சேரி அமைக்கப்பட்டது.

அம்பாரை மாவட்டத்திற்கு அன்று 3 ஐ.தே.க. முஸ்லிம் பிரதிநிதிகளும், ஒரு தமிழ்ப் பிரதிநிதியும், ஒரு சிங்களப் பிரதிநிதியும் மாவட்டத்தில் 80 சதவீதம் தமிழ் பேசும் மக்களாகிய முஸ்லிம்களுக்கும் தமிழருக்கும் இருந்தது. ஆனால் 20 சதவிகித பிரதிநிதித்துவத்தைக் கொண்டு சிங்களவர் நீதி நியாயத்திற்கெல்லாம் முற்றும் முரணாக முஸ்லிம் தமிழ்ப் பெரும்பான்மையினரின் உரிமைகளைச் சூறையாடினர். 80 சதவிகித பிரதிநிதித்துவத்தைக் கொண்டு சட்டப்படி அமுலாக்க

வேண்டியதைக்கூட அன்றைய ஐக்கிய தேசியக் கட்சி, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி முஸ்லிம் தமிழ் பிரதிநிதிகளால் முடியவில்லை.

ஐ.தே.கட்சியின் தார்மீக ஆட்சிக்காலத்தில் கிழக்கு மாகாணத்திற்கான பாராளுமன்ற பிரதிநிதித்துவத்தில் ஐந்துபேர் (5) தமிழர். இன்னும் ஐந்துபேர் (5) முஸ்லிம்கள், இருவர் மட்டுமே சிங்களவர். விகிதாசார அடிப்படையில் தமிழ் பேசும் மக்களாகிய தமிழர் முஸ்லிம்கள் 83.3 சதவிகிதம், சிங்களவர் 16.7 சதவிகிதம். தமிழ் பிரதிநிதிகள் இருவர் கபினட் மந்திரிகள், ஒருவர் மாவட்ட மந்திரி. முஸ்லிம் பிரதிநிதிகளில் ஒருவர் பிரதி அமைச்சர், இன்னும் இருவர் மாவட்ட மந்திரிகள். சிங்களவர் பிரதிநிதிகளில் அம்பாரைத் தொகுதிப் பிரதிநிதி அந்த மாவட்ட மந்திரியாகவும் நியமிக்கப்பட்டிருந்தார்.

ஐக்கிய தேசியக் கட்சியால் கொடுக்கப்பட்டிருந்த நியமனங்களை வெளிப்படையாகப் பார்க்கும்போது இனரீதியாக அரசியல் அதிகாரங்கள் கிழக்கு மாகாணத் தமிழருக்கும், முஸ்லிம்களுக்குமே கூடுதலாகக் கொடுக்கப்பட்டிருந்தது. ஆனால் இந்த தமிழ், முஸ்லிம் கபினட் அமைச்சர்கள் பிரதியமைச்சர்கள் மாவட்ட மந்திரி ஆகியோரால் கிழக்கு மாகாணத் தமிழ் பேசும் மக்களின் உரிமைகளை ஓரளவுக்கேனும் பாதுகாக்க முடியவில்லை.


தமிழ் பேசும் மக்கள் பெரும்பான்மையாக வாழும் கல்முனை, சம்மாந்துறை, பொத்துவில் தொகுதிகளை உள்ளடக்கிய ஒரு நிருவாக மாவட்டம் ஏற்படுத்தக் கிழக்கிலங்கை ஐக்கிய தேசியக் கட்சி தமிழ் முஸ்லிம் பிரதிநிதிகள் எடுத்த முயற்சி அம்பாரைத் தொகுதியின் ஐக்கிய தேசியச் சிங்களப் பிரதிநிதித்துவத்திற்கும் 83 சதவிகித தமிழ், முஸ்லிம் பிரதிநிதித்துவத்திற்கும் ஐக்கிய தேசியக் கட்சியின் தார்மீக ஆட்சியில் எவ்வளவு மதிப்புக் கொடுக்கப்பட்டது என்பதற்கு ஒரு நல்ல எடுத்துக்காட்டு.

துரித மகாவலி அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் கிழக்கு மாகண எல்லைக்குள் வரும் காணியின் விஸ்தீரணம் ஏறக்குறைய 160,000 ஏக்கர், அதாவது 45,000 காணித்துண்டுகள். இக்காணியில் சிறுபான்மை இனத்தவர்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ள 26,000 காணித்துண்டுகளைவிட மேலதிகமான 19,000 காணித்துண்டுகளில் ஏறக்குறைய 100,000 சிங்களவர்கள் புதிதாகக் குடியேறுவார்கள். தமிழருக்கு ஒதுக்கப்பட்டுள்ள 18,500 காணித்துண்டுகளில் ஏறக்குறைய 30,000 இந்திய வம்சாவழித் தமிழர்களும் 50,000 வெளிமாகாண இலங்கைத் தமிழர்களும் குடியேறுவர். முஸ்லிம்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ள 7,600 காணித்துண்டுகளில் விவசாயத்தைத் தொழிலாகக் கொண்ட 38,000 கிழக்கு மாகாண முஸ்லிம்கள் மட்டுமே குடியேறுவது சாத்தியம்.

பொத்துவில் பகுதியில் விரைவில் நடைமுறைக்கு வரவிருக்கும் ஹெட ஓயா போன்ற திட்டமும் செயற்படத் தொடங்கியதும், கல்ஓயா, கந்தளாய் அபிவிருத்தித் திட்டங்களால் ஏற்பட்ட மாற்றங்கள் போல் கிழக்கு மாகாணச் சனத்தொகையில் கணிசமான மாற்றங்கள் ஏற்படுவது தவிர்க்க முடியாதது. கிழக்கு மாகாணத்தின் இன விகிதாசாரம் விரைவில் ஏறக்குறைய சிங்களவர் 55 சதவீதம் தமிழர் 30 சதவிகிதம், முஸ்லிம்கள் 15 சதவிகிதம் என்ற நிலையில் மாற்றம் ஏற்படும். இப்படியான நிலையில் கிழக்கு மாகாணத்துக்கு ஒரு தனிமாகாண சபை அமைத்துத் தேர்தல் நடைபெறும் போது முடிவு இப்போதைக்கு இருப்பதைவிட முற்றும் மாறுபட்டதாகவே அமையும். ஐ.தே.க., ஸ்ரீ.ல.சு.க., தமிழ் முஸ்லிம் அரசியற் கட்சிகள், சுயேச்சைக்குழுக்கள் எல்லாம் தேர்தலில் போட்டியிடும் வாய்ப்புண்டு. மற்ற இனத்தவர்களை விட முஸ்லிம்களே வழக்கம்போல் எல்லாக் கட்சிகளிலும் போட்டியிடுவார்கள். 15 சதவிகித வாக்குகள் சில்லாங் கொட்டை சிதறுவது போல் சிதறி விரைவில் முஸ்லிம்கள் கிழக்கு மாகாணத்தில் அரசியல் பலம் அற்றவர்களாகப் போவது தவிர்க்க முடியாததாகிவிடும். ஆகவே கிழக்கு மாகாணத்தில் ஒரு தனிமாகாண சபை ஏற்பட்டு முஸ்லிம்களின் 1981ஆம் ஆண்டின் 33 சதவிகிதாசாரத்தையோ அல்லது ஒன்றிணைந்த அரசியற் பலத்தையோ சந்தர்ப்பத்துக்கு ஏற்றவாறு உபயோகித்து முஸ்லிம்கள் சுதந்திரமாகப் பாதுகாப்போடு வாழமுடியும் என்பது எதிர்காலத்தில் நடைமுறைக்குச் சாத்தியமற்ற வெறும் கற்பனை.

## துரித மகாவெலி அபிவிருத்தித்திட்டப் பிரதேசம்

(இடங்களும் காணி விஸ்தீரணங்களும் உத்தேசம்)




### துரித மகாவலி அபிவிருத்தித்திட்டத்தின் கீழ் வரும் புதிய காணி விபரம்

| | | அம்பாரை மாவட்டம் | மட்டக்களப்பு மாவட்டம் | திருகோணமலை மாவட்டம் | கிழக்கு மாகாணம் |
|---|---|---|---|---|---|
| பிரிவு A | 90,000 ஏக்கர்<br>14,300 கா.துண்டு | -<br>- | 10,000 ஏக்கர்<br>1,587 கா.துண்டு | 40,000 ஏக்கர்<br>6,349 கா.துண்டு | 50,000 ஏக்கர்<br>7,936 கா.துண்டு |
| பிரிவு B | 120,000 ஏக்கர்<br>37,483 கா.துண்டு | 4,000 ஏக்கர்<br>1,250 கா.துண்டு | 65,000 ஏக்கர்<br>20,312 கா.துண்டு | -<br>- | 69,000 ஏக்கர்<br>21,562 கா.துண்டு |
| பிரிவு C | 60,000 ஏக்கர்<br>22,000 கா.துண்டு | 25,000 ஏக்கர்<br>9,259 கா.துண்டு | -<br>- | -<br>- | 25,000 ஏக்கர்<br>9,259 கா.துண்டு |
| பிரிவு D | 40,000 ஏக்கர்<br>14,800 கா.துண்டு | -<br>- | -<br>- | 15,000 ஏக்கர்<br>5,555 கா.துண்டு | 15,000 ஏக்கர்<br>5,555 கா.துண்டு |
| பிரிவு E | NIL | - | - | - | - |
| பிரிவு F | NIL | - | - | - | - |
| பிரிவு G | 10,000 ஏக்கர்<br>2,900 கா.துண்டு | -<br>- | -<br>- | -<br>- | - ஏக்கர்<br>- கா.துண்டு |
| பிரிவு H | 70,000 ஏக்கர்<br>10,000 கா.துண்டு | -<br>- | -<br>- | -<br>- | - ஏக்கர்<br>- கா.துண்டு |
| மொத்தம் | 390,000 ஏக்கர்<br>101,483 கா.துண்டு | 29,000 ஏக்கர்<br>10,509 கா.துண்டு | 75,000 ஏக்கர்<br>21,899 கா.துண்டு | 55,000 ஏக்கர்<br>11,904 கா.துண்டு | 159,000 ஏக்கர்<br>44,312 கா.துண்டு |
| காணி % | 100% | 7.44% | 19.23% | 14.10% | 40.77% |
| காணித்துண்டு | 100% | 10.35% | 21.58% | 11.73% | 43.66% |

குறிப்பு:

| | | |
|---|---|---|
| மொத்த காணி விஸ்தீரணம் - பிரிவு A,B,C,D,G,H | 390,000 ஏக்கர் | 101,483 காணித்துண்டு |
| மொத்த காணி விஸ்தீரணம் கிழக்கு மாகாணத்தில் | 159,000 ஏக்கர் | 44,312 காணித்துண்டு |
| மொத்த காணி விஸ்தீரணம் கிழக்கு மாகாணத்திற்கு வெளியே | 231,000 ஏக்கர் | 57,171 காணித்துண்டு |
| | 59.23% | 56.33% |



011966

## (ஓ) உள்ளூர் நிருவாகப் பிரிவுகள் ஏற்படுத்தியபோது கிழக்கிலங்கை முஸ்லிம்களுக்கு ஏற்பட்ட பாதிப்பு

**கிழக்கு மாகாணத்தில் 1921ஆம் ஆண்டு சிங்களவரின் சனத்தொகை நான்கு சதவிகிதம் மட்டுமே. திட்டமிட்ட சிங்களக் குடியேற்றத்தாலும் பேரினவாத ஆட்சியாளரின் அனுசரணையோடும் கள்ளத்தனமாகக் குடியேறியவர்களின் எண்ணிக்கையோடும் கூட்டு மொத்தமாக 1981ஆம் ஆண்டுக் கணக்குப்படி கிழக்கு மாகாணத்தில் சிங்களவரின் குடிசன விகிதாசாரம் 24ஆக அதிகரித்துள்ளது. பாரம்பரிய முஸ்லிம், தமிழ் பகுதிகளில் முதலில் சிங்களவரைக் குடியேற்றிவிட்டு அதன் பின்னர் தமக்குள்ள ஆட்சி அதிகாரத்தை உபயோகித்து அப்பகுதிகளைச் சிங்கள உப அரசாங்க அதிபர் பிரிவுகளாகவும் கிராமசேவையாளர் பிரிவுகளாகவும் எல்லையிட்டு இறுதியில் அரச திணைக்களங்கள் மூலம் வரைபடங்களைத் தயாரித்துச் சிங்கள ஆட்சியாளர்கள் எல்லோரையும் ஏமாற்றுகின்றனர்.**

திருகோணமலை மாவட்டத்தில் 1971ஆம் ஆண்டுக் கணக்குப்படி தமிழர் 39%, முஸ்லிம்கள் 33%, சிங்களவர் 28% ஆனால் 1976ஆம் ஆண்டுத் தேர்தல் தொகுதி நிர்ணய ஆணைக்குழு இங்கு புதிதாகக் குடியேறிய சிங்களவருக்காக 700 சதுர மைலுக்கும் கூடுதலான நிலப்பரப்பை உள்ளடக்கிய சேருவல என்னும் தேர்தற் தொகுதியை ஏற்படுத்தியது. 1048 சதுரமைல் பரப்புள்ள திருகோணமலை மாவட்டத்தில் 24% சிங்களவர் 70% காணியை ஆக்கிரமித்துக்கொண்டனர். 76% தமிழருக்கும் முஸ்லிம்களுக்கும் மிஞ்சியது ஆக 348 சதுரமைல் காணிமட்டுமே. அம்பாறை மாவட்டத்தில் 1971ஆம் ஆண்டுக் கணக்குப்படி முஸ்லிம்கள் 47% சிங்களவர் 30% தமிழர் 23%. கல்ஓயாத் திட்டத்தின்கீழ் புதிதாகக் குடியேறிய சிங்களவருக்கு 1976ஆம் ஆண்டு அமைக்கப்பட்ட அம்பாரைத் தொகுதியின் விஸ்தீரணம் ஏறக்குறைய 880 சதுரமைல். அம்பாரை மாவட்டத்தின் மொத்தப்பரப்பு 1,775 சதுரமைல். இங்கு சிங்களவர் அதிகப்படியாக வரக்கூடியவகையில் ஏற்படுத்தப்பட்ட லஹுகலை, தமணை A.G.A. பிரிவுகள் - விஸ்தீரணம் 370 சதுரமைல் - கூட்டு மொத்தமாக எடுத்துக் கொண்டால் 1981ஆம் ஆண்டுக் கணக்குப்படி 36% சிங்களவர் - ஏறக்குறைய 1,250 சதுரமைல் - 70% காணியைப் பெறக்கூடியதாக எல்லைகள் மாற்றியமைக்கப்பட்டுள்ளன. பேரினவாதிகள் இலங்கையில் சிறுபான்மையினரின் உரிமைகளைச் சூறையாடியுள்ளனர் என்பதற்கு இது ஒரு தகுந்த எடுத்துக்காட்டு.

பழைய D.R.O. பிரிவு முறைப்படி இன்றைய அம்பாரை மாவட்டமும் மட்டக்களப்பு மாவட்டமும் ஒன்றிணைந்த மட்டக்களப்பு மாவட்டத்தில் முஸ்லிம்கள் பெரும்பான்மையான பாணமைப்பற்று, அக்கரைப்பற்று, சம்மாந்துறைப்பற்று, கரவாகு - நிந்தவூர்பற்று என்னும் நான்கு பிரிவுகளும், தமிழர்கள் அதிகப்படியான கோறளைப்பற்று, ஏறாவூர்ப்பற்று, மண்முனை மேற்குப்பற்று மண்முனை எருவில் போரதீவுப்பற்று என்னும் நான்கு பிரிவுகளும், சிங்களவர் அதிகப்படியான பிந்தனைப்பற்று, வெவகம்பற்று எனும் இரு பிரிவுகளும் இருந்தன.

திருகோணமலை மாவட்டத்தில் கட்டுக்குளம்பற்று கிழக்கு, நகரமும் கிறவட்டும் என்னும் இரு பிரிவுகளில் தமிழர்கள் அதிப்படியாகவும், கிண்ணியாப் பிரிவு, கொட்டியார்பற்று என்னும் இரு பிரிவுகளில் முஸ்லிம்கள் அதிகப்படியாகவும் கந்தளாய்ப்பிரிவு, கட்டுக்குளம்பற்று மேற்கு என்னும் இருபிரிவுகளில் சிங்களவர் அதிகப்படியாகவும் இருந்தனர்.

சுதந்திரத்திற்குப் பின் D.R.O. பிரிவுகள், உப அரசாங்க அதிபர்கள் பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டபோது முஸ்லிம் பிரிவுகள் பெரும்பாலும் முஸ்லிம்கள் குடியிருக்கும் பகுதிகளுக்கு மட்டுமே மட்டுப்படுத்தப்பட்டன. பெரும்பகுதி அரசாங்கப் பூமியும், நீர்நிலைகளும் சிங்கள, தமிழ் பெரும்பான்மை நிருவாகப் பிரிவுகளுக்குள்ளாக்கப்பட்டு முஸ்லிம்கள் உரிமைகள் புறக்கணிக்கப்பட்டுள்ளன.

முன்பிருந்த முஸ்லிம் பெரும்பான்மையான பாணமைப்பற்று D.R.O. பிரிவு - 472 சதுரமைல் - சிங்களவர் அதிகப்படியான லஹுகலை A.G.A. பிரிவாகவும், முஸ்லிம் அதிகப்படியான

பொத்துவில் A.G.A. பிரிவாகவும் பிரிக்கப்பட்டுள்ளது. 19,831 சனத்தொகையைக் கொண்ட முஸ்லிம் A.G.A. பிரிவுக்கு 103.9 சதுரமைல் நிலப்பரப்பும், 7,085 சனத்தொகையைக் கொண்ட சிங்கள A.G.A. பிரிவுக்கு 368.2 சதுரமைல் நிலப்பரப்பும் என்ற ரீதியில் பிரிக்கப்பட்டுள்ளது. முன்பிருந்த சம்மாந்துறை D.R.O. பிரிவு இன்றுள்ள ஹாடி கல்வி நிலையத்துக்கும் அப்பால் இருந்து அம்பாரை குளத்தையும், அம்பாரை நகரத்தையும் உள்ளடக்கிய ஒரு பெரும் நிலப்பரப்பு. இதிலிருந்து ஏறக்குறைய 50 சதுரமைல் காணி அபகரிக்கப்பட்டு வெவகம்பற்று வடக்கு - உகனை சிங்கள A.G.A. பிரிவுடன் சேர்க்கப்பட்டுள்ளது. சிங்கள வெவகம்பற்று சனத்தொகை 65,815, விஸ்தீரணம் 259.9 சதுரமைல், சம்மாந்துறை முஸ்லிம் A.G.A. பிரிவு சனத்தொகை 40,704 பரப்பு ஆக 99.1 சதுரமைல் மட்டுமே.

முஸ்லிம்களைப் போலவே, கிழக்கு மாகாணத்தில் தமிழரும், சிங்களவரும் கரையோரப் பகுதிகளிலும் பிரதான பாதை ஓரங்களிலும் உள்ள மேட்டு நிலப்பகுதிகளில்தான் கூட்டம் கூட்டமாகக் குடியிருக்கின்றனர். தமிழர், முஸ்லிம்கள், சிங்களவர் எல்லோரினதும் விவசாயக் காணிகளும் கால்நடை மேய்ச்சல் தரைகளும் மீன்பிடித்தொழில் நீர்நிலைகளும் வசிப்பிடங்களைவிட்டும் பிரிந்து வெவ்வேறு இடங்களில்தான் அமைந்துள்ளன. இதனால்தான் தற்போதுள்ள A.G.A. பிரிவுகள் அவ்வப் பிரிவுகளில் உள்ள சனத்தொகைக்கு ஏற்றவாறு அமையவில்லை. லஹுகலை A.G.A. பிரிவில் உள்ள காணியையும் கல்முனை A.G.A. பிரிவில் உள்ள காணியையும் சனத்தொகை ரீதியாக ஒப்பிடும்போது சிங்களவர் முஸ்லிமைவிட 208 மடங்கு கூடுதலான காணியைப் பெற்றுள்ளார்கள். அம்பாரை மாவட்டத்தில் முஸ்லிம் A.G.A. பிரிவுகளுக்கான சனத்தொகையோடு இங்குள்ள காணிகளையும் சிங்கள A.G.A. பிரிவுக்கான சனத்தொகையோடு அங்குள்ள காணிகளோடும் ஒப்பிடுகையில் சிங்களவர் 13 மடங்கு கூடுதலான காணியைப் பெற்றுள்ளார்கள்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் 1981ஆம் ஆண்டுக்கணக்குப்படி ஏறக்குறைய 28,000 முஸ்லிம்கள் காத்தான்குடியிலும், 20,000க்கும் கூடுதலான முஸ்லிம்கள் ஏறாவூரிலும் கிட்டத்தட்ட 27,000 முஸ்லிம்கள் வாழைச்சேனை, ஓட்டமாவடியிலும் வாழ்கின்றனர். இவர்கள் அனைவரும் விவசாயிகள். இவர்களுடைய விவசாயக்காணிகள் கால்நடைகளின் மேய்ச்சல் நிலங்கள் மீன்பிடி நீர்நிலைகள்யாவும் இம்மாவட்டத்தில்தான் உண்டு. ஆனால் இற்றைவரை மற்ற இன மக்களுக்கு இருப்பது போன்று முஸ்லிம்களின் A.G.A. பிரிவு எதுவும் ஏற்படுத்தப்படவில்லை. ஆனால் அம்பாரை மாவட்டத்தில் அக்கரைப்பற்று முஸ்லிம் D.R.O. பிரிவில் உள்ள திருக்கோவிலில் 15,000 தமிழருக்கும், அக்கரைப்பற்றில் உள்ள 13,000 தமிழருக்கும், பாணமைப்பற்று D.R.O. பிரிவில் லஹுகலையில் உள்ள 6,500 சிங்களவருக்கும், மட்டக்களப்பு மாவட்டத்தில் கோறளைப்பற்றில் உள்ள 11,000 தமிழருக்கும், திருகோணமலை மாவட்டத்தில் கொட்டியார்பற்று (சேருவாவில) இல் உள்ள 12,000 சிங்களவருக்கும், மொறவெவாவில் உள்ள 5,000 சிங்களவருக்கும் கோமரன்கடவில் உள்ள 2,000 சிங்களவருக்கும் தனித்தனி A.G.A. பிரிவுகளும் கிராமசேவையாளர்ப் பிரிவுகளும் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

A.G.A. கிராம சேவையாளர்கள் பிரிவுகளுக்கான நிலைப்பரப்பும், எல்லைகளும், நிர்ணயிக்கப்பட்டபோது முஸ்லிம்கள் நலன்களுக்குப் பெரும் அநீதி இழைக்கப்பட்டுள்ளன. அதிகாரப் பகிர்வுக்கான இனரீதி A.G.A. பிரதேச சபைகள் ஏற்படுத்தும்போது அவ்வப்பிரிவுகளில் உள்ள சனத்தொகைக்கேற்ப நிலப்பரப்பும் ஒதுக்கப்பட வேண்டியது இன்றியமையாததாகும்.

**இனப்பிரச்சினை சம்பந்தமாக திம்புவில் நடைபெற்ற பேச்சுவார்த்தையின்போது பதினெட்டு சதவிகித (18%) தமிழ் மக்கள் இலங்கையின் முப்பது சதவிகித (30%) நிலப்பரப்பைக் கொண்ட வடக்குக் கிழக்கு மாகாணங்களைத் தமிழ் தாயகமாகக் கோருவது நீதி நியாயத்திற்கு முரணானதென்று சிங்களப் பிரதிநிதிகள் வலியுறுத்தி தமிழர் கோரிக்கையை நிராகரித்தனர். இந்த நீதி நியாய அடிப்படையில் அம்பாரை மாவட்ட 36% சிங்களவர் இங்குள்ள 66% காணிகளையும் திருகோணமலை மாவட்டத்தில் 34% சிங்களவர் இங்குள்ள 70% காணிகளையும் அபகரித்துக் கொள்வதை எப்படி**

**ஏற்றுக்கொள்ள முடியும்? இவ்வாறே 72% தமிழர் மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள சகல காணிகளுக்கும் உரிமை கோருவது எந்த வகையிலும் நியாயமாகாது.**

கிழக்கு மாகாணத்தில் உள்ள 3,839 சதுரமைல் நிலப்பரப்பை 1981ஆம் ஆண்டுக் குடிசன விகிதாசாரப்படி தமிழருக்கு 42% - 1,612 சதுரமைல், முஸ்லிம்களுக்கு 33% - 1,267 சதுரமைல் சிங்களவருக்கு 25% - 960 சதுரமைல் என்ற ரீதியில் பகிர்ந்து கொள்வதே நிரந்தர சமாதானத்துக்கு நியாயமான தீர்வாக அமையும்.

முஸ்லிம்களுக்கு கிழக்கிலங்கையில் வேண்டியதெல்லாம் பாதுகாப்புள்ள வசிப்பிடம், சுதந்திரமான தொழிற்துறைகளுக்கு நியாயப்படி உரித்துள்ள காணி, அரசியல் சுயநிர்ணய உரிமைகளுக்குப் பாதுகாப்பு, தாய் மொழியில் நிர்வாகம், மார்க்க கலாசார நடவடிக்கைகளுக்குச் சுதந்திரம், அரசியல் அதிகாரப் பகிர்வில் சிங்களவர், தமிழர் போன்று முஸ்லிம்களும் பங்கு கொண்டு ஆட்சி அதிகாரத்தைச் சகல மட்டத்திலும் அனுபவிக்கக்கூடிய நிரந்தர வாய்ப்பு.

இலங்கை ஒற்றையாட்சியின் கீழ் சிங்களவர் தமிழர் முஸ்லிம்கள் ஒற்றுமையாக வாழவேண்டுமானால், நீதி, நியாயம், சமத்துவம் ஆகியவற்றின் அடிப்படையில் ஆட்சி அதிகாரங்கள் பகிர்ந்தழிக்கப்பட வேண்டும். ஒரு இனம் மற்ற இனத்தை அடக்கி ஒடுக்க முற்படக்கூடாது. வெறும் நிருவாகப் பிரிவுகளாக இற்றைவரை இருந்துவந்த மாகாணம், மாவட்டம், உப அரசாங்க அதிபர் பிரிவு கிராமசேவையாளர் பிரிவுகள் அனைத்தும் (இனப்பிரச்சினை தீர்வுகள் பகிர்ந்தளிக்கப்படும்) ஆட்சி அதிகாரப் பிரிவுகளாக மாற்றமடைந்து வருகின்றன. ஆகவே, அதிகாரப் பகிர்வுக்கான பிரிவுகள் இன உரிமைகளையும், தனித்துவத்தையும் பேணிப் பாதுகாக்கக்கூடியனவாக அமைய வேண்டியது இன்று கிழக்கு முஸ்லிம்களின் இன்றியமையாத தேவையாகும்.

## 3. இலங்கை-இந்திய உடன்படிக்கையின்பின் கிழக்கு மாகாணத்தில் நடைபெற்ற சம்பவங்கள்

இலங்கையின் இனப்பிரச்சினைக்கும் அதனைத் தொடர்ந்து ஏற்பட்ட வன்செயல்களுக்கும் தீர்வுகாணும் அவசியத்தையும், இலங்கையில் வாழும் சகல இன மக்களின் பாதுகாப்பு, நல்வாழ்வு, ஆகியவற்றையும் கருத்தில் கொண்டு 29-07-1987 இல் இலங்கை இந்திய உடன்படிக்கை ஏற்பட்டது.



**இலங்கையின் ஐக்கியம், இறைமை, பிரதேச ஒருமைப்பாட்டினைப் பாதுகாக்கும் நோக்கத்தோடு சிங்களவர், தமிழர், முஸ்லிம்கள், பறங்கியர் ஆகிய பல இன மக்கள்வாழும் பல மொழி பேசும் ஒரு நாடாக இலங்கை ஏற்றுக் கொள்ளப்பட்டு ஒவ்வொரு இனமக்களும் அக்கறையோடு பேணிப் பாதுகாக்க வேண்டிய தனித்துவமான கலாசாரத்தையும், மொழியையும் கொண்டுள்ளவர்கள் என்பதும் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. வடக்கு கிழக்கு மாகாணங்கள் தமிழ் பேசும் மக்களின் வரலாற்று வசிப்பிடம் என்றும் இவர்கள் எக்காலத்திலும் மற்ற இன மக்களோடு இங்கு சேர்ந்து வாழ்ந்து வந்திருக்கிறார்கள் என்பதும் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. இலங்கையின் ஐக்கியத்தையும் இறைமையையும் பிரதேச ஒருமைப்பாட்டினையும் பலப்படுத்தக்கூடிய சக்திகளை வலுப்படுத்துவதையும் அதன் பல்லின, பல மொழி பலசமய மக்கள் வாழும் பன்முகத்தன்மையைப் பாதுகாத்து இங்கு எல்லாப் பிரஜைகளும் சமத்துவமாகவும், பாதுகாப்பாகவும், சௌஜன்யமாகச் சீரும் சிறப்போடு அவரவர் அபிலாசைகளைப் பூர்த்திசெய்து வாழவேண்டும் என்பதையும்** கருத்திற் கொண்டு ஏற்படுத்தப்பட்ட இலங்கை-இந்திய ஒப்பந்தம் இந்தியப் பிரதமர் திரு. ராஜீவ் காந்தியாலும் இலங்கை ஜனாதிபதி திரு. ஜே.ஆர். ஜயவர்தனவாலும் 27-07-1987ல் கைச்சாத்திடப்பட்டது.

மாகாணசபை ஏற்படுத்தல், மாகாணங்களை ஒன்றிணைத்தல், மாகாண சபைகளுக்கான தேர்தல்கள், கிழக்கு மாகாணத்தில் நடத்த வேண்டிய உத்தேச சர்வசன வாக்கெடுப்பு, அரசகரும மொழிச்சட்ட அமுலாக்கங்கள் ஆகிய சம்பந்தமான பிரேரணைகளை நடைமுறைப்படுத்த இலங்கைப் பாராளுமன்றத்தில் சட்டம் ஏற்படுத்த வெண்டும் என்றும் இவ்வுடன்படிக்கையில்

முக்கியமாகக் கூறப்பட்டுள்ளது.

1987 ஆகஸ்ட் 15இல் அவசரகாலத்தை நீக்குதல், இலங்கை இராணுவத்தையும், பாதுகாப்புப் படையினரையும் முகாம்களுக்குள் கட்டுப்படுத்தல், 2.10ஆவது பந்தியில் குறிப்பிட்டபடி வடக்கு கிழக்கு மாகாணங்களில் சட்டத்தையும் ஒழுங்கையும் நடைமுறைப்படுத்தல், பொது மன்னிப்பு வழங்கல் மற்றும் இலங்கைத் துறைமுகங்கள் எவ்வாறு உபயோகிக்கப்பட வேண்டும் என்று தீர்மானிப்பது போன்ற பிரேரணைகளை இலங்கை ஜனாதிபதி தனக்குள்ள நிறைவேற்று அதிகாரங்களைக் கொண்டு நடைமுறைப்படுத்தவேண்டும் என்றும் கூறப்பட்டுள்ளது.

**பாராளுமன்றத்தால் நிறைவேற்றப்பட்ட 1987ஆம் ஆண்டின் 42ஆம் இலக்க மாகாண சபைகள் சட்டத்தில் 37(1)வது பிரிவில் இடைக்கால ஏற்பாடுகள் பற்றிக் குறிப்பிடுகையில், உட்பிரிவு (அ)வில் அடுத்து அமைந்த இரண்டு அல்லது மூன்று மாகாணங்கள் தற்காலிக இணைப்பு பற்றி ஜனாதிபதி பிரகடனப்படுத்த வேண்டும் என்றும் உட்பிரிவு (ஆ)வில் ஜனாதிபதியவர்கள் தனி நாடொன்றைத் தாபிப்பதையே தம்முடைய குறிக்கோளாகக் கொண்ட பயங்கரவாத தீவிரவாத அல்லது வேறு குழுக்களினால் 1987 ஜுலை 29ம் திகதியன்று வைத்திருக்கப்பட்டிருந்த அல்லது அவர்களின் கீழிருந்த படைக்கலங்கள், வெடிமருந்து, ஆயுதங்கள், வெடி பொருட்கள் அத்துடன் வேறு இராணுவ உபகரணங்கள் ஆகியவை, இலங்கை அரசாங்கத்திடம் அல்லது அதனால் நியமிக்கப்பட்ட அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டு விட்டனவென்றும், அத்துடன் சொல்லப்பட்ட மாகாணங்களில் அத்தகைய குழுக்களினால் போர் நடவடிக்கைகளும் வேறு வன்செயல்களும் நிறுத்தப்பட்டு விட்டனவென்றும் அவர் தம்மைத் திருப்திப்படுத்தினால் ஒழிய (1) அ என்னும் உட்பிரிவில் உள்ள ஏற்பாடுகள் வடக்கு கிழக்கு மாகாணங்களுக்கு ஏற்புடையனவாகும் என்று வெளிப்படுத்திப் பிரகடனம் ஒன்றை ஆக்குதல் ஆகாது என்று கூறப்பட்டிருக்கிறது. இப்படியான ஒரு தடையை இலங்கை ஜனாதிபதிக்கு ஏற்படுத்த இலங்கை - இந்தியா உடன்படிக்கையில் உள்ள சில முக்கியமான அடிப்படைச் சரத்துக்களே வலுவான காரணிகளாகும்.**

உடன்படிக்கையின் 2.8ஆம் பிரிவில் மாகாண சபைத் தேர்தல் அடுத்து வரும் மூன்று மாதங்களுக்கு முன்னர் (1987 ஒக்டோபர் 31க்கு முன்னர்) எப்படியாவது 1987 டிசம்பர் 31க்கு முன்பதாக நடத்தப்பட வேண்டும் என்றும் 2.9ஆம் பிரிவில் வடக்கு கிழக்கு மாகாணங்களில் அவசரகாலச் சட்டம் 1987 ஆகஸ்ட் 15ஆம் திகதி நீக்கப்படும் என்றும், உடன்படிக்கை கைச்சாத்திட்டு 48 மணித்தியாலங்களில் (1987) ஜுலை 31ஆம் திகதியளவில் வன்செயல் நிறுத்தம் அமுலுக்கு வரும் என்றும் போராளிக் குழுக்கள் தற்போது வைத்திருக்கும் சகல ஆயுதங்களும் ஏற்கனவே ஒழுங்கு செய்தபடி அரசாங்கத்தால் நியமிக்கப்படும் அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட வேண்டும் என்றும் கூறப்படுகிறது.

ஆனால் இலங்கை இந்திய உடன்படிக்கையில் மேற்கூறப்பட்ட எதுவுமே நடைபெறவில்லை. தமிழீழ விடுதலைப்புலிகள் உடன்படிக்கையை முற்றாக நிராகரித்து தங்கள் போராட்டத்தை வடக்கு கிழக்கு மாகாணங்களில் மிகவும் உக்கிரப்படுத்தினர். மற்றப் போராளிக்குழுக்கள் 20 சதவிகித ஆயுதங்களைக் கூடக் கையளிக்கவில்லை என்பதை இலங்கை ஜனாதிபதியும் இந்தியப் பிரதமரும் ஏற்றுக் கொண்டுள்ளனர். அவசரகாலச் சட்டம் குறிப்பிட்டபடி 1987 ஆகஸ்ட் 15ஆம் திகதி நீக்கப்படவில்லை.

1987 செப்டெம்பர் 3ஆம் திகதி மூதூர் ஏ.ஜி.ஏ. ஜனாப் ஹபீப் முஹம்மது தமிழ்ப் போராளிகளால் கொல்லப்பட்டார். இதைத் தொடர்ந்து அங்கு முஸ்லிம்களுக்கும் தமிழருக்கும் இடையில் இனக்கலவரம் ஏற்பட்டது.

1987 செப்டம்பர் 10ஆம் திகதி கல்முனையில் ஆயுதம் தாங்கிய போராளிகளும் இந்திய இராணுவத்தினரும் முஸ்லிம்களைத் தாக்கினர். பலர் கொல்லப்பட்டனர் ஏழு கோடி ரூபாவுக்கும் கூடுதலான முஸ்லிம்களின் சொத்துக்கள் சூறையாடப்பட்டன.

1987 ஒக்டோபர் 12ஆம் திகதி மூதூரில் முஸ்லிம்கள் தமிழ் போராளிகளாலும் இந்திய இராணுவத்தினராலும் தாக்கப்பட்டு அனாதைகளாக வந்தவர்களைப் பராமரித்துக் கொண்டிருந்த மூதூர் முன்னாள் எம்.பி. அப்துல் மஜீத் பயங்கரவாதிகளால் 1987 நவம்பர் 13ஆம் திகதி சுட்டுக் கொல்லப்பட்டார். 1987 டிசம்பர் 2ஆம் திகதி ஓட்டமாவடியில் தமிழ் போராளிகளும், இந்திய இராணுவத்தினரும் கூட்டாக நடத்திய தாக்குதலில் 26 முஸ்லிம்கள் கொல்லப்பட்டனர். முஸ்லிம் பெண்கள் கற்பழிக்கப்பட்டனர். 200இற்கும் மேற்பட்ட முஸ்லிம்கள் காணாமற்போயினர். தமிழ் போராளிகளின் அட்டகாசத்துக்குப் பயந்து 14,000 முஸ்லிம்கள் சிங்களப் பகுதிக்கு - பொலன்னறுவைக்கு அகதிகளாக ஓடி ஒளிந்தனர்.

40,000 முஸ்லிம்களின் குடியிருப்பு, வீடுவாசல்கள் காத்தான்குடியில் 1987 டிசம்பர் 30ஆம் திகதி தமிழ்ப்பயங்கரவாதிகளாலும் இந்திய இராணுவத்தினராலும் தாக்கப்பட்டு 60 முஸ்லிம்கள் கொல்லப்பட்டனர், 300க்கு மேற்பட்டோர் காயமுற்றனர், 20 கோடி ரூபாவுக்கும் கூடுதலான முஸ்லிம்களின் சொத்துக்கள் நாசமாக்கப்பட்டுச் சூறையாடப்பட்டன. காத்தான்குடித்தாக்குதல் இரண்டே இரண்டு நாட்கள்தான் நடந்தபோதும் ஆயுதம் ஏந்திய தமிழ் போராளிகள் காத்தான் குடிமக்களை இந்திய அமைதிப்படை உதவியோடு 1988 ஜனவரி 8ஆவது நாள்வரை பணயக்கைதிகளாக்கிப் பழிவாங்கினர், முஸ்லிம்களைக் கொடுமைப்படுத்தினர். இந்திய இராணுவத்தினராலும் ஆயுதம் தாங்கிய தமிழ் போராளிகளாலும் 1987 முடிவில் வடகிழக்கு மாகாணத்தில் அனாதைகளாக்கப்பட்ட முஸ்லிம்கள் எண்ணிக்கை ஏறக்குறைய 94,200.

வடகிழக்கு மாகாணங்களில் முஸ்லிம்களுக்கு எதிராக நடைபெற்றுவந்த வன்செயல்கள் தமிழ் போராளிகளாலும் இந்திய இராணுவத்தினராலும் திட்டமிட்டு நடாத்தப்படும் ஒரு பயங்கரச்சதி என உணர்ந்த முஸ்லிம்கள் சார்பாக கலாநிதி பதியுத்தீன் மஹ்மூத், டாக்டர் எம்.சி.எம். கலீல் போன்றோரும் கிழக்கு மாகாண முஸ்லிம் பிரதிநிதிகளும் முன்னாள் ஜனாதிபதி ஜயவர்தனா அவர்களைச் சந்தித்து உடனே வடகிழக்கு முஸ்லிம்களுக்குப் பாதுகாப்புக் கொடுக்கும்படி வேண்டினர். முன்னாள் ஜனாதிபதி முஸ்லிம்களைப் பாதுகாக்கத் தவறிவிட்டார், அவரை முஸ்லிம் தூதுக்குழு சந்தித்த சில தினங்களில்தான் காத்தான்குடி தாக்கப்பட்டது. அந்தத்தூதுக்குழுவில் சென்ற ஓட்டமாவடி முஸ்லிம் பெரியார் ஜனாப் சி.எம்.எம். புஹாரியும் இந்திய இராணுவத்தினரால் சுட்டுக் கொல்லப்பட்டார். **முஸ்லிம்களுக்கு எதிராக வடகிழக்கு மாகாணத்தில் அடிக்கடி பயங்கர நடவடிக்கைகளில் தமிழ்ப்போராளிகளும் இந்திய இராணுவமும் நேரடியாக சம்பந்தப்பட்டிருப்பதும் ஐக்கிய தேசியக்கட்சி அரசாங்கம் முஸ்லிம்கள் நலனில் எதுவித அக்கறையும் இல்லாமல் நடந்து கொண்டதும் இலங்கை இந்திய உடன்படிக்கையிலும் வடகிழக்கு ஒன்றிணைந்த மாகாண சபையிலும் படிப்படியாக வடகிழக்கு முஸ்லிம்களுக்குப் பலத்த சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளது.**

## இந்திய அமைதிகாக்கும் படையினரும், தமிழ்ப்பயங்கரவாதிகளும் ஒன்றிணைந்து கிழக்கு மாகாணத்தில் நடத்தி முடித்த மாகாண சபைத் தேர்தல்.

இந்தச் சந்தர்ப்பத்தில்தான் இலங்கையில் உள்ள 82% மக்களின் விருப்பத்துக்கு மாறாக கிழக்கு மாகாணப் பெரும்பான்மை மக்களின் உரிமைகளை உடைத்தெறியும் வகையில் 1988 செப்டம்பர் 2ஆம் திகதி முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர். ஜயவர்தனா அவர்கள் அவசரகாலச் சட்டத்தின் கீழ் அவருக்கிருந்த அதிகாரத்தைக் கொண்டு பொது மக்கள் பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்தின் கீழ் இலங்கை இந்திய உடன்படிக்கை 2.9 - 2.7 பிரிவுகளின் அடிப்படை நோக்கத்தையே தலைகீழாக மாற்றும் வகையில் 1987ஆம் ஆண்டு 42ஆவது மாகாண சபை சட்டத்தின் 37(1)ஆ உட்பிரிவில் கூறப்பட்டுள்ள **'போராளிகள் வன்செயலைப் பூரணமாக நிறுத்தி எல்லா ஆயுதங்களையும் கையளிக்காதவரை ஜனாதிபதியானவர் கிழக்கு மாகாணத்தை வடமாகாணத்தோடு தற்காலிகமாக இணைக்கக்கூடாது'** என்ற அதிமுக்கிய கட்டுப்பாட்டை நீக்கிவிட்டார். இதனால் கிழக்கு மாகாணத்தில் உள்ள 33 சதவிகிதமான முஸ்லிம்கள் அரசியல் அந்தஸ்து மிகவும் கீழ்தரமாக குறைக்கப்பட்டு 70 சதவிகிதம் தமிழர் பெரும்பான்மையைக் கொண்ட வடகிழக்கு மாகாணத்தில் வெறும் அரசியல்

சமூக அடிமைகளாக ஒதுக்கித் தள்ளப்பட்டனர்.

இச்சந்தர்ப்பத்தில் ஐக்கிய தேசியக்கட்சியில் தவிசாளராகவிருந்த அகில இலங்கை முஸ்லிம் லீக் தலைவர் டாக்டர். எம்.சி.எம். கலீல் அமைச்சர்களான எம்.எச். முஹம்மத், ஏ.சி.எஸ். ஹமீத், பாக்கீர் மரைக்கார், கிழக்கு மாகாணத்தைப் பிரதிநிதிப்படுத்திய ஏ.ஆர்.எம். மன்சூர் எம்.ஏ. அப்துல் மஜீத், உதுமாலெப்பை, மஹ்ரூப், றிஸ்வி சின்னலெப்பை ஆகியோரால் எதுவுமே செய்யமுடியவில்லை.

ஜனாதிபதியின் பிரகடனத்தைத் தொடர்ந்து வடக்கு கிழக்கு மாகாணங்கள் தற்காலிக இணைப்பு 1988 செப்டம்பர் 7ஆம் திகதி அறிவிக்கப்பட்டது, செப்டம்பர் 19ஆம் திகதி தேர்தல் அறிவிக்கப்பட்டு, ஒக்டோபர் 10ஆம் திகதி தேர்தல் ஆணையாளரால் நியமனப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டன. தேர்தல் 1988 நவம்பர் 19ஆம் திகதி நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டது.

இலங்கை இந்திய உடன்படிக்கையின் 2.17ஆவது பந்தியில் 'ஒப்பந்தத்தில் கூறப்பட்ட தேர்தல் நடைமுறைகளில் வடக்கு கிழக்கு மாகாணங்களில் உள்ள சகல இன வாக்காளர்களும் சுதந்திரமாகவும் பூரணமாகவும் நியாயமான முறையில் தேர்தலில் பங்குபற்றுவதை இலங்கை அரசாங்கம் உறுதிப்படுத்தும்' என்றும் 'இவ்விவகாரத்தில் இந்திய அரசாங்கம் இலங்கை அரசாங்கத்திற்குப் பூரண ஒத்துழைப்பை வழங்கும்' என்றும் கூறப்பட்டுள்ளது.

1988 நவம்பர் 19ஆம் திகதி சனிக்கிழமை, வடகிழக்கு மாகாணசபைக்கு கிழக்கு மாகாணத்தில் தேர்தல் நடைபெறுவதற்குச் சற்று முன்பதாக அந்த வாரத்தில் கிழக்கு மாகாணத்தில் நிலைமை எப்படி இருந்தது என்பதை 1988 நவம்பர் 14ஆம் திகதி திங்கட்கிழமை மகா கனம் பொருந்திய ஜனாதிபதியவர்களுக்கு திரு. கே.டபிள்யு. தேவனாயகம், கல்குடா எம்.பி. உள்நாட்டு அமைச்சர் திரு. சி. இராசதுரை, மட்டக்களப்பு முதலாவது எம்.பி. பிரதேச அபிவிருத்தி, இந்துமத கலாச்சார அமைச்சர், திருமதி. ஆர். பத்மநாதன், பொத்துவில் இரண்டாவது எம்.பி. மட்டக்களப்பு மாவட்ட மந்திரி, ஜனாப் அப்துல் மஜீத் சம்மாந்துறை எம்.பி. பிரதித்தபால் அமைச்சர் ஜனாப் உதுமாலெப்பை, பொத்துவில் முதலாவது எம்.பி. ஜனாப் மன்சூர், கல்முனை எம்.பி. முல்லைத்தீவு மாவட்ட மந்திரி ஜனாப் றிஸ்வி சின்னலெவ்வை, மட்டக்களப்பு இரண்டாவது எம்.பி. ஆகியோர் கைச்சாத்திட்டு அனுப்பிய கடிதத்தில் பின்வருமாறு கூறப்பட்டுள்ளது.

**''வாக்காளர்கள் தமது தெரிவைச் சுதந்திரமாகவும் விரும்பியபடியும் அவர்களது வாக்குச் சீட்டுக்களில் குறிப்பிட்டுத் தெரிவிக்க முடியாத சீர்கேடான நிலைக்குக் கிழக்கு மாகாணம் தீவிரமாக மோசமடைந்து போய்க்கொண்டிருக்கிறது. நிறைய ஆயுதங்களை வைத்துக் கொண்டு ஈ.பி.ஆர்.எல்.எப். எல்லா இடங்களிலும் பலாத்காரமாகக் காரியாலயங்களை நிறுவுகின்றனர். கல்முனைப்பகுதியில் மக்களை மிரட்டி அச்சுறுத்துகின்றனர். அவர்களை எதிர்த்த ஐவர் சென்ற சனிக்கிழமை காலையில் துப்பாக்கியால் சுடப்பட்டுள்ளனர். மட்டக்களப்பு மாவட்ட மந்திரியின் கந்தோரையும் வீட்டையும் உடைத்து உட்சென்று இந்தக் கட்டிடத்தைப் பலவந்தமாகக் கைப்பற்றி அவர்களது தலைமைக் காரியாலயமாக அதனைப் பாவிக்கின்றனர். ஈ.பி.ஆர்.எல்.எப். பிற்கு வாக்களிக்காமல் எதிர்த்து வாக்களித்தவர்கள் அனைவரும் 20ஆம் திகதி மட்டக்களப்பு மாவட்டத்திலிருந்து விரட்டியடிக்கப்படுவர் என்று தாங்கள் அச்சுறுத்தப்படுவதாக எமது ஆதரவாளர்களிடமிருந்து தொலைபேசிகள் மூலம் ஏகப்பட்ட முறைப்பாடுகள் வந்துகுவிகின்றன. சம்மாந்துறையில் மக்கள் கடத்தப்படுகின்றனர். தேர்தலில் பாவிப்பதற்கு வாகனங்கள், உளவு இயந்திரங்கள், மோட்டார் சைக்கில்கள் பலவந்தமாக அபகரிக்கப்படுவதால் மக்கள் பெரிதும் கலவரமும் பீதியும் அடைந்துள்ளனர்.**

**ஈ.பி.ஆர்.எல்.எம். முஸ்லிம் காங்கிரசுக்கு எதிராகப் பிரசாரம் செய்கின்றனர். அதற்காக முஸ்லிம் பகுதிகளுக்கு வந்து அவர்களின் வாகனங்களைப் பலவந்தமாகக் கடத்திச் சென்று உபயோகிக்கின்றனர். மட்டக்களப்பு முன்னாள் எம்.பி. பரித் மீராலெப்பையின் கைம் பெண்ணையும் பிள்ளைகளையும் துன்புறுத்தி வீட்டையும் சூறையாடிச்**

சென்றுவிட்டனர். இப்படியான அட்டூழியங்களால் இனக்கலவரங்கள் நிச்சயம் ஏற்படும். போராளிகளின் மூன்று நட்சத்திரக் கூட்டமும் இந்திய அமைதிப்படையும் சென்று ாளிகைக் காட்டிலுள்ள முஸ்லிம்களைத் தாக்கியதை இந்திய இராணுவக் கொமான்டரே ஏற்றுக் கொண்டு தான் 'ஒரு போதும் இப்படி நடக்குமென எதிர்பார்க்கவில்லை என்று கூறியுள்ளார். தேர்தலில் பங்குபற்றுவதற்குத் தகுதியுள்ளவர்கள் என்று இவர்களை நாங்கள் ஏற்றுக் கொண்டாலும் இவர்கள் பயங்கரவாதிகள் என்பதனாலேயே இப்படியெல்லாம் நடக்கின்றது.'

இப்படியான படுமோசமான பயங்கரச் சூழ்நிலையில் மக்கள் தங்கள் வாக்குகளை அச்சமின்றிக் கொடுக்கக்கூடிய ஜனாநாயகரீதியான சுதந்திரமான ஒரு தேர்தல் நடத்துவது சாத்தியமில்லை. ஆகவே தேர்தல் ஆணையாளர் அவருக்கு வேண்டிய உத்தியோகத்தர்களை இந்தப்பிரதேசத்துக்கு வெளியேயிருந்துதான் இறக்குமதி செய்கிறார் என்ற காரணங்களுக்காகத் தயவுசெய்து இந்தத் தேர்தலை ஒத்திவைக்குமாறு மிகவும் பணிவாக வேண்டுகிறோம் என்றார்.

பொலிஸ் மாஅதிபர், 'அரசாங்கம் இத்தேர்தலை நடத்தமுடியாது' என்று அறிக்கை சமர்ப்பித்துள்ளார். பாதுகாப்பு அமைச்சின் செயலாளர், வன்செயல் காரணமாக தேர்தல் ஆணையாளருக்கு கிழக்கு மாகாணத்தில் எந்தவொரு தேர்தல்மாவட்டத்திலும் பொறுப்பதிகாரிகளைக் கடமைக்கு எடுக்க முடியாத காரணத்தால் கொழும்பிலிருந்து இறக்குமதி செய்து இராணுவ முகாம்களுக்குள் தங்கி இருந்து வேலை முடிந்ததும் கொழும்புக்கு ஏற்றுமதி செய்யப்பட வேண்டிய நிலையில் உள்ளனர். இந்தநிலையில் நீதியான சுதந்திரமான ஜனநாயகமுறையில் ஒரு தேர்தல் நடத்த முடியாது என்பதைக் கூறி இத்தேர்தலை நிலைமை வழமைக்குத் திரும்பும்வரை ஒத்திவைக்கும்படி வேண்டிக்கொள்கிறோம்.

கல்குடாவில் கடத்தப்பட்ட ஐந்து ஐக்கிய தேசியக்கட்சி ஆதரவாளர்களிடம் பெருந்தொகைப் பணத்தைப் பணயமாகக் கொடுத்து தேர்தலில் பங்கு கொள்ளக்கூடாது என்ற எச்சரிக்கையோடு அவர்கள் விடுவிக்கப்பட்டுள்ளனர். இதற்குப்பின் ஐக்கிய தேசியக்கட்சியின் சார்பில் எவருமே போட்டியிட முன்வரவில்லை. அதனால் ஈ.பி.ஆர்.எல்.எப். போட்டியின்றித் தெரிவாகக்கூடிய சூழல் ஏற்பட்டுக் கடைசியாகப் பெரும் முயற்சியின் பின்னர் ஐக்கிய தேசியக்கட்சி வேட்பாளர் பட்டியல் செயலாளரிடம் ஞாயிற்றுக்கிழமை அதிகாலை தான் 3.30 மணிக்கு ஒப்படைக்கப்பட்டது. சி.தில்லையம்பலம் என்ற ஒரு வேட்பாளர் சுட்டுக் கொல்லப்பட்டார். இந்த இக்கட்டான நிலையில்தான் எமது ஐக்கிய தேசியக் கட்சி ஆதரவாளர்கள் தங்கள் வாக்குகளை அச்சமின்றிச் சுதந்திரமாகவும் நிம்மதியாகவும் கொடுக்கக்கூடிய தேர்தல் ஜனநாயகரீதியில் நடைபெறட்டும். அதுவரை இத்தேர்தலை தயவுசெய்து ஒத்திப்போடுமாறு தங்களை வேண்டிக் கொள்கிறோம். இங்கு நடக்கும் உண்மை நிலையை உங்களுக்கு நேரில் விபரமாகக் கூறுவதற்கு உங்களை நாங்கள் பார்க்க விரும்புகிறோம்'' என்று கூறியுள்ளார்கள்.

அன்றைய ஜனாதிபதி ஜே.ஆர். ஜயவர்தன இவர்களின் கோரிக்கையை முற்றாக நிராகரித்தபோதும் கூட இந்த முஸ்லிம் பாராளுமன்றப் பிரதிநிதிகள் தங்கள் பதவிகளைத் தொடர்ந்தும் ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கத்தில் வகித்து வந்தனர்.

ஒன்றிணைந்த வடக்கு கிழக்கு மாகாண சபைக்கு மட்டக்களப்பு, அம்பாறை, திருகோணமலை ஆகிய தேர்தல் மாவட்டங்களில் 1988 நவம்பர் 19 சனிக்கிழமை நடந்த தேர்தல் 1988ஆம் ஆண்டு 2ஆம் இலக்க மாகாண சபைத்தேர்தல் சட்டப்படி நடத்தப்பட்ட தேர்தல் அல்ல.

சில வேட்பாளர் விண்ணப்பப்பத்திரங்களில் உத்தேச பெயர்களே கொடுக்கப்பட்டிருந்தன. இதனால்தான் தேர்தல் முடிந்ததும் வெற்றி பெற்ற பெயர்களுக்குரிய நபர்களை உயிருடன் ஆஜராக்க முடியாமல் போனதும் திருகோணமலையில் நடந்த சத்தியப் பிரமாணவைபவத்துக்குச்

சமூகம் கொடுக்க முடியாமலும் இருந்தமை நாம் அறிந்ததே.

மாகாணசபைத் தேர்தல் சட்டத்தின் 22ஆவது பிரிவின்படி வாக்கெடுப்பு நிலையங்கள் வாக்காளர்களுக்கு அறிவிக்கப்பட்ட வில்லை. 25ஆவது பிரிவில் கூறப்பட்டபடி தபால் கந்தோர்கள் தேர்தல் அட்டைகளை உரிய நேரத்தில் வாக்காளர்களுக்கு வினியோகிக்கவில்லை. எதுவித அறிவித்தலும் இன்றி வாக்கெடுப்பு ஏற்பட்டது. அனேகமானவர்களுக்கு எங்கு போவதென்று தெரியாததால் வாக்களிக்கப் போகவே இல்லை.

27ஆவது பிரிவிற் கூறப்பட்டபடி தகுமான அளவு உத்தியோகத்தரும் வசதிகளும் வாக்கெடுப்பு நிலையங்களில் இருக்கவில்லை. இதனால் வாக்காளர் இடாப்பு சரியாகக் குறியிடப்படவில்லை. சட்டத்தில் கூறியபடி அழிக்க முடியாதமை விரல்களில் பூசுதல் போன்ற கட்டாய கடமைகள் சரிவர நடைபெறவில்லை. 33ஆவது பிரிவிற்கு மாறாக ஆயுதம் தாங்கிய இந்திய இராணுவத்தினர் வாக்கெடுப்பு நிலையத்தில் நிலை கொண்டு தேர்தல்வேலைகளைக் கவனித்தனர். 35ஆவது பிரிவில் வாக்குச் சீட்டுகள் வாக்காளர்களுக்கு தேர்தல் நிலையத் தலைவர் அல்லது அவரின் அங்கீகாரம் பெற்ற ஒருவரால் கொடுக்கப்பட வேண்டும் என்று கூறப்பட்டிருக்கிறது. ஆனால் சட்டத்துக்கு மாறாக ஆயுதம் தாங்கிய இந்திய இராணுவத்தினரே வாக்குச் சீட்டுகளைப் பங்கிட்டனர்.

31ஆவது பிரிவில் கூறப்பட்டிருப்பது போல் ஒவ்வொரு வாக்கெடுப்பு நிலையங்களும் காலை 7.00 மணிக்கு ஆரம்பிக்கப்பட்டு பிற்பகல் 4.00 மணிக்கு மூடப்பட வேண்டும். ஆனால் எத்தனையோ வாக்கெடுப்பு நிலையங்கள் காலை 11.00 மணிக்குப் பின்புதான் ஆரம்பிக்கப்பட்டன. பின்பு சட்ட விரோதமாக வாக்கெடுப்பு நிலையங்கள் இரவு 7.00 மணியளவிலேயே மூடப்பட்டன.

66 (9) பிரிவுக்கு மாறாக ஆயுதம் தாங்கிய போராளிகளும் இந்திய இராணுவத்தினரும் தேர்தலில் போட்டியிட்ட கட்சிக்காரர்களும் பலவந்தமாக வாக்குச் சீட்டுகளை வாக்கெடுப்பு நிலையங்களுக்கு வெளியில் கொண்டுவந்து வெளியில் நின்றவர்களையும் சேர்த்துக்கொண்டு தங்களால் இயன்ற அளவு வாக்குச் சீட்டுகளை அடையாளம் போட்டு அள்ளிக் கொண்டு போய் பெட்டியில் போட்டனர். அதனால்தான் வாக்குச் சீட்டுகள் எண்ணும் போது, வாக்குச் சீட்டுகளுடன் அடிக்கட்டைகளும் சேர்ந்து இருந்தது. இதுபற்றி வாக்கெடுப்பு நிலைய உயர் அதிகாரிகள் தேர்தல் ஆணையாளருக்குத் தங்கள் அறிக்கையில் குறிப்பிட்டிருக்கின்றனர். வாக்குப் பெட்டிகளைத் திறந்து எண்ணியபோது பெட்டிகளுக்குள் இருந்தவாக்குச் சீட்டுகள், அந்த நிலையத்துக்குப் பதிவான வாக்காளர்களைவிடவும் கூடுதலாகவும் வாக்குச் சீட்டுகளுடன் அடிக்கட்டைகளை ஒப்பிட முடியாமலும் இருந்தன.

1988 நவம்பர் 19ஆம் திகதி கிழக்கு மாகாணத்தில் நடந்த தேர்தலின்படி வடக்கு கிழக்கு மாகாண சபைக்கு தெரிவு செய்யப்பட்ட அங்கத்தவர்கள் என்று அறிவிக்கப்பட்ட பெயர்கள் பின்வருமாறு,

**மட்டக்களப்பு மாவட்டம்:**

1. பெரியதம்பி கிருபாகரன்
2. செல்லத்தம்பி கணேச மூர்த்தி
3. கனகரத்தினம் வினாயகமூர்த்தி
4. நாகராசா நேசராசா
5. கதிர்காமர் குமாரகுரு
6. இராசையா கோபத ராஜா
7. செபரத்தினம் புஸ்பராஜா
8. சிவசுப்பிரமணியம் ருத்ரா
9. எம். லப்பர் தாஹிர்
10. எம்.ஏ.எம்.ஜே. இக்பால்
11. ஏ.சி.எம். பாயிஸ்

**அம்பாரை மாவட்டம்:**

1. கணபதிப்பிள்ளை சின்னையா
2. ஞானமுத்து பத்மநாதன்
3. வேல்முருக புவனேந்திரன்
4. காசிப்பிள்ளை மங்கள ராஜா
5. நிகால் யசேந்தி பக்மீவெல
6. எச். மொஹமட் சகரியா
7. ஏ.எம்.எஸ். தீர்
8. அப்துல் மஜீத் மொஹமட் ஹுசைன்
9. அப்துல்லத்தீப் மொஹமட் பலீல்
10. செய்யட் மொஹமட் எம்.எச்.
11. எம். மர்சூக்
12. எம்.ஐ. மொஹமட் ஜவுபர்
13. எம்.என். எம். தாஜுதீன்
14. எம்.ரி. சதீக்

**திருகோணமலை மாவட்டம்:**

1. ஜோர்ஸ் தவராஜா தம்பிராஜா
2. சொலமன் கிங்ஸ்லி றொபட்
3. இரத்தினம் திலகராஜா
4. சித்திரவேல் தயாபரன்
5. லெலி பொன்சேகா பாலிவா, பொல் ராஜ் பாலிவா
6. எம்.எம். ரிசான்
7. அப்துல் மஜீத் மொஹமட் ஜவாத்
8. எம்.ஆர். ஜலால்தீன் ரூமி
9. எம்.எம். மொஹமட் வஸீர்
10. எம்.ஜே.எம். உக்காஸ்

வடமாகாணத்தில் தேர்தல் நடக்கவில்லை. இங்கு அங்கத்தவர்கள் எல்லோரும் மக்களால் தேர்ந்தெடுக்கப்படாமல், இந்திய இராணுவத்தின் 'லிஸ்ட்' படி இ.பி.ஆர்.எல்.எப்., இ.என்.டி.எல்.எப். இயக்கங்களில் பொறுக்கி எடுக்கப்பட்டவர்கள்.

இந்தியா - இலங்கை உடன்படிக்கையில் கூறியபடி அவசரகாலம் நீக்கப்படாமல், போராளிகள் ஆயுதங்கள் பூரணமாக ஒப்படைக்காமல், வன்செயல்கள் முற்றாக நீக்கப்படாமல், நீதி, நியாயத்துக்கு முரணாக இலங்கை - இந்திய உடன்படிக்கை 2.9, 2.17 பிரிவுகளுக்கும், மாகாணசபைச் சட்டம், மாகாணசபைத் தேர்தல் சட்டங்களுக்கும் மாறாகக் கிழக்கு மாகாணத்தில் இந்திய இராணுவத்தால் தேர்தல் நடத்தப்பட்டு வடகிழக்கு மாகாணசபைக்கு அங்கத்தவர்கள் தெரிவு செய்யப்பட்டனர்.

இந்தச் சட்டவிரோத நடவடிக்கையால் ஏற்படுத்தப்பட்ட வடகிழக்கு மாகாணசபையின் முதலமைச்சர் (வரதராஜப் பெருமாள்), மந்திரிமார், மற்றும் அங்கத்தவர்கள் அரசாங்க வர்த்தமானியில் தேர்தல் ஆணையாளரால் அறிவிக்கப்பட்ட அங்கத்தவர்கள் அல்ல என்பதை மேலே உள்ள பட்டியலிலிருந்து அறிந்து கொள்ளலாம். மாகாணசபைக்குக் குறுக்கு வழியாக 'சிட்' மூலம் வந்தவர்கள்தான் இவர்கள். இந்தியாவின் கூலிப்படைகள், எடுபிடி வேலையாட்களான இவர்களுக்கு வடகிழக்கு மக்கள் ஒருக்காலும் வாக்களிக்கவில்லை.

இலங்கை - இந்தியா உடன்படிக்கையில் வடக்கு கிழக்கு மாகாணங்கள் தமிழ் பேசும் மக்களின் வரலாற்று வசிப்பிடம் என்று கூறப்பட்டிருக்கிறது. தமிழைத் தாய் மொழியாகக் கொண்டவர்கள் இலங்கையில் தமிழர்களும் சோனகரும் தான். அப்படியென்றால் வடக்கு கிழக்கில் தமிழைத் தாய் மொழியாகக் கொண்ட தமிழருக்கு எவ்வளவு உரிமை உண்டோ அப்படியான உரிமை தமிழைத் தாய் மொழியாகக் கொண்ட சோனகருக்கும் வடக்கு கிழக்கு

மாகாணத்தில் உண்டு.

இலங்கை, சிங்களவர், தமிழர், முஸ்லிம்கள் (சோனகர்), பறங்கியர் என பல இன மக்கள் வாழும் பல மொழி பேசப்படும் ஒரு நாடாக' இலங்கை - இந்தியா உடன்படிக்கையில் ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கின்றது. அது மட்டுமல்லாமல் ஒவ்வொரு இன மக்களும் அக்கறையோடு பேணிப்பாதுகாக்கக் கூடிய தனித்துவமான கலாச்சாரத்தையும் மொழியையும் கொண்டுள்ளார்கள் என்பதும் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. இந்த அடிப்படையில் இலங்கை முஸ்லிம்கள் (சோனகர்) ஒரு அங்கீகரிக்கப்பட்ட இனத்தவர். இலங்கை சோனகர்களுக்கு அக்கறையோடு பேணிப்பாதுகாக்கக்கூடிய தனித்துவமான கலாச்சாரமும் மொழியும் உண்டு. வடக்கு கிழக்கு மாகாணங்கள் தமிழ் மொழியை தாய் மொழியாகக் கொண்டுள்ள வரலாற்று வசிப்பிடமாகும்.

ஆனால் இந்திய இராணுவம் இலங்கை அரசாங்கம், வடகிழக்கு மாகாணசபை என்பன இலங்கை முஸ்லிம்களின் இன உரிமையை பாதுகாக்கத் தவறிவிட்டன.

வடக்கு கிழக்கு மாகாணங்களில் முஸ்லிம்களுக்கும், தமிழருக்கும் மூதூர், கிண்ணியா, மன்னார், காத்தான்குடி, கல்முனை, அக்கரைப்பற்று, சம்மாந்துறை ஆகிய பகுதிகளில் அடிக்கடி இனக்கலவரம் ஏற்பட்டு வந்திருக்கிறது. இந்திய இராணுவம் வடகிழக்கு மாகாணங்களுக்கு வந்தபின்பு மிகவும் பயங்கரமாக முஸ்லிம்கள் தாக்கப்பட்டிருக்கின்றனர்.

வடகிழக்கு மாகாணசபை அதிகாரத்திற்குட்பட்ட பிரதேசத்தில் தமிழ் பேசும் தமிழருக்கும் முஸ்லிம்களுக்குமிடையில் இனக்கலவரம் ஏற்பட்டால் அதனை உடனே நிறுத்தி ஒற்றுமையையும் சமாதானத்தையும் ஏற்படுத்துவது மாகாணசபை முதல் மந்திரி திருவாளர் வரதராஜ பெருமாளினதும் அவரது மநிதிரிசபை மற்றும் தமிழ் முஸ்லிம் அங்கத்தவரினதும் மகத்தான கடமை. இந்த விடயத்தை மாகாணசபையின் ஒரு பிரேரணையாகக் கொண்டு தமிழருக்கும் முஸ்லிம்களுக்கும் இடையிலுள்ள குறைநிறைகளைப் பேசி ஏகமனதாகத் தீர்மானம் நிறைவேற்றி சமாதானத்தையும் தமிழ் முஸ்லிம் ஐக்கியத்தையும் அவர்கள் நிலைநாட்டி இருக்க வேண்டும். உண்மையில் இந்தியாவுக்கு வடகிழக்கு தமிழ் முஸ்லிம் மக்களின் ஐக்கியத்திலும் சுபீட்சத்திலும் அக்கறை இருந்திருந்தால் தமது அமைதிகாக்கும் படையெனக் கூறிக்கொள்ளும் இராணுவத்தைக் கொண்டு சமாதானத்தை உடனே ஏற்படுத்தி இருக்கவேண்டும். இப்படிச் செய்வதற்கு கூடுதலாக எந்த அதிகாரப்பகிர்வும் வடகிழக்கு மாகாணசபைக்குத் தேவையில்லை. செய்தார்களா? ஏன் செய்யவில்லை? காரணம், முஸ்லிம்களை வடக்கு கிழக்கில் இருந்து அடியோடு விரட்டுவதே இவர்களின் சதித்திட்டம்.

**இனமுரண்பாட்டினால் பாதிக்கப்பட்ட வடக்கு கிழக்கு மக்களின் பிரச்சினைகள் என்னவென்று ஆராயப்படாது, இவர்களின் ஆலோசனையோ சம்மதத்தையோ கருத்தில் எடுக்காமல் இலங்கை - இந்திய அரசுகள் தமது சுயநலனை முன்னிறுத்திச் செய்துகொண்ட ஒப்பந்தமே இலங்கை - இந்திய உடன்படிக்கையாகும்.**

**இலங்கைத்தீவை இந்தியாவின் வல்லாதிக்க வியூகத்திற்குள் வளைத்து வீசப்பட்ட வலைதான் இந்த ஒப்பந்தம். மேற்கத்திய ஏகாதிபத்திய வலைக்குள் மாட்டுப்பட்டுக் கொண்டிருந்த இலங்கை அரசை இந்திய நட்புறவுப்பொறிக்குள் சிக்கவைத்திருக்கிறது இந்த ஒப்பந்தம்.**

**இலங்கையில் ஊடுருவி நாசவேலையில் ஈடுபட்டிருந்த இஸ்ரேலிய உளவுப்படையினர், இலங்கை இராணுவத்திற்கு முண்டுகொடுத்து வந்த பிரிட்டிஷ், அமெரிக்க, தென்னாபிரிக்க கூலிப்படைகள் இந்தியாவின் பாதுகாப்பிற்கு அச்சுறுத்தலாக விளங்கின. இந்த அந்நிய நாசகாரச் சக்திகளை இலங்கையிலிருந்து வெளியேற்றுவதற்கு இந்த ஒப்பந்தம் வழிவகுத்தது.**

**இலங்கையில் தளம் அமைத்த 'அமெரிக்காவின் குரல்' என்னும் அந்நிய ஒலிபரப்புச்சேவை, இராணுவரீதியாக உளவுபார்க்கும் நோக்கில் செயற்படுவதற்கும்**

இந்த ஒப்பந்தம் தடைவிதித்தது.

இந்து மகாசமுத்திரத்தின் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்ததாகத் திகழும் திருகோணமலைத் துறைமுகத்தை இந்தியாவின் பாதுகாப்பு நலன்களுக்குக் குந்தகம் ஏற்படும்விதத்தில் எந்த ஒரு நாடும் பயன் படுத்துவதை இந்த ஒப்பந்தம் தடுக்கிறது. அதேசமயம் இந்திய கடற்படை இந்த துறைமுகத்தைப் பாவித்துக்கொள்ளும் வகையில் துறைமுக எண்ணெய்க் கிடங்கு புனர்நிர்மாண வேலைகளை இந்தியாவும் இலங்கையும் கூட்டாகச்சேர்ந்து செய்யவும் இந்த உடன்படிக்கையில் இணக்கம் காணப்பட்டிருக்கிறது.

ஒட்டுமொத்தத்தில் இந்தியாவின் தேசிய நலனையும், பூகோள அக்கறைகளையும், வெளிவிவகார உறவுகளையும் பேணிப்பாதுகாப்பதற்கு இந்த ஒப்பந்தம் வழிவகுத்ததேயன்றி வடக்கு கிழக்கு மக்களின் இனப்பிரச்சினை தீர்வுக்காக எந்தவகையிலும் இந்த உடன்படிக்கை செயற்படவில்லை.

இந்திய அரசானது இலங்கையோடு நல்லுறவைப் பலப்படுத்திக் கொள்வதையோ அல்லது அதன் பூகோள, அரசியல் நலன்களைப் பேணுவதையோ அல்லது தென்ஆசிய பிராந்திய வல்லரசாக இந்தியா தன்னை நிலைநிறுத்திக் கொள்வதையோ வடக்கு கிழக்கு முஸ்லிம்கள் ஒருபோதும் ஆட்சேபிக்கப்போவதில்லை. அப்படியிருந்தும் இந்தியா தனது பூகோள அபிலாசைகளைப் பூர்த்திசெய்து கொள்வதற்காக வடக்கு கிழக்கு முஸ்லிம்களைப் பலிக்கடாவாக்கி எமது மக்களின் நலன்களை முற்றாகப் புறக்கணிக்கும் விதத்தில் அதன் அடிப்படை நோக்கங்களுக்கு முரணாக நடைமுறைப்படுத்தப்பட்ட சம்பவங்கள் வடக்கு கிழக்கு முஸ்லிம்களுக்கு இழைக்கப்பட்ட மாபெரும் வரலாற்றுத்துரோகமாகும்.

## கிழக்கு மாகாணம் பிரிந்தது

2006 ஒக்டோபர் 16, திங்கட்கழமை உச்ச நீதிமன்றத்தால் அரசாங்க வர்த்தமானியில் ஜனாதிபதியினால் அவசரகால நிலமையில் வெளியிடப்பட்ட பிரகடனத்தால் வடமாகாணமும் கிழக்குமாகாணமும் ஒன்றிணைக்கப்பட்டமை செல்லுபடியாகாது எனத்தீர்ப்பளிக்கப்பட்டது.

இலங்கை - இந்திய உடன்படிக்கையின் மூலம் ஜனாதிபதி ஜே.ஆர். ஜயவர்தன அவர்களால் 1988 செப்டம்பர் 7ஆம் திகதி வடக்கு கிழக்கு மாகாணங்கள் தற்காலிகமாக ஒன்றிணைக்கப்பட்டன. சிங்கள முஸ்லிம் இனத்தவரின் பலத்த எதிர்ப்புக்கு மத்தியில் தொடர்ந்துவந்த ஜனாதிபதிகளான ரணசிங்க பிரேமதாச, டி.பீ. விஜேதுங்க மற்றும் சந்திரிகா பண்டாரநாயகா குமாரணதுங்க ஆகியோர் பேச்சுவார்த்தை மூலம் ஒரு இணக்கப்பாட்டிற்கு வந்ததன் பின் இரு மாகாணங்களின் எதிர்காலம் பற்றி இறுதிமுடிவு எடுக்கமுடியும் என்ற நல்லெண்ணத்தின் பேரில் தற்காலிக ஒன்றிணைப்பை தொடர்ந்து நீடித்து வந்தனர்.

எது எப்படி இருப்பினும் மூன்று அடிப்படை உரிமை மீறல்பற்றி கந்தளாய் ஜே.வி.பி. பாராளுமன்ற அங்கத்தவர் ஜயந்த விஜேசேகர, சம்மாந்துறையைச் சேர்ந்த ஏ.எஸ். முஹம்மது புகாரி, உகனையைச் சேர்ந்த எல்.பி. வசந்த பியதிஸ்ஸ ஆகியோரால் சமர்ப்பிக்கப்பட்ட மனுமீதான உச்ச நீதிமன்றத் தீர்ப்பு வடமாகாண, கிழக்கு மாகாண தற்காலிக இணைப்பை ஒரு முடிவுக்குக் கொண்டுவந்தது. பிரபல சட்ட மேதைகளான எச்.எல்.டி. சில்வா, எஸ்.எல். குணசேகர, கோமின் ஜயசிரி ஆகியோர் மனுதாரர் சார்பாக வழக்கை சிறந்தமுறையில் வாதாடி வெற்றிபெற்றனர்.

பிரதம நீதியரசர் சரத் என். சில்வா உட்பட ஐந்து உயர் நீதிமன்ற நீதியரசர்கள் சிஹால் ஜயசிங்க, இராஜா பெர்நாந்தோ, நிமல் காமினி அமரதுங்க மற்றும் என்.கே. உடகம ஆகியோர் மனுதாரர்களின் கோரிக்கைமீது தீர்ப்பளித்தனர்.

# 4. இலங்கை அரசியல் யாப்பின் 13வது திருத்த அமுலாக்கம்

**முதற் பகுதி - 13வது திருத்தம் அமுலாக்குவதில் உள்ள தடங்கல்கள்**

இலங்கை - இந்திய உடன் படிக்கையைத் தொடர்ந்து 1987 நவம்பர் 14ம் திகதி அத்தாட்சிப் படுத்தப்பட்ட 13வது திருத்தம் சிறுபான்மை மக்களுக்கு அதிகாரப் பகிர்வுக்காக இலங்கை அரசியல் யாப்பின் மூலம் செய்யப்பட்ட ஏற்பாடாகும். அதிகாரப்பகிர்வு ஒன்பது மாகாணங்களுக்காக ஏற்படுத்தப்பட்டதாக இருப்பினும் இலங்கைச் சிறுபான்மை மக்களான தமிழருக்கும், முஸ்லிம்களுக்கும் உள்ள குறைபாடுகளைத் தீர்ப்பதற்கான ஒரு வழிமுறை என்பதனைத் தட்டிக்கழிக்க முடியாது.

1987ஆம் ஆண்டு 13வது திருத்தம் ஏற்படுத்தப்பட்டபோது தமிழரும் முஸ்லிம்களும் காணி, சட்டம், ஒழுங்கு, ஆளுனரின் நடவடிக்கை, நிதிசம்பந்தமான அதிகாரங்களுக்கான சரத்துகள் சிறுபான்மை மக்களின் நியாயமான குறைபாடுகளைத் தீர்ப்பதற்குப் போதுமானவை அல்ல என்னும் அதிருப்தியை மிகத் தெளிவாக வெளிப்படுத்தினர்.

**<u>13வது திருத்தச் சட்ட அமுலாக்கலின் இன்றைய நிலை</u>**

மூன்று பட்டியல் - மாகாணப் பட்டியல், கூட்டுப்பட்டியல், மத்திய பாராளுமன்றத்தின் பிரத்தியேகப் பட்டியல். மத்திய பாராளுமன்றப்பட்டியல் மிகவும் விரிவான அதிகாரங்களைக் கொண்டதாகவும், மாகாண சபைகளுக்கான பட்டியல் மிகவும் குறுகிய மட்டுப்படுத்தப்பட்ட அதிகாரங்களைக் கொண்டதாகவும் அமைந்துள்ளது.

**<u>உள்ளூராட்சி சம்பந்தமான அதிகாரங்கள்</u>**

உள்ளூராட்சி சம்பந்தமான அதிகாரங்கள் பகிர்ந்தளிக்கப் படுவதால் நாட்டின் இறைமைக்கும் பாதுகாப்புக்கும் எந்தவித அச்சுறுத்தல் ஏற்படப்போவதில்லை. எனினும் உள்ளூர் சம்பந்தமான அதிகாரங்கள் மத்திய அரசாங்கத்தின் கட்டுப்பாட்டிற்குட்படுத்தப்பட்டதாக அமைந்துள்ளது.

**<u>காணி</u>**

காணிப்பங்கீடும் பாவனையும் மாகாணசபைக்கான அலுவல்கள் எனக் கூறப்பட்டபோதும், காணி சம்பந்தமான அதிகாரங்கள் தேசிய காணி ஆணைக் குழுவினூடாகத்தான் மாகாணசபைகளுக்குப் பகிர்ந்தளிக்கப்படும். ஆனால் கடந்த இருபது ஆண்டுகளாகத் தேசிய காணி ஆணைக்குழு ஏற்படுத்தப்படவில்லை.

**<u>பாடசாலைகள்</u>**

மத்திய அரசின் அதிகாரத்திற்குட்பட்ட தேசிய பாடசாலைகள் எவை என்றும் மாகாணசபைகளின் அதிகாரத்திறகுட்பட்ட சாதாரண பாடசாலைகள் எவை என்றும் வெவ்வேறாக இன்னும் வகுக்கப்படவில்லை. மத்திய அரசின் கல்வி அமைச்சர் அவரின் மந்திரக் கோலால் அவருக்கு தேவையான எந்தவொரு பாடசாலையையும் தேசிய பாடசாலையாக எடுத்த எடுப்பில் மாற்றி மத்திய அரசாஙகத்தின் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர முடியும். இதனால்தான் கடந்த கிழக்கு மாகாணசபைத் தேர்தல் நடந்தவேளை மத்திய அரசின் கல்வி அமைச்சர் அம்பாரை மாவட்டத்தில் இருந்த பலபாடசாலைகளைத் தேசிய பாடசாலைகளாகப் பிரகடனம் செய்துள்ளார்.

**<u>பெருந்தெருக்கள்</u>**

பதின் மூன்றாவது திருத்தம் பெருந்தெருக்கள் மத்திய அரசின் அலுவல்கள் எனக் கூறுகிறது. தேசிய பெருந்தெருக்கள் எவை என்பதனைத் தீர்மானிப்பது யார்? பொது வீதிச் சட்டத்தின் 1988ஆம் ஆண்டின் 5Aப் பிரிவின் திருத்தப்படி மத்திய அரசு வீதிகளையும் அதன் தரத்தையும் பிரகடனம் செய்யும் எனக்கூறப்படுகிறது. எனவே மத்திய அரசாங்க அமைச்சர் தரம் "ஏ", தரம் "பி" பெருந்தெருக்ளைத் தேசிய பெருந்தெருக்களாகப் பிரகடனப்படுத்தியுள்ளார். திருகோணமலை, மட்டக்களப்பு, கல்முனை, அக்கரைப்பற்று, பொத்துவில் பிரதேசங்களைத் தொடர்வு படுத்தும் கிழக்குக் கரையோர நெடுஞ்சாலை தரம் 'ஏ' தரம் 'பி' எனத் தரம் பிரிக்கப்பட்டு மத்திய அரசின் அதிகாரங்களுக்குள் கொண்டு

வரப்பட்டுள்ளது. இந்த பாதைகள் கிழக்கு மாகானசபையின் நிருவாகத்தில் இல்லாவிட்டால் இங்குள்ள மாகாணசபைக்கு எந்தப் பெருந் தெருக்களும் கிடயாது.

**சட்டமும் ஒழுங்கும்**

கடந்த இருபது வருடங்களாக பொலிஸ் அதிகாரங்களுக்கான, சட்டம் ஒழுங்கு சம்பந்தப்பட்ட விடயங்கள் நடைமுறைப்படுத்தப்பட வில்லை. அரசியல்யாப்பு 13வது திருத்தத்தில் மாகாண சபைகளில் பொலிஸ் அதிகார சபைகள் ஏற்படுத்தப்பட்டு கணிசமான அளவு அதிகாரங்கள் பகிர்ந்தளிக்கப்படும் எனக் கூறப்பட்டிருக்கிறது. எனினும் வடக்கு கிழக்கு தவிர்ந்த ஏனைய மாகாணங்கள் மாகாண பொலிஸ் அதிகார சபைகள் ஏற்படுத்துவதில் போதிய அக்கறை காட்டவில்லை. 1993/94 ஆண்டு காலத்தில் மேல்மாகாண முதலமைச்சராக இருந்த முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா அம்மையார் மாகாண சபைகளுக்கு பொலிஸ் அதிகாரங்கள் வழுங்கப்பட வேண்டும் என வலியுறுத்தியிருந்தார். ஆனால் அவர் இலங்கையின் நிறைவேற்று ஜனாதிபதியாகக் கடமையாற்றிய காலத்தில் பொலிஸ் அதிகாரம் மாகாணசபைகளுக்குப் பகிர்ந்தளிப்பதற்கான வர்த்தமானப் பிரகடனத்தைப் பிரசுரிக்க நடவடிக்கை எடுக்கத் தவறிவட்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

2007 மாகாண முதலமைச்சர்கள் மாநாட்டில் காணி, பொலிஸ் சம்பந்தப்பட்ட அதிகாரங்கள் பகிர்ந்தளிக்கப்படுவதற்கான நடவடிக்கைகள் உடனடியாக எடுக்கப்பட வேண்டும் என்ற பிரேரணை ஏகமானதாக நிறை வேற்றப்பட்டது. எஸ்.எல்.எப்.பி. பொதுச் செயலாளரான அமைச்சர் மைத்திரிபால சிறிசேன 2008 மேமாதம் அரசாங்கம் அரசியல்யாப்பு 13வது திருத்தத்தில் கூறப்பட்டுள்ள பொலிஸ் அதிகாரங்கள் உட்பட அனைத்து அதிகாரங்களும் மாகாணங்களுக்கு உடனடியாகப் பகிர்ந்தளிக்கப்படும் எனக் கூறியுள்ளார். அண்மையில் கிழக்கு மாகாண அமைச்சர் எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லாஹ் அவர்களும் மாகாண சபைகளுக்குக் காணி, பொலிஸ் அதிகாரங்கள் பகிர்ந்தளிப்பதற்கான மூன்று அங்கத்தவர்களைக் கொண்ட விஷேட அதிகாரசபை ஒன்று விரைவில் ஏற்படுத்தப்படும் என்றும் கூறியுள்ளார்.

**நெற்பயிர் செய்கை**

2003ஆம் ஆண்டு உச்ச நீதிமன்றத் தீர்ப்பின்படி நெற்பயிர் செய்கை மாகாண சபையின் அதிகாரத்திற்குட்பட்ட அலுவலாகும். எனினும் இதுவரை மாகாண சபைகள் அதனை நடைமுறைப்படுத்த எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. மத்திய அரசாங்கமும் அதனை விட்டுக் கொடுக்கவுமில்லை. இது ஒரு துர்பாக்கிய நிலவரமாகும். வேளாண்மை விவசாயத்திற்கான அதிகாரம் இல்லாமல் கிழக்கு மாகாண சபையா? இது ஒரு விசித்திரமான விவகாரம்.

**பொது நிருவாகம்**

அரசியல் யாப்பின் 154ஜி சரத்தில் மாகாண சபைகளுக்குள்ள நிருவாக அதிகாரம் பற்றிக் கூறப்படுகிறது. மாகாண சபைப் பட்டியலிலும், பொதுப்பட்டியலிலும் கூறப்பட்டுள்ள அலுவல்களை நிருவகிக்கும் சட்டங்களை ஏற்படுத்தாவிட்டால் சட்டரீதியாக மாகாண சபைகள் எந்த அலுவல்களையும் நிருவகிக்க முடியாது. சட்டமா அதிபர் திணைக்களத்திற்கு அனுமதிக்காக அனுப்பப்படும் நகல் சட்டங்கள் அனுமதி பெறுவமற்கு ஏறக்குறைய 2-3 ஆண்டு தாமதமாவதால் மாகாணசபை நிருவாகத்தில் பெரிதும் ஸ்தம்பிதம் ஏற்படுகிறது.

**மந்திரி சபை அமைச்சர்கள் உபகுழு**

அரசியல் யாப்பின் 13வது திருத்தச் சட்டத்தினைப் பூரணமாக நடைமுறைப் படுத்துவதற்காக நியமிக்கப்பட்ட மந்திரிசபையின் அமைச்சர்கள் உபகுழு இன்னும் கூட்டப்படவில்லை. அரசியல் யாப்பு அலுவல்கள் அமைச்சர் இந்த உபகுழுவின் ஒரு அங்கத்தவர் அல்ல. அதேபோன்று சர்வகட்சிப் பிரதிநிதிகள் குழுத்தலைவர் அமைச்சர் பேராசிரியர் திஸ்ஸவிதாரணையும் இக்குழு அங்கத்தவர் அல்ல.

**மாகாணசபை மற்றும் பொதுப்பட்டியல் அலுவல்கள் சம்பந்தமாகத் தேசியக் கொள்கை**

13வது திருத்தம் தேசியயாப்பினால் அங்கீகரிக்கப்பட்டுள்ள சட்டம். இச்சட்ட அமுலாக்கலில் ஏதாவது முன்னேற்றம் ஏற்படவேண்டுமானால் கிழக்கு மாகாணசபை மத்திய அரசாங்கத்திடம் "மாகாண சபைகளைக் கலந்து ஆலோசிக்காமல் மாகாண சபைப் பட்டியல் மற்றும் பொதுப்பட்டியல்களில் கூறப்பட்டுள்ள அதிகாரங்கள் சம்பந்தமாக மத்திய அரசு ஒருதலைப்பட்சமாகத் தேசிய கோள்கையினைப் பிரகடனப்படுத்துவது உடனடியாக நிறுத்தபடவேண்டும்." என்று அழுத்தம் திருத்தமாக வற்புறுத்திக் கூறவேண்டும்.

**வடகிழக்கு மாகாண சபை அன்று எதிர் கொண்ட முக்கிய பிரச்சினைகள்**

(அ) மக்களால் தெரிவு செய்யப்பட வடகிழக்கு மாகாண சபை 1988 டிசம்பர் தொடக்கம் 1990 மார்ச் மாத காலத்தில் 13வது திருத்தத்தினால் மாகாணசபைகளுக்குப் பகிர்ந்தளிக்கப்பட்ட அதிகாரங்கள் நடைமுறைப்படுத்துவதில் பல பிரச்சினைகளுக்கு முகங்கொடுக்க நேர்ந்தது. ஒன்றிணைந்த வடகிழக்கு மாகாணத்தில் முதன் முதலில் முறையாக ஏறபடுத்தப்பட்ட மாகாணசபை அதன் 14மாத கால நிருவாகத்தில் பலதரப்பட்ட பிரச்சினைகளால் பாதிக்கப்பட்டு அரசியல் ஆட்சி நடத்த முடியாமல் தத்தளித்தது. அன்று ஆட்சியில் இருந்த ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி (ஈ.பி.ஆர்.எல்.எப்), தமிழ் ஈழ விடுதலை முன்னனி (ரி.ஈ.எல்.ஒ) ஈழத் தேசிய ஜனனாய விடுதலை முன்னனி (ஈ.என்.டி.எல்.எப்) மற்றும் இவர்களின் பாதுகாப்பு எஜமானர்களான இந்திய சமாதானப் படை (ஐ.பி.கே.எப்) என்பவற்றால் வடக்கு கிழக்கு முஸ்லிம்கள் பெரிதும் இம்சிக்கப்பட்டனர்.

(ஆ) வடகிழக்கு மாகாணசபையின் அன்றைய முதலமைச்சராகவிருந்த வரதராஜப் பெருமாள் 1990ம் ஆண்டு மார்ச்சு மாதம் முதலாம் திகதி நடந்த மாகாணசபையின் விஷேட கூட்டத்தில் ஜனாதிபதி பிரேமதாச அவர்களின் அரசாங்கத்திற்கு உடனடியாக நிறைவேற்றுவதற்காகச் சமர்ப்பிக்கப்பட்ட 19 அம்சக் கோரிக்கைகள் நிறைவேற்றப்படாமை காரணமாகத் தன்னிச்சையாக தமிழ் ஈழத் தனி நாட்டினைப் பிரகடனம் செய்தார். அதனைத் தொடர்ந்து வடகிழக்கு மாகாணசபை கலைக்கப்பட்டது. முதலமைச்சர் வரதராஜப் பெருமாளும் அவர்சகாக்களும் இலங்கையை விட்டு வெளியேறி இந்தியாவில் தஞ்சம் புகுந்தனர்.

(இ) **உள்ளூராட்சி நிருவாகம் சம்பந்தமான பிரச்சினைகள்**

மாவட்ட அரசாங்க அதிபர் பிரதேச உதவி அரசாங்க அதிபர்கள், கிராம சேவை உத்தியோத்தர் ஆகியோரின் கடமைகள் மாகாணசபையின் அதிகாரத்திற்குட்பட்டதாக இல்லாவிட்டால் அடி மட்டத்தில் 13வது திருத்தப்படி அதிகாரப்பகிர்வினை நடைமுறைப் படுத்துவது அறவே சாத்தியப்படாது. ஆகவே மாகாணங்களில் கச்சேரிகளையும், அதன் கீழுள்ள நிருவாகங்களையும் மாகாணசபையின் அதிகாரத்துக்கு மாற்றும்படி நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியிடம் வேண்டுகோள் விடுக்கப்பட்டது. ஜனாதிபதியவர்கள் இதற்கு உடன்படவில்லை. ஆனால் அதற்கு மாற்றீடாக மாகாணசபைகளும் மத்திய அரசாங்கமும் மாவட்ட அரச அதிபர்களைக் கூட்டாக நிருவகிப்பதாகவும் அத்தோடு பிரதேச செயலகர் களையும், கிராம சேவை உத்தியோகத்தர்களையும் மாகாண சபைகளின் நேரடி நிருவாகத்தில் இயக்குதல் என்னும் மாற்றுத் தீர்வில் உடன்பாடும் காணப்பட்டது. ஆனால் இதற்குப்பின் கிழக்கு மாகாணத்தில் திருகோனமலை, மட்டக்களப்பு, அம்பாரை மாவட்டங்களுக்கான அரசாங்க அதிபர்களை மாகாண சபையைக் கலந்தாலோசிக்காமல் ஜனாதிபதியவர்கள் தன்னிச்சையாக நியமித்து "பிரதேச உதவி அரசாங்க அதிபர்களினதும் கிராம சேவை உத்தியோகத்தவர்களினதும் நிருவாகங்கள் மாகாணசபையின் அதிகாரத்திறகுட்பட்டவைகளாக இருக்க வேண்டும்" என்ற உடன்படிக்கையும் கைவிடப்பட்டது. அதுமட்டுமல்லாமல் ஜனாதிபதியவர்கள் மாவட்ட அரசாங்க அதிபர்களை மாகாண செயலகர் தரத்திற்கு உயர்த்தினார். அத்தோடு பிரதேச உதவி அரசாங்க செயலாளர்களும் மாகாணதிணைக்கள அதிபர்கள் தரத்துக்கு உயர்தப்பட்டனர். இப்படியான நிறைவேற்று அதிகார நடவடிக்கைகளால் 13வது திருத்த அதிகாரப்பகிர்வு அமுலாக்கலில் அடி மட்டத்தில் பெரும் சோர்வு ஏற்பட்டுள்ளது. இதனால் வடக்கு கிழக்கு மாகாணசபை வெறும் உப்புச் சப்பு இல்லாத மட்டத்துக்கு தரம் குறைக்கப்பட்டது.

(ஈ) **உயர்மட்ட முகாமைத்துவ உத்தியோகத்தர்கள் பற்றாக்குறை**

மாகாண சபைகளில் சேவை செய்யக்கூடிய பொறியயலாளர்கள், கணக்காளர்கள், சட்ட ஆலோசகர் ஆகியோருக்கு பெரும் பற்றாக்குறை நிலவுகிறது. மாகாண சபைகளின் அவசிய தேவைகள்பற்றி மத்திய அரசாங்கத்திற்கு எந்த அக்கறையும் கிடையாது. வடகிழக்கு மாகாணசபை உயர்மட்ட உத்தியோகத்தர்களை நியமிக்கும் படி விடுத்த கோரிக்கை எதனையும் மத்திய அரசு காதில் போட்டுக் கொள்ள மறுத்து விட்டது. அதனால்தான் அத்தியாவசியமான உத்தியோகத்தவர்களை நியமிப்பதற்கு விண்ணப்பங்கள் கோரி வடக்கு கிழக்கு மாகாணசபையினால் விளம்பரம் செய்யப்பட்டது. இதனைப் பொது நிருவாக அமைச்சு மாகாணசபை உயர்மட்ட உத்தியோகத்தர் நியமனங்கள் யாவும் மத்திய அரசாங்கத்தின் அலுவல்கள் எனக்கூறி மிகவும் வன்மையாக எதிர்த்தது. இந்த நிலையில்தான் அன்றைய வடகிழக்கு மாகாணசபை முதலமைச்சரான வரதராஜப் பெருமாள் "சிங்கள அரசியல் தலைவர்கள் நாட்டின் ஒருமைப்பாட்டினை உறுதிப்படுத்த நாட்டம் கொண்டு அரசியல் யாப்பின் 13வது திருத்தத்தின் மூலம் அதிகாரப் பகிர்வு ஏற்படுத்திய போதும் மத்திய அரசாங்கத்தில் உள்ள நிருவாக மேலதிகாரிகளின் சிங்கள ஆதிக்க மனப் போக்கினால் நாட்டுப் பிரிவினை தவிர்க முடியாததாக மாற்றம் அடைந்துள்ளது" என உறுதியாக எடுத்துரைத்தார்.

**இன்றைய யதார்த்த நிலை**

1. சிங்கள அரசியல்வாதிகளின் அதிகாரப்பகிர்வுக்கு எதிரான மனப்பாங்கு.
2. அதிகாரப் பகிர்வினை விரும்பாத நிருவாக முகாமைத்துவத்தினரின் நடவடிக்கைகள்.
3. 13வது திருத்த அமுலாக்கலுக்குப் பொருத்தமில்லாத தற்போது நடைமுறையில் உள்ள நிருவாக சேவை.
4. அனைத்து மாகாணங்களிலும் மாகாண சபைகள் ஏற்பட்டுள்ள போதிலும் கிழக்கு மாகாணசபை மட்டும்தான் அதிகாரப்பகிர்வு அமுலாக்கலில் அக்கறை கொண்டுள்ளது.
5. இலங்கை அரசியல் யாப்பின் ஒற்றை ஆட்சித்தன்மை அரசியல் யாப்பின் 13வது திருத்தத்தின் மூலம் அதிகாரப்பகிர்வு நடைமுறைப்படுத்துவதை சிக்கலாக்கிச் சீர்குலைக்கிறது.
6. இலங்கை அரசியலமைப்பின் ஒற்றையாட்சித் தன்மை பெரும்பான்மைச் சிங்களவரின் நலனில் மட்டுமே அக்கறை கொண்டுள்ளது.
7. பெரும்பான்மைச் சிங்கள அரசியல் வாதிகளினதும் நிருவாக உயர் மட்ட உத்தியோகத்தவர்களினதும் மனப்போக்கில் மாற்றம் ஏற்படாவிட்டால் இலங்கைச் சிறுபான்மை மக்களுக்கு அதிகாரம் பகிர்ந்தளிக்கப்படுவது ஒருக்காலும் சாத்தியப்படாது.
8. இன்றுள்ள கிழக்கு மாகாண முஸ்லிம் அமைச்சர்கள் தங்கள் பதவிகளை தக்கவைத்துக் கொள்வதற்காகச் சிங்களப் பேரினவாத அரசாங்கத்தின் அடியாட்களாக மாறியுள்ளனர்.

## இரண்டாம் பகுதி – 13வது திருத்தத்தினை அமுலாக்குவதற்குத் தேவையான நடவடிக்கைகள்

மாண்பு மிகு ஜனாதிபதியவர்களின் வழிகாட்டல்

மாகாணங்களுக்கு 13வது திருத்தத்தின் கீழ் கூடுதலான அதிகாரங்களை ஆக்கபூர்வமாகப் பகிர்ந்து தமிழ் பேசும் மக்கள் - விஷேடமாக வடக்கு கிழக்கில் வாழ்பவர்களின் அபிலாசைகளைத் திருப்திப்படுத்துவதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்கும்படி மாண்புமிகு ஜனாதிபதியவர்கள் அண்மையில் சர்வகட்சிப் பிரதிநிதிகள் குழுவுக்குப் பணிப்புரை விடுத்துள்ளார்கள்.

சர்வகட்சிப் பிரதிநிதிகள் குழு தேசிய பிரச்சினை தீர்வுக்காக ஏற்படுத்தும் அரசியல் பொருளாதாரக் கட்டமைப்பு ஜனாதிபதியவர்களால் 2006 ஜூலை 11ஆம் திகதி முன்மொழியப்பட்ட பின்வரும் வழிகாட்டலுக்கு ஏற்புடையதாக அமைவது மிக அவசியமாகும்:-

(அ) மக்கள் தமது பிரதேசங்களில் அவர்களின் தலைவிதியினைத் தீர்மானிக்கும் பொறுப்பினை ஏற்று அங்கு தேவையான அரசியல் பொருளாதாரச் சூழலைத் தாமாகவே ஏற்படுத்திக்கொள்ள வேண்டும்.

(ஆ) தமது அடயாளம், பாதுகாப்பு, சமூக பொருளாதார அபிவிருத்தி ஆகிய அலுவல்கள் சம்பந்தமாக மத்திய அரசாங்கத்தில் பெருமளவு தங்கியிராமல் சுயமாகச் செயற்படுவதற்கு அதிகாரப்பகிர்வு வழிவகுக்க வேண்டும்.

(இ) பிராந்தியத்தில் வாழும் சிறுபான்மையினரின் குறைபாடுகள் திருப்திகரமாகத் தீர்த்துவைக்கப்பட வேண்டும்.

(ஈ) தேசியப் பிரச்சினை முடிவுக்கான தீர்வு தேசத்தின் ஐக்கியத்தை உறுதிப்படுத்த வேண்டும்.

1. <u>13வது திருத்தத்தின் கீழ் மாகாணங்களுக்குப் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ள அதிகாரங்கள்</u>

பகிர்ந்தளிக்கப்பட்டுள்ள அதிகாரங்கள் மாகாணப்பட்டியலிலும், கூட்டுப்பட்டியலிலும் விபரிக்கப்பட்டுள்ளன.

(அ) மாகாணப்பட்டியலில் விபரிக்கப் பட்டுள்ள அலுவல்கள் மீது அதிகாரம் செலுத்துவதற்கான சட்டதிட்டங்களை ஏற்படுத்தும் உரிமை மாகாண சபைகளுக்குண்டு.

(ஆ) மத்திய அரசுடன் கலந்து ஆலோசித்து கூட்டுப்பட்டியலில் விபரிக்கப்பட்டிருக்கும் அலுவல்கள் மீதும் அதிகாரம் செலுத்தக்கூடிய சட்டதிட்டங்களை ஏறபடுத்துவதற்கு மாகாண சபைகளுக்கு உரிமையுண்டு.

(இ) மாகாண சபைகளோடு கலந்தாலோசித்துக் கூட்டுப் பட்டியலில் விபரிக்கப்பட்டிருக்கும் அலுவல்கள் மீது அதிகாரம் செலுத்தக்கூடிய சட்டதிட்டங்களை ஏற்படுத்தும் உரிமை மத்திய அரசுக்கும் உண்டு.

**பிரத்தியேகப் பட்டியலில் தொடர்ச்சியாகக் கூறப்பட்டுள்ள "எல்லா அலுவல்கள் பற்றிய தேசியக் கொள்கை" என்னும் சொற்றொடரைச் சாதகமாகப் பயன்படுத்தி மாகாண சபைகளைக் கலந்து ஆலோசிக்காமல் மாகாணப் பட்டியல் அனைத்து அலுவல்கள் மீதும் அதிகாரம் செலுத்தும் சட்டதிட்டங்களைத் தன்னிச்சையாக மத்திய அரசு ஏற்படுத்துவது நிறுத்தப்படவேண்டும்.**

**கூட்டுப்பட்டியல் மூலம் மாகாண சபைகளுக்குப் பகிர்ந்தளிக்கப் பட்டிருக்கும் அலுவல்கள் யாவும் பிரத்தியேகப் பட்டியலின் கூற்றுப்படி தனக்குரிய அலுவல்கள் என்று மத்திய அரசு அதன் கட்டுப்பாட்டிற்குள் வைத்திருப்பதனால் அவற்றின் செயற்பாடுகள் இன்னும் மாகாண சபைகளினால் முறைப்படி நடைமுறைப் படுத்த முடியவில்லை.**

2. <u>மத்திய அரசு பொறுப்பேற்றுள்ள மாகாணசபை அலுவல்கள்</u>

**(அ) <u>பெருந் தெருக்கள்</u>:** பெருந் தெருக்களுக்குப் பொறுப்பான மத்திய அரசாங்க அமைச்சர் தன்னிச்சையாக மாகாண சபைக்குட்பட்ட அனேக பாதைகளைத் "தேசிய பெருந் தெருக்கள்" எனப் பிரகடனப்படுத்தியமையால் அது மத்திய அரசின் நிருவாகத்துக்குள் சேர்க்கப்பட்டிருக்கிறது. ஆகவே மத்திய அரசின் அதிகாரத்தற்குட்பட்ட "தேசிய பெருந்தெருக்கள்" எவை என்பதுபற்றி மாகாண சபைகளும் மத்திய அரசும் கலந்தாலோசித்து ஒரு இறுதித்தீர்மானம் எடுக்க வேண்டும்.

**(ஆ) <u>வைத்திய சாலைகள்</u>:** பல்கலைக்கழகத்தின் வைத்தியபீடத்தோடு இணைக்கப்பட்டுள்ள போதனா வைத்தியசாலைகள் தவிர்ந்த ஏனைய வைத்தியசாலைகள் யாவும் மாகாண சபைகளின் அதிகாரத்திற்குட்பட்டதாக இருத்தல் வேண்டும். தன்னிச்சையான மத்திய அரசாங்க அமைச்சர் வைத்திய சாலைகளைத் தேசிய வைத்தியசாலைகளாகப் பிரகடனப்படுத்துவது நிறுத்தப்பட வேண்டும்.

**(இ) <u>பாடசாலைகள்</u>:** மாகாண சபைகளோடு கலந்தாலோசிக்காமல் மத்திய அரசின் கல்வி அமைச்சர் பாடசாலைகளைத் தன்னிச்சையாகத் "தேசிய பாடசாலைகள்" எனப் பிரகடனப்படுத்தி மத்திய அரசின் கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவருவது நிறுத்தப்பட வேண்டும்.

**(ஈ) <u>நெற் செய்கை</u>:** வேளாண்மை விவசாயம் மாகாண சபைகளுக்குப் பகிர்ந்தளிக்கப்பட்ட அலுவல்களில் ஒன்று. உச்ச நீதிமன்றமும் இதனை உறுதி செய்துள்ளது ஆயினும் மத்திய அரசு இதனையும் இதனோடு சம்பந்தப்பட்ட நிறுவனங்களையும் இன்னும் விட்டுக் கொடுக்கவில்லை.

**(உ) <u>சமூக சேவை, மீள்குடியமர்வு</u>:** சமூக சேவை, மீள்குடியமர்வு, கூட்டுறவு, சுதேசவைத்தியம் என்பன மாகாண சபைகளின் நிருவாகத்தில் இருக்க வேண்டிய அலுவல்கள். ஆனால் இந்த அலுவல்களுக்குத் தனித்தனி அமைச்சுகளை ஏற்படுத்தி மத்திய அரசு தனது நிருவாகத்தில் வைத்திருக்கிறது. இது உடனடியாக நீக்கப்படவேண்டும்.

**மாகாண சபைகளுக்குப் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ள அதிகாரத்தில் மத்திய அரசு தலையிடுவது நிறுத்துவதற்கான நிறைவேற்றுத் தீர்மானத்தை மத்திய அரசின் அமைச்சரவை உடனடியாக**

**எடுக்க வேண்டும். மாகாண சபைகள் வேண்டிக் கொண்டால் ஒழிய மத்திய அரசு மாகாணப்பட்டியல் அலுவல்களை நிருவகிக்கச் சட்டம் ஏற்படுத்துவது தடை செய்யப்படவேண்டும்.**

**மாகாண சபைகளைக் கலந்து ஆலோசிக்காமல் கூட்டுப்பட்டியலிலுள்ள அலுவல்களை நிருவகிப்பதற்காக மத்திய அரசு தன்னிச்சையாக சட்டம் ஏற்படுத்துவதை உடனடியாக நிறுத்தவேண்டும்.**

**3. <u>உள்ளூர் நிருவாக அமைப்புகள்</u>**

மாண்புமிகு ஜனாதிபதியின் வழிகாட்டலின் குறிக்கோள் நிறைவேற வேண்டுமானால் பின்வரும் அலுவல்களுக்காக உள்ளூர் நிருவாக அமைப்புகள் எல்லை நிருணய அதிகார சபையொன்று உடனடியாக நியமிக்கப்படவேண்டும்.

(அ) இனரீதியான உள்ளூர் நிருவாக அமைப்புகள் எல்லைகள் நிருணயிக்கும் போது அவற்றின் சனத்தொகைக் கேற்ப அரச காணி, இயற்கை வளங்கள் நியாய அடிப்படையில் சேர்த்துக் கொள்ள வேண்டும்.
(ஆ) கிராமசபை, நகரசபை, மாநகரசபை மற்றும் தேர்தல் வாட்டுகள் ஏற்படுத்தும் போது அவை கூடியமட்டில் சம அளவான சனத் தொகையும், நிலப்பரப்பும் கொண்டதாக அமைய வேண்டும்.
(இ) கிராம சபைகள், நகர சபைகள், மாநகர சபைகள் மற்றும் தேர்தல் வாட்டுகள் ஏற்படுத்தும் போது அவற்றின் புவியல், தொடர்பு சாதன வசதி, பொருளாதார நடவடிக்கை, குடிசனச் செறிவு என்பன கவனத்தில் எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்.
(ஈ) பிரதேச செயலகர்ளின் கீழுள்ள நிருவாகப்பிரிவு எல்லைகளும், பிரதேச அரசியல் அமைப்பின் எல்லைகளும் ஒன்றோடொன்று ஒத்ததாக அமைய வேண்டும். இந்த நிபந்தனை நகரசபை, மாநகரசபைகளுக்கு ஏற்புடையதாக இருக்காது.
(உ) சனத்தொகை 2001ஆம் ஆண்டின் குடிசன மதிப்பிலிருந்து கணிக்கப் படவேண்டும். வடக்கு கிழக்கு மாகாணங்களைப் பொறுத்தவரை 1983ஆம் வருடத்திலிருந்து இடம் பெயர்ந்து உள்நாடு வெளிநாடுகளில் குடியேறியவர்கள் எண்ணிக்கை அத்தாட்சிப்படுத்தப்பட்டதாக அமையவேண்டும்.

**நாட்டில் உள்ள அனைத்துப் பிரதேசங்களிலுமுள்ள பிரதேச, நகர, மாநகர சபைகளுக்கான சட்டதிட்டங்களை மத்திய அரசின் உள்ளூர் அரசாங்க அமைச்சர் பாராளுமன்ற அங்கீகாரத்துக்கு உடனடியாகச் சமர்ப்பிக்கவேண்டும். இந்தச் சட்டதிட்டங்களுக்குப் பாராளுமன்ற அனுமதி பெறப்பட்டதும் பிரதேச, நகர, மாநகர சபைகளுக்கான தேர்தல் சட்டங்கள் திருத்தியமைக்கப்பட வேண்டும்.**

**4. <u>மாகாண நிருவாகம்</u>**

(அ) ஆக்கபூர்வமான அதிகாரப்பகிர்வுக்கு மாவட்ட நிருவாகம் மாகாண சபையின் நேரடி நிருவாகத்தில் இருக்க வேண்டும்.
(ஆ) அரசாங்க அதிபர்கள் தொடர்ந்து மத்திய அரசின் பிரதிநிதிகளாக இருந்து தமது நிருவாகக் கடமைகளைக் கவனிப்பர்.
(இ) மேலதிக அரசாங்க அதிபரும் மாவட்டத்தில் உள்ள பிரதேச செயலாளர்களும் மாவட்ட ஆணையாளர்களாகவும், பிரதேச ஆணையாளர்களாகவும் மாகாண சபைகளினால் நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படவேண்டும். கிராம சேவகர் மற்றும் ஏனைய உத்தியோகத்தர்களின் நியமனம், இடமாற்றம், வேலை நீக்கம், மற்றும் ஒழுக்க முறைகளுக்கான அனைத்து நடவடிக்கைகளும் மாகாண நிருவாக சேவையின்கீழ் கொணடுவரப்பட வேண்டும்.
(ஈ) கிராம சபைப் பிரதேச எல்லைகளுக்கும் பிரதேச ஆணையாளர் பிரிவு எல்லைகளுக்கும் இடையில் பிரச்சினைகள் ஏற்படாதிருப்பதற்காக பிரதேச ஆணையாளர் பிரதேச நிருவாகப் பிரிவாகவும் கிராம சேவை உத்தியோகத்தர் உபநிருவாகப்பிரிவாகவும் கருதப்பட வேண்டும்.

**மாகாண நிருவாக நடவடிக்கைகளுக்கு ஆதரவாக உள்ள பொது நிருவாகம் உடனடியாகப் பலப்படுத்தப்பட வேண்டும். மத்திய அரசினதும் மாகாணத்தினதும் நிருவாகக் கட்டமைப்பு மிக மிகத் தெளிவாக வரையறுக்கப் படவேண்டும்.**

## 5. நிதி

நிதி பற்றாக்குறை காரணமாக மாகாண சபை நடவடிக்கைகள் மிகவும் பாரதூரமாகப் பாதிப்புக்குள்ளாகியுள்ளன. இந்த நிலமையினைச் சீர் செய்வதற்குப் பின்வரும் நடவடிக்கைகள் உடனடியாக எடுக்கப்பட வேண்டும்.

(அ) வரவு செலவுத் திட்டத்தில் ஒதுக்கப்பட்டுள்ள நிதியில் அதிகாரப்பகிர்வினை ஆக்கபூர்வமாக நடைமுறைப்படுத்துவதற்குத் தேவையான தொகையினை மாகாண சபைகளுக்கு உடனடியாக வழங்குவதற்கு நிதி ஆணைச் சபை கட்டளை பிறப்பிக்க வேண்டும்.

(ஆ) மாகாணங்கள் மத்திய அரசாங்க நிதி அமைச்சின் உத்தரவாதத்தின் அடிப்படையில் கடனுதவிகளைப் பெறமுடியும் என மாகாண சபைச்சட்டம் விதந்துரைக்கிறது. இதனைச் செயற்படுத்த மத்திய அரசு கூடிய அக்கறை எடுக்க வேண்டும்.

(இ) மாகாண சபைச் சட்டத்திற்கேற்ப வெளிநாட்டு உதவிகள் மூலம் மாகாணங்களில் செய்து முடிப்பதற்கு உடன்பட்டுள்ள அபிவிருத்தித் திட்டங்களுக்கான நிதியினை மாகாண சபைகளுக்கு மத்திய அரசு பகிர்ந்து கொடுக்க வேண்டும்.

(ஈ) மாகாணங்களில் மத்திய அரசினால் அபிவிருத்தி செய்யப்படும் விஷேட திட்டங்கள், மாகாணங்களுக்குப் பகிர்ந்தளிக்கப்பட்ட அலுவல்களுக்குட்பட்டவைகளாக இருப்பின் அவற்றிற்கான நிதியை உரிய மாகாண நிருவாகத்திற்குக் கொடுப்பதற்கான நடவடிக்கை உடனடியாக எடுக்கப்பட வேண்டும்.

**மத்திய நிதி அமைச்சு இதற்குத் தேவையான நிறைவேற்றுத் தீர்மானங்களை உடனடியாக எடுக்க வேண்டும்**

## 6. பொலிஸ் அதிகாரமும் சட்ட ஒழுங்கும்

யாப்பின் 13வது திருத்தம், பொலிஸ் ஆணைக்குழு சட்ட இலக்கம் 1, யாப்பின் 17வது திருத்தம் ஆகியவற்றில் கூறப்பட்டிருக்கும் சட்டப்படி பொலிஸ் அதிகாரம் மாகாண சபைகளுக்குப் பகிர்ந்தளிக்கப்பட வேண்டிய அலுவல்களாகும்.

13வது திருத்தத்தினால் சட்டஒழுங்கு சம்பந்தமான அதிகாரங்கள் மாகாணங்களுக்குப் பகிர்ந்தளிக்கப்பட்டிருக்கிறது. தேசிய பொலிஸ் ஆணைக் குழுவின் அமைப்புபற்றி 17வது திருத்தமும், மாகாண பொலிஸ் ஆணைக் குழு ஏற்படுத்துவது பற்றி 13வது திருத்தமும் விபரிக்கின்றன. 13வது திருத்தத்தில் விபரிக்கப்பட்டிருப்பது போன்று ஒவ்வொரு மாகாண பொலிஸ் ஆணைக் குழுவிற்கும் தனித்தனியாக ஒரு சிரேஷ்ட பொலிஸ் பரிசோதகர் நாயகம் நியமிக்கப்பட வேண்டும்.

**ஆகவே 13வது திருத்தத்தில் கூறப்பட்டுள்ள மாகாண சட்ட ஒழுங்குக்கான அதிகாரங்களை நடைமுறைப் படுத்துவதற்கான நிறைவேற்றுத் தீர்மானத்தை மத்திய அரசு உடனடியாகப் பிரகடனப் படுத்தவேண்டும்.**

# 5. மூதூர் முஸ்லிம் இனச்சுத்திகரிப்பும் போர்குற்ற நடவடிக்கைகளும்

2006 ஆகஸ்ட் 02 புதன்கிழமை நள்ளிரவுக்குப்பின் தமிழீழ விடுதலைப் புலிகள் (எல்.ரி.ரி.ஈ.) மூதூர் இறங்குதுறையை (ஜெட்டியை) ஏவுகணைகளாலும், பீரங்கியாலும் தாக்கினர். இலங்கை இராணுவம், கடற்படை, கட்டுப்பறிச்சான், செல்வாநகர், மகிந்தபுர ஆகிய இடங்களிலிருந்த காவல் அரண்களும் தாக்கப்பட்டன.




அதிகாலையில் மேற்குப்புறமாகத் தமிழ் பயங்கரவாதிகள் மூதூருக்குள் நுழைந்தனர். கடும் தாக்குதல் காரணமாகப் பொலிசும், காவற்படையினரும் தொலைத்தொடர்பு நிலையம், பஸ்டிப்போ ஆகிய இடங்களைவிட்டு வெளியேறினர். மூதூர் இறங்குதுறையில் பாதுகாப்புக்கடமையில் ஈடுபட்டிருந்த கடற்படையினரும் தாக்கப்பட்டனர். வியாழக்கிழமை காலையில் விமானப்படைக்குச் சொந்தமான கிபிர் ஜெட் விமானங்கள் சம்பூர் பகுதியில் குண்டுவீசத் தொடங்கின எம்.ஐ.24 ஹெலிக்கொப்டர் பீரங்கிமூலம் அண்மித்த பகுதிகளில் கடற்புலிகளின் படகுகள் மீது தாக்குதல்

நடத்தப்பட்டது. ஆரம்பத்தில் இறங்குதுறையிலிருந்தும் கந்தளாய் வழியாகவும் படையினர் வருவதைத் எல்.ரி.ரி.ஈ. பயங்கரவாதிகள் தடை செய்தனர். 2006 ஆகஸ்ட் 03 வியாழன் பிற்பகலிலும் மூதூர் பிரதேசத்தில் பயங்கர போர் மூண்டது. போர்வீரர்கள் பச்சைநூர் பகுதியிலிருந்து மூதூரை நோக்கி முன்னேறினர். வெள்ளிக்கிழமை காலைவரை பயங்கரவாதிகள் மூதூரின் பலபகுதிகளில் ஆதிக்கம் செலுத்தினர். அடுத்த நாள் இரவு அரசாங்கப் படையினர் மூதூர் நகரத்தை மீட்டுத் தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரக் கடும் போர் நடத்தினர். தமிழ் பயங்கரவாதிகள் பின்வாங்கி பல இடங்களில் தஞ்சம் புகுந்த முஸ்லிம் பொதுமக்களின்பின் பாதுகாப்பு அரண் அமைத்துக் கொண்டனர். அரசாங்க படையினர் அன்றைய முடிவில் நிலைமையைத் தங்கள் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்து விட்டனர். எல்.ரி.ரி.ஈ. யின் தாக்குதல் முத்துச்செல்வி, குஞ்சன் ஆகியோரின் தலைமையில் நடைபெற்றது.



திருகோணமலைத் துறைமுகத்தின் செயற்பாட்டைச் செயல் இழக்கச் செய்வதற்காகச் சம்பூரிலிருந்து தென்புறமாக நிலத்தொடர்புள்ள பாரிய பிரதேசத்தைக் கைப்பற்ற விடுதலைப்புலிகள் எடுத்த நடவடிக்கை வெற்றியளிக்கவில்லை. இந்த முயற்சியில் விடுதலைப்புலிகள் வெற்றிபெற்றிருந்தால் பிற்காலத்தில் பாரிய பின் விளைவுகள் ஏற்பட்டிருக்கும். திருகோணமலைத் துறைமுகம்தான் யாழ்ப்பாணக் குடாநாட்டில் நிலைகொண்டுள்ள 40,000 க்கும் கூடுதலான இராணுவத்தினரினதும், பொலிஸ் படையினரினதும் சீவியத்திற்கு தேவையான அத்தியாவசிய பொருட்கள் வினியோகம் மற்றும் போக்குவரத்துத் தேவையினதும் உயிர்நாடி.



விடுதலைப் புலிகள் மூதூர் பிரதேசத்தைக் கைப்பற்ற எடுத்த முயற்ச்சி தோல்வியுற்றபோதும் ஒரு விடயத்தில் வெற்றிகண்டுள்ளனர். மூதூரிலிருந்து பெரும் தொகை முஸ்லிம்களை வெளியேற்றிவிட்டனர். 40,000 க்கும் மேற்பட்ட முஸ்லிம்கள் கந்தளாய் மற்றும் அதனை அண்டியபிரதேசங்களில் அகதிகளாகத் தஞ்சம் புகுந்தனர். குறைந்தது 20க்கும் கூடுதலான முஸ்லிம்கள் பீரங்கியாலும் ஏவுகணைகளாலும் தாக்கப்பட்டுக் கொல்லப்பட்டனர். இத்தாக்குதலினை இலங்கை இராணுவத்தினரும் தமிழ்ப் பயங்கரவாதிகளும் ஒருவரை ஒருவர் மாறிமாறிக் குறைகூறிக் கொண்டனர். 2006 ஆகஸ்ட் 04 வெள்ளிக்கிழமை நடைபெற்ற தேசிய பாதுகாப்பு சபையின் விஷேட கூட்டத்தில் இச்சம்பவம்பற்றி விவாதிக்கப்பட்டது.

2006 ஆகஸ்ட் 01, செவ்வாய் இரவு 10.30 மணியளவில் திடீரென மின்சாரம் துண்டிக்கப்பட்டது. இரவு 11.00 மணியளவில் மூதூர் தாக்குதல் ஆரம்பமானது. மூதூர் நகரில் பொது மக்கள் வசிப்பிடங்கள் தாக்கப்பட்டன, பயங்கர வெடிச்சத்தத்தோடு குண்டுகள் விழுந்ததால் மக்கள்

பீதியடைந்து பயத்தால் அங்குமிங்கும் ஓடிஒளித்தனர்.

2006 ஆகஸ்ட் 03 வியாழன் தமிழீழ விடுதலைப்புலிகள் மூதூரில் சண்டையை ஆரம்பித்தனர். இரண்டு பாடசாலைகள் தாக்கப்பட்டன, 15பேர் கொல்லப்பட்டனர், இடம்பெயர்ந்த 30பேர் காயப்பட்டனர். எல்.ரி.ரி.ஈ. யின் பீரங்கித்தாக்குதல் முதலில் மூதூர் அரபுக்கல்லூரியில் விழுந்தது. 10பேர் கொல்லப்பட்டு 20பேர் காயப்பட்டனர். சிலமணித்தியாலங்களின் பின் புலிகள் தோப்பூர் அல்-நூரியா மற்றும் இஸ்லாமிய அரபுக்கல்லூரியைத்தாக்கியதால் 8பேர் கொல்லப்பட்டனர் 15பேர் காயப்பட்டனர்.

## பாதுகாப்பு அமைச்சின் பேச்சாளர் வெளியிட்ட தகவல்

பிற்பகல் 1.15 மணியளவில் முஸ்லிம் அகதிகள் தங்கியிருந்த அரபுக் கல்லூரி புலிகளின் ஏவுகணைகளினால் தாக்கப்பட்டபோது 10 பொதுமக்கள் கொல்லப்பட்டதோடு 50க்கும் கூடுதலானவர்கள் படுமோசமான காயத்துக்குள்ளாயினர். அரபுக்கல்லூரிக்கு அருகில் இருந்த பாதுகாப்புப் படைமுகாம் எல்.ரி.ரி.ஈ. யின் ஏவுகணைகளால் தாக்கப்பட்டதாக அமைச்சின் பேச்சாளரின் செய்தியில் கூறப்பட்டுள்ளது. எல்.ரி.ரி.ஈ. யினர் வீதித்தடைகளை ஏற்படுத்தித் தாக்கியதால் காயப்பட்டவர்களை 'அம்பியுலன்ஸ்' மூலம் வைத்திய சாலைகளுக்கு கொண்டுபோக முடியவில்லை. பாதுகாப்பு இல்லாததால் அதிகாரிகள் மூதூர், சேருவல வைத்தியசாலைகளை மூடிவிட்டனர்.

## எல்.ரி.ரி.ஈ. யினரால் முஸ்லிம்கள் படுகொலை

மூதூருக்குத் தெற்கேயுள்ள பச்சைநூரில் இருந்து வெளியேறிய நூற்றுக்கணக்கான முஸ்லிம்கள் எல்.ரி.ரி.ஈ. யினால் படுகொலை செய்யப்பட்டனர். 2006 அகஸ்ட் 04 வெள்ளி இரவு எல்.ரி.ரி.ஈ. யினால் ஏற்படுத்தப்பட்ட பச்சைநூர் வீதித்தடைமுகாமருகே 100க்கும் கூடுதலான இறந்த சடலங்கள் அங்குமிங்குமாக வீசப்பட்டிருந்ததாக ஆயுதப்படைப் பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார். நேரில் கண்ட இன்னுமொருவரின் கூற்றுப்படி மூதூரில் இருந்து வெளியேறிய அகதிகளைப் பச்சைநூர் என்னுமிடத்தில் தடுத்துவைத்து முகமூடி அணிந்த ஒரு விடுதலைப் புலியுறுப்பினர்முன் நிறுத்தினர். இந்த முகமூடிப் புலியினால் முஸ்லிம் பொதுமக்களில் அரசபடையினருக்கு ஒத்தாசை புரிந்தவர்கள் என அடையாளம் காட்டப்பட்டு அவர்களின் கைகளினைக் கட்டி காட்டுக்குள் அழைத்துச் சென்று கொலைசெய்தனர். அகதியாக வந்த முஸ்லிம்கள் தாங்கள் இப்படி நடத்தப்படுவதை மிகவன்மையாக ஆட்சேபித்து எதிர்ப்புத் தெரிவித்துக் கிளர்ச்சி செய்ததால் ஏற்பட்ட குளப்பத்தில் பலர் தப்பி ஓடமுயற்சித்தனர். இந்தச் சோதனைச் சாவடியைக்காவல் புரிந்த இளம் விடுதலைப் புலி உறுப்பினர்கள் கண்டவாறு துப்பாக்கிப் பிரயோகம் செய்ததில் 17 முஸ்லிம்கள் கொல்லப்பட்டனர். இந்த இடத்தில் புலிகளால் கைதுசெய்யப்பட்ட 48 பேருக்கு என்ன நடந்தது என்று இன்னும் தெரியாது.

பாதுகாப்பு அமைச்சின் இணையத்தளம் வெளியிட்ட தகவலின்படி 'எல்.ரி.ரி.ஈ. யினால் 100க்கும் கூடுதலான முஸ்லிம்கள் அரசாங்க படையினருக்கு உதவி ஒத்தாசை புரிந்தவர்கள் என்ற சந்தேகத்தின் பேரில் கொல்லப்பட்டனர்' எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதில் பெண்களும், சிறுபிள்ளைகளும் அடங்குவர்.

இன்னுமொருவர், எல்.ரி.ரி.ஈ. குறைந்தது 60 முஸ்லிம் பொதுமக்களை 2006 ஆகஸ்ட் 04 வெள்ளிக்கிழமை தடுத்து வைத்து அவர்களில் 12 பேரை அந்த இடத்திலேயே துப்பாக்கியால் சுட்டுக் கொன்றுவிட்டனர். யுத்த சூழ்நிலையில் மூதூரைவிட்டுத் தப்பி ஓடிய 100க்கும் கூடுதலான முஸ்லிம்களை எல்.ரி.ரி.ஈ. யினர் கொன்று குவித்தனர். பாதுகாப்புப் படையினருடன் தொடர்புவைத்துள்ளவர்கள் என்ற சந்தேகத்தின்பேரில் விடுதலைப் புலிகளால் தடுப்புக்காவலில் விசாரணைக்குக் கொண்டு போனவர்களில் 300க்கும் கூடுதலான முஸ்லிம்கள் பற்றிய எந்தவித தகவலும் இற்றைவரை கிடைக்கவில்லை.

தமிழீழ விடுதலைப் புலிகள் மாவில்ஆறு அணைக்கட்டை மூடியபோது இலங்கை இராணுவத்தினர் அவர்களின் மூதூரைக் கைப்பற்றுவதற்கான அந்தரங்கத் திட்டத்தினை நினைத்துக்கூடப் பார்க்கவில்லை. மூதூர் பாதுகாப்பு அரண்களைக் கைவிட்டு விட்டு மாவில்ஆறு பாதுகாப்புக்காகச்

சென்றுவிட்டனர். அரசாங்கம் 400க்கும் கூடுதலான பாதுகாப்புப் படையினரை மூதூரிலிருந்து மாவில்ஆறு பாதுகாப்புக்கு இடம்மாற்றியது. இதனால் மூதூர் பாரிய பாதுகாப்பின்மைக்கு முகங்கொடுக்க நேரிட்டது.



நிலமையை மிகவும் அவதானமாகக் கவனித்துவந்த விடுதலைப் புலிகள், 2006 ஆகஸ்ட் 02ம் திகதி மூதூருக்குள் பாதுகாப்புப் படையினரின் எந்தவித எதிர்ப்புமின்றி இலேசாகப் புகுந்து மின்சாரத்தைத் துண்டித்தனர். எதிர்பாராத விதத்தில் எந்த விதமான பாதுகாப்புமின்றி முஸ்லிம்கள் விடுதலைப்புலிகளின் ஆக்கிரமிப்புக்குள்ளானார்கள்.

மூதூர் எல்.ரி.ரி.ஈ. யினரால் பூரணமாகச் சுற்றிவளைக்கப்பட்டு அவர்களின் கட்டுப்பாட்டுக்குள் வந்தது. வர்த்தகம் பூரணமாக ஸ்தம்பித்தது பொதுமக்களால் தங்கள் நாளாந்த உணவுப் பண்டங்களைப் பெற்றுக் கொள்ள முடியாவில்லை. சிறுவர்கள் பால் உணவின்றித் தவித்தனர். நோயாளிகள் வைத்தியசாலையிலும் வேறு இடங்களிலும் கவனிப்பார் அற்று பெரும் கைசேதப்பட்டனர்.

இந்த நிலமை நீடித்தால் முஸ்லிம்கள் உண்ண உணவின்றி பசிபட்டினியால் செத்து மடிந்திருப்பர் அல்லது ஏவுகணைத்தாக்குதலால் அழிந்திருப்பர். ஆகவே முஸ்லிம்கள் மூதூரை விட்டு வெளியேறத் தீர்மானித்தனர். இராணுவத்தினரால் தொடர்ச்சியாக பாதுகாப்புத் தருவதாக வாக்குறுதி கொடுக்கப்பட்டபோதும் எதுவும் நடக்கவில்லை மூதூரைவிட்டு வெளியேறுவதைவிட்டுவிட்டு அங்கேயே தங்கியிருக்குமாறு இராணுவத்தினர் கட்டளையிட்டனர். தொடர்ச்சியாக இராணுவத்தினர் கொடுத்த வாக்குறுதி நிறைவேறாத நிலையில் நம்பிக்கை இழந்த முஸ்லிம்கள் மூதூரைவிட்டு வெளியேறி கிண்ணியாவுக்கும், கந்தளாய்க்கும் அகதிகளாகச் சென்றனர். பசியாலும், தாகத்தாலும் பாதிக்கப்பட்டு உயிர்தப்புவதற்காக வெளியேறிய முஸ்லிம்கள் வழியில் எல்.ரி.ரி.ஈ. யினரின் கடும் கொடூரங்களுக்கு இலக்காகினார்கள். பெண்களும், வயோதிபர்களும் கூடுதலாகப் பாதிக்கப்பட்டனர். இளைஞர்கள் தனியாக ஒதுக்கப்பட்டு கொலை செய்யப்பட்டனர்.

எல்.ரி.ரி.ஈ. யினர் இப்பிரதேசத்தின் முக்கியத்துவத்தை நன்கு அறிந்திருந்தனர். 1985 நடுப்பகுதியிலிருந்து மாவில்ஆற்றுக்கு அண்டிய பகுதிகளுக்கு ஊடுருவியது திருகோணமலைத்

துறைமுகத்தைக் கைப்பற்றும் நீண்டகாலத் திட்டத்தின்படியே. 2002 பெப்ரவரியில் யுத்தநிறுத்த உடன்படிக்கை கைச்சாத்திடுவதற்கு முன்னர் மாவிலாற்றுப் பிரதேசம் இலங்கை அரசாங்கத்தின் கட்டுப்பாட்டிலேயே இருந்தது. இங்கு ஊடுருவியதன் பின்னர் எல்.ரி.ரி.ஈ. திருகோணமலைத் துறைமுகத்தின் நடவடிக்கைகளை படையினரும் மற்றும் சரக்குகள் கப்பல்மூலம் 1985 முதல் வடக்குக்கு கொண்டு செல்வதை அவதானமாகக் கவனித்து வந்தனர். ஊடுருவலுக்குப் பின் தமது ஆதிக்கத்தை எல்.ரி.ரி.ஈ. சம்பூர் பகுதியில் உறுதிப்படுத்திய போது திருகோணமலைத் துறைமுகம் பெரும் ஆபத்தை எதிர்கொள்ள வேண்டிய நிலையிலேயே இருந்துவந்தது.

## மூதூர், தோப்பூர், பாலத்தோப்பூர் ஆகிய இடங்களிலிருந்து இடம்பெயர்ந்த முஸ்லிம்கள்

| தொ. இல. | அகதிமுகாம் இடம் | இடம்பெயர்ந்த மக்கள் | இடம்பெயர்ந்த குடும்பம் | ஆண் | பெண் | குழந்தைகள் | காயப் பட்டவர்கள் | கர்ப்பிணித் தாய்மார் | பாலூட்டும் தாய்மார் | இத்தாவிலுள்ள கைம்பெண் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | | |
| 1 | கந்தளாய் | 26,059 | 6,593 | 8,001 | 9,476 | 2,398 | 208 | 731 | 913 | 22 |
| 2 | தம்பலகாமம் - முள்ளிப்பொத்தானை | 9,852 | 2,259 | 4,823 | 5,014 | 1,775 | 84 | 120 | 207 | 3 |
| 3 | கிண்ணியா | 3,312 | 955 | 1,623 | 1,587 | 454 | 113 | 90 | 123 | |
| 4 | திருகோணமலை | 300 | 80 | 143 | 157 | 37 | 8 | 8 | 13 | |
| 5 | மடாடுகம, தம்புள்ள | 125 | 33 | 76 | 49 | 21 | | 6 | 21 | |
| | | | | | | | | | | |
| | **மொத்தம்** | **39,648** | **9,920** | **14,666** | **16,283** | **4,685** | **413** | **955** | **1,277** | **25** |

திருகோணமலை கடற்படைத் தளம் சம்பூரிலிருந்து 122 மி.மீ., மற்றும் 130 மி.மீ. ஏவுகணைகளால் தாக்கப்பட்டது. 20 கி.மீ. தூரம் சென்று தாக்கக்கூடிய இந்தக்கனரக ஆயுதங்கள் முல்லைத்தீவு, யானை இறவு யுத்தத்தின் போது அரசாங்கப் படையினரிடமிருந்து கைப்பற்றப்பட்டவை. இப்பொழுதுதான் முதன் முறையாகக் கிழக்கில் இவை உபயோகிக்கப்பட்டது. எல்.ரி.ரி.ஈ. திருகோணமலையில் பயங்கர தாக்குதல்களை மூன்று இராணுவ முகாம்களில் - கட்டப்பறிச்சான், காந்திநகர், தோப்பூர் ஆகிய இடங்களில் நடத்தியது. அரசாங்கத்தின் கட்டுப்பாட்டில் இருந்த முஸ்லிம் நகரமாகிய மூதூரை எல்.ரி.ரி.ஈ. முற்றுகையிட்டது. ஆரம்பத்தில் அரசாங்கப் படையினருக்குச் சில பின்னடைவுகள் ஏற்பட்டபோதும், 72 மணித்தியாளங்களுக்குள் இப்பிரதேசத்தினை அரசாங்கப் படையினர் தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்தனர். இந்த யுத்தத்தில் 300க்கும் கூடுதலான எல்.ரி.ரி.ஈ. பயங்கரவாதிகள் (கூடுதலாகப் பெண்களே) கொல்லப்பட்டனர். இதே அளவிலான முஸ்லிம் பொதுமக்களும் இங்கு நடந்த இருமுனைத் தாக்குதலில் கூடுதலாக எல்.ரி.ரி.ஈ. யின் தாக்குதலில் அகப்பட்டு மரணமடைந்தனர். அன்றைய அரசாங்கம் மூதூரில் இருந்த முக்கியமான காவல் அரண்களை அகற்றாமல் இருந்திருந்தால் அனாவசியமாக பெரும் தொகை உயிர் இழப்பும் பாரிய பணச் செலவும் ஏற்பட்டிருக்காது.

மூதூர் துறைமுகத்தின் முக்கியத்திற்காக எல்.ரி.ரி.ஈ. யினர் மூதூரைக் கைப்பற்றுவதில் கண்ணும் கருத்துமாக இருந்தனர். ஆனால் இங்கு பெரும் தொகை முஸ்லிம்கள் வாழ்வதால் இப்பிரதேசத்தை எல்.ரி.ரி.ஈ. யினரால் இலேசாகக் கைப்பற்ற முடியவில்லை. இதனால் இங்கிருக்கும் முஸ்லிம்களை வெளியேற்றுவதில் கண்ணும் கருத்துமாக இருந்தனர். அண்மைக்கால வேலை நிறுத்தம், கொலைகள், பொருட்சேதங்கள் மூதூர் முஸ்லிம்களுக்கு ஏற்பட்டு வந்துள்ளன. எல்.ரி.ரி.ஈ. பலதடவைகள் துண்டுப்பிரசுரங்கள் மூலம் முஸ்லிம்களை வெளியேறுமாறு எச்சரித்து வந்துள்ளது. ஆனால் இந்த அச்சுறுத்தல்களுக்கு அஞ்சி மூதூர் முஸ்லிம்கள் வெளியேறவில்லை. சட்டப்படி தமக்கு உரித்தான பிரதேசத்தைவிட்டு வெளியேறாமல் தொடர்ந்து இங்கு வாழ்வதற்கு திடசங்கற்ப்பம் கொண்டிருந்தனர்.

எல்.ரி.ரி.ஈ. விடுத்த அச்சுறுத்தல்கள், வெளியேறுமாறு வினியோகிக்கப்பட்ட துண்டுப்பிரசுரங்கள் பற்றி முஸ்லிம் பொதுமக்கள் முஸ்லிம் அரசியல் தலைவர்களிடம் புகார் செய்தபோது அவர்கள் இவை பற்றி எந்தவித நடவடிக்கையும் எடுக்கவில்லை. வடமாகாணத்தில் நடைபெற்றது போன்ற இனச்சுத்திகரிப்பு இனிமேல் முஸ்லிம் பிரதேசங்களில் நடைபெறாது என்ற தமிழ் தலைவர்களின் வாக்குறுதியைப் பூரணமாக நம்பினார்கள். முஸ்லிம் பிரதேசங்களில் எல்.ரி.ரி.ஈ. யினரால் தொடர்ந்து இனச்சுத்திகரிப்பும், படுகொலைகளும், ஆட்கடத்தல்கள் மற்றும் கப்பம் அறவிடுதல்களும் தொடர்ந்து நடைபெற்று வந்த பொழுது யுத்த நிறுத்த உடன்படிக்கை செயல் இழந்து காணப்பட்டது. அரசாங்க இராணுவத்தினருக்கும் எல்.ரி.ரி.ஈ. யினருக்குமிடையில் ஏற்பட்டுவரும் மோதல்கள் காரணமாக முஸ்லிம்களின் பாதுகாப்புத்தான் பெரும் பாதிப்புக்குள்ளானது. இருசாராரும் பொதுமக்கள் பாதுகாப்பு பற்றிப் பெரிதும் அலட்டிக் கொள்ளாமல் ஒருவரையொருவர் திட்டிக்கொண்டே இருக்கின்றனர்.

மூதூர் பிரதானமாக ஒரு சிங்கள கிராமமாக இருந்திருந்தால், எல்.ரி.ரி.ஈ. யினரை வெளியேற்றும் விஷயத்தில் அரசாங்க இராணுவம் வேறு விதமாக நடந்திருக்கும். அதேபோல் மூதூர் பிரதானமாக ஒரு தமிழ் கிராமமாக இருந்தால் எல்.ரி.ரி.ஈ. ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளை வேறு விதமாகக் கையாண்டிருப்பர். மூதூர் விடயத்தில் அரசாங்க இராணுவமும், எல்.ரி.ரி.ஈ. யும் முஸ்லிம் பாதுகாப்பு விடயத்தில் மிகவும் பொறுப்பற்றவாறு நடந்து கொண்டனர். ஆகவே இருசாராரும் (போனால் போ வந்தால் வா என்ற அடிப்படையில்) அப்பாவி மக்களைப் பலிகொடுத்துப் பூரண யுத்தத்தில் ஈடுபட்டார்கள். எதுவித சந்தேகத்திற்கும் இடம் இல்லாது எல்.ரி.ரி.ஈ. மூதூரில் முஸ்லிம்களை இனச்சுத்திகரிப்புச் செய்தது. 1980ஆம் ஆண்டிலிருந்து இதுதான் முஸ்லிம் கிராமங்களில் நடை பெற்றுவருகிறது. இவையாவும் முஸ்லிம்களின் உரிமைகளுக்கு இலங்கை அரசாங்கம் தகுமான அக்கறை காட்டவில்லை என்பதையே மீண்டும் மீண்டும் வலியுறுத்திவருகிறது. ஆகவே கிழக்கிலங்கை அப்பாவி முஸ்லிம்கள் இனிமேலாவது தங்கள் உரிமை பற்றி அக்கறையுள்ளவர்களாக மாறவேண்டும்.

# 6. பொத்துவில் முஸ்லிம்கள் படுகொலை

2006 செப்டம்பர் 16 சனிக்கிழமை பத்து முஸ்லிம் பொதுமக்கள் பொத்துவிலில் உள்ள றதல குளத்தருகே படுகொலை செய்யப்பட்டனர். இச்சம்பவம் அம்பாரைப் பிரதேச முஸ்லிம் மக்களிடையே பெரும் அதிர்ச்சியையும், பதட்டத்தையும் ஏற்படுத்தியது. அரசாங்கம் எல்.ரி.ரி.ஈ. மேல் இப்பழியைப் போட்டது. ஆனால் பொதுமக்கள் இது அரசாங்க விஷேட அதிரடிப் படையினால் செய்யப்பட்டிருக்கலாம் என்று சந்தேகிக்கின்றனர்.




பாதிக்கப் பட்டவர்கள் முஸ்லிம் ஒப்பந்தக்காரர் ஒருவரால் வேலைக்கமர்த்தப் பட்டவர்கள் என்றும் றதல அணைக்கட்டுத்திருத்த வேலைக்காக 2006 செப்டம்பர் 16 சனிக்கிழமை

வேலைக்குப் போனவர்கள் காணாமற் போனதாகவும் அம்பாரைப் பொலிஸ் அறிவித்தது. அடுத்தநாள் ஞாயிற்றுக் கிழமை அணைக்கட்டருகே மூன்று சடலங்களும், மற்றவர்களின் சடலங்கள் அடுத்தநாள் காலையிலும் கண்டெடுக்கப்பட்டது.

மரணமடைந்தவர்களில் அனேகமானவர்கள் 18வயது இளைஞர்கள், எம். அனுஸ்தீன், எம். நாபர், எம். சம்சுதீன், ஏ.எம். பயிசல், எல். அனீஸ், எம். ஜஉபர், எஸ்.எல். றிசாத் ஆகியோர் பொத்துவிலைச் சேர்ந்தவர்கள், ஏ.எம். அஜ்மீர், எம். பயிரூஸ், எம்.ஐ. சியாம் ஆகியவர்கள் அக்கறைப்பற்றைச் சேர்ந்தவர்கள்.

உயிர்தப்பிய மீரா முஹியத்தீன் என்பவர், வயது 60 படுமோசமான காயங்களோடு பொத்துவில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின்பு அம்பாரை வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார்.

இக்கொலைச் சம்பவம் பொத்துவில் பிரதேசத்தில் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியது. வெறிச்சோடிய வீதிகள், அடைக்கப்பட்ட வர்த்தக நிறுவனங்கள் அன்று காணப்பட்ட காட்சியாக இருந்தது. இந்த அமைதிச் சூழல் அற்ப நேரத்திற்குத்தான் நிலைத்தது. ஆத்திரமடைந்த முஸ்லிம் பொதுமக்கள் அதிரடிப்படையினர் மீதும், ஐ.ஜி.பி. யின் வாகனத்தின் மீதும் கல்வீசித் தாக்கத் தொடங்கினர். சம்பவம் நடந்த இடத்திலிருந்து வெளிவந்த அறிக்கைப்படி படுகொலை செய்யப்பட்டவர்கள் கண்கள் மூடப்பட்டு கைகள் கட்டப்பட்ட நிலையில் பாணமை அதிரடிப்படை முகாம் அருகில் திறந்த வெளியில் வைத்துத்தான் படுகொலை செய்யப்பட்டிருக்கின்றனர்.




இப்பிரதேசம் பாதுகாப்புப் படையினரின் பூரண கட்டுப்பாட்டுக்குட்பட்டதாகவே இருந்தது. ஆகவே எல்.ரி.ரி.ஈ. அதிரடிப்படை முகாமுக்கு அண்மித்த இப்பிரதேசத்தில் நடமாடுவது ஒரு சாத்தியமற்ற

விடயமாகும். மேலும் தாக்கப்பட்டுக் கழுத்தறுக்கப்பட்ட மீராமுஹியத்தீன் அண்மையில் உள்ள கல்முனை அஷ்ரப் ஞாபகார்த்த வைத்தியசாலைக்குப் போகவிடாமல் வெகு தொலைவில் உள்ள சிங்களப் பிரதேச வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதின் மர்மம்பற்றி பொத்துவில் முஸ்லிம் பொதுமக்கள் பெரும் சந்தேகம் கொண்டுள்ளனர்.



பொலிஸ் அறிக்கையின்படி உயிர்தப்பிய மீராமுஹியத்தீன் கொடுத்த வாக்கு மூலத்தில் எல்.ரி.ரி.ஈ. யினர்தான் இக்கொலைகளைச் செய்ததாகக் கூறப்படுகிறது. ஆனால் அவரின் 23 வயதுடைய மகள் றுஜ்ஜா இதற்கு முற்றும் மாறான வாக்குமூலம் கொடுத்துள்ளார். 'எனது கணவரும், சில குடும்ப அங்கத்தவர்களும் பொத்துவில் வைத்தியசாலைக்குச் சென்று பார்த்தபோது தகப்பனாரின் நிலமை மிகவும் கவலைக்கிடமாக இருந்தது. அவருக்கு வாய்திறந்து அறவே பேச முடியாமல் இருந்தது. எனது தகப்பனாரின் தொண்டைக்கூடாக ஒரு குளாய் போடப்பட்டிருந்ததையும் நாங்கள் கண்டோம்.'

அம்பாரை வைத்தியசாலை டாக்டர் லங்காதிலக ஜயசிங்க நோயாளி மொஹிதீனுக்கு ஏற்பட்ட காயம் முக்கியமாக அவரின் கழுத்தைச் சுற்றியும், தொண்டையிலும் ஏற்பட்டிருந்ததால் பேசக் கூடாது என்று, தான் ஆலோசனை கூறியதாகக் கூறியுள்ளார். இலங்கை யுத்த நிறுத்தக் கண்கானிப்புக் குழு அங்கத்தவர்கள் அம்பாரை வைத்தியசாலைக்குச் சென்றபோது பொலிஸ் அதிகாரி நோயாளி மீராமுஹியத்தீன் இன்னும் இரண்டு வாரங்களுக்குப் பேசமுடியாத நிலையில் உள்ளார் எனக் கூறி அனுமதி மறுக்கப்பட்டது. இப்படியான சூழலில் 2006 செப்டம்பர் 18 ஆம் திகதி திங்கட்கிழமை உயிர்தப்பிய ஒரேஒரு சாட்சி மீராமுஹியத்தீன் எல்.ரி.ரி.ஈ. தான் இந்தப் படுகொலைகளைச் செய்ததாகக் கூறப்படும் வாக்குமூலம் பொத்துவில் முஸ்லிம் பொதுமக்களிடையே பெரும் சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளது.

# 7. கிழக்கு புனர் நிர்மாண மீள்குடியேற்ற நடவடிக்கையில் முஸ்லிம்கள் புறக்கணிப்பு

உயர் நீதிமன்றத்தால் கிழக்கு மாகாணம் வடகிழக்கு ஒன்றிணைப்பிலிருந்து விடுபட்டு அரச இராணுவத்தினரின் பூரணகட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்தவுடன் ஜனாதிபதி மகிந்த இராஜபக்ச தலைமையில் உள்ள யு.பி.எப்.ஏ. அரசாங்கம் மீள்குடியேற்றத்திற்காக பாரிய வேலைத்திட்டத்தை ஆரம்பித்துள்ளது. ஆனால் இந்தப் புனர்நிர்மாண அபிவிருத்தி நடவடிக்கையில் கிழக்கிலங்கை முஸ்லிம் பிரதிநிதிகளில் அனேகர் சேர்த்துக் கொள்ளப்படவில்லை என்பது இங்குள்ள முஸ்லிம்களிடையே ஏற்பட்டுள்ள பாரிய மனக்குறை.

## சட்டவிரோத ஆயுததாரிகளின் முஸ்லிம்களுக்கெதிரான அட்டகாசம்

சட்டத்தையும் ஒழுங்கையும் கிழக்கில் நடைமுறைப்படுத்தும் அதிகாரிகள், சட்டவிரோத ஆயுதம் தாங்கிய பயங்கரவாதிகள் பற்றிச் செய்யப்படும் புகார்கள் பற்றி எதுவித நடவடிக்கையும் எடுக்கத் தவறிவருகின்றனர். முஸ்லிம்களின் காணிகள் அபகரிக்கப்படுவது மட்டுமன்றி இவர்களால் கப்பமும் கோரி அப்பாவிப் பொதுமக்கள் கடத்தப்பட்டுத் துன்புறுத்தப்படுகின்றனர். பெரும்பாலானோர் பொலிஸில் முறையிடுவதையும் தவிர்த்துக் கொள்கின்றனர், காரணம் முறைப்பாடுகள் செய்யப்பட்டதும் முறைப்பாடு செய்தவர்களின் விபரங்கள் வெளியாகி முறைப்பாடு செய்தவர்கள் பயங்கரவாதிகளால் மீண்டும் துன்புறுத்தப் படுகின்றனர்.

## மட்டக்களப்பு மாவட்டம்

மட்டக்களப்பு மாவட்டத்தில் இலங்கை அரசாங்கத்தினதும் மற்றும் வெளிநாட்டு அரசசார்பற்ற நிறுவனங்களின் உதவியுடனும் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் (ரி.எம்.வி.பி.) இயக்கம் சட்டப்படி முஸ்லிம்களுக்குச் சொந்தமான காணிகளில், இடம் பெயர்ந்த தமிழர்களை மீள்குடியமர்த்துவது பெரும் பிரச்சினைகளை தோற்றுவித்துள்ளன.

1985ஆம் ஆண்டு எல்.ரி.ரி.ஈ. தனது கட்டுப்பாட்டிற்குட்பட்ட பிரதேசங்களில் முஸ்லிம்களுக்குச் சொந்தமான குடியிருப்பு, விவசாயம், மற்றும் கால்நடைவளர்ப்புக் காணி 35,000 ஏக்கருக்குக் கூடுதலான பிரதேசத்தைச் சட்டவிரோதமாக கைப்பற்றித் தமிழ் மக்களைக் குடியமர்த்தியது. இந்த அநியாயத்தால் இடம் பெயர்ந்த முஸ்லிம்கள் கடந்த 23 ஆண்டுகளாக சொல்லொணாத் துயரம் அனுபவித்தனர். அரசாங்கம் இன்று இக்காணிகளிலிருந்து எல்.ரி.ரி.ஈ. யினரை வெளியேற்றியபின் கருணாவின் ரி.எம்.வி.பி. அரசாங்கத்தினதும் சர்வதேச அரச சார்பற்ற நிறுவனங்களினதும் உதவியோடு முஸ்லிம்களுக்குச் சட்டப்படி உரித்தான காணிகளில் நிரந்தர வீடுகள், கோயில்கள், பாடசாலைகள் என்பனவற்றை நிறுவி இடம் பெயர்ந்த தமிழர்களை நிரந்தரமாக மீள்குடியேற்றம் செய்கின்றனர்.

## கோறளைப்பற்று மத்தி

உள்நாட்டு அரசாங்க ஆணைக்குழு முஸ்லிம்கள் வரலாற்று வாழ்விடமான, 11 கிராம சேவகரைக் கொண்ட 240 சதுர.கி.மீ. விஸ்தீரணமுள்ள பிரதேசத்தை கோறளைப்பற்று மத்திய பிரதேச செயலாளர்பிரிவு எனப் பிரகடனம் செய்வதாக முடிவு செய்யப்பட்டிருந்தபோதும் இதன் எல்லைகள் இன்னும் நிர்ணயிக்கப்படவில்லை.

மட்டக்களப்பு மாவட்டம் 2,633 சதுர.கி.மீ. விஸ்தீரணம் கொண்ட 14 பிரதேச செயலாளர் பிரிவாகப் பிரிக்கப்பட்டுள்ளது. இதில் நான்கு முஸ்லிம் பெரும்பான்மைப் பிரதேசங்கள் - காத்தான்குடி 3.89 சதுர.கி.மீ., ஏறாவூர் நகரம் 3.74 சதுர.கி.மீ., கோறளைப்பற்று மேற்கு (ஓட்டமாவடி) 6.84 சதுர.கி.மீ., கோறளைப்பற்று மத்தி 6.50 சதுர.கி.மீ. பெரும்பான்மை முஸ்லிம் பிரதேசங்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ள நிலப்பரப்பு மொத்தம் கிட்டத்தட்ட 20 சதுர.கி.மீ. மட்டுமே. இது மொத்த மட்டக்களப்பு மாவட்ட விஸ்தீரணத்தின் 1.0% க்கு குறைவானதே.

ஆனால் இன்றைய மட்டக்களப்பு மாவட்ட முஸ்லிம் சனத்தொகை 30% க்கு கூடுதலாக உள்ளது.

### ஏறாவூர்

ஏறாவூர் முஸ்லிம்களுக்குச் சொந்தமான விவசாய, கால்நடை வளர்ப்பு நிலங்கள் ஏறக்குறைய 12,000 ஏக்கர் காணி பெரும்பாலும் செங்கலடி - பதுளை A5 வீதியை அண்மித்தே உள்ளது. இன்று இங்குள்ள அனைத்துப் பிரதேசங்களும் இலங்கை அரசாங்கத்தின் இராணுவக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டுள்ளது. ஏற்கனவே சட்டவிரோதமாக முஸ்லிம் காணிகளில் குடியேறிய தமிழர்கள் எல்.ரி.ரி.ஈ. பயங்கரவாதிகளை விரட்டியடிக்க அரசாங்கம் எடுத்த நடவடிக்கையினால் இடம் பெயர்ந்த தமிழர்களாக காட்டப்பட்டு முஸ்லிம்களுக்குச் சட்டப்படி உரித்தான காணிகளில் அரசாங்கமும் கருணாவின் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் (ரி.எம்.வி.பி.) இயக்கமும் ஒன்றிணைந்து எடுத்த நடவடிக்கைகளினால் மீளக்குடியமர்த்தப் பட்டுள்ளனர்.

1983, 1985, 1990ஆம் ஆண்டுகளில் 12,700 க்கும் கூடுதலான முஸ்லிம் குடும்பங்களை விரட்டிவிட்டு எல்.ரி.ரி.ஈ. யின் கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவந்த இடங்களில் தமிழர்களைச் சட்டவிரோதமாகக் குடியமர்த்தினர். இந்தச் சட்டவிரோதமாக வெளியேற்றப்பட்ட தொழிலிழந்த முஸ்லிம்களுக்கு அரசாங்கம் எந்தவித நிவாரணமோ நஷ்டஈடோ கொடுக்கவில்லை.

அரச பாதுகாப்புப் படையினர் எல்.ரி.ரி.ஈ. பயங்கரவாதிகளை கிழக்கிலிருந்து வெளியேற்ற நடத்திய யுத்தத்தில் இடம் பெயர்ந்த தமிழர்கள், மீண்டும் சட்டவிரோதமாக ஆக்கிரமித்த முஸ்லிம்களுக்குச் சொந்தமான காணிகள் உள்ள ஐயன்கேணி, மீராகேணி, மிச்சநகர், ஹிதாயத்நகர், தக்வாநகர் ஆகிய இடங்களில் மீள்குடியேற்றப்படுகின்றனர். இதுமட்டுமல்லாமல் கிழக்குப் பல்கலைக்கட்டிடத்துக்காக, 7 கி.மீ. தொலைவில் மீராகேணி என்னும் முஸ்லிம் பகுதியில் 30 ஏக்கர் காணியைச் சுவீகரிப்பதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இது முஸ்லிம்கள் இப்பகுதியில் குடியேறுவதைத் தடுத்து நிறுத்துவதற்கான நடவடிக்கையென இங்குள்ள முஸ்லிம்கள் கருதுகின்றனர்.

### காத்தான்குடி முஸ்லிம் எல்லைக் கிராமங்கள்

ஒல்லிக்குளம், சிகரம், கர்பலா, பாலமுனை, காங்கேயனோடை, கீச்சான்பள்ளம் ஆகிய காத்தான்குடி எல்லைக் கிராமங்களே தமிழர் பெரும்பான்மை ஆரயம்பதிப்பிரதேச சபை எல்லைக்குட்பட்ட முஸ்லிம் பிரதேசங்கள். சுனாமியாலும் எல்.ரி.ரி.ஈ. பயங்கரவாதிகளை வெளியேற்றுவதற்கான அரசபடையினரின் நடவடிக்கையாலும் இடம் பெயர்ந்த தமிழர்கள் தற்காலிகமாக மேற்கூறப்பட்ட கிராமங்களில் முஸ்லிம்களுக்கும் பள்ளிவாசல்களுக்கும் சொந்தமான காணிகளில் குடியமர்த்தப்பட்டனர். ஆனால் இப்போது கருணாவின் ரி.எம்.வி.பி. யும், அரசாங்க இராணுவத்தினரும் ஒன்று சேர்ந்து சர்வதேச அரச சார்பற்ற நிறுவனங்களின் உதவியோடு, தமிழ் பிரதேசங்களிலிருந்து வெளியேறிய தமிழர்களை முஸ்லிம்களுக்கும் பள்ளிவாசல்களுக்கும் சொந்தமான காணிகளில் முஸ்லிம்களின் உரிமையை நிராகரித்துவிட்டு நிரந்தரமாகக் குடியமர்த்துகின்றனர்.

## திருகோணமலை மாவட்டம்

### குச்சவெளி

குச்சவெளி, திருகோணமலை மாவட்டத்தில் ஒரு முஸ்லிம் பெரும்பான்மைக் கிராமம். மொத்த சனத்தொகை 29,967, குடும்ப எண்ணிக்கை 8,058, 65% முஸ்லிம்கள் 19,443, 31% தமிழர் 9,282, 3%, கிறிஸ்தவர் 905, 1%, சிங்களவர் 337. பிரதேச சபையில் 9 அங்கத்தவர்கள், 6 முஸ்லிம்கள், 3 தமிழர்.

### பொதுநிருவாகம்

முஸ்லிம் பெரும்பான்மையாகவுள்ள பிரதேசப் பிரிவுக்கு தமிழர் ஒருவர் பிரதேச செயலாளர்.

மொத்த கிராம சேவகர் 24, 65% முஸ்லிம்களுக்கு 7 பேர் மட்டும், 35% தமிழருக்கும் ஏனையோருக்கும் 17 கிராம நிலதாரி உத்தியோகத்தர்கள். ஒரு தமிழ் கிராம சேவகப் பிரிவின் சராசரிச் சனத்தொகை 250 ஆனால் முஸ்லிம் கிராமசேவகர் பிரிவின் சராசரி சனத்தொகை 1,350 உதாரணம் புல்மோட்டை, இலக்கம் 31I.

**காணிப்பிரச்சினை**

இக்பால் நகர் ஒரு முஸ்லிம் பிரதேசம். இப்பிரதேசத்து முஸ்லிம்கள் இனப்பிரச்சினை காரணமாக 1984, 1990, 1994 காலப்பகுதியில் இடம் பெயர்ந்து திருகோணமலையில் 'லவ்' லேன் என்னும் இடத்தில் குடியேறினர். 2002ஆம் ஆண்டு தங்கள் சொந்த இடங்களுக்கு மீள்குடியேறி இன்று வறுமையால் மிகவும் கஷ்டப்படுகின்றனர்.

இக்பால் நகரில் கிழக்குப்பக்கமாக 250 ஏக்கர் காணியை கிழக்குப் பல்கலைக்கழகம் பலாத்காரமாக ஆக்கிரமித்துக் கொண்டது. தாமரைக்குளம், மதுரைமலைப் பிரதேசங்களில் 50 ஏக்கர் காணி சர்வதேச அரசசார்பற்ற 'ஜய்கா' நிறுவனம் சுனாமியால் பாதிக்கப்பட்டவர்களுக்கு வீடுகட்டுவதற்காகப் பிரதேச செயலாளரால் ஒதுக்கப்பட்டுள்ளது. 185 முஸ்லிம்கள் ஒருவருக்கு 15 பேச்சஸ் விகிதம் கொடுப்பதாக வாக்குறுதி கொடுக்கப்பட்டிருந்தும் மொத்தக் காணியும் தமிழருக்கும், அரச உத்தியோகத்தருக்குமே பகிர்ந்தளிக்கப்பட்டது. இடம் பெயர்ந்த முஸ்லிம்கள் எவருக்குமே இக்காணிகள் கொடுக்கப்படவில்லை.

265 முஸ்லிம் குடும்பங்கள் அகதிகளெனக் கணிக்கப்பட்டிருந்தும் 45 குடும்பங்களை மட்டுமே 'நெஹாப்' தெரிவு செய்தது. ஆனால் தமிழ் அகதிகள் கோணேஷ்புரி, கோபாலபுரம், கும்பிறுப்பிட்டி, இறணைகேணி, திரியை ஆகிய இடங்களில் குடியமர்த்தப்பட்டனர்.

**வீதி**

புல்மோட்டை 6ஆவது கட்டையிலிருந்து ஆரம்பிக்கப்பட்ட வீதி புனரமைத்தல் வேலை வீணாகத் தாமதிக்கப்படுகிறது.

**பாடசாலைகள்**

புல்மோட்டை, அறபாத்நகர், ஜின்னாநகர் ஆகிய இடங்களில் உள்ள பாடசாலைகளே மிகவும் கூடுதலாகப் பாதிக்கப்பட்டவை. இருந்தாலும் குச்சவெளியில் இருக்கும் சிங்களப்பாடசாலைகளே மிகவும் கூடுதலாகப் பாதிக்கப்பட்டவை எனக் கணிக்கப்பட்டு நிதி மற்றும் தளபாடங்கள் ஒதுக்குவதில் முன்னுரிமை வழங்கப்படுகிறது.

**மீள்குடியேற்றம்**

அடிப்படை வசதிகளான வசிப்பிடம், மின்சாரவசதி, மலசலகூடம், நடைபாதை ஆகியன அகதிகள் குடியிருக்கும் பட்டிக்குடா, பொன்மலைக்காடு, வீரன்தீவு, தேத்தாவடித்தீவு, கரவெளி, சதாம்நகர் 'நெஹாப்' இலக்கம் 31J, 31G, 31H, 31L கிராமங்கள் புறக்கணிக்கப்பட்டுள்ளன.

# 8. கிழக்கு மாகாணத்தைச் சிங்களமயமாக்கத் துரித நடவடிக்கை

'நவபஞ்ச பலவேகய' கிழக்கு மாகாணத்தை சிங்கள மயமாக்கும் திட்டத்தில் மிகவும் தீவிரமாக ஈடுபட்டு வருகிறது. இத்திட்டத்திற்கு அதிஉயர்பீடத்தின் பூரண ஆதரவும் பௌத்த குருமார் சிலரினதும், பாதுகாப்புப் படையினர், நிருவாக அதிபர்கள், வர்த்தகப் பிரமுகர்கள் மற்றும் அரசியல் அதிகாரிகளினதும் பெருமளவு ஆதரவுமுண்டு.

இவர்களின் குறிக்கோள் அதிவிரைவில் சிங்கள மக்களைக் கிழக்கு மாகாணத்தில் ஆகக்கூடிய இனத்தவராக்குவதுதான். இந்த மறைமுகமான திட்டம் அரச உதவியோடுகூடிய திட்டமிட்ட குடியேற்றம், உல்லாசப் பிரயாணம், பௌத்தமத மறுமலர்ச்சி ஆகியவற்றினை நோக்கமாகக் கொண்ட அபிவிருத்தித் திட்டங்கள், அட்டாளைச்சேனைப் பிரதேச சபைப் பிரதேசத்தில் ஒலுவில் துறைமுகம், தென்கிழக்குப் பல்கலைக்கழகம் உட்பட தீகவாபி பிரதேசத்தையும் உள்ளடக்கியதாகப் புதிதாக ஒரு பிரதேசசபையை ஏற்படுத்தி இப்பிரதேசத்தில் சிங்களவரைக் குடியேற்றல், அம்பாரை திருகோணமலை மாவட்டங்களிலும் தொப்பிகல (குடும்பிமலை) பிரதேசத்தில் விவசாயத்தை அடிப்படையாகக் கொண்ட அபிவிருத்தித் திட்டங்கள் மட்டக்களப்பு மாவட்டத்திலும் உடனடியாக ஆரம்பித்து சிங்களமக்கள் அதிகப்படியாக வரக்கூடிய குடிசன மாற்றத்தை ஏற்படுத்தல் மிக மும்முரமாக நடைபெற்று வருகிறது.

## 1949 - 1981 காலப்பகுதியில் ஏற்பட்ட குடிசன அதிகரிப்பு

தமிழர் சனத்தொகை 136,059 இல் இருந்து 411,451 ஆக 302% அதிகரிப்பும், முஸ்லிம் சனத்தொகை 109,074 இல் இருந்து 315,201 ஆக 289% அதிகரிப்பும், சிங்களச் சனத்தொகை 27,556 இல் இருந்து 243,350 ஆக 883% அதிகரிப்பும் ஏற்பட்டது. இக்காலகட்டத்தில் இலங்கையில் சிங்களச் சனத்தொகை அதிகரிப்பு சராசரி 289% மட்டுமே. இப்படியான திடீரென அதிகரித்த சிங்களச் சனத்தொகைக்கு கல்ஓயா, பன்னல்ஓயா, அம்பலம்ஓயா, (அம்பாரை மாவட்டம்) கந்தளாய், அல்லை, மொறவெவ, முதலிக்குளம், பதவிய (பதவி), மகாதியலுவெவ, (திருகோணமலை மாவட்டம்) ஆகிய திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்களே காரணம்.

## பாரிய அபிவிருத்தித் திட்டம்

திருகோணமலை நகரத்தையும் சுற்றியுள்ள பிரதேசங்களையும் ஒன்றிணைக்கும் மாபெரும் அபிவிருத்தித் திட்டம் ஒன்று ஆரம்பிக்கப் பட்டுள்ளது. கப்பல்துறை பொருளாதார அபிவிருத்தி வலயம் திருகோணமலையில் அமைய இருக்கும் ஒரு விஷேட திட்டமாகும். முதல் கட்டம் ரூபா. 4,250 மில்லியன், இரண்டாவது கட்டம் ரூபா. 2,600 மில்லியன் இவை 2015ஆம் ஆண்டளவில் பூர்த்தியடையும். இதைவிடக் கப்பல்துறையில் ஒரு சிறிய நடுத்தர அபிவிருத்தி வலயமும் ஏற்படுத்தப்படும் முதல் கட்டம் ரூபா. 500 மில்லியன் இரண்டாவது கட்டம் ரூபா. 1,000 மில்லியன். இது 2008ஆம் ஆண்டு நிறுவப்படும்.

ஒரு புதிய நிருவாகச் செயலகம் ரூபா. 300 மில்லியன் செலவில் 2008ஆம் ஆண்டில் ஏற்படுத்தப்படும் ஒரு புதிய மீன்பிடித்துறைமுகம் ரூபா. 1,000 மில்லியன் செலவில் புடவைக்கட்டில் 2010ஆம் ஆண்டு நிறுவப்படும். ஒரு புதிய நகர அபிவிருத்தித் திட்டமும் சீனக்குடா ஆண்டான்குளத்தில் ரூபா. 1,500 மில்லியன் செலவில் ஏற்படுத்தப்படும்.

உப்பு வெளியையும் ஈச்சிலம்பத்தையும் ஒன்றிணைக்கும் ஒரு பாரிய வீதி (றோட்டு) அபிவிருத்தித் திட்டம் ரூபா. 10.3 பில்லியன் செலவில் 2010ஆம் ஆண்டளவில் நிருமாணிக்கப்படும். உத்தேசிக்கப்பட்டுள்ள வெளிவட்டப்பாதை சேருவில சிங்களப் பிரதேசத்துக்கூடாகச் செல்லும். இது திருகோணமலை வடக்கில் அமைக்கப்பட்டுள்ள புதியபாதையின் தொடர்ச்சியாகும். இரண்டு சுற்றுலாக் கிராமங்கள் 2010ஆம் ஆண்டளவில் அமைக்கப்படவிருக்கிறது. இவை நிலாவெளியிலும் வெருகலிலும் ரூபா. 800 மில்லியனும் ரூபா. 1,750 மில்லியன் செலவில் ஏற்படுத்தப்படும்.

இந்தியாவின் உதவியுடன் ஏற்படுத்தவிருக்கும் அனல் மின்சார உற்பத்தி நிலையம் அடுத்த முக்கியமான செயல்திட்டமாகும். இந்த இருகட்ட வேலை ஒவ்வொன்றும் அமெரிக்க டொலர் 500 மில்லியன் செலவில் 2010ஆம் ஆண்டு பூர்த்தியடையும். ஆரம்பத்தில் இது கப்பல்துறையில் நிறுவுவதாக உத்தேசிக்கப்பட்டது. ஆனால் சம்பூரில் அமையவேண்டும் எனக் கொழும்பு கேட்டுக் கொண்டது. எனினும் புதுடெல்லி கப்பல்துறையில் தான் நிறுவப்பட வேண்டும் என்பதில் உறுதியாகவுள்ளது.

எதிர்காலத்தில் சிங்களமயமாக்கலுக்கான களவேலைகள்யாவும் மிகவும் புத்திசாலித்தனமாகத் திட்டமிடப்பட்டுள்ளன. வீதி அபிவிருத்தி அதிகார சபையினால் திருகோணமலையில் உள்வட்ட வெளிவட்டப்பாதைகள் நிர்மாண வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. உள்வட்டப்பாதை திருகோணமலை - நிலாவெளி - புல்மோட்டை றோட்டில் ஆத்திமோட்டையை கிண்ணியாவோடு ஏ12 (புத்தளம்-அநுராதபுரம்-திருகோணமலை வீதி) 189வது கி.மீ. கனு ஏ6 (கண்டி-ஹபரண-திருகோணமலை வீதி) யில் இணைக்கப்படும்.

## ஒழுங்காகத் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றம்

திட்டமிட்ட வெளிவட்ட வீதி திருகோணமலை-நிலாவெளி-புல்மோட்டை ஏ12 வீதியில் பன்குளத்தடியில் ஏ6 வீதியை கந்தளாய்க்கும் தம்பலகாமத்திற்கும் இடையில் குறுக்கறுத்து இலங்கைத் துறை முகத்துவாரத்திலிருந்து சம்பூர்வரை தொடரும்.


நிர்மாண வேலைகள் இலங்கை இராணுவத்தினரால் கையாளப்படுகிறது திருகோணமலை ஆர்.டி.ஏ. பிரதான பொறியியலாளர் இலங்கை இராணுவத்தோடு மிகவும் நெருக்கமாக இணைந்து செயல்படுகிறார். திட்டமிடல் மற்றும் நிர்மாண அமைப்புமுறைகள்யாவும் கொழும்பில் நடைபெறுகிறது. மட்டக்களப்பில் உள்ள ஆர்.டி.ஏ. மாகாண இயக்குனர் இரண்டுவட்ட வீதி பற்றி எதுவும் தெரியாமல் இருட்டிலேயே இருக்கிறார்.

## ஏ6 இற்கும் ஏ12 இற்கும் இந்த வட்ட வீதியின் இடையில் சிங்கள மக்கள் குடியேறுவதற்கு எல்லா ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளன

கிழக்கு மாகாண சிங்களமயமாக்கல் திட்டம் 2006 ஒக்டோபரில் ஒன்றிணைந்த வடகிழக்குப் பிரிபட்டதும் கிழக்கிலங்கை நிர்வாகம் இனரீதியாக மாற்றமடைந்து வருகிறது. முன்னாள் திருகோணமலை அரசாங்க அதிபர்களான றொட்றிகோ, நெலுந்தெனிய ஆகியோர் முறையே முதற் செயலாளராகவும், பொதுநிர்வாகச் செயலாளராகவும் பதவியேற்றுள்ளனர். முன்னாள் மாத்தளை அரசாங்க அதிபர் உடகே இப்போது மாகாண பொது நிர்வாகசேவை ஆணைக்குழுவின் செயலாளர். மேலும் பல முன்னாள் இராணுவ அதிகாரிகள் முக்கிய பதவிகளில் நியமிக்கப் பட்டிருக்கின்றனர். றெயா அட்மிறல் மோகன் விக்ரம கிழக்கு மாகாண ஆளுனராவார். மேஜ ஜெனரல் ரன்ஜித் சில்வா அரசாங்க அதிபர். புனரமைப்பு ஒருங்கிணைப்பாளராக மேஜ ஜெனரல் அமரதேவ. கப்டன் பட்றிக் ஜயசிங்க ஆளுனரின் செயலாளர்.


முன்னாள் இராணுவ உத்தியோகத்தர்கள் நிருவாகப் பதவிகளுக்கு நியமிக்கப் படுவதை, நிர்வாகசேவை அங்கத்தவர்கள் மிகவன்மையாக விமர்சித்துள்ளனர். இருப்பினும் ஓய்வுபெற்ற இராணுவ உத்தியோகத்தரும் நிர்வாக உத்தியோகத்தவர்களும் ஒன்றிணைவது கிழக்கிலங்கை சிங்கள மயமாகுவதற்கு மிகவும் உறுதுணையாக அமையும்.

# 9. கல்முனை கரையோர நிருவாக மாவட்டம்




| இல. | டி.எஸ். பிரிவு | மொத்த சனத்தொகை 2007 | மாவட்ட % | உள்ள காணி விஸ்தீரணம் ச.கி.மீ | உரித்தான காணி விஸ்தீரணம் ச.கி.மீ | சிங்களவர் | | முஸ்லிம்கள் | | தமிழர் | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | % | | % | | % |
| | பாணமபற்று | | | | | | | | | | |
| 01 | லஹுகல | 8259 | 1.93 | 616.87 | 44.26 | 7500 | 90.8 | - | - | 758 | 9.2 |
| 02 | பொத்துவில் | 33625 | 7.86 | 367.50 | 180.21 | 667 | 2.0 | 26493 | 78.8 | 6444 | 19.2 |
| | அக்கரைப்பற்று | | | | | | | | | | |
| 03 | திருக்கோவில் | 24972 | 5.83 | 190.65 | 133.84 | 27 | 0.1 | - | - | 24934 | 99.8 |
| 04 | ஆலயடிவேம்பு | 22289 | 5.21 | 127.50 | 119.46 | 142 | 0.6 | 42 | 0.2 | 22085 | 99.1 |
| 05 | அக்கரைப்பற்று | 37070 | 8.66 | 102.18 | 198.68 | 119 | 0.3 | 36864 | 99.4 | 79 | 0.2 |
| 06 | அட்டாளைச்சேனை | 39721 | 9.28 | 52.50 | 212.88 | 1967 | 5.0 | 37349 | 94.0 | 404 | 1.0 |
| | நிந்தவூர்-கரவாகுப்பற்று | | | | | | | | | | |
| 07 | நிந்தவூர் | 25652 | 5.99 | 55.62 | 137.48 | 9 | 0.0 | 24506 | 95.5 | 1129 | 4.4 |
| 08 | காரைதீவு | 16656 | 3.89 | 31.25 | 89.27 | 23 | 0.1 | 6534 | 39.2 | 10098 | 60.6 |
| 09 | சாய்ந்தமருது | 25147 | 5.88 | 66.87 | 546.97 | 3 | 0.0 | 25144 | 100.0 | - | - |
| 10 | கல்முனை | 42852 | 10.01 | | | 48 | 0.1 | 42689 | 99.6 | 115 | 0.3 |
| 11 | கல்முனை தமிழ் | 29025 | 6.78 | | | 248 | 0.9 | 1957 | 6.7 | 26818 | 92.4 |
| | சம்மாந்துறைபற்று | | | | | | | | | | |
| 12 | நாவிதன்வெளி | 18436 | 4.31 | 256.70 | 490.65 | 61 | 0.3 | 6026 | 32.7 | 12349 | 67.0 |
| 13 | சம்மாந்துறை | 55592 | 12.99 | | | 81 | 0.1 | 48566 | 87.4 | 6939 | 12.5 |
| 14 | இறக்காமம் | 13006 | 3.04 | | | 759 | 5.8 | 11948 | 91.9 | 296 | 2.3 |
| | வெவகம்பற்று தெற்கு | | | | | | | | | | |
| 17 | தமண | 35705 | 8.34 | 426.25 | 191.36 | 35560 | 99.6 | 116 | 0.3 | 16 | 0.0 |
| | மொத்தம் | **428007** | **100.00** | **2293.89** | **2345.06** | **47214** | 11.0 | **268234** | 62.7 | **112464** | 26.3 |

1961 ஆம் ஆண்டு அம்பாறை மாவட்டம் ஏற்படுத்துவதற்கு முன்பு மட்டக்களப்புத் தென்பகுதி இன்றுள்ள அம்பாரைப்பிரதேச செயலாளர் பிரவு உட்டபட்ட தனியான ஒரு உப அரசாங்க அதிபர் தலைமையிலான நிருவாக மத்திய நிலையமாகக் கல்முனை இருந்தது. வடக்கில் மருதமுனைப் பெரிய நீலவணை தொடக்கம் தெற்கில் பாணமைக் குமண வரையில் உள்ள கிழக்குக் கரையோரப் பிரதேசத்தில்தான் நூற்றுக்குத் தொண்ணூறு வீதத்திற்கும் கூடுதலான மக்கள் இருந்தனர் அம்பாறை மாவட்டம் ஆரம்பமானதன்பின் மூன்றில் இரண்டு பகுதிக்கும் கூடுதலான தமிழ்பேசும் மக்கள் இப்பிரதேசத்தில் வாழ்கின்றனர். அரசாங்க நிருவாகக் கச்சேரி கரையோரப்பிரதேசத்திலிருந்து 25 கி.மி. தூரத்தில் சிங்களவர் வாழும் பிரதேசத்தில் நிறுவப்பட்டுள்ளது. அரசியல் சாசனத்தில் 22(1) பிரிவில் கிழக்கு மாகாண பிரதான நிருவாக மொழி தமிழ் என்று கூறப்பட்ட பொழுதும், அம்பாரைக்கச்சேரியின் பிராதான நிருவாக மொழி சிங்களமாக உள்ளது. முஸ்லிம்கள் பெரும்பான்மையாக உள்ள அம்பாரை மவட்டத்திற்கு இற்றைவரை ஒரு தமிழ் பேசும் முஸ்லிம் அரசாங்க அதிபராக நியமிக்கப்படவில்லை.




| இல. | டி.எஸ். பிரிவு | மொத்த சனத்தொகை 2007 | மாவட்ட % | உள்ள காணி விஸ்தீரணம் ச.கி.மீ | உரித்தான காணி விஸ்தீரணம் ச.கி.மீ | சிங்களவர் | | முஸ்லிம்கள் | | தமிழர் | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | **2007** | % | **2007** | % | **2007** | % |
| | பிந்தனபற்று | | | | | | | | | | |
| 18 | தெஹியத்தகண்டி | 55930 | 9.16 | 432.50 | 406.01 | 55716 | 99.6 | 116 | 0.2 | 87 | 0.2 |
| 19 | பதியதலாவ | 16451 | 2.69 | 466.37 | 119.42 | 16365 | 99.5 | 50 | 0.3 | 28 | 0.2 |
| 20 | மஹஓய | 17801 | 2.91 | 600.00 | 129.22 | 17753 | 99.7 | 36 | 0.2 | 12 | 0.1 |
| | **Total** | **90182** | **14.7665** | **1498.87** | **654.65636** | **89834** | 99.6 | **202** | 0.2 | **127** | 0.1 |

பழைய இறைவரி உத்தியோகத்தர் பிரிவு (டி.ஆர.ஓ.பிரிவு) முறையில் முஸ்லிம்கள் பெரும்பான்மையாகவுள்ள பாணமைப்பத்து, அக்கரைப்பற்று, நிந்தவூர்-கரவாகுப்பற்று, சம்மாந்துறைப்பற்று, சிங்களவர் பெரும்பான்மையான வெவகம் பற்றும் இருந்தன. 1959 ஆண்டின் தேர்தல் தொகுதி நிருணய அதிகார சபை ஊவாமாகாணத்தின் மொணறாகலை மாவட்டத்தில் ஒருபகுதியாகவிருந்த பிந்தனைப்பற்று டி.ஆர்.ஒ. பிரிவுக்குட்பட்ட பிரதேசத்தை மட்டக்களப்பு டி.ஆர.ஒ பிரிவிலிருந்து பிரிந்த அம்பாரை மாவட்டத்தோடு சேர்க்கப்படாதிருந்தால் இனவிகிதாசாரம் முஸ்லிம்கள் 51.1% சிங்களவர் 26.7% தமிழர் 21.6% என்ற நிலையில் இருக்கும் தமிழ்பேசும் மக்களின் குடிசன விகிதாசாரம் 74% அமையும்.

சுதந்திரத்திற்குப்பின், நிருவாகப்பிரிவுகள் உதவி அரசாங்க பிரிவுகளாக மாற்றப்பட்டபோது கிழக்கு மாகாணத்தில் முஸ்லிம் பெரும்பான்மை நிருவாகப்பிரிவுகளின் எல்லைகள் குடியிருப்புப் பிரதேசங்களுக்கு மட்டுப்படுத்தப்பட்டன. பெரும்பகுதி விவசாய, கால்நடை, மீன்பிடிப்பிரதேசங்கள் முஸ்லிம் பெரும்பான்மைப் பிரதேசங்களிலிருந்து பிரித்தெடுக்கப்பட்டு, அதன்பின் அரசாங்கத்தால் புதிய நிருவாகப்படங்கள் வரையப்பட்டு சிங்களப் பிரதேசங்களாக்கப்பட்டுள்ளன.

இன்றுள்ள சிங்களப் பெரும்பான்மை லஹுகல பிரதேச செயலகப்பிரிவு முஸ்லிம் பெரும்பான்மை பாணமைப்பற்று டி.ஆர்.ஒர் பிரிவின் ஒருபகுதி. 1981 ஆம் ஆண்டு சனத்தொகைக் கணக்குப்படி சிங்களப் பெரும்பான்மை லாகுகல உதவி அரசாங்க அதிபர் பிரிவு சனத்தொகை 6,252 இதற்கு ஒதுக்கப்பட்ட காணி 380 சதுரமைல் எஞ்சிய முஸ்லிம் பெரும்பான்மைப் பொத்துவில் உதவி அரசாங்க அதிபர் பிரிவு சனத்தொகை 20,152 இதற்கு ஒதுக்கப்பட்டுள்ள காணி 116 சதுரமைல் மட்டுமே.

பழைய சம்மாந்துறை டி.ஆ.ஓ பிரிவுப்பிரதேசம் மேற்கு எல்லைக்கு அப்பால் உள்ள கொண்டவெட்டுவான், அம்பாரைக்குளம் அம்பாறை மாநகரப்பிரதேசம் உஹனையை அண்மித்த கோமாரி, அத்தோடு வரிப்பதன் சேனையிலும் ஒருபகுதியையும் உள்ளடக்கியதாக இருந்தது. இதில் ஏறக்குறைய 65 சதுரமைல் பிரதேசம் பிரித்தெடுக்கப்பட்டு வெவகம் பற்று டி.ஆர.ஓ. பிரிவோடு சேர்க்கப்பட்டுள்ளது.

1955 ஆம் ஆண்டின் நிருவாக மாவட்ட சட்டம் இலக்கம் 22 இல் விபரிக்கப்பட்ட பின் வரும் 20 நிருவாக மாவட்டம் ஏற்படுத்தப்பட்டு ஒவ்வொன்றுக்கும் தனித்தனி மாவட்ட அதிபர்களும் நியமிக்கப்பட்டனர். கொழும்பு, கழுத்துறை, கண்டி, மாத்தளை, நுவரெலிய, காலி, மாத்தறை, ஹம்பாந்தோட்டை, யாழ்ப்பாணம், மன்னார், வவுனியா, மட்டக்களப்பு, திருகோணமலை, குருநாகல, புத்தளம், அனுராதபுரம், பொலன்னறுவ, பதுளை இரத்தினபுரி, கேகாலை, கடந்த பலதசாப்தங்களாக மொணராகலை (1959) அம்பாரை (1961) கம்பகா (1978) முல்லைத்தீவு (1997) கிளிநொச்சி (1984) ஆகிய மாவட்டங்கள் ஏற்படுத்தப்பட்டன. இதன்பிரகாரம் காலத்துக்காலம் எல்லைகள் மாற்றப்பட்டுப் புதுப்புது மாவட்டங்கள் ஏற்படுத்தப்பட்டதற்கான அத்தாட்சிகள் உள்ளன. புதிதாகக் கல்முனைக் கரையோர மாவட்டம் ஏற்படுத்தப்படுவதால் ஒருதலைப்பட்சமாக புதிதாகக் குடியமர்த்தப்பட்ட சிங்களவரின் நலனுக்காக மட்டும் ஏற்படுத்தப்பட்ட அம்பாரை மாவட்டத்தினால் ஏற்பட்ட அநீதி நீக்கப்படுவது மட்டுமல்லாமல் கல்முனைக்கரையோரப்பிரதேசத்தில் வாழும் பெரும்பான்மை முஸ்லிம்களும், தமிழர்களும் அரசாங்க நிருவாகத்துக்காக நாள்தோறும் அனுபவித்து வரும் போக்கு வரத்துப் பிரச்சினைகளுக்கும் நிவாரணம் ஏற்படும்.

புதிய அம்பாரை கரையோர நிருவாக மாவட்டம்.

1. முன்னர் இருந்த டி.ஆர்.ஓ. பிரிவுகளான பாணமைப்பற்று, அக்கரைப்பற்று, நிந்தவூர்-கரவாகுப்பற்று, சம்மாந்துறைப்பற்று, வெவகம் பற்று ஆகிய பிரதேசங்களை உள்ளடக்கிய பிரதேசம் – 2934.51 ச.கிமீ. சனத் தொகை 2007 குடிசன மதிப்புப்படி 518,537 – முஸ்லிம்கள் 268,566 – 51.7%, சிங்களவர் 139,104 – 26.7%, தமிழர் 112,729 – 21.6%.
2. சனத் தொகைக்கேற்றவாறு காணிநிலம், இயற்கை வளங்களை உள்ளடக்கிய பிரதேச செயலகங்களின் எல்லைகள் மறுசீர் அமைக்கப்படவேண்டும்.
3. புதிதாக ஏற்படுத்தப்படும் பிரதேச செயலாளர் பிரிவுகள் பிரதேச அரசியல் சபைகளாகக் கணிக்கப்படவேண்டும்.

# 10. சட்டவிரோதமாக அபகரிக்கப்பட்ட கிழக்கிலங்கை முஸ்லிம்களின் காணிகள்

தமிழர்கள் கிழக்குமாகாணத்தில் முஸ்லிம்கள் விவசாயம் செய்துவந்த 63,000 ஏக்கர் காணியை சட்டவிரோதமாக அபகரித்துள்ளனர். தமிழ் முஸ்லிம் தலைவர்களின் கோரிக்கைப்படி இக்காணிகளின் விபரம் முஸ்லிம் உரிமைகள் மன்றத்தினால் சேகரிக்கப்பட்டிருக்கிறது. இக்காணிப்பிரச்சினை சுமுகமாகத் தீர்க்கப்பட்டு முஸ்லிம்களின் காணிகள் மீள ஒப்படைக்கப்படுமானால் கிழக்கில் வாழும் தமிழர் முஸ்லிம்களுக்கிடையில் நிலவும் விரோதம் பெருமளவு குறைந்து 15,000 குடும்பங்களைச் சேர்ந்த 60,000 ஆண், பெண் பிள்ளைகளுக்கிடையில் சாந்தியும் சமாதானமும் ஏற்பட வழிபிறக்கும்.

**கிழக்கு மாகாணத்தில் தமிழர்களால் சட்டவிரோதமாக ஆக்கிரமிக்கப்பட்டுள்ள முஸ்லிம்களுக்குச் சொந்தமான காணிகளின் விபரம்**

**அம்பாறை மாவட்டம்**

| | முஸ்லிம் பிரதேசம் | குடும்ப எண்ணிக்கை | ஏக். | விஸ்தீரணம் ரூ. | பே. |
|---|---|---|---|---|---|
| 1 | பொத்துவில் | 730 | 2,592 | 3 | - |
| 2 | அக்கரைப்பற்று | 660 | 1,785 | 3 | 23 |
| 3 | அட்டாளைச்சேனை | 329 | 1,072 | 3 | 34 |
| 4 | ஒலுவில்-பாலமுனை | 176 | 559 | 1 | 30 |
| 5 | நிந்தவூர் | 583 | 2,349 | - | 10 |
| 6 | சம்மாந்துறை | 529 | 2,513 | - | 22 |
| 7 | இறக்காமம் | 428 | 2,092 | - | 32 |
| 8 | கல்முனை | 280 | 1,433 | 1 | 33 |
| 9 | மருதமுனை | 496 | 2,365 | 1 | 30 |
| | **மொத்தம்** | **4,211** | **16,764** | **1** | **14** |

**மட்டக்களப்பு மாவட்டம்**

| | முஸ்லிம் பிரதேசம் | குடும்ப எண்ணிக்கை | ஏக். | விஸ்தீரணம் ரூ. | பே. |
|---|---|---|---|---|---|
| 1 | காத்தான்குடி | 449 | 4,231 | 1 | 12 |
| 2 | ஏறாவூர் | 2,263 | 12,784 | 3 | 34 |
| 3 | ஓட்டமாவடி | 1,856 | 8,710 | 1 | 37 |
| 4 | வாழைச்சேனை | 907 | 3,086 | 1 | 30 |
| | **மொத்தம்** | **5,475** | **28,813** | **-** | **33** |

**திருகோணமலை மாவட்டம்**

| | முஸ்லிம் பிரதேசம் | குடும்ப எண்ணிக்கை | ஏக். | விஸ்தீரணம் ரூ. | பே. |
|---|---|---|---|---|---|
| 1 | கிண்ணியா | 2,252 | 7,209 | 2 | 6 |
| 2 | மூதூர் | 992 | 2,577 | - | 36 |
| 3 | தோப்பூர் | 912 | 4,617 | 2 | 17 |
| 4 | புல்மோட்டை | 566 | 1,344 | 3 | 25 |
| 5 | மொறவெவ-குச்சவெளி | 464 | 1,343 | 1 | 22 |
| | **மொத்தம்** | **5,186** | **17,092** | **2** | **26** |

| கிழக்கு மாகாணம் | குடும்ப எண்ணிக்கை | ஏக். | விஸ்தீரணம் ரூ. | பே. |
|---|---|---|---|---|
| **மொத்தம்** | **14,872** | **62,670** | **-** | **33** |

வருடாந்தம் புதுப்பிக்கும் தற்காலிக அனுமதிப்பத்திரத்துடனும் விவசாயக் காணிப்பதிவுப் பத்திரத்துடனும் பல வருடங்களுக்குக் கூடுதலான காலமாக விவசாயம் செய்துவரும் காணிகளுக்கு உடனடியாக உறுதிகள் பெறுவதற்குச் சம்பந்தப்பட்டவர்கள் உடனடியாக முன்வர வேண்டும்.

**ரகூல் நம்பிக்கை நிறுவனக் காணிகள்**

பொத்துவில், கோமாரி "ரிமிட்டர்" தோட்டம் - 444 ஏக்கர் 1றூட்டு 34பர்சச், முஸ்லிம் மகளிர் கல்லூரி, முஸ்லிம் கல்வி சகாய நிதியம், சோனக கலாசார நிலையம், பரீத் அம்மையார் வயோதிப இல்லம், இலங்கை முஸ்லிம் லீக், திருகோணமலை சோனகவீதிப் பள்ளிவாசல், திருகோணமலை பெரியகடை அரபிக் பாடசாலை ஆகிய முஸ்லிம் சமய கலாசார நிறுவனங்களுக்கு நன்கொடையாக கொடுக்கப்பட்டு நீதிமன்ற வழக்கு இல 304/T தீர்ப்புப்படி அரசாங்க பொது உடமை பராமரிப்புத் திணைக்களத்தினால் நிருவகிக்கப்பட்டு வந்த காணிகள் தமிழ் பயங்கரவாதிகளால் சட்டவிரோதமாக ஆக்கிரமிக்கப்பட்டுள்ளது. இக்காணிகள் உடனடியாக மீட்டெடுக்கப்பட்டு சட்டப்படி உரிய சொந்தக்காரர்களிடம் ஒப்படைக்கப்பட வேண்டும்.

**வடகிழக்கு விவசாயக் காணி சம்பந்தமாகக் கற்றுகொண்ட பாடங்களும் நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகள்.**

**அத்தியாயம் 9**

**பந்தி 9.144** **கிழக்கில் குழப்பங்கள் முடிவுக்கு வந்து ஏறக்குறைய 04 வருடங்கள் கடந்தபின்பும் LTTEனால் கிழக்கு மகாண விவசாயக் காணிகளிலிருந்து பலாத்காரமாக வெளியேற்றப்பட்டதனால் மிகமோசமாகப் பாதிக்கப்பட்ட முஸ்லிம் குடும்பங்களின் வாழ்வாதார நடவடிக்கைகள் குறிப்பாக மட்டக்களப்பு மாவட்டத்தில் மிகவும் குறைந்த அளவில் நடைபெற்று வருவதனால் உடனடியாக ஆக்கபூர்வ நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.**

**பந்தி 9.148** **கலவரக் காலத்தில் வடக்கிலும் கிழக்கிலும் தனியாருக்குச் சொந்தமான காணிகளிலிருந்து பலவந்தமாக வெறியேற்றப்பட்டதையும் இரண்டாம் முறையாக உரிமை கோருவதையும், உரிமை மாற்றம்/ஆளுமை ஆகியவற்றை நியாயப்படுத்தும் சட்டங்கள் திருத்தப்பட வேண்டும்.**

**கிழக்கு மாகாண பொதுமக்கள் எதிர்நோக்கும் காணிப் பிரச்சினைகளை விசாரணை செய்து அவற்றுக்கான ஒழுங்கு முறையான தீர்வுகளைக் காண்பதற்கென விசாரணைக்குழுக்கள் நியமிக்கப்பட்டுள்ளதாகவும், இவ்விசாரணைக்குழு மூலமாக பொதுமக்கள் நீண்டகாலமாக எதிர்நோக்குகின்ற காணிப் பிரச்சினைகள் தொடர்பாக தீர்வு காணப்படவுள்ளதாகவும் மாகாண காணி ஆணையாளர் அன்மையில் வெளியிட்ட அறிக்கையில் தெரிவித்துள்ளார்.**

# *11.* 2004 டிசம்பர் 26 'சுனாமி' கடற்பேர் அழிவு

**இலங்கைக்கரையோரத்தைக் காவுகொண்ட 'சுனாமி' கடற் பேர்அலை ஏறக்குறைய 30,000 உயிர்களைப் பலிகொண்டது. இந்த அனர்த்தத்தில் கிழக்கிலங்கை முஸ்லிம்களே படுமோசமான பாதிப்புக்குள்ளானவர்கள். பாதிக்கப்பட்ட முஸ்லிம்கள் விபரம்,**

| மாவட்டம் | இடம்பெயர்ந்த குடும்பம் | மக்கள் | இறந்தவர் | காயப்பட்டவர் | காணாமற் போனவர்கள் | பாதிப்புக்குள்ளானவீடு முற்றாக | பகுதியாக |
|---|---|---|---|---|---|---|---|
| அம்பாரை | 32,117 | 128,469 | 7,492 | 2,321 | 2,418 | 16,750 | 18,421 |
| மட்டக்களப்பு | 12,122 | 48,316 | 105 | 455 | 94 | 2,298 | 3,259 |
| திருகோணமலை | 8,492 | 33,968 | 848 | 2,850 | 282 | 4,160 | 7,850 |
| **மொத்தம்** | **52,731** | **210,753** | **8,445** | **5,626** | **2,794** | **23,208** | **29,530** |

**படுமோசமாகப் பாதிக்கப்பட்டுள்ள அம்பாரை மாவட்டத்தில் மரணித்தவர்களில் 50% சிறுபிள்ளைகள். முஸ்லிம்களுக்கேற்பட்ட பாதிப்புபற்றி உள்நாட்டு வெளிநாட்டு ஊடகங்கள் புறக்கணிப்பு மேற்கொண்டன. சுனாமியால் பாதிக்கப்பட்ட முஸ்லிம்கள் விடயத்தில் அரசாங்கம்கூட நியாயப்படி நடந்துகொள்ளவில்லை. பாதிக்கப்பட்ட ஆயிரக்கணக்கான முஸ்லிம்கள் உணவு, உடை, மருந்து, அடிப்படை வசதிகள் அற்றவர்களாக அகதிமுகாம்களில் சொல்லொணாத் துயருக்குள்ளாகினர். சுனாமியால் பாதிக்கப்பட்ட அனேகமான முஸ்லிம்கள் தங்கள் சொந்த இடங்களில் மீள்குடியேறுவதையும் அரசாங்க அதிகாரிகள் தடுத்து நிறுத்துகின்றனர்.**

கடற்கரையிலிருந்து 200 மீட்டருக்குட்பட்ட முஸ்லிம் பிரதேசங்களில் ஏற்பட்ட பாதிப்புவிபரம்

**பாதிக்கப்பட்ட கிழக்கு மாகாணக் கரையோர முஸ்லிம் பிரதேசங்கள் - (கடற்கரையிலிருந்து 200மீட்டர்)**

| கிராமம் | குடும்பம் | வியாபாரிகள் | கூலியாட்கள் | வைத்தியர் | சாரதிகள் | விவசாயிகள் | கடற் தொழிலாளர் | அரசாங்க உத்தியோகத்தர் | கைதேர்ந்த வேலையாட்கள் | தையல்காரர் | ஆசிரியர்கள் | நெசவுத் தொழிலாளர் | மற்றவர் | தொழில் குறிப்பிடப்படாதவர் | காணி - ஏக்கர் | விபரம்: காணியின் பெறுமதி | வீட்டுப் பெறுமதி | மொத்தப் பெறுமதி |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| **அம்பாரை மாவட்டம்** | | | | | | | | | | | | | | | | | | |
| மருதமுனை | 483 | 43 | 112 | 1 | 16 | 2 | 68 | 8 | 18 | 8 | 7 | 38 | 9 | 153 | 120 | 361,675,000 | 496,725,000 | 858,400,000 |
| கல்முனை | 947 | 154 | 271 | 0 | 47 | 15 | 291 | 16 | 84 | 9 | 0 | 0 | 13 | 47 | 220 | 778,253,000 | 428,607,000 | 1,206,860,000 |
| சாய்ந்தமருது | 151 | 14 | 31 | 0 | 5 | 8 | 33 | 1 | 18 | 0 | 0 | 0 | 1 | 40 | 20 | 8,300,000 | 38,395,000 | 46,695,000 |
| நிந்தவூர் | 1011 | 39 | 291 | 0 | 30 | 51 | 224 | 17 | 33 | 6 | 4 | 0 | 55 | 261 | 220 | 425,631,300 | 492,129,000 | 917,760,300 |
| ஒலுவில்-பாலமுனை | 109 | 5 | 10 | 0 | 0 | 4 | 46 | 1 | 5 | 0 | 0 | 0 | 6 | 32 | 20 | 11,225,000 | 38,974,000 | 50,199,000 |
| அட்டாளைச்சேனை | 294 | 13 | 14 | 0 | 6 | 11 | 120 | 7 | 6 | 0 | 5 | 0 | 4 | 108 | 50 | 79,955,000 | 106,447,000 | 186,402,000 |
| அக்கரைப்பற்று | 287 | 24 | 128 | 0 | 15 | 17 | 35 | 3 | 4 | 3 | 0 | 0 | 1 | 57 | 70 | 60,433,000 | 54,566,000 | 114,999,000 |
| பொத்துவில் | 1200 | 9 | 200 | 0 | 2 | 547 | 255 | 1 | 2 | 0 | 2 | 0 | 2 | 180 | 280 | 200,000 | 416,201,150 | 416,401,150 |
| **மொத்தம்** | **4482** | **301** | **1057** | **1** | **121** | **666** | **1072** | **64** | **170** | **26** | **18** | **38** | **91** | **878** | **1,000** | **1,725,672,300** | **2,072,044,150** | **3,797,716,450** |
| **மட்டக்களப்பு மாவட்டம்** | | | | | | | | | | | | | | | | | | |
| காத்தான்குடி | 1044 | 304 | 248 | 4 | 31 | 7 | 64 | 35 | 67 | 29 | 26 | 10 | 33 | 186 | 240 | 432,604,600 | 203,870,000 | 636,474,600 |
| பாலமுனை | 166 | 18 | 39 | 0 | 10 | 0 | 40 | 7 | 3 | 2 | 2 | 1 | 5 | 39 | 40 | 50,251,500 | 45,547,000 | 95,798,500 |
| பூநொச்சிமுனை | 98 | 16 | 7 | 0 | 0 | 1 | 44 | 2 | 0 | 3 | 3 | 0 | 5 | 17 | 20 | 58,820,100 | 23,483,320 | 82,303,420 |
| **மொத்தம்** | **1308** | **338** | **294** | **4** | **41** | **8** | **148** | **44** | **70** | **34** | **31** | **11** | **43** | **242** | **300** | **541,676,200** | **272,900,320** | **814,576,520** |
| **திருகோணமலை மாவட்டம்** | | | | | | | | | | | | | | | | | | |
| மூதூர் | 741 | 79 | 49 | 0 | 3 | 6 | 506 | 12 | 24 | 2 | 4 | 0 | 7 | 49 | 140 | 97,414,800 | 128,126,500 | 225,541,300 |
| கிண்ணியா | 2117 | 199 | 383 | 0 | 21 | 53 | 884 | 121 | 78 | 12 | 58 | 1 | 38 | 269 | 435 | 571,436,095 | 622,242,475 | 1,193,678,570 |
| குச்சவெளி | 457 | 48 | 32 | 0 | 5 | 58 | 258 | 0 | 3 | 5 | 2 | 0 | 0 | 46 | 90 | 75,657,400 | 85,882,650 | 161,540,050 |
| திருகோணமலை | 221 | 10 | 26 | 0 | 0 | 0 | 150 | 5 | 0 | 0 | 4 | 0 | 4 | 22 | 35 | 36,258,000 | 51,085,000 | 87,343,000 |
| **மொத்தம்** | **3536** | **336** | **490** | **0** | **29** | **117** | **1798** | **138** | **105** | **19** | **68** | **1** | **49** | **386** | **700** | **780,766,295** | **887,336,625** | **1,668,102,920** |
| **கூட்டுமொத்தம்** | **9326** | **975** | **1841** | **5** | **191** | **780** | **3018** | **236** | **345** | **79** | **117** | **50** | **183** | **1506** | **2,000** | **3,048,114,795** | **3,232,281,095** | **6,280,395,890** |

அம்பாரை, மட்டக்களப்பு, திருகோணமலை மாவட்டங்களில் சுனாமியினால் பாதிக்கப்பட்ட அகதிகளுக்கு 22,644 வீடுகள் கட்டவேண்டியுள்ளது.

**அரசியல் முரண்பாடு காரணமாக முஸ்லிம் பிரதேசங்களுக்கு உடனடித்தேவையான அடிப்படை வசதிகள்கூட இன்னும் செய்து கொடுக்கப்படவில்லை.**

முஸ்லிம் புனர்நிருமாண மீள்குடியேற்ற அமைப்பு கிழக்கு மாகாணத்தில் சுனாமியால் பாதிக்கப்பட்ட முஸ்லிம் பகுதிகளில் உள்ள ஒவ்வொரு குடும்பத்தினரையும் நேரடியாகச் சந்தித்து, மக்களுக்கும், இருப்பிடங்களுக்கும், தொழிற்துறைகளுக்கும் ஏற்பட்ட பாதிப்புகளை மதிப்பீடு செய்துள்ளது.

### கடற்கரைப் பிரதேசங்களில் திட்டமிட்ட புனர்நிர்மாணமும் மீள்குடியேற்றமும்

கடற்கரைப் பிரதேசங்களே சுனாமிப் பேரலையினால் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது. இந்த அனர்த்தத்தில் பாதிக்கப்பட்டவர்களுக்கு மிஞ்சியிருப்பதெல்லாம் அவர்களின் வாழ்விடங்கள் (காணிகள்) மட்டும்தான். எப்போதாவது ஒருதடவை ஏற்படும் 'சுனாமி' பெரும் பாதிப்பை ஏற்படுத்தும் ஒரு பயங்கரச் சம்பவம் எனக்கூறி பாதிப்புக்குள்ளான மக்களை பீதியடையச்செய்வது பெரும் அநியாயம்.

கடற்கரையிலிருந்து 200 மீட்டருக்குட்பட்ட பிரதேசங்களில் திட்டமிட்ட மீள்குடியேற்ற குடியிருப்புகள் ஏற்படுத்துவதற்கு சுனாமியால் ஏற்பட்ட நம்பத்தகுந்த விபரங்கள் சேகரிக்கப்பட வேண்டும். இந்தச் சிக்கலான முயற்சியில் அடிமட்டத்தில் பாதிக்கப்பட்ட அனைவரினதும் பங்கு மிகமிக அத்தியாவசியமாகும். இல்லாவிட்டால் பாதிக்கப்பட்டவர்களின் வாழ்வில் பெரும் பிரச்சினைகள் ஏற்பட வாய்ப்புண்டு.

பாதிக்கப்பட்டவர்களுக்குச் சொந்தமான காணியின் விஸ்தீரணம் மற்றும் பெறுமதி ஆகியவை எக்காரணம் கொண்டும் புறக்கணிக்கப்படக் கூடாது. எதேச்சையாகக் கையாளப்படும் எந்த முயற்சியும் ஏற்கனவே பாதிக்கப்பட்டுத் துன்புறும் குடும்பங்கள் மீது திணிக்கக்கூடாது. தற்காலிகக் கட்டிடங்கள் அல்லாமல் உறுதியான நிரந்தர கட்டிடங்கள் கடற்கரையிலிருந்து பொருத்தமான தூரத்தில் நிறுவப்படல் வேண்டும்.

### சொத்துரிமை

உள்நாட்டில் இடம் பெயர்ந்தவர்கள் அவசரத்தில் தங்களது உடமைகளைக் கைவிட்டதனால் அவற்றை மீண்டும் பெறமுடியவில்லை. விஷேடமாகத் தாங்கள் காணிகளின் எல்லைகள் சுனாமி போன்ற இயற்கை அனர்த்தங்களினால் அடையாளம் காணமுடியாமல் இருக்கலாம். உள்நாட்டில் இடம் பெயர்ந்தவர்கள் பொறுப்பில் உள்ள உடமைகள் திருட்டுக்கு இலேசாக உட்படக்கூடியவை. இப்படியான அசம்பாவிதங்களிலிருந்து உள்நாட்டில் இடம் பெயர்ந்தோரின் உடமைகளுக்குப் பாதுகாப்புக் கொடுக்க வேண்டியது பொறுப்புள்ள அரசாங்கத்தின் கடமையாகும்.


### மீள்குடியேற்றம், திரும்பச் செல்வதற்கான உரிமை

பாதுகாப்பாகவும், கௌரவமாகவும் தங்கள் சொந்த இடங்களுக்குச் சுயமாகத் திரும்பி மீள்குடியேறுவதற்கு அல்லது சுயமாக நாட்டின் வேறு இடங்களுக்குச் சென்று வாழ்வதற்கு உரித்துடையவர்கள், வெளியேறுவதற்கான காரணிகள் மறைந்து அல்லது ஓய்ந்து போனதும் திரும்பிச் சென்று மீள்குடியேறுவது உள்நாட்டில் இடம்பெயர்ந்தோரின் உரிமை. உதாரணமாக சுனாமியால் பாதிக்கப்பட்டவர்கள் மற்றுமொரு 'சுனாமி' ஏற்படுவதற்கான அறிகுறிகள் உடனடியாக இல்லாத பட்சத்தில் தங்கள் வாழ்விடங்களுக்குத் திரும்பிச் சென்று மீள்குடியேறுவதற்கு உரித்துடையவர்கள். மீள்குடியேறியதன் பின் உள்நாட்டில் இடம் பெயர்ந்தவர்கள் இடம் பெயர்ந்ததற்காகப் புறக்கணிக்கப்படக் கூடாது. ஏனைய பிரஜைகளுக்குள்ள சகல உரிமைகளுக்கும், பொதுவசதிகளுக்கும் சுனாமியால் பாதிக்கப்பட்டவர்கள் உரித்துடையவராவார்.

### அக்கரைப்பற்றில் 2004 டிசம்பர் 26 சுனாமி கடற்பேர் அழிவினால் பாதிக்கப்பட்டவர்கள் விபரம்

| பிரதேச சபை | சனத்தொகை | | | | இடம்பெயர்ந்த குடும்பங்கள் | பாதிக்கப்பட்ட வீடுகள் | பகிர்ந்தளிக்கப்பட்ட வீடுகள் |
|---|---|---|---|---|---|---|---|
| | மொத்தம் | சிங்களவர் | தமிழர் | முஸ்லிம்கள் | | | |
| அக்கரைப்பற்று | 37070 | 119 | 80 | 36864 | 613 | 875 | 0 |
| | 100% | 0.30% | 0.20% | 99.40% | | | |

# அக்கரைப்பற்று நுறைச்சோலை சுனாமி வீட்டுத்திட்டம்




1. அக்கரைப்பற்றில் சுனாமியால் பாதிக்கப்பட்டவர்களின் மீள்குடியேற்றத்திற்காக 30வருடங்கள் கரும்புச்செய்கைக்குப் பொருத்தமில்லாததென ஹிங்குரான சீனி உற்பத்தி நிறுவனத்தினால் கைவிடப்பட்டிருந்த 223ஆம் இலக்க நுறைச்சோலைக்கண்டத்தில் 40 ஏக்கர் காணி அக்கரைப்பற்றுப் பிரதேச செயலாளர் பிரிவில் தேசிய புனர் நிர்மாண நிறுவத்தின் (TAFRAN) அங்கீகாரத்தோடு செஞ்சிலுவைச் சங்கத்துக்கு வழங்கப்பட்டது.

2. 500 வீடுகளுக்கும் ஏனைய பொதுவசதிகளுக்கும் தேவையான மொத்தப் பணத்தையும் சவுதி அரேபிய அரசாங்கம் நன்கொடையாக இலங்கை அரசாங்கத்திற்குக் கொடுத்துதவியது.

3. அட்டாளைச்சேனைப் பிரதேச சபையின் வடகோடியில் உள்ள தீகவாப்பி விகாரையிலிருந்து ஏறக்குறைய ஏழு கி.மீற்றர் தூரத்தில் அக்கரைப்பற்றில்தான் இந்த நுறைச்சோலை சுனாமி வீட்டுத்திட்டம் அமைந்துள்ளது.

4. புள்ளிவிபரத் திணைக்களத்தின் அறிக்கைப்படி அக்கரைப்பற்றுப் பிரதேச சபைக்குட்பட்ட பகுதியில் முஸ்லிம்களைத் தவிர சுனாமியால் பாதிக்கப்பட்ட சிங்களவரோ அல்லது தமிழர்களோ 2004 டிசம்பர் காலப்பகுதியில் குடியிருக்கவில்லை.

5. அக்கரைப்பற்றில் சுனாமியால் பாதிக்கப்பட்ட முஸ்லிம் குடும்பங்களின் மீள்குடியேற்றத்திற்காக கட்டப்பட்ட வீடுகளை வேறு எந்த சுனாமி வீட்டு திட்டத்திலும் நடைமுறைப்படுத்தப்படாத விதிமுறைப்படி காணிக்கச்சேரியின் மூலம் தெரிவு செய்யப்படுபவர்களுக்குத்தான் பகிர்ந்தளிக்கப்பட வேண்டும் என்ற உயர்நீதிமன்றத்தீர்ப்பினால் ஏறக்குறைய நான்கு வருடங்களுக்கு முன்பதாகக் கட்டிமுடிக்கப்பட்ட இந்த 500 வீடுகளும் ஏனைய பொது வசதிகளும் சுனாமியால் பாதிக்கப்பட்ட அக்கரைப்பற்று முஸ்லிம் பயனாளிகள் எவருக்கும் பகிர்ந்தளிக்கப்படாமல் எந்த பராமரிப்புமின்றி வீணாக நாசமடைகின்றன.

# 12. உடனடியாகத் தீர்க்கப்பட வேண்டிய கிழக்கு முஸ்லிம்களின் முக்கிய பிரச்சினைகள்

**பிரச்சினை இல: 01**

**கிழக்கு மாகாண நிருவாக மொழி**

இலங்கைச்சனநாயக சோசலிச குடியரசின் அரசியலமைப்பின் பிரிவு 22(1) வடக்கு கிழக்கு மாகாணங்களில் உள்ள பொது நிர்வாகம் நீதிபரிபாலனம் சம்மந்தமான எல்லா அரசகருமங்களையும் நடத்துவதற்கும் பொதுப்பதிவுகள் செய்வதற்கும் நிர்வாக மொழியாகத் தமிழ்மொழியை உபயோகிக்க வேண்டும் என ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. 1981ஆம் ஆண்டின் குடிசனக்கணிப்பின்படி அம்பாரை மாவட்டத்திலும், திருகோணமலை மாவட்டத்திலும், முறையே 63%, 76% தமிழ் பேசும் மக்கள் வாழ்கின்றனர். ஆனால் இம்மாவட்டங்களில் உள்ள அரசாங்க அதிபர்-மாவட்டசெயலாளர் கச்சேரி, மாவட்ட அபிவிருத்திச்சபைகள் நிருவாகம் பெரும்பாலும் சிங்களத்தில்தான் நடைபெற்றுவருகின்றது.

**பிரச்சினை இல: 02**

**முஸ்லிம் பெரும்பான்மை மாவட்டங்களுக்கு முஸ்லிம் செயலாளர்**

இலங்கையில் அம்பாரை, திருகோணமலை மாவட்டங்களில் மட்டும் தான் முஸ்லிமகள் பெரும்பான்மையாக வழ்கின்றனர். ஆனால் இற்றைவரை இம்மாவட்டங்களுக்கு தமிழ் பேசும் முஸ்லிம் எவரும் அரசாங்க மாவட்ட செயலாளராக நியமிக்கப்படவில்லை.

**பிரச்சினை இல: 03**

**அம்பாரை கரையோர நிருவாக மாவட்டம்**

1963ம் ஆண்டு புதிதாக அம்பாறை மாவட்டம் ஏற்படுத்துவதற்கு முன்னர் மட்டக்களப்புத் தென்பகுதி நிருவாகமையமாக கல்முனை இருந்தது. இன்றைய அப்பாரை மாவட்டத்தின் சனத் தொகையின் மூன்றில் இரண்டுபங்குக்கும் கூடுதலானவர்கள் மருதமுனை-பெரிய துறைநீலாவணை யிலிருந்து பாணமை வரையிலுள்ள கரையோரப்பிரதேசத்தில்தான் வாழ்கின்றனர்.

அரசாங்க நிருவாக அலுவல்களுக்கான கச்சேரி அம்பாரையில் அமைந்திருப்பதால் இம்மாவட்டத்தில் வாழும் பெரும்பான்மை மக்களுக்கு அவர்கள் அலுவல்களை முடித்துக்கொள்வதில் பெரும் சிரமம் ஏற்பட்டுவருகிறது. அரசாங்க அலுவல்களை முடித்துக்கொள்வற்கு கரையோரப் பிரதேசங்களில் பெரும்பான்மையாக உள்ள தமிழ் பேசும் தமிழர்களும் முஸ்லிம்களும் இங்கு சிறுபான்மை சிங்களவர்கள் வாழும் பிரதேசத்தில் அமைந்துள்ள அம்பாரைக் கச்சேரிக்கு அரசாங்க நிருவாகத்துக்காக வந்து போக வேண்டியிருக்கிறது.

**பிரச்சினை இல: 04**

**முஸ்லிம் பெரும்பான்மை மாவட்டத்தோடு சிங்களப்பிரதேசம் இணைத்தமை**

பிந்தனைப்பற்று D.R.O பிரிவு ஆரம்பத்தில் ஊவா மாகாணத்தின் ஒரு பகுதி. சிலகாலம் இப்பிரதேசம் மட்டக்களப்புத் தேர்தல் தொகுதியோடு இணைக்கப்பட்டிருந்தபோதும் ஊவா மாகாண மொணறாகலை மாவட்டத்தால் நிருவகிக்கப்பட்டுவந்துள்ளது. 1959ம் ஆண்டு தேர்தல் தொகுதிகள் எல்லை நிருணய சபையால் அம்பாறைத்தொகுதி யோடு இணைக்கப்படடது. ஆனால் தேர்தல் தொகுதிகள் எல்லை நிருணயசபை அதன் அறிக்கையின் 109 ஆவது பந்தியில் பிந்தனைப்பற்றுவின் பிரச்சினைகளுக்குச் சிறந்த தீர்வு பிந்தனைப்பற்றுவை மீண்டும் ஊவா மாகாணத்தோடு இணைக்கப்படுவது தான் என்று கூறப்பட்டிருக்கிறது. இருந்தும் இந்த நடவடிக்கை சிங்களவர்களின் சனத்தொகையை அம்பாறை மாவட்டத்தில் மேம்படுத்துவதற்கு திட்டமிட்டுச் செயற்படுத்தப்பட ஒரு சதிமுயற்சியாகத்தொடர்கிறது.

பிரச்சினை இல: 05

**கிழக்கு மாகாணத்தில் சட்டவிரோதமாக முஸ்லிம்களின் காணிகள் அபகரிப்பு**

விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் இருந்த 15000 குடும்பங்களுக்குச் சொந்தமான 63,000 ஏக்கருக்கும் கூடுதலான காணிகள் தமிழர்களால் சட்டவிரோதமாக ஆக்கிரமிக்கப்பட்டுள்ளன.

தற்காலிக அனுமதிப் பத்திரத்தோடு முஸ்லிம்கள் விவசாயம் செய்யும் காணிகளுக்கு உறுதிப்பத்திரங்கள் உடனடியாக வழங்கப்பட வேண்டும்.

ரசூல் நன்கொடை நிறுவனத்துக்கு உரித்தான திருக்கோவில் தோட்டம் 898 ஏக்கர் கோமாரி ரிமிட்டர் தோட்டம் 662 ஏக்கர் மொத்தம் 1560 ஏக்கர் காணிகள் தமிழ் பயங்கரவாதிகளால் சட்டவிரோதமா ஆக்கிரமிக்கப்பட்டு ''வேல்ட் விசன்'' அரச சார்பற்ற சர்வதேச நிறுவத்தின் உதவியோடு தமிழர் குடியேறியுள்ளனர். முஸ்லிம் சமய கலாசார நிறுவனங்கள், பள்ளிவாசல்களளுக்குச் சேரவேண்டிய இச்சொத்துக்கள் அரசாங்கப் பொதுச் சொத்துக்கள் பராமரிப்புத்திணைக்களத்தினால் 304/T இலக்க வழக்கின் நீதிமன்றத் தீர்ப்புப்பிரகாரம் நிர்வகிக்கப்பட்டுவந்தது இங்கு குறிப்பிடப்படவேண்டி ஒரு முக்கிய விடயமாகும்.

பிரச்சினை இல: 06

**தேர்தல் தொகுதி நிருவாக அமைப்புகள் ஏற்படுத்திய போது முஸ்லிம்களுக்கு ஏற்பட்ட அநீதி**

முஸ்லிம் பெரும்பான்மைத்தேர்தல் தொகுதிகளுக்கும் நிர்வாக அமைப்புகளுக்கும் காணிகள் பகிர்ந்தளித்ததில் 1976 தேர்தல் தொகுதிகள் எல்லை நிருணய சபையினால் 1048 சதுரமைல் விஸ்தீரணமுள்ள திருகோணமலை மாவட்டத்தில் 24% சிங்களவர்களுக்கு 68%, 700 சதுரமைல் பரப்புள்ள சேருவல தேர்தல் தொகுதியையும், 76% பெரும்பான்மைத்தமிழர்களுக்கும் முஸ்லிம்களுக்கும் எஞ்சிய 32% 348 சதுரமைல் பிரசேதம் மூதூர், திருகோணமலைத் தொகுதிகளாகவும் பிரிக்கப்பட்டுள்ளது.

பிரச்சினை இல: 07

**காவல்துறையில் முஸ்லிம்கள் பற்றாக்குறை**

கிழக்கு மாகாணத்தில் 15 காவல் (பொலிஸ்) நிலையங்கள் உண்டு. ஆனால் இனவிகிதாசாரத்திற்கு ஏற்ப இங்கு காவல் அதிகாரிகள் நியமிக்கப்படவில்லை.

பிரச்சினை இல: 08

**பொத்துவில்**

முன்னாள் முஸ்லிம் பெரும்பான்மைப் பாணமப்பற்று டி.ஆர். ஒ.பிரிவு 472 சதுரமைல் விஸ்தீரணம் 1981 ஆம் ஆண்டு சனத்தொகை 26916. புதிய பொத்துவில் நிருவாகப்பிரிவு சனத்தொகை 1981- 74% முஸ்லிம் பெரும்பான்மைக்கு 22% - 103.9 சதுரமைல் லிஸ்தீரணமான காணிகளும் எஞ்சிய 78% விஸ்தீரணம் கொண்ட 368 சதுரமைல் பிரதேசம் 7,085-26% சிங்களப் பெரும்பான்மை கொண்ட லஹுகல நிருவாகசபைக்கு வழங்கப்பட்டுள்ளது. அம்பாறை மாவட்டத்தில் நிருவாகப்பிரிவுகளுக்கு ஒதுக்கப்பட்டுள்ள காணிகளை ஒப்பிடும் போது சிங்களவர் அதிகப்படியான லஹுகலைப்பிரிவுக்கு முஸ்லிம்கள் அதிகப்படியான கல்முனைப்பிரிவைவிட 2008 மடங்கு அதிகப்படியான காணிகள் ஒதுக்கப்பட்டிருப்பதை அவதானிக்கக் கூடியதாக உள்ளது முஸ்லிம்கள் அதிகப்படியாகவுள்ள அம்பாறை மாவட்டத்தில் முஸ்லிம் பெரும்பான்மைப் பிரதேசங்களுக்குள்ள காணிகளைச் சிங்களவர் பெரும்பான்மையாகவுள்ள காணிகளோடு ஒப்பிடுகையில் சிங்களப்பெரும்பான்மைப் பிரதேசங்களில் முஸ்லிம்கள் பெரும்பான்மை யாகவுள்ள பிரதேசங்களைவிடவும். 13 மடங்கு அதிகப்படியாக உள்ளது.

பிரச்சினை இல: 09

**'சுனாமி' கடற் பேர்அலை**

இலங்கைக்கரையோரத்தைக் காவுகொண்ட 'சுனாமி' கடற் பேர்அலை ஏறக்குறைய 30,000 உயிர்களைப் பலிகொண்டது. இந்த அனர்த்தத்தில் கிழக்கிலங்கை முஸ்லிம்களே படுமோசமான பாதிப்புக்குள்ளானவர்கள். பாதிக்கப்பட்ட முஸ்லிம்கள் விபரம்:

| மாவட்டம் | இடம்பெயர்ந்த குடும்பம் | மக்கள் | இறந்தவர் | காயப்பட்டவர் | காணாமற் போனவர்கள் | பாதிப்புக்குள்ளானவீடு முற்றாக | பகுதியாக |
|---|---|---|---|---|---|---|---|
| அம்பாரை | 32,117 | 128,469 | 7,492 | 2,321 | 2,418 | 16,750 | 18,421 |
| மட்டக்களப்பு | 12,122 | 48,316 | 105 | 455 | 94 | 2,298 | 3,259 |
| திருகோணமலை | 8,492 | 33,968 | 848 | 2,850 | 282 | 4,160 | 7,850 |
| **மொத்தம்** | **52,731** | **210,753** | **8,445** | **5,626** | **2,794** | **23,208** | **29,530** |

படுமோசமாகப் பாதிக்கப்பட்டுள்ள அம்பாரை மாவட்டத்தில் மரணித்தவர்களில் 50% சிறுபிள்ளைகள் முஸ்லிம்களுக்கேற்பட்ட பாதிப்புபற்றி உள்நாட்டு வெளிநாட்டு ஊடகங்கள் புறக்கணித்தன. சுனாமியால் பாதிக்கப்பட்ட முஸ்லிம்கள் விடயத்தில் அரசாங்கம்கூட நியாயப்படி நடந்துகொள்ளவில்லை. பாதிக்கப்பட்ட ஆயிரக்கணக்கான முஸ்லிம்கள் உணவு, உடை, மருந்து, அடிப்படை வசதிகள் அற்றவர்களாக அகதிமுகாம்களில் சொல்லொணாத் துயருக்குள்ளாகினர். சுனாமியால் பாதிக்கப்பட்ட அனேகமான முஸ்லிம்கள் தங்கள் சொந்த இடங்களில் மீள்குடியேறுவதையும் அரசாங்க அதிகாரிகள் தடுத்து நிறுத்துகின்றனர்.

**பிரச்சினை இல: 10**

**கிழக்கு மாகாணக் கொடியில் முஸ்லிம் அடயாளம் பொறிக்கப்படவில்லை**

இலங்கை அரசாங்கம் கிழக்கு மாகாணத்திற்கு ஒரு புதிய கொடியை அறிமுகப்படுத்தியுள்ளது. இக்கொடி கிழக்கில் வாழும் முக்கிய சமூகத்தினரை நியாயமான முறையில் அடையாளம் காட்டும் விதத்தில் சின்னங்கள் பொறிக்கப்படவில்லை. புதிய கொடியில் மூன்று சின்னங்கள் பொறிக்கப்பட்டிருக்கின்றன - சிங்கம், பருந்து, மீன். இவற்றில் சிங்கமும், மீனும் சிங்களவரையும், தமிழரையும் அடையாளப்படுத்துகின்றன ஆனால் முஸ்லிம்களை அடையாளப்படுத்தும் எந்தச் சின்னமும் இந்தப் புதிய கொடியில் பொறிக்கப்படவில்லை. இன்று கிழக்கில் வாழ்பவர்களில் ஆகக்கூடிய தொகையினர் முஸ்லிம்களாக இருக்கையில் புதிய கொடியில் முஸ்லிம்களை அடையாளம் செய்யும் சின்னம் எதுவும் பொறிக்கப்படாதது கிழக்கிலங்கை முஸ்லிம்களுக்கு ஏற்பட்டுள்ள பெரியதொரு புறக்கணிப்பாக இங்குள்ள முஸ்லிம்கள் கருதுகின்றனர்.

**பிரச்சினை இல: 11**

**முஸ்லிம்களுக்கெதிரான சட்டவிரோத ஆயுததாரிகளின் அட்டகாசம்**


சட்டத்தையும் ஒழுங்கையும் கிழக்கில் நடைமுறைப்படுத்தும் அதிகாரிகள், சட்டவிரோத ஆயுததாரிகள் பற்றிச் செய்யப்படும் புகார்கள் பற்றி எதுவித நடவடிக்கையும் எடுக்கத் தவறிவருகின்றனர். இவர்களால் முஸ்லிம்களின் காணிகள் அபகரிக்கப்படுவது மட்டுமன்றி கப்பமும் கேட்கப்பட்டு அப்பாவிப் பொதுமக்கள் கடத்தப்பட்டும் துன்புறுத்தப்பட்டும் வருகின்றனர். பெரும்பாலானோர் பொலிஸில் முறையிடுவதைக்கூட தவிர்த்துக் கொள்கின்றனர், காரணம் முறைப்பாடுகள் செய்யப்பட்டதும் முறைப்பாடு செய்தவர்களின் விபரங்கள் வெளியாகி முறைப்பாடு செய்தவர்கள் சட்டவிரோத ஆயுததாரிகளால் மீண்டும் துன்புறுத்தப் படுகின்றனர்.

**பிரச்சினை இல: 12**

**முஸ்லிம் பாதுகாப்பு**

முஸ்லிம்களின் பாதுகாப்பு விடயத்தில் “கடந்த காலங்களில் ஆட்சியிலிருந்த அரசாங்கங்கள் காத்திரமான நடவடிக்கை எடுக்கத் தவறியதால்தான் தாங்கள் நிராதரவான நிலையில் கைவிடப்பட்டு எந்தவித கவனிப்புமின்றி எல்லோராலும் புறக்கணிக்கப்பட்டு இரண்டாந்தரப் பிரஜைகளாகவுள்ளோம்” என்ற மனக்குறை முஸ்லிம்கள் மத்தியில் நிலவுகிறது.

## அம்பாரை மாவட்டம்



**பிரச்சினை இல: 13**

**அக்கரைப்பற்றுப் பால் பண்ணைக் கூட்டுறவுச்சங்கம்**

அக்கரைப்பற்று கால்நடைகள் பால்பண்ணைக்காரரின் மட்டுப்படுத்தப்பட்ட விவசாயக் கூட்டுறவுச் சங்கத்தின் நடவடிக்கைப் பிரதேசம் அக்கரைப்பற்று டி.ஆர்.ஒ. பிரிவில் உள்ள தற்போதைய பிரதேச செயலாளர் பிரிவுகளான அக்கரைப்பற்று, ஆலயடி வேம்பு, திருக்கோவில், அட்டாளைச்சேனை ஆகிய நிருவாகப்பிரதேசங்களாகும்.

அக்கரைப்பற்றுப் பொலிஸ் நிலையத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள முறைப்படுகளின் படி 1985-1997 வரையிலுள்ள காலப்பகுதியல் ஏற்பட்ட வன்முறைச் சம்பவங்களால் அங்கத்தவர்களுக்குச் சொந்தமான 12,945 கால் நடைகள் காணமல் போய் உள்ளன. காணாமல் போன கால் நடைகளினதும் பாதிக்கப்பட்ட பண்ணை உடமைகளினதும் பெறுமதி ரூபா பத்துக்கோடி. வன்முறைச்சம்மவங்களுக்கு முன்பதாக இக்கூட்டுறவுச் சங்கத்தினால் ஆண்டொன்றுக்கு பதினைந்து இலட்சம் லீட்டருக்கும் கூடுதலான பாலும் 300 தொன் இறைச்சியும் உற்பத்தி செய்யப்பட்டு அங்கத்தவர்கள் ஒவ்வொருவரும் மாதாந்தம் ரூபா 15,000க்கு குறைவில்லாத வருமானம் பெற்றுவந்தனர். ஆனால் இன்று அங்கத்தவர்கள் தங்கள் கால்நடைகளையும் பண்ணையையும், மாதாந்த வருமானத்தையும் இழந்துள்ளனர். நாடு அத்தியாவசிய தேவையான பாலையும் இறைச்சியையும் இழந்துள்ளது.

**பிரச்சினை இல: 14**

**கருங்கொடித்தீவுப் பிரதேசம் அநியாயமாகப் பிரிக்கப்பட்டமை**

அக்கரைப்பற்று உப அரசாங்க அதிபர்பிரிவில் மூன்றில் இரண்டு பங்கு முஸ்லிம்களும் ஒருபங்கு தமிழர்களும் இருந்தனர். 1985 ஆம் ஆண்டு அக்கரைப்பற்றில் உள்ள தமிழருக்கு தற்காலிகமாக ஒரு சுற்று உதவி அரசாங்க அலுவலகம் ஏற்படுத்தப்பட்டு பின் அரசாங்க செல்வாக்கைப் பாவித்து பூரண உதவிஅரசாங்க அலுவலகம் ஆலயடிவேம்பு என்ற பெயரில் தரம் உயர்த்தப்பட்டது இதனால் அக்கரைப்பற்றுப் பெரும்பான்மை முஸ்லிம்களுக்குப் பல குறைபாடுகள் ஏற்படுத்தப்பட்டன. பெரும் பான்மை முஸ்லிம்களுக்கு உரித்தானகாணி நிலங்களும் இயற்கைவளங்களும் சிறுபான்மைத் தமிழரின் ஆலயடிவேம்பு நிருவாகப்பிரிவில் அநியாயமாக உள்ளடக்கப்பட்டுள்ளன.

1992ஆம் ஆண்டு பிரதேச செயலாளர் பிரிவுகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. முஸ்லிம்கள் பெரும்பான்மையாகவுள்ள அக்கரைப்பற்றுப்பிரதேச செயலாளர் பிரிவுக்கும் ஆலயடிவேம்புப்பிரதேச செயலாளர் பிரிவுக்கும் நியாயமாகச் சேரவேண்டிய கிராம நிலதாரி உத்தியோகத்தர் பிரிவுகளும் நிருவாகப்பிரிவு எல்லைகளும் உரியமுறையில் இன்னும் நிருணயிக்கப்படவில்லை.

**பிரச்சினை இல: 15**

**பெரியகளப்பு- சம்புக்களப்புவடிச்சல்**

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்புக்கு வாக்களித்து வெற்றி பெறச்செய்த அக்கரைப்பற்று மக்களின் உடனடித்தேவைகளில் பெரியகளப்பு-சம்புக்களப்பு வடிச்சல் மிகமுக்கியமானது. பெரியகளப்பு-சம்புக்களப்பு நீர்மட்டத்தை கடல்மட்டத்திலிருந்து ஒரு அடிகுறைத்து நீரில் தாழ்ந்து கிடக்கும் வளமுள்ள ஏறக்குறைய 2500 ஏக்கர் வயல் நிலத்தை விவசாயத்திற்கு மீட்டெடுப்பதுதான் இந்த வேலைத்திட்டம். வடிச்சல் செய்ய வேண்டிய நிலப்பரப்பு பெரியகளப்பு 7 சதுரமைல் சம்புக்களப்பு 3 சதுமைல் மொத்தம் 10 சதுரமைல் அல்லது 6,400 ஏக்கர்.

**பிரச்சினை இல: 16**

**சம்மாந்துறை**

முஸ்லிம் அதிகப்படியாகவுள்ள சம்மாந்துறை டி.ஆர்.ஓ. பிரிவில் ஏறக்குறைய 65 சதுரமைல் லிஸ்தீரணமுள்ள ஹாடி கல்வி நிலையம் அம்பாறைக்குளம், அம்பாறை நகரம் உள்ளடக்கிய பிரதேசம் சிங்களவர்களால் அத்துமீறி அபகரிக்கப்பட்டு சிங்களவர் அதிகப்படியான வெவகம் பத்து - டி.ஆர்.ஓ. பிரிவோடு சேர்க்கப்பட்டுள்ளது.

**பிரச்சினை இல: 17**

**இறக்காமம்**

ஏற்கனவே இருந்த அக்கரைப்பற்று டி.ஆர.ஓ. பிரிவு அட்டாளைச் சேனை, திருக்கோவில், ஆலயடிவேம்பு உதவி அரசாங்க அதிபர்கள் பிரிவுகளாக பிரிக்கப்பட்டபோது, சம்மாந்துறை அக்கரைப்பற்று, எல்லைகள் மாற்றப்படவில்லை. இறக்காமம் சம்மாந்துறை உப அரசாங்க அதிபர் பிரிவின் தென்பகுதியில் ஒருபகுதியாக இருந்து வந்தது. ஏற்கனவே ஒரு உப ஏஜிஏ பிரிவாக நிருவகிக்கப்பட்டு வந்த இறக்காமம் தற்போது ஒரு பிரதேச செயலாளர் பிரிவாகத்தரம் உயர்த்தப்பட்டபோதும் அதன் உத்தியோகபூர்வ நிருவாக எல்லைகள் இன்னும் நிருணயிக்கப்படவில்லை.

## மட்டக்களப்பு மாவட்டம்

மட்டக்களப்பு மாவட்டம் 2,633 சதுர.கி.மீ. விஸ்தீரணம், 14 பிரதேச செயலாளர் பிரிவாகப் பிரிக்கப்பட்டுள்ளது. இதில் நான்கு முஸ்லிம் பெரும்பான்மைப் பிரதேசங்கள் - காத்தான்குடி 3.89 சதுர.கி.மீ., ஏறாவூர் நகரம் 3.74 சதுர.கி.மீ., கோறாளைப்பற்று மேற்கு (ஓட்டமாவடி) 6.84 சதுர.கி.மீ., கோறாளைப்பற்று மத்தி 6.50 சதுர.கி.மீ. பெரும்பான்மை முஸ்லிம் பிரதேசங்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ள நிலப்பரப்பு மொத்தம் கிட்டத்தட்ட 20 சதுர.கி.மீ. மட்டுமே. இது மொத்த மட்டக்களப்பு மாவட்ட விஸ்தீரணத்தின் 1.0% க்கு குறைவானதே. ஆனால் இன்றைய மட்டக்களப்பு மாவட்ட முஸ்லிம் சனத்தொகை 30% க்கு கூடுதலாக உள்ளது.

**பிரச்சினை இல: 18**

**முஸ்லிம்களின் காணிகளில் சட்டவிரோத குடியேற்றம்**

மட்டக்களப்பு மாவட்டத்தில் இலங்கை அரசாங்கமும் மற்றும் வெளிநாட்டு அரசசார்பற்ற நிறுவனங்களின் உதவியுடனும் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் (ரி.எம்.வி.பி.) இயக்கமும் சட்டப்படி முஸ்லிம்களுக்குச் சொந்தமான காணிகளில், இடம் பெயர்ந்த தமிழர்களை மீள்குடியமர்த்துவது பெரும் பிரச்சினைகளை தோற்றுவித்துள்ளன.

1985ஆம் ஆண்டு எல்.ரி.ரி.ஈ. தனது கட்டுப்பாட்டிற்குட்பட்ட பிரதேசங்களில் முஸ்லிம்களுக்குச் சொந்தமான குடியிருப்பு, விவசாயம், மற்றும் கால்நடைவளர்ப்புக் காணி 35,000 ஏக்கருக்குக் கூடுதலான பிரதேசத்தைச் சட்டவிரேதமாக கைப்பற்றித் தமிழ் மக்களைக் குடியமர்த்தியது. இந்த அறியாயத்தால் இடம் பெயர்ந்த முஸ்லிம்கள் கடந்த 23 ஆண்டுகளாக சொல்லொணாத் துயரம் அனுபவித்தனர். அரசாங்கம் இன்று இக்காணிகளிலிருந்து எல்.ரி.ரி.ஈ. யினரை வெளியேற்றியபின் கருணாவின் ரி.எம்.வி.பி. அரசாங்கத்தினதும் சர்வதேச அரச சார்பற்ற நிறுவனங்களினதும் உதவியோடு முஸ்லிம்களுக்குச் சட்டப்படி உரித்தான காணிகளில் நிரந்தர வீடுகள், கோயில்கள், பாடசாலைகள் என்பனவற்றை நிறுவி இடம் பெயர்ந்த தமிழர்களை நிரந்தரமாக நியாயப்படி முஸ்லிம்களுக்கு உரித்தான காணிகளில் சட்டவிரோதமாக மீள்குடியேற்றம் செய்கின்றது.

**பிரச்சினை இல: 19**

**கோறாளைப்பற்று மத்தி**

உள்நாட்டு அரசாங்க ஆணைக்குழு, முஸ்லிம்கள் வரலாற்று வாள்விடமான, 11 கிராம சேவகரைக் கொண்ட 240 சதுர.கி.மீ. விஸ்தீரணமுள்ள பிரதேசத்தை கோறாளைப்பற்று மத்திய பிரதேச செயலாளர்பிரிவு எனப் பிரகடனம் செய்வதாக முடிவு செய்யப்பட்டிருந்தபோதும் இதன் எல்லைகள் இன்னும் நிர்ணயிக்கப்படவில்லை.

**பிரச்சினை இல: 20**

**ஏறாவூர்**

ஏறாவூர் முஸ்லிம்களுக்குச் சொந்தமான விவசாய, கால்நடை வளர்ப்பு நிலங்கள் ஏறக்குறைய 12,000 ஏக்கர் காணி பெரும்பாலும் செங்கல்லடி - பதுளை ஏ5 வீதியை அண்மித்தே உள்ளது. இன்று இங்குள்ள அனைத்துப் பிரதேசங்களும் இலங்கை அரசாங்கத்தின் இராணுவக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டுள்ளது. ஏற்கனவே சட்டவிரோதமாக முஸ்லிம் காணிகளில் குடியேறிய தமிழர்கள் எல்.ரி.ரி.ஈ. பயங்கரவாதிகளை விரட்டியடிக்க அரசாங்கம் எடுத்த நடவடிக்கையினால் இடம் பெயர்ந்து முஸ்லிம்களுக்குச் சட்டப்படி உரித்தான காணிகளில் மீள்குடியேறியுள்ளனர். அரசாங்கமும் கருணாவின் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் (ரி.எம்.வி.பி.) இயக்கமும் ஒன்றிணைந்தே இக்குடியேற்றங்களை ஏற்படுத்தியுள்ளன.

1983, 1985, 1990ஆம் ஆண்டுகளில் 12,700 க்கும் கூடுதலான முஸ்லிம் குடும்பங்களை விரட்டிவிட்டு எல்.ரி.ரி.ஈ. யின் கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவந்த இடங்களில் தமிழர்களைச் சட்டவிரோதமாகக் குடியமர்த்தியுள்ளனர். இந்தச் சட்டவிரோதமாக வெளியேற்றப்பட்ட தொழிலிழந்த முஸ்லிம்களுக்கு அரசாங்கம் எந்தவித நிவாரணமோ நஷ்டஈடோ கொடுக்கவில்லை.

அரச பாதுகாப்புப் படையினர் எல்.ரி.ரி.ஈ. பயங்கரவாதிகளை கிழக்கிலிருந்து வெளியேற்ற நடத்திய யுத்தத்தில் இடம் பெயர்ந்த தமிழர்கள் மீண்டும் சட்டவிரோதமாக ஆக்கிரமித்த முஸ்லிம்களுக்குச் சொந்தமான காணிகள் உள்ள ஐயன்கேணி, மீராகேணி, மிச்சநகர், ஹிதாயத்நகர், தக்வாநகர் ஆகிய இடங்களில் மீள்குடியேற்றப்படுகின்றனர். இதுமட்டுமல்லாமல் கிழக்குப் பல்கலைக்கழகம், 7 கி.மீ. தொலைவில் மீராகேணி என்னும் முஸ்லிம் பகுதியில் 30 ஏக்கர் காணியைச் சுவீகரிப்பதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இது முஸ்லிம்கள் இப்பகுதியில் குடியேறுவதைத் தடுத்து நிறுத்துவதற்கான நடவடிக்கையென இங்குள்ள முஸ்லிம்கள் கருதுகின்றனர்.

**பிரச்சினை இல: 21**

**காத்தான்குடி முஸ்லிம் எல்லைக் கிராமங்கள்**

ஒல்லிக்குளம், சிகரம், கர்பலா, பாலமுனை, காங்கேயனோடை, கீச்சான்பள்ளம் ஆகிய காத்தான்குடி எல்லைக் கிராமங்களே தமிழர் பெரும்பான்மை ஆரயம்பதிப்பிரதேச சபை எல்லைக்குட்பட்ட முஸ்லிம் பிரதேசங்கள். சுனாமியாலும் எல்.ரி.ரி.ஈ. பயங்கரவாதிகளை வெளியேற்றுவதற்கான அரசபடையினரின் நடவடிக்கையாலும் இடம் பெயர்ந்த தமிழர்கள் தற்காலிகமாக மேற்கூறப்பட்ட கிராமங்களில் முஸ்லிம்களுக்கும் பள்ளிவாசல்களுக்கும் சொந்தமான காணிகளில் குடியமர்த்தப்பட்டனர். ஆனால் இப்போது கருணாவின் ரி.எம்.வி.பி. யும், அரசாங்க இராணுவத்தினரும் ஒன்று சேர்ந்து சர்வதேச அரச சார்பற்ற நிறுவனங்களின் உதவியோடு, தமிழ் பிரதேசங்களிலிருந்து வெளியேறியவர்களை முஸ்லிம்களுக்கும் பள்ளிவாசல்களுக்கும் சொந்தமான காணிகளில் முஸ்லிம்களின் உரிமையை நிராகரித்துவிட்டு நிரந்தரமாகக் குடியமர்த்துகின்றனர்.

**பிரச்சினை இல: 22**

**மட்டக்களப்பு முஸ்லிம் கொலனி**

**மஸ்ஜிதுல் பிர்தௌஸ் பள்ளிவாயல்**

1990ம் ஆண்டு வன்செயலின்போது, முஸ்லிம் கொலனியில் இருந்த மஸ்ஜிதுல் பிர்தௌஸ் பள்ளிவாயல் முற்றாக உடைத்து நாசமாக்கப்பட்டது. தற்போது அப்பள்ளிவாயல் இருந்த இடத்தில் பிரம்மக்குமாரிகள் தியான நிலையம் எனும் பெயரில் கட்டிடம் அமைக்கப்பட்டு வருகிறது.

**முஸ்லிம் மட்/ஸாஹிரா வித்தியாலயம்**


முஸ்லிம்களின் பாடசாலைக்கென ஒதுக்கப்பட்ட விளையாட்டு மைதானம் உட்பட இன்னும் வகுப்புக்கள் விஸ்தரிப்பதற்கான கட்டிடங்கள் அமைக்கவும் அத்தோடு அதிபர் குவாட்டஸ் அமைப்பதற்கான இடமும் ஒதுக்கப்பட்டிருந்த இடத்தில் தற்போது தனியார் கட்டிடம் அமைக்கப்பட்டு வருவதுடன் ஒரு சில குடியேற்றங்களும் இடம்பெற்றுள்ளன.

**மையவாடி**

மட்டக்களப்பு நகர் பகுதியில் முஸ்லிம்களுக்கென காலங்காலமாக இருந்துவந்த மையவாடி இது ஒன்றுதான். இந்த இடத்திலும் சில ஆக்கிரமிப்புக்கள் இடம்பெற்றுள்ளன. தற்போது மையவாடியை ஊடறுத்து புதிதாக ஓர் கிரவல் ரோட்டும் அமைக்கப்பட்டுள்ளது.

பயங்கரவாத நடவடிக்கையினால் இடம்பெயர்ந்தவர்கள் எந்த இனமாக இருப்பினும் அவர்களது காணிகளை வாங்கினால் அது செல்லுபடியற்றதாகும் என அரசாங்கம் அறிவித்திருந்தும் சில அதிகாரிகள் வாங்கியவர்களுக்கு சாதகமாகவே செயற்பட்டதால் முஸ்லிம்கள் அவர்களது சொந்த இருப்பிடங்களையும் இழக்க நேரிட்டன.

## திருகோணமலை மாவட்டம்




**பிரச்சினை இல: 23**

**குச்சவெளி**

குச்சவெளி திருகோணமலை மாவட்டத்தில் ஒரு முஸ்லிம் பெரும்பான்மைக் கிராமம். மொத்த சனத்தொகை 29,967, குடும்ப எண்ணிக்கை 8,058, 65% முஸ்லிம்கள் 19,443, 31% தமிழர் 9,282, 3%, கிறிஸ்தவர் 905, 1%, சிங்களவர் 337. பிரதேச சபையில் 9 அங்கத்தவர்கள், 6 முஸ்லிம்கள், 3 தமிழர்.

முஸ்லிம் பெரும்பான்மையாகவுள்ள பிரதேசப் பிரிவுக்கு தமிழர் ஒருவர் பிரதேச செயலாளர். மொத்த கிராம சேவகர் 24, 65% முஸ்லிம்களுக்கு 7 பேர் மட்டும், 35% தமிழருக்கும் ஏனையோரக்கும் 17 கிராம நிலதாரி உத்தியோகத்தர்கள். ஒரு தமிழ் கிராம சேவகப் பிரிவின் சராசரிச் சனத்தொகை 250 ஆனால் முஸ்லிம் கிராமசேவகர் பிரிவின் சராசரி சனத்தொகை 1,350 உதாரணம் புல்மோட்டை, இலக்கம் 31l.

**காணிப்பிரச்சினை**


இக்பால் நகர் ஒரு முஸ்லிம் பிரதேசம். இனப்பிரச்சினை காரணமாக 1984, 1990, 1994 காலப்பகுதியில் இடம் பெயர்ந்த முஸ்லிம்கள் திருகோணமலையில் 'லவ்' லேன் என்னும் இடத்தில் குடியேறினர். 2002ஆம் ஆண்டு தங்கள் சொந்த இடங்களுக்கு மீள்குடியேறி இன்று வறுமையால் மிகவும் கஷ்டப்படுகின்றனர்.

இக்பால் நகரில் கிழக்குப்பக்கமாக 250 ஏக்கர் காணியை கிழக்குப் பல்கலைக்கழகம் பலாத்காரமாக ஆக்கிரமித்துக் கொண்டது. தாமரைக்குளம், மதுரைமலைப் பிரதேசங்களில் 50 ஏக்கர் காணி சர்வதேச

அரசசார்பற்ற 'ஜய்கா' நிறுவனம் சுனாமியால் பாதிக்கப்பட்டவர்களுக்கு வீடுகட்டுவதற்காகப் பிரதேச செயலாளரால் ஒதுக்கப்பட்டுள்ளது. 185 முஸ்லிம்கள் ஒருவருக்கு 15 பேர்ச்சஸ் விகிதம் கொடுப்பதாக வாக்குறுதி கொடுக்கப்பட்டிருந்தும் மொத்தக் காணியும் தமிழருக்கும், அரச உத்தியோகத்தருக்குமே பகிர்ந்தளிக்கப்பட்டது. இடம் பெயர்ந்த முஸ்லிம்கள் எவருக்குமே இக்காணிகள் கொடுக்கப்படவில்லை.

265 முஸ்லிம் குடும்பங்கள் அகதிகளெனக் கணிக்கப்பட்டிருந்தும் 45 குடும்பங்களை மட்டுமே தெரிவு செய்தது. ஆனால் தமிழ் அகதிகள் கோணேஷ்புரி, கோபாலபுரம், கும்பிறுப்பிட்டி, இறணைகேணி திரியை ஆகிய இடங்களில் குடியமர்த்தப்பட்டனர்.

**பிரச்சினை இல: 24**
**கிண்ணியா-குரங்குபாஞ்சான்**




கிண்ணியாவிலிருந்து 15 கி.மீ கிழக்கில் உள்ள குரங்கு பாஞ்சான் கிராம நிலதாரி பிரிவு ஏறக்குறைய 20 சதுரக் கீ.மீ விஸ்தீரணம் 1957 வெள்ளத்தின்பின் முஸ்லிம்கள் இப்பிரதேசத்தில் குடியேறனர். 1990 ஆம் ஆண்டுவரை 225க் கூடுதலான முஸ்லிம் குடும்பங்கள் வாழ்ந்துவந்தனர் 1990க்குப்பின் ஏற்பட்ட இனப்பயங்கரவாத நடவடிக்கை காரணமாக இங்கிருந்த முஸ்லிம் மக்கள் இடம் பெயர்ந்து கிண்ணியாவில் தற்காலிகமாக வாழ்ந்து வந்தனர். 2002 பெப்ரவரியில் அரசாங்கத்திற்கும் தமிழீழ விடுதலைப்புலிகளுக்கு மிடையில் ஏற்பட்டயுத்த நிறுத்த உடன்படிக்கையின் பின்னர் இப்பிரதேசத்தில் உள்ள காணிகளில் மீள்குடியேறி விவசாயம் செய்து வாழத் தொடங்கினர். 2003-06-11 இல் நடந்த கூட்டத்தில் எடுத்ததீர்மானப்படி குரங்குபாஞ்சான் பள்ளிவாசல் புனரமைக்கப்பட்டது. அரசாங்கத்தின் கட்டுப்பாட்டிலிருந்த பிரதேசத்தில் வாழ்ந்த முஸ்லிம்களை விரட்டிவிட்டு இப்பள்ளிவாசலை தமிழீழ விடுதலைப்புலிகள் தங்களின் இராணுவ முகாமாக்கிக் கொண்டனர். அரசாங்க இராணுவத்தின் கட்டுப்பாட்டுக்குள் இப்பிரதேசம் கொண்டு வரப்பட்டதன் பின்புகூட இப்பள்ளிவாசல் அரசாங்க இராணுவ முகாமாக மாற்றப்பட்டுள்ளது. இங்கிருந்து இடம் பெயர்ந்த முஸ்லிம்கள் இற்றைவரை மீள் குடியமர்த்தப்பட வில்லை.

# 13. கிழக்கில் முஸ்லிம் பெரும்பான்மை மாகாணசபை

வடக்கு கிழக்கு மாகாணங்களில் தமிழ் போராளிகளினது முஸ்லிம்களுக்கு எதிரான அத்துமீறிய அட்டகாசங்களால் கிழக்கில் வாழும் முஸ்லிம்கள் பெரும் பீதியடைந்தனர். தமிழர்கள் வட, கிழக்கு மாகாணங்கள் ஒன்றிணைத்த மாகாண ஆட்சியைக் கோரிய போது கிழக்கு மாகாணத்தில் வாழும் முஸ்லிகள் வட, கிழக்கு இணைப்பின் மூலம் தாங்கள் படுமோசமாகப் பாதிக்கப்படப் போவதாக எண்ணினர். இதன் அடிப்படையில் அவர்கள் ஒன்று சேர்ந்து எடுத்த தீர்மானமே கிழக்கு மாகாணத்தில் முஸ்லிம் பெரும்பான்மை மாகாண சபைக் கோரிக்கையாகும்.

**முஸ்லிம் மாகாண சபைக் கோரிக்கை**

கிழக்கு மாகாணத்தில் முஸ்லிம் பிரதேசங்களை ஒன்றிணைத்து ஒரு முஸ்லிம் பெரும்பான்மை மாகாணசபை ஏற்படுத்தப்பட வேண்டுமென்று முதன் முதலில் 1986 ஆகஸ்டு 9ஆம் திகதி கிழக்கிலங்கை முஸ்லிம் முன்னணி தலைவர் எம்.ஐ.எம் முஹியத்தீன் செயலாளர் சேகுஇஸ்ஸதீன் ஒன்றிணைந்து ஒரு பிரேரணையை முன் வைத்தனர். அம்பாரை மாவட்ட பள்ளிவாசல்கள சம்மேளனம் அட்டாளச்சேனை ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில் 10.08.1986ல் நடத்திய மாநாட்டில் இப்பிரேரணை ஏகமானதாக ஏற்றுக் கொள்ளப்பட்டது.

இம்மாநாட்டில் அம்பாரை மாவட்டத்தின் அனைத்து பள்ளிவாசல்களின் பிரதிநிதிகளும் காத்தான்குடி பள்ளிவசல்களின் நம்பிக்கயைாளர்கள், அம்பாரை மாவட்டத்தின் பல்வேறு முஸ்லிம் அமைப்புகள், அப்போதைய கல்முனை சம்மாந்துறை பொத்துவில் நாடாளுமன்ற உறுப்பினர்கள் அம்பாரை மாவட்ட அபிவிருத்திச் சபைத் தலைவர் மற்றும் பெரும் அளவிலான அரசியல் பிரமுகர்கள் கலந்து கொண்டனர்.

இந்தக் கோரிக்கையின் நியாயத் தன்மையை உணர்ந்த பல்வேறு முஸ்லிம் ஸ்தாபனங்கள் இக் கோரிக்கைக்கு ஆதரவாக கருத்துக்கள் தெரிவித்தன.

கிழக்கு மாகாண முஸ்லிம்கள் முன்வைத்த பெரும்பான்மை மாகாணசபை யோசனைக்கு அகில இலங்கை முஸ்லிம் லீக் 1986 ஒக்டோபர் 20ம் திகதி பத்திரிக்கை மூலம் அதன் ஆதரவைப் பகிரங்கமாக வெளிப்படுத்தியது.

டாக்டர் பதியுதின் மஹ்மூத், ஏ.அசீஸ், அப்துல் டப்ளியு.எம். அமீர் ஆகியோர் தலமையிலான முஸ்லிம் கவுண்சில் அதன் அங்கீகாரத்தையும் பகிரங்க அறிக்கை மூலம் தெரிவித்தது.

அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமா, தெமட்டகொட வை.எம்.எம்.ஏ மண்டபத்தில் ஒரு முழு நாள் கருத்தரங்கை நடத்தியது. முஸ்லிம் பெரும்பான்மை மாகாண சபைக்கு சாதகமாகவும் பாதகமாகவும் கருத்துச் சொல்லக்கூடிய முஸ்லிம் புத்திஜீவிகள் பலர் அழைக்கப்பட்டனர். எம்.ஐ.எம். முஹிதீன், எம்.எச்.எம் அஷ்ரப், மூதூர் ஏ.எல்.ஏ. மஜீது, காத்தான்குடி ஏ. அகமதுலெப்பை, நிந்தவூர் எம்.எம். முஸ்தபா, சம்மாந்துறை யூ.எல்.எம். முஹைதீன், மசூர் மௌலானா போன்றோர் அங்கு கருத்துரை வழங்கினர். இறுதியில் முஸ்லிம் மாகாணசபை கிழக்கு மாகாணத்தில் அமைவது மிகவும் அவசியமானது என்ற தீர்மானம் ஏகமானதாக நிறைவேற்றப்பட்டது.

கிழக்கு மாகாணத்தில் உள்ள முஸ்லிம் பிரதேசங்களை உள்ளடக்கிய முஸ்லிம் பெரும்பான்மை மாகாண சபை ஒன்றை அமைப்பதற்கான முஸ்லிம்களின் கோரிக்கையை ஐ.தே.க., ஸ்ரீ.ல.சு.க., அகில இலங்கை முஸ்லிம் லீக், முஸ்லிம் லீக் வாலிபர் முன்னணிகளின் சம்மேளனம், முஸ்லிம் கவுன்சில். ஸ்ரீலங்கா முஸ்லிம் முன்னணி, அகில இலங்கை ஜம்மிய்யதுல் உலமா சபை, அகில இலங்கை வை.எம்.எம்.ஏ பேரவை ஆகிய பல்வேறு அமைப்புக்களின் பிரதிநிதிகள் கலந்து கொண்ட மாநாட்டிலேயே இத்தீர்மானம் ஏகமானதாக நிறைவேற்றப்பட்டது.

1986 நவம்பரில் இலங்கை அரசுக்கும் இந்திய அரசுக்குமிடையே பெங்களூரில் நடைபெற்ற பேச்சுவார்த்தையின் போது இலங்கை அரசினால் கிழக்கு மாகாணத்தில் தமிழ் மக்களுக்கு ஒன்றும், சிங்கள மக்களுக்கு ஒன்றும், முஸ்லிம் மக்களுக்கு ஒன்றுமாக மூன்று மாகாண சபைகள் உருவாக்கப்பட

வேண்டும் என்றும் இம் மூன்று மாகாண சபைகளையும் தாபிக்கும் நோக்கத்துக்காக எல்லை வரையறைக் குழு ஜனாதிபதியினால் நியமிக்கப்பட்டு உத்தேச எல்லைகள் மூன்று சமூகத்தினரதும் அபிலாஷைகளைத் திருப்திபடுத்துவது பற்றிக் கவனத்தில் கொள்ள வேண்டுமெனவும் பரிந்துரை செய்யப்பட்டது.

**தமிழரசுக் கட்சிதான் முஸ்லிம் பெரும்பான்மை மாகாணம் பற்றி முதன் முதலில் கூறியது**
வடகிழக்கிலே வாழும் முஸ்லிம் சமூகம் தனியான அரசியல் அலகு பற்றிச் சிந்திக்க முன்பதாகவே, அதாவது 1956ல் நடைபெற்ற தமிழரசுக் கட்சியின் திருமலை மாநாட்டில் "முஸ்லிம்கள் விரும்பினால் அவர்களுக்கென்று ஒரு தனிப்பட்ட மாநில அரசு" பெற்றுக்கொள்ளலாம் என்ற தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

இதே போல் 1964ல் நடைபெற்ற தமிழரசுக் கட்சியின் 9வது மாநாட்டில் வடகிழக்கில் இலங்கையில் தனித்தனியாக ஒரு தமிழரசும் ஒரு முஸ்லிம் அரசும் அமைய வேண்டும் எனத் தீர்மானிக்கப்பட்டது.

தமிழரசுக் கட்சித் தலைவர் செல்வநாயகம் அவர்கள் மேற்படி மாநாட்டில் அதிகாரம் தமிழ், முஸ்லிம் சமூகங்களிடையே பங்கிடப்பட வேண்டும் எனப் பேசினார்.

முஸ்லிம் மாகாணக் கோரிக்கைக்கு வழிகாட்டியவர்கள் தமிழ்த் தலைவர்களே.

**கிழக்கில் ஒரு முஸ்லிம் பெரும்பான்மை மாகாணசபையின் அவசியம்**
முஸ்லிம்களுக்கு கிழக்கில் ஓர் அதிகார அலகு அவசியம் என்பதை பின்வரும் காரணிகள் வலியுறுத்துகின்றன.

1. மாகாணங்களை அடிப்படையாகக் கொண்டு அதிகாரப் பகிர்வு இடம் பெறும் போது எவரும் வீணாக அலட்டிக் கொள்ள வேண்டியதில்லை. அச்சப்படவும் நியாயமில்லை. ஆனால் வட, கிழக்கு இணைப்பு என வரும் போது அங்கே பிரதேச ரீதியான இணைப்பு மட்டுமல்ல இன ரீதியான இணைப்புக்கும் அது வழிகோலுகின்றது. எனவே இவ்விணைப்பின் கீழ் வட, கிழக்கில் வாழும் மற்றொரு தேசிய இனமான முஸ்லிம்கள் கவனத்திலெடுக்கப்படாத நிலை காணப்படுகின்றது. இனத்துவ ரீதியில் சமத்துவ நிலையை இவ் இணைப்பு தடுக்கின்றது.

   1981ம் ஆண்டைய குடிசனக் கணிப்பின் பிரகாரம் கிழக்கில் முஸ்லிம்களின் விகிதம் 33% தமிழர்கள் 42% சிங்களவர் 25% ஆனால் இவ்விணைப்பின் பின் முஸ்லிம்களின் விகிதாசாரம் 18 ஆகக் குறைவடைகின்றது.

2. இந் நாட்டில் மூன்று முக்கிய தேசிய இனங்கள் வாழுகின்றன. அதிகாரப் பகிர்வின் போது இரண்டு இனங்கள் அதிகாரங்களைப் பகிர்ந்து கொள்வதற்கான ஏற்பாடுகள் எடுக்கப்படும் போது மற்றுமோர் இனம் புறக்கணிக்கப்படுவது அல்லது புறக்கணிக்கப்படுவதாக உணரப்படுவது அவ்வினத்தின் மத்தியில் அமைதியின்மையை ஏற்படுத்தும்.

   இலங்கை பிரிட்டிஷாரிடம் இருந்து சுதந்திரத்தைப் பெற்றுக் கொள்ள பெரும் அர்ப்பணிப்புக்களைச் செய்தவர் சேர் பொன். இராமநாதன். அன்னாரை நிரந்தர மூன்றில் இரண்டு பெரும்பான்மையான சிங்கள மக்கள் பெரிதாக மதித்தனர். சுதந்திர வீரர் எனப் போற்றினர். ஆனால் அவர் சார்ந்த தமிழ் இனம் சுதந்திரத்தை அனுபவிக்காமல் ஒரு சகாப்தத்துக்குள்ளாகவே பிரிவினைப்பற்றிப் பேசத் தலைப்பட்டது. இதனால் ஒற்றுமை, நல்லிணக்கம், பரஸ்பர புரிந்துணர்வுகள் குறைவடைந்து ஓர் இனம் மற்ற இனத்தை எதிரியாகப் பார்க்கும் நிலை ஏற்பட்டதை ஒவ்வொருவரும் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

   தமிழ் மக்களின் போராட்ட வரலாறு மிகவும் பொறுப்புணர்ச்சியுடன் படிமுறை படிமுறையாக மேற்கொள்ளப்பட்டதாகும். சுமார் 50 வருடங்களாக மேற்கொள்ளப்பட்ட அகிம்சைப் போராட்டத்தில் நம்பிக்கையிழந்து ஆயுதப் போராட்டமாக மாறியது. சிறுபான்மையினம் பெரும்பான்மையினம் மீது பெரும் அதிருப்தி கொண்டது.

எனவே இவ்வாறான ஒரு நிலை மூன்றில் இரண்டுக்கும் கூடுதலான தமிழரைக் கொண்ட வடகிழக்கில் ஏற்படாமல் தடுப்பதாயின், இரு இனங்களும் பரஸ்பரம் நல்லுறவு, நல்லிணக்கத்துடன் வாழச் சமத்துவமான அதிகாரப் பகிர்வு வழங்கப்படல் வேண்டும்.

இவ்வாறு கூறும் போது முஸ்லிம்கள் தமிழர்களுக்கெதிராக செயற்படுவார்களா? என்ற ஒரு கேள்வி எழலாம். போராட்டங்களை ஆரம்பிப்பது சம்பந்தப்பட்ட சமூகம் என்பதை விட வெளிச் சக்திகள்தான் தங்களது அபிலாஷைகளை அடைந்து கொள்ள இளைஞர்களைத் தூண்டிவிட்டு பிரதேசங்களைப் போராட்டக் களமாக மாற்றியது என்பது வரலாறு.

எனவே முஸ்லிம்களுக்கு எதிராக தமிழ் மக்களை வெளிச் சக்திகள் பயன்படுத்தமாட்டார்கள் என்பதை எவராலும் உத்தரவாதம் கூற முடியாது.

3. இந்நாட்டில் மூன்று தேசிய இனங்கள் வாழும் போது இரண்டு இனங்கள் அதிகாரங்களைப் பெற்றுக் கொள்ள ஒன்றுக்கு மாத்திரம் ஒன்றுமில்லை என்ற நிலை ஏற்படக் கூடாது. 12% வாழும் தமிழ் மக்களுக்கு கிடைக்கும் அதிகாரம் 10% வீத முஸ்லிம்களுக்கும் கிடைப்பதே முறையானது.

**முஸ்லிம் மாகாணசபையும் அதற்கான அங்கீகாரமும்**

1986களில் உருவான முஸ்லிம் மாகாணக் கோரிக்கையை இலங்கையின் பல்வேறு ஸ்தாபனங்களும் ஏற்று அதற்கு ஆதரவு தெரிவித்ததை ஏலவே பார்த்தோம். இதே போல் இலங்கையின் பல்வேறு அரசியல் கட்சிகளும் இக்கருத்தை அங்கீகரித்துள்ளன.

1988 ஜனாதிபதித் தேர்தலின் போது ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தலைமையிலான பொது முன்னணியின் தேர்தல் விஞ்ஞாபனத்திலும் கிழக்கில் முஸ்லிம் பெரும்பான்மை மாகாணம் ஏற்படுத்துவதாக வாக்குறுதியளிக்கப்பட்டது. இப் பொது முன்னணியில் தமிழ் காங்கிரஸ் உட்பட பல்வேறு கட்சிகள் இடம் பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

ஆகஸ்ட் 2000ம் ஆண்டு பொதுசன ஐக்கிய முன்னணி பாராழுமன்றத்தில் சமர்ப்பித்த புதிய அரசியல் சீர்திருத்த மசோதாவிலும் இதற்கான அங்கீகாரம் உள்ளது.

**கிழக்கில் உத்தேச முஸ்லிம் பெரும்பான்மை மாகாண அமைப்பு**

முஸ்லிம் மாகாணக் கோரிக்கை 1986ம் ஆண்டு முன்வைக்கப்பட்டதைத் தொடர்ந்து முஸ்லிம் மாகாண எல்லைகளை வரையறுத்த படத்தை முஸ்லிம் பெரும்பான்மை மாகாணசபைக் கோரிக்கையினை முதன்முதலில் முன்வைத்த எம்.ஐ.எம். முஹியத்தீன் அவர்களால் வெளியிடப்பட்டது.

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் உள்ள முஸ்லிம் பிரதேசங்களை ஒன்றிணைத்து ஓர் அதிகார அலகு ஏற்படுத்தப்பட வேண்டும் என்பதையும் இந்தியாவின் பாண்டிச்சேரி மாநிலத்தைப் போன்று நிலத்தொடர்பற்றதாக அல்லது வவுனியாவில் உள்ளது போல் நிலத்தொடர்பைக் கவனிக்காமல் சிங்கள மக்களுக்கு வேறாக உதவி அரசாங்க அதிபர் பிரிவு இருப்பது போல் அமைக்க வேண்டும் என்றும் அப்பிரசுரங்கள் கூறின.

**உத்தேச முஸ்லிம் பெரும்பான்மை மாகாணசபை பின்வருமாறு அமைவது பொருத்தமானது.**

1. இன்றைய அம்பாரை மாவட்டத்தில் பதியத்தலாவ, மகாஓயா, தெஹியத்த கண்டிய ஆகிய பிரதேச சபைகள் / பிரதேச செயலாளர் பிரிவுகள் நீங்கலான பகுதி அம்பாரை கரையோர மாவட்டமாகப் பிரகடனப்படுத்தப்பட வேண்டும். மேற்கூறிய பிரதேசம் அம்பாரை மாவட்டத்துடன் ஆரம்பகாலத்தில் இருக்கவில்லை. அது ஊவா மாகானத்தில் இருந்த பிந்தனை பற்றுப் பிரதேசமாகும் என்பதும் பிற்காலத்தில் அது அம்பாரை மாவட்டத்துடன் இணைக்கப்பட்டது என்பதும் குறிப்பிடத்தக்கது.
2. மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள முஸ்லிம் பெரும்பான்மைப் பிரதேசங்கள் அடையாளப் படுத்தப்படல் வேண்டும்.
3. திருகோணமலை மாவட்டத்திலுள்ள முஸ்லிம் பெரும்பான்மைப் பிரதேசங்கள் அடையாளப்படுத்தப்படல் வேண்டும்.

மேற்கூறிய மூன்று பிரதேசங்களையும் உள்ளடக்கியதாக முஸ்லிம் பெரும்பான்மை மாகாணசபைப் பிரதேசமாக அமைய வேண்டும்.

கிழக்கு மாகாணத்தோடு இணைந்து அதிகார அலகு பெறுவதை வடக்கு முஸ்லிம்கள் விரும்புகின்றார்களா? என்பது விடை காணப்பட வேண்டிய ஒரு வினாவாகும்.

அவ்வாறான விருப்பங்கள் அவர்களை தெளிவாக வெளிப்படாதவிடத்து கிழக்கு மாகாண முஸ்லிம்களை மட்டும் மையமாகக் கொண்டே முஸ்லிம் பெரும்பான்மை மாகாண சபை அமைய வேண்டும்.

முஸ்லிம் மாகாணச் சிந்தனைகள் உருவானதுமுதல் வடக்கு முஸ்லிம்களை அரவணைத்ததாகவே சகல கோரிக்கைகளும் எழுந்த போதிலும் வடக்கு முஸ்லிம்களிடமிருந்து அக்கோரிக்கைக்கு ஆதரவு காட்டப்படாமையும் கவனத்திலெடுக்கப்பட வேண்டும்.

**முஸ்லிம்களுக்கும் அதிகாரப்பகிர்வு அவசியம் என்பது பற்றி சில கருத்துக்கள்**

இனப் பிரச்சினைத் தீர்வில் அதிகாரங்களைப் பகிர்ந்து கொள்வதற்குப் பதிலாக அரசியலமைப்பு ரீதியில் அல்லது ஒப்பந்த அடிப்படையில் அதிகாரங்களை உறுதிப்படுத்திக் கொள்வது தொடர்பாக இன்று நிறையப் பேசப்படுகின்றது. தாங்கள் இனரீதியாகச் சிந்திப்பவர்கள் அல்லர் என்பதைப் பிறருக்குக் காட்டுவதற்காக இவ்வாறு சிலர் கருத்துக்களை முன்வைக்கின்றனர்.

உண்மையில் இனரீதியாகச் சிந்திப்பதும் பேசுவதும் இந் நாட்டை அழிவுக்குக் கொண்டு சென்றன என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை.

1. சிங்கள மக்கள் இனரீதியாக சிந்தித்ததன் பெறுபேறுதான் வடகிழக்குப் பிரச்சினை உருவானது, என்பதையும் தமிழ் மக்கள் இனரீதியாகச் சிந்தித்ததன் விளைவுதான் முஸ்லிம்கள் அண்மையில் அனுபவித்த துன்ப துயரங்கள் என்பதையும் முஸ்லிம்கள் மாத்திரம்தான் இனரீதியாக சிந்திக்கக் கூடாது என்பதுதான் இப் புத்தி ஜீவிகளின் கருத்தென்றால் அது முஸ்லிம்களின் தற்கொலைக்கு ஒப்பானது என்பதை இவர்கள் விளங்கிக் கொள்ள வேண்டும்.
2. பகிர்வு தேவையில்லை அரசமைப்பு ரீதியான பாதுகாப்பு மட்டும் போதும் என்பது இவ்வளவு நாளும் நடைபெற்ற, நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற தமிழர் விடுதலைப் போராட்டத்தைக் கொச்சைப்படுத்துவதாகும். இன்று இவர்கள் கூறுகின்ற அந்த உத்தரவாதத்தை தமிழ் மக்களுக்குக் கொடுக்க சிங்களத் தலைவர்கள் என்றோ தயாராக இருந்தார்கள் என்பதை மறந்து விடக் கூடாது.
3. டொனமூர் அரசியலமைப்பின் போது சிறுபான்மை மக்களுக்கு கொடுத்த சலுகைகளை 1972ம் ஆண்டைய அரசியலமைப்பு நீக்கி விட்டதை இப்புத்திஜீவிகள் நெஞ்சில் கைவைத்துக் கேட்டுக் கொள்ள வேண்டும்.
4. 1948ல் சிறுபான்மையினருக்கு கொடுக்கப்பட்ட சலுகைகள், உரிமைகள் 1972ல் பறிக்கப்பட்டது, என்றால் தற்போது எழுதப்படும் உரிமைகள் மறுக்கப்படாது பாதுகாக்கப்படும் எனக் கூறலாமா? இன்றைய தமிழ்த் தலைவர்கள் கொடுக்கின்ற வாக்குறுதிகளை பின்வரும் தமிழ் சமுதாயம் நிறைவேற்றும் என்பதற்கு என்ன உத்தரவாதம்? எனவே இனரீதியான சிந்தனைகள் வளர்ந்துள்ள ஒரு நாட்டில் வெறும் நம்பிக்கை சார்ந்த மனக் கோட்டைகளைக் கட்டுவது அறிவார்ந்த செயலாகாது.
5. தற்போது வாழும் தலைவர்கள் சிறுபான்மையினருக்கு உரிய இடம் அளிக்க வேண்டும் என நினைக்கலாம். ஆனால் நாளை வருபவர்கள் அதற்கு மாற்றமாகவும் செயற்படுவதற்கு வாய்ப்புண்டு.

**முஸ்லிம் பெரும்பான்மை மாகாணசபை முஸ்லிம் காங்கிரசின் கோரிக்கை அல்ல.**

கிழக்கில் முஸ்லிம்களைப் பெரும்பான்மையாகக் கொண்ட முஸ்லிம் மாகாணசபைக் கோரிக்கை ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரசின் கோரிக்கை அல்ல. இது இலங்கை முஸ்லம்களின் ஏகோபித்த குரலாக 1986களில் உருவானது என்பதையும் இக் கோரிக்கை எழுந்த வேளை ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஓர் அரசியல் கட்சியாக அங்கீகரிக்கப்பட்டிருக்கவில்லை என்பதையும் நாம் கவனத்திற் கொள்ள வேண்டும். 1986 நவம்பர் 29ல் நடந்த மாநாடில்தான் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ்

தன்னை ஒரு அரசியல் கட்சியாக பிரகடனப்படுத்தியது. 1988 பெப்ரவரி 11ல்தான் அது ஓர் அரசியல் கட்சியாக தேர்தல் ஆணையாளரால் அங்கீகரிக்கப்பட்டது என்பதையும், முஸ்லிம் மாகாணக் கோரிக்கை அதற்கு முந்தியது என்பதையும் முஸ்லிமகள் அறிந்திருப்பது மிக அவசியமாகும்.

**முஸ்லிம் காங்கிரசின் நடவடிக்கையினால் கிழக்கில் ஏற்படவிருந்த முஸ்லிம் பெரும்பான்மை மாகாண சபைக்கு ஏற்பட்ட பின்னடைவு**

1987ல் இலங்கை - இந்திய அரசுகளுக்கிடையே இனப்பிரச்சினை தீர்வுக்கான உடன்படிக்கைப் பிரகாரம் மாகாண சபைகளுக்கான தேர்தல் நடை பெறுவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன.

இலங்கை முஸ்லிம்களின் ஏகோபித்த கோரிக்கையான கிழக்கில் முஸ்லிம் பெருமபான்மை மாகாண சபைக் கோரிக்கையைக் கைவிட்டு இந்தியாவின் அனுசரணையோடு முஸ்லிம் காங்கிரஸ் வடக்கு கிழக்கு ஒன்றிணைப்பை எந்த நிபந்தனையும் இல்லாமல் ஏற்று வடகிழக்கு மாகாணசபைத் தேர்தலில் பங்குபெற்றியது.

இந்தியாவின் கையாட்களைத் தவிர மற்ற அனைத்து தமிழர்களும் இத்தேர்தலைப் பகிஸ்கரித்தனர். வடக்கில் வேறு எவரும் தேர்தலில் போட்டியிட முன்வராததால் மாகாண சபைக்கான அங்கத்தவர்கள் தேர்தல் நடைபெறாமலே நியமிக்கப்பட்டனர். முஸ்லிம் காங்கிரசும் இந்தியாவின் கையாட்களும் தான் கிழக்கு மாகாணத்தில் நடைபெற்ற ஒன்றிணைந்த வடகிழக்கு மாகாண சபைக்கான தேர்தலில் பங்குபற்றினர்.

முஸ்லிம் காங்கிரஸ் கிழக்கில் முஸ்லிம் பெரும்பான்மை மாகாணக் கோரிக்கையைக் கைவிட்டுக் கிழக்கு மாகாணத்தில் ஒன்றிணைந்த வடகிழக்கு மாகாணசபைக்கான தேர்தலில் பங்குபற்றியதனால்தான் சர்வதேச மட்டத்தில் இத்தேர்தலுக்கான அங்கீகாரம் கிடைத்தது என்பதனைக் கிழக்கு முஸ்லிம்கள் அறிந்திருக்க வேண்டிய ஒரு முக்கியமான சம்பவமாகும்.

அடுத்ததாக ஜனாதிபதித் தேர்தலில் கிழக்கு மாகாணத்தில் முஸ்லிம் பெரும்பான்மை மகாணத்தை ஏற்படுத்துவதாகத் தேர்தல் விஞ்ஞாபனத்தில் வாக்குறுதியளித்த சிறிமாவோ பண்டார நாயக்க அவர்களுக்கு எதிராகப் போட்டியிட்ட றனசிங்க பிரேமதாச அவர்களை எந்த நிபந்தனையுமின்றி முஸ்லிம் காங்கிரஸ் ஆதரித்ததனால் பிரேமதாச அவர்கள் மிகச் சொற்ப அதிகப்படியான வாக்குகளினால் வெற்றியடைந்த சம்பவம்.

இந்தச் சம்பவங்களுக்கு பின் கிழக்கில் முஸ்லிம் பெரும்பான்மை மாகாண சபை அமைப்பதற்கான கோரிக்கைக்கு பெரும் பின்னடைவு ஏற்பட்டது.

கடந்த 20 வருட காலமாக இம் முஸ்லிம் மாகாணக் கோரிக்கையை காரிய சித்தமாக்க குரல் கொடுப்பதற்கோ அல்லது போராடுவதற்கோ கிழக்கு முஸ்லிம்கள் தயாராக இருப்பதாக ஒரு அறிகுறிதானும் தென்படவில்லை. இத்துடன் இன்றைய அரசியல் சூழலில் அரசாங்கத்தின் முஸ்லிம்கள் தொடர்பான அக்கறையின்மையும் சூழ்நிலைகளும், தமிழர்களின் அரசியல் இராணுவ நிலைப்பாடும் இக்கோரிக்கையை எந்த அளவு இன்று சாத்தியப்படுத்தலாம் என்ற ஐயப்பாட்டை யதார்த்தத்தளத்தில் ஏற்படுத்தியுள்ளது.

ஆகவே கிழக்கு முஸ்லிம்களை சூழ்ந்துள்ள துன்ப அழிவில் இருந்து காப்பதற்காக இக்காலகட்டத்தில் சாத்தியப்பாடுமிக்க கோரிக்கைகள், தீர்வுகள் பற்றி நாம் பேச வேண்டியவர்களாகவுள்ளோம். 'வைத்தால் குடும்பி அடித்தால் மொட்டை' என நாம் வெறும் வாய்பேச்சும் கனவுமாய் காலத்தை கடத்துவது கிழக்கு முஸ்லிம்களுக்கு மிகப்பெரும் ஆபத்தையும் அழிவையும்தான் தேடித்தரும்.

# 14. இலங்கை முஸ்லிம் அரசியல் சிந்தனையில் உடனடி மாற்றம் அவசியம்

1931ம் ஆண்டு நடைபெற்ற சட்டசபைத் தேர்தலில் நேரடியான மக்கள் வாககளிப்பின் மூலம் தெரிவு செய்யப்பட்ட முதல் முஸ்லிம் பாராளுமன்றப் பிரதிநிதியாக சேர் மாக்கான் மாக்காரே தெரிவு செய்யப்பட்டார். இவர் தெரிவுசெய்யப்பட்டது மட்டக்களப்பு தெற்கு தொகுதியாகும். மட்டக்களப்புத் தெற்குத் தொகுதி என்றால் காத்தான்குடி, கல்முனை, சம்மாந்துறை, அக்கரைப்பற்று, பொத்துவில் பகுதிகளை உள்ளடக்கிய பிரதேசமாகும்.

அன்று 1931 இல் தொகுதி ரீதியான தேர்தல் நடைபெற்றபோது இலங்கையில் மூன்று தொகுதிகளில் முஸ்லிம்களின் வாக்குப்பலத்தினால் பாராளுமன்றத்திற்கு பிரதிநிதிகளை அனுப்பக்கூடிய வாய்ப்பு இருந்தது. மட்டக்களப்புத் தெற்கு, புத்தளம், மத்திய கொழும்பு ஆகியன அத்தொகுதிகளாகும். ஆனால் தேர்தல் முடிவின்படி மட்டக்களப்புத் தெற்குத் தொகுதியில் மாத்திரம்தான் ஒரு முஸ்லிம் பிரதிநிதி தெரிவானார். முதன்முதலில் மக்களால் தெரிவு செய்யப்பட்ட முஸ்லிம் சட்டசபைப் பிரதிநிதி கிழக்கு மாகாணத்திலிருந்தே தெரிவு செய்யப்பட்டார் என்பது மிகவும் முக்கியமாகிறது.

பின்வந்த தொகுதி மாற்றங்களின்படி முஸ்லிம் பாராளுமன்றப் பிரதிநிதிகள் இலங்கையில் தெரிவு செய்யப்படக்கூடிய வாய்ப்பு பல தொகுதிகளுக்கு ஏற்படுத்தப்பட்டது. முஸ்லிம் பாராளுமன்றப் பிரதிநிதித்துவத்திற்கு தொகுதிகளாக அடையாளம் காணப்பட்டவை கல்முனை, சம்மாந்துறை, பொத்துவில், புத்தளம், மூதூர், மன்னார், கொழும்பு, பேருவலை, அக்குரணை தொகுதிகள் என்பதுதான். புத்தளம் தொகுதியைத் தவிர ஏனைய தொகுதிகள் அம்பாறை மாவட்டத்தைச் சேர்ந்த கல்முனை, சம்மாந்துறை, பொத்துவில், தொகுதிகள்தான். மற்றவை பல அங்கத்தவர் தொகுதிகளாகத்தான் அடையாளம் காணப்பட்டன.

இத்தொகுதிவாரி பாராளுமன்றப் பிரதிநிதித்துவத்தின் ஊடாக கிழக்கில் இருந்து தெரிவு செய்யப்பட்ட பாராளுமன்றப் பிரதிநிதிகளின் தலைமையாக தென்னிலங்கைத் தலைமையே விடாப்பிடியாகச் செயற்பட்டது. அத்துடன், கிழக்கிலிருந்து இத்தொகுதிகளில் பாராளுமன்றத் தேர்தலில் போட்டியிடுவதற்கு தென்னிலங்கையைச் சேர்ந்த சேர். றாசிக் பரீட், பதியுத்தீன் மஃமூத் போன்றவர்கள் முன்வந்தார்கள். 1931 ஆம் ஆண்டு முதல் முதலில் சட்டசபைக்கு மட்டக்களப்புத் தெற்குத் தொகுதியிலிருந்து தெரிவான சேர் மாக்கான் மாக்காரும் தென்னிலங்கையைச் சேர்ந்தவராகவே இருந்தார்.

இந்த வரலாற்றை நினைவுகூர வேண்டிய அவசியம் இன்று மீண்டும் ஏற்பட்டுள்ளது. இலங்கை முஸ்லிம்களின் மூன்றில் ஒரு பகுதியினர்தான் கிழக்கில் வாழ்கின்றனர். மூன்றில் இரண்டு பகுதியினர் தென்னிலங்கையிலும் வடமாகாணம் முழுவதிலும் சிதறி வாழ்கின்றனர். மூன்றில் ஒரு பகுதியினராகவுள்ள கிழக்கு முஸ்லிம்களிடம் உள்ள அரசியல் பலம், அவர்களின் வரலாற்று வாழ்விடம், புவியியல் அமைப்பு சார்ந்த சனத்தொகைச் செறிவேயாகும். அன்றிலிருந்து இன்றுவரை தனித்துவமாக முஸ்லிம் அரசியல் பிரதிநிதித்துவத்தை கட்டிக் காத்து வருகின்றவர்கள் கிழக்கு முஸ்லிம்களே.

இந்த நிலையில் தனித்துவமான முஸ்லிம் பாராளுமன்றப் பிரதிநிதித்துவத்தை தென்னிலங்கையில் எண்ணிக்கூடப் பார்க்கமுடியாது. தென்னிலங்கையில் இருந்து தெரிவு செய்யப்பட்ட அனைத்து முஸ்லிம் பாராளுமன்ற பிரதிநிதிகளும் சிங்கள மக்களின் பக்கபலத்தினால் தெரிவு செய்யப்பட்டவர்களேயாவர். விகிதாசாரத் தேர்தலின் அடிப்படையில் பார்த்தால் கொழும்பு, புத்தளம், கண்டி மாவட்டங்களில் வாழும் அனைத்து முஸ்லிம்களும் ஒன்றிணைந்து தனித்துவமான முஸ்லிம் பாராளுமன்றப் பிரதிநிதித்துவத்திற்காக வாக்களித்தால்

இம்மாவட்டங்களிலிருந்து முஸ்லிம்களால் தெரிவு செய்யபடும் பிரதிநிதித்துவம் கிடைப்பதற்கு வாய்ப்புள்ளது. ஆனால் கடந்த பல பொதுத்தேர்தல்கள் முடிவுகளின் படி இம்மாவட்டங்களில் வாழும் முஸ்லிம்களில் பெரும்பான்மையானோர் ஐக்கிய தேசியக் கட்சி, ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி ஆகிய தேசியக் கட்சிகளை ஆதரிப்பதிலேயே ஆர்வம் கொண்டிருக்கின்றனர்.

ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் 2004ஆம் ஆண்டுப் பொதுத் தேர்தலுடன் ஆறு பொதுத் தேர்தலை இதுவரை சந்தித்துள்ளது. இந்த ஆறு பொதுத்தேர்தலிலும்கூட ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் தென்னிலங்கையில் ஒரு பாராளுமன்றப் பிரதிநிதித்துவத்தைக்கூடப் பெறமுடியவில்லை. கடந்த பொதுத்தேர்தலில் கண்டி மாவட்டத்தில் தேசிய ஐக்கிய முன்னணி சார்பாக போட்டியிட்ட ரவூப் ஹகீம் அவர்கள் கூட தேர்தலில் தெரிவு செய்யப்படாமல் நியமன உறுப்பினராகவே தேர்தல் ஆணையாளரால் நியமிக்கப்பட்டார். இந்த உண்மை நிலையினை நாம் உணர்தல் வேண்டும்.

இலங்கை முஸ்லிம்களின் அரசியல், அபிலாஷைகள், அரசியல் தேவைகள், சூழலின் நெருக்கடிகள் போன்ற காரணிகளை மறுதலித்துவிட்டு அவர்களை ஒரு தனித்த அரசியல் அடையாளத்தின் கீழ் ஒரு போதுமே முன்னெடுக்க முடியாது!

இலங்கை முஸ்லிம்களுடைய அரசியல் மட்டுமல்லாது கலாசார, சமூக அமைப்பு முறைகளிலும் இம்மக்களிடையே பலவாறான வேறுபாடுகள் காணப்படுகின்றன. கிழக்கு முஸ்லிம்கள் தனித்த போக்காகவும் தென்னிலங்கை வடமாகாண முஸ்லிம்கள் வேறு போக்காகவுமே எப்போதும் தங்களுடைய இனத்துவ வாழ்வில் உள்ளனர். ஒட்டுமொத்தமாக இலங்கையில் ஒரு தனித்த இனமாக முஸ்லிம்கள் தங்கள் பொது அடையாளத்தின் மூலம் ஒன்றுபடும் அதே நேரம், இம்மக்களுடைய அரசியலை அதனுடைய நியாயமான கோரிக்கைகளை ஒரு பொதுத் தளத்தில் எப்போதுமே சந்திக்க வைக்க முடியாது இருந்திருப்பதை சுதந்திரத்திற்கு பின்னான இலங்கை முஸ்லிம்களின் அரசியல் வரலாற்றில் கண்டுவருகிறோம். 1989 ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸின் பாராளுமன்ற பிரவேசத்திற்கு முன் தென்னிலங்கை அரசியல் தலைமைகளே, இலங்கை முஸ்லிம்களின் ஏகபோக அரசியல் தலைமையாக அரசியல் நடாத்திக் கொண்டிருந்தன. இந்தத் தலைமை முஸ்லிம்களின் உணர்வுகளை முற்றாகப் பிரதிபலிக்கும் ஐக்கிய தேசியக் கட்சி, ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி தலைமையாக இல்லாது விட்டாலும் கூட தென்னிலங்கை முஸ்லிம்களின் நலனில் அதிக அக்கறை கொண்டிருந்தது. இன்னொரு வகையில் சொல்வதானால் அத்தலைமைகளின் பூரண அக்கறை தென்னிலங்கை முஸ்லிம் நலன் சார்பானதாகவே இருந்தது.

## முஸ்லிம் காங்கிரஸின் தோற்றத்திற்கான வரலாறு

வரலாறு தந்த நெருக்கடியின் காரணமாக தென்னிலங்கை முஸ்லிம் அரசியல் தலைமைக்கும் கிழக்கு முஸ்லிம் மக்களுக்குமிடையே அடிப்படையான முரண்பாடுகள் ஏற்படத் தொடங்கின. ஐக்கிய தேசியக் கட்சி, ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி தென்னிலங்கை முஸ்லிம் தலைமைகளால் வடகிழக்கு முஸ்லிம்களின் இனத்துவப் பாதுகாப்பிற்கு எவ்விதமாக காப்பீடுகளையோ தீர்வினையோ பெற்றுத்தர முடியாது என்பது உணரப்பட்டது, இவ்வுணர்தலின் பிரதிபலிப்பே ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸுக்கான வடகிழக்கு முஸ்லிம்களின் அங்கீகாரமாகும். அதாவது வடகிழக்கு முஸ்லிம்களின் அரசியல் பிரதிநிதித்துவத்திற்கான தலைமையுமாகும். இம்மக்களின் அரசியலை முதன்மைப்படுத்தும் வடகிழக்கு முஸ்லிம்களுக்கான அரசியல் ஸ்தாபனத்தின் தேவையாக அது வெளிப்பட்டது. சுதந்திரத்திற்குப் பின் வடகிழக்கு முஸ்லிம் பிரதேசங்களில் தங்கள் ஏகோபித்த அரசியல் ஸ்தீரணத்தை பெற்றிருந்த சிங்களத் தேசிய கட்சிகளின் தென்னிலங்கை சார் முஸ்லிம் தலைமையை முஸ்லிம் காங்கிரஸின் வருகையுடன் வடக்கு கிழக்கிலிருந்து பெருமளவு அகற்ற முடிந்தது என்பதை நாம் உணர்தல் வேண்டும்.

ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரின் முதல் அரசியல் பிரவேசம் 1977 இல் கிழக்கிலங்கை முஸ்லிம் ஐக்கிய முன்னணியிலேயே ஆரம்பிக்கிறது. 1977 இல் நடைபெற்ற பாராளுமன்றத் தேர்தலில் தென்னிலங்கை அரசியல் தலைமையை எதிர்த்து தமிழர் விடுதலைக் கூட்டணியுடன்

இணைந்து கல்முனை, சம்மாந்துறை, மூதூர் போன்ற முஸ்லிம் தொகுதிகளில் இக்கிழக்கிலங்கை முஸ்லிம் ஐக்கிய முன்னணி தீவிரமாக பிரச்சாரத்தில் ஈடுபட்டது. முஸ்லிம் காங்கிரஸ் தலைவரே இப்பிரச்சாரத்தில் தீவிரப்பங்காற்றினார் என்பதை யாவரும் அறிவர். அதில் கிழக்கு முஸ்லிம்களுக்கு ஒரு அரசியல் தலைமைத்துவம் ஏற்படுத்தப்பட வேண்டும் என்பதே பிரதான தேர்தல் கோஷமாகவிருந்தது.

பின் 1981 இல் நடைபெற்ற மாவட்ட அபிவிருத்திச் சபைத் தேர்தல் வந்தவுடன் கிழக்கிலங்கை முஸ்லிம் ஐக்கிய முன்னணியில் இருந்தவர்கள் ஸ்ரீமாவுடன் ஐக்கியமாகிவிட அஷ்ர∴ப் தனித்துவிடப்பட்டிருந்தார். ஆனால் அஷ்ர∴ப் அவர்கள் தனித்து நின்று தமிழர் கூட்டணியுடன் - கிழக்கிலங்கை முஸ்லிம் ஐக்கிய முன்னணி கூட்டு வேட்பாளர் பட்டியலில் இடம்பெற வேண்டும் என்பதாகும். இக்கோரிக்கையை தமிழர் விடுதலைக் கூட்டணி நிராகரித்தது. இது அஷ்ரப் அவர்களை மிகவும் பாதித்தது. தென்னிலங்கை பேரினவாதக் கட்சிகள், வடக்கு கிழக்கு தமிழ்த் தலைமைகள் இரண்டையும் நம்பமுடியாது. கிழக்கு முஸ்லிம்களுக்கு உடனடியாக தனிக்கட்சி அமைக்கப் படவேண்டுமென்ற எண்ணமே மக்கள் மத்தியில் ஏற்பட்டது. அஷ்ர∴ப் அவர்கள் இதனைக் காரிய சித்தமாக்கும் சுக்கானைப் பிடிக்கத் தொடங்கினார். அவரின் முதல் கோஷமே இப்படித்தான் இருந்தது. "கிழக்கில் பாதிக்கப்பட்ட முஸ்லிம்களுக்கு குரல் கொடுக்க ஆட்சி அதிகாரத்தில் எவருமில்லை."

இதற்கு முன்பு இனப்பிரச்சினை விடயத்தில் அரசாங்கத்தால் கூட்டப்பட்ட சர்வகட்சி மாநாட்டு நடப்புகளை சற்றுப் பார்க்க வேண்டியது அவசியம். 1984 ஆம் ஆண்டு சர்வகட்சி மாநாடு ஜே.ஆர். ஜயவர்தனா அவர்களால் கூட்டப்பட்டது. முஸ்லிம்களின் இனப்பிரச்சினை விடயமாக இலங்கை முஸ்லிம் அமைப்புகளின் பிரதிநிதிகளாகப் பங்குபற்றுவதற்கு ஒரு பொது அமைப்பு ஏற்படுத்துப்பட்டது. ஆந்த அமைப்புத்தான் முஸ்லிம் கவுன்ஸில். இதுதான் 1984 இல் சர்வகட்சி மாநாட்டில் முஸ்லிம் தரப்பில் பங்குபற்றிய அமைப்பு. இக்குழுவில் எம்.சீ.எம். கலீல். சேர் ராசிக் பரீத், பதியுதீன் ம∴மூத், ஏ. அஸீஸ், பாரிஸ்டர் ஹாசீம் கிழக்கிழங்கை முஸ்லிம்களின் பிரதிநிதியாக எம்.எச்.எம். அஷ்ர∴ப் அவர்களும் கலந்து கொண்டார். சர்வகட்சி மாநாட்டின் இரண்டாம் நாளின் போதே தென்னிலங்கையைச் சேர்ந்தவர்கள் ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதிநிதியாகப் பேசத்தொடங்கி விட்டனர். இச்சர்வகட்சி மாநாட்டில் கிழக்கு முஸ்லிம்களின் இனப் பிரச்சினை தென்னிலங்கை முஸ்லிம்களின் தலைமையால் மூடிமறைக்கப்பட்டது. பின்பு 1986 இல் கூட்டப்பட்ட சர்வகட்சி மாநாட்டு முஸ்லிம் பிரதிநிதிகள் குழுவில் அஷ்ர∴ப் பங்குபற்றவில்லை.

ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸின் 6 ஆவது வருடாந்த மாநாட்டு அழைப்பிதழில் முஸ்லிம்களின் நீண்ட கால வேட்கை – கனவு! கிழக்கிலங்கை முஸ்லிம்களின் இலட்சியக் கனவு (தவிர்க்க முடியாத வரலாற்றுத் தேவை) ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் என்றே குறிப்பிடப்பட்டுள்ளது.

1987 இல் மாகாணசபைத் தேர்தலில் முஸ்லிம் காங்கிரஸ் போட்டியிட்ட போது கிழக்கில் 1[illegible] மாகாணசபை உறுப்பினர்களும் தென்னிலங்கையில் 12 மாகாண சபை உறுப்பினர்களும் தெரிவுசெய்யப்பட்டனர். (ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி இத்தேர்தலில் போட்டியிடவில்லை) ஆனாலும் பின்வந்த எந்த மாகாணசபைத் தேர்தலிலும் தென்னிலங்கையில் முஸ்லிம் காங்கிரசால் இப்படி வெற்றிபெற முடியாமல் போய்விட்டது. இதற்கான பிரதான காரணம் தென்னிலங்கை முஸ்லிம் மக்களின் அரசியல் தேவையும் உணர்வும், சூழலும் கிழக்கு முஸ்லிம்களிடமிருந்து மிக வேறுபட்டு நிற்பதேயாகும்.

தென்னிலங்கை முஸ்லிம்களினதும், கிழக்கு முஸ்லிம்களினதும் அரசியலுக்குமிடையே மிகப்பெரும் வேறுபாடு நிலவுகின்றது. இன்னொரு வகையில் சொல்வதானால் பெரும்பான்மையான விடயங்களில் இவ்விரு பிரதேச முஸ்லிம்களின் அரசியல் உணர்வுகள், தேவைகள், எப்போதுமே எதிர்நிலை வகிக்கக்கூடியதாகவே உள்ளன. இது மிகத் தெளிவாக கிழக்கு முஸ்லிம்களுடைய அரசியல் கோரிக்கையில் தென்னிலங்கை முஸ்லிம்களால் நன்கு வெளிப்படுத்தப் படுகின்றது. கிழக்கு முஸ்லிம்களின் அரசியல் விடுதலைக்காக தோற்றம் பெற்ற ஸ்ரீ லங்கா முஸ்லிம்

காங்கிரஸ் தனது பாராளுமன்ற அரசியல் சிந்தனைத் திசைமாற்றப் போக்கால் அதன் அரசியலை தென்னிலங்கைக்கும் வியாபித்ததன் காரணமாக கடந்த 17 வருடங்களில் அதனுடைய அரசியலில் கிழக்கு முஸ்லிம்களின் பாதுகாப்பு, காணிப்பிரச்சினை, மீள்குடியேற்றம், அதிகாரப்பகிர்விற்கான அலகு ஆகியவற்றில் ஆக்கபூர்வமான கோரிக்கைகளை தீர்க்கமாக முன்வைத்து அக்கோரிக்கைகளை வென்றெடுக்க முடியாது போயிருப்பதையும் காண்கிறோம்.

**கிழக்கு முஸ்லிம்களின் அரசியல் தலைமை கிழக்கு முஸ்லிம்களின் கோரிக்கைகளை வென்றெடுப்பதற்காக தனது அரசியலை கிழக்கிற்குள், முஸ்லிம் (சோனக) தேசத்திற்குள் மாத்திரமே முன்னெடுப்பதன் மூலம் தான் தங்களுடைய கோரிக்கைகளை வென்றெடுக்க முடியும்.**

கிழக்கு முஸ்லிம்களுக்காக உருவாக்கப்பட்ட முஸ்லிம் காங்கிரஸ் தென்னிலங்கைக்குள்ளும் கால்வைத்ததன் மூலம் பெரும் அரசியல் சிக்கலை சந்திக்க வேண்டியிருக்கிறது. தென்னிலங்கை முஸ்லிம் அரசியல் தலைமைகள் கிழக்கு முஸ்லிம்களின் நியாயமான கோரிக்கைகளை உதாசீனம் செய்கின்றனர். இதனால்தான் கிழக்கு அரசியல் தலைமைக்கும், தென்னிலங்கை அரசியல் தலைமைக்குமிடையில் பனிப்போர் மூண்டது. அஷ்ர.்.ப் அவர்களின் மறைவிற்குச் சற்று முன்புகூட பௌஸி – அஷ்ர.்.ப் மோதல் தேசிய ரீதியாக வெடித்ததை நாம் காணக் கூடியதாக இருந்தது.

தென்னிலங்கை அரசியலில் கால் வைத்ததன் காரணமாக ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் கிழக்கு முஸ்லிம்களின் இனப்பிரச்சினை விடயத்தில் ஆக்கபூர்வமாகச் செயற்படமுடியாமல் போய்விட்டது. தென்னிலங்கையில் அது தமது அரசியல் கோரிக்கையை அடக்கியே வாசித்தது. இத்தவறை முஸ்லிம் காங்கிரஸ் விடாது போயிருந்தால் ஒருவேளை அக்கட்சி கிழக்கு முஸ்லிம்களின் இனப்பாதுகாப்பு விடயத்தில் ஆக்கபூர்வமாகப் பணியாற்றியிருக்க முடியும்.

ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸின் கொள்கை அடிப்படை நோக்கங்களிலிருந்து திசைமாறும் போக்கு, அதனுடைய பாராளுமன்ற சந்தர்ப்பவாத அரசியல் பிரவேசத்துடன் தொடங்கிவிடுகிறது. எக்கட்சியினை அது எதிர்த்ததோ, எந்த முஸ்லிம் பிரதிநிதிகளைக் கையாலாகாத பேசாமடந்தை என்றதோ அதைவிட மிக மோசமாக தென்னிலங்கை சந்தர்ப்பவாத அரசியலுடன் அது சமரசம் செய்து கொண்டது. ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் தென்னிலங்கை சார் தலைமையின் பண்புப்போக்கை படிப்படியாகப பெறத்தொடங்கியது. ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஒரு இனவாத கட்சி என்றும் இன்றைய காலகட்டத்தில் அப்படியான ஒரு இனவாத அரசியல் கட்சி இலங்கை முஸ்லிம்களுக்கு உகந்ததல்ல என்றும் தலைவர் அஷ்ரப் பகிரங்கமாக விமர்சித்தார். இதனால் தேசிய ஐக்கிய முன்னணியாகவும், அமைச்சர் பதவியுமாகவும் ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸின் போக்குகள் திசை திரும்பின. பெரும்பாலும் கிழக்கிலங்கை முஸ்லிம் வாக்குகளினால் பெறப்பட்ட தேசியப்பட்டியல் அங்கத்துவத்தை கிழக்கிலங்கை முஸ்லிம்களின் முக்கியப்பிரச்சினைகளில் எந்தவித பரிச்சயமும் இல்லாத புஹாருதீன் அவர்களுக்கும், அசித்தப் பெரேரா ஆகியோருக்கும் தாரைவார்த்துக் கொடுத்தமை எந்தவகையிலும் நியாயப்படுத்த முடியாததாகும்.

ஜனாதிபதி பிரேமதாச அவர்களுக்கு எதிராகப் பாராளுமன்றத்தினால் கொண்டுவரப்பட்ட நம்பிக்கை இல்லாப் பிரேரனை முன்வைக்கப்பட்ட போது முஸ்லிம்காங்கிரசின் தேசியத் தலைவர் அஷ்ரப் அம்பாரைக் கரையோர மாவட்டம், கிழக்கு முஸ்லிம்களின் முக்கிய காணிப் பிரச்சினைகள் தீர்வுக்கான கோரிக்கை எதையும் முன்வைக்காமல் அப்துல் மஜீத், மன்சூர், மஹ்ரூப் ஆகியோர் அப்போது நடைபெறவிருந்த பொதுத் தேர்தலில் கிழக்கு மாகாணத்தில் முஸ்லிம் காங்கிரசை எதிர்த்துப் போட்டியிடக்கூடாது என்பதைத்தான் முன்வைத்து ஜனாதிபதி பிரேமதாச அவர்களுக்கு ஆதரவாக நடந்து கொண்டார். இந்த கோரிக்கைக்கு அமைவாக அப்துல் மஜீத், மன்சூர், மஹ்ரூப் ஆகியோர் தேர்தலில் போட்டியிடாமலே தேசியப்பட்டியல் மூலமாக பாராளுமன்ற அங்கத்தவர்களாகவும் அமைச்சர்களாகவும் நியமிக்கப்பட்டனர். இது கிழக்கு மாகாணத்தில் முஸ்லிம் காங்கிரஸ் பாராளுமன்றத் தேர்தலில் வெற்றி பெறுவதற்குப்

பெரும் அனுகூலமாக அமைந்ததேயன்றி முஸ்லிம்களின் பிரச்சினைகளுக்கு எந்தவிதத் தீர்வும் ஏற்பட உதவவில்லை.

தமிழரசுக் கட்சி 1956, 1960 களில் ஐக்கிய தேசியக் கட்சியுடன் எப்படிக் கூட்டுச் சேர்ந்து தமிழ்த் தேசியவாதப் போராட்டத்தை வெறும் மக்களின் உணர்வுக் கோஷமாக முன்னெடுத்து வந்ததோ, எப்படி திருச் செல்வத்தை மந்திரியாக்கியதோ அதைப் போலவே 1994 இலும், 2001 இலும், 2004 இலும் முஸ்லிம் காங்கிரஸ் தலைமை நடந்து கொண்டிருக்கிறது. ஆனால் எப்போதும் தமிழரசுக் கட்சி வடக்கு கிழக்கிற்கு வெளியில் அதனுடைய பாராளுமன்ற அரசியலை முன்னெடுத்ததில்லை. அக்கட்சி தென்னிலங்கையிலுள்ள தமிழ் மக்களின் அரசியலை அவர்களே தீர்மானிப்பதற்கும் மலையகத் தமிழ் மக்களின் அரசியலை மலையகத் தமிழர்களே தீர்மானிப்பதற்கும், வழிவிட்டே தமிழ் தேசிய போராட்டத்தை வலியுறுத்தி வருகின்றது என்பதை கிழக்கு முஸ்லிம்கள் உணர்தல் வேண்டும்.

முஸ்லிம் காங்கிரஸ் அடிப்படையாக தென்னிலங்கை ஏகபோக அரசியல் பண்பு மாற்றத்தைப் பெற்றிருந்தும் கிழக்கு முஸ்லிம்களுக்கு முஸ்லிம் காங்கிரஸ் தலைமை அஷ்ர.்.பாக இருக்கின்றார் என்பது ஓரளவு நிம்மதியையும் ஆறுதலையும் தந்தது. தேர்தல் அரசியலுக்காக வாக்களித்த தலைவர் அஷ்ரபை நம்பி நின்ற கிழக்கு முஸ்லிம்களுக்காக அவர் பேசவேண்டிய நிர்ப்பந்தத்தில் இருந்தார். அஷ்ர.்.ப் ஹெலி விபத்தில் மரணமடைந்து விட்டார். அதன்பின் முஸ்லிம் காங்கிரஸின் அரசியல் தலைமை கைமாறிவிட்டது. அவருக்குப் பின் முஸ்லிம் காங்கிரசுக்குள் தலைமைப் பதவிக்குப் போட்டியிட்ட இருவரும் கிழக்கைச் சேர்ந்தவர்கள் அல்ல. இப்படியானதொரு இக்கட்டான சூழலில்தான் கிழக்கு முஸ்லிம்களின் அரசியல் இன்று சிக்கித்திணறுகிறது.

கிழக்கு முஸ்லிம்கள் வடமாகாண, தென்னிலங்கை முஸ்லிம்களிடம் தமது கருத்தினை மிகத்தெளிவாக முன்வைக்க வேண்டியவேளை வந்துள்ளது. கிழக்கு முஸ்லிம்களின் அரசியலையும் தென்னிலங்கை முஸ்லிம்களின் அரசியலையும் மிக வெளிப்படையாக வேறுபடுத்திப்பார்க்கவே அது நிர்ப்பந்திக்கிறது. மேலும் வடக்கு கிழக்கு முஸ்லிம்களுக்குள் இருக்கும் அரசியல் வேறுபாட்டினையும் புறக்கணிக்காது வடக்கு முஸ்லிம்களை அவர்களுடைய அரசியலை தீர்மானிக்கும் உரிமையினையும் அங்கீகரிக்கிறது. இப்போக்கினால் மட்டுமே முஸ்லிம்களுக்கான இனத்துவப் பாதுகாப்புத் தீர்வினைப் பெறமுடியும்.

அண்மையில் அனுராதபுரம், பலங்கொட, தம்புள்ள ஆகிய இடங்களில் முஸ்லிம் பள்ளிவாசல்கள் புனித ஸ்தலங்கள் தாக்கப்பட்டதை கண்டித்து அனைத்துக் கடைகளையும் மூடி பகிரங்கமாக “ஹர்தால்” நடத்தி முஸ்லிம்களின் எதிர்ப்பைத் துணிச்சலுடன் நாட்டுக்கும் வெளி உலகுக்கும் தெரியப்படுத்தியவர்கள் கிழக்கு முஸ்லிம்கள்தான். தம்புள்ள ஜும்மா பள்ளியில் 2012 ஏப்ரல் 27 வெள்ளிக்கிழமை ஜும்மா தொழுகை நடைபெறுவதை தடை செய்தவர்களுக்கு எதிராக எந்தவிதச் சட்டநடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. கண்டி மாவட்டத்திலிருந்து நியமிக்கப்பட்ட ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தேசியத் தலைவர் இன்றைய அரசாங்கத்தின் நீதி அமைச்சர் என்பது குறிப்பிடத்தக்கது.

முஸ்லிம்களைத் தென்னிலங்கையிலும், வடமாநிலத்திலும் சூழ்ந்துள்ள இனவாத ஆபத்திலிருந்து காப்பாற்றவும், சுதந்திரமாகக் குரல் கொடுக்கவும் கிழக்கு முஸ்லிம்களால் மட்டும்தான் முடியும். மாறாக அனைத்து முஸ்லிம்களின் அரசியலையும் பாராளுமன்ற நியமன அங்கத்துவத்திற்காகவும் மந்திரிப்பதவிக்காகவும் ஒரு சட்டியில் போட்டுத்தான் சாம்பாராக ஆக்குவோம் என்றால் இலங்கையில் வாழும் எந்த முஸ்லிமுடைய உரிமையையும் பாதுகாக்க முடியாமல் போய்விடும்.

# 15. வடகிழக்குத் தமிழரும் முஸ்லிம்களும் ஒன்றுபட்டால்தான் உண்டுவாழ்வு

**✪ வடக்கு கிழக்கு மாகாணங்கள் விரைவில் சிங்கள மயமாகுவதிலிருந்து பாதுகாக்கப்பட வேண்டுமானால் இலங்கை-இந்திய உடன்படிக்கையில் தமிழ் பேசும் மக்களின் வரலாற்று வாழ்விடம் எனக்கூறப்பட்டிருக்கும் வடக்கு கிழக்கு மாகாணங்கள் ஒன்றிணைக்கப்பட்டு தனியான ஒரு மாகாண சபை ஏற்படுத்தப்பட வேண்டும்.**

சிறுபான்மை மக்களின் உரிமைகளையும், பிரச்சினைகளையும் பெரும்பான்மையினர் தொடர்ந்து திட்டமிட்டுப் புறக்கணித்து வருவதே இன்று இலங்கையில் ஏற்பட்டுள்ள பயங்கரவாத நடவடிக்கைகளுக்கும் நாட்டுப் பிரிவினைப் போராட்டத்திற்கும் முக்கிய காரணங்களாகும்.

இலங்கையின் இனப்பிரச்சினைக்கும் அதனைத் தொடர்ந்து ஏற்பட்ட வன்செயல்களுக்கும் தீர்வுகாணும் அவசியத்தையும், இலங்கையில் வாழும் சகல இன மக்களின் பாதுகாப்பு, நல்வாழ்வு, ஆகியவற்றையும் கருத்தில் கொண்டு 29-07-1987 இல் இலங்கை-இந்திய உடன்படிக்கை ஏற்பட்டது.

இலங்கையின் ஐக்கியம், இறைமை, பிரதேச ஒருமைப்பாடு என்பனவற்றைப் பாதுகாக்கும் நோக்கத்தோடு சிங்களவர், தமிழர், முஸ்லிம்கள், பறங்கியர் ஆகிய பல இன மக்கள்வாழும் பல மொழி பேசும் ஒரு நாடாக இலங்கை ஏற்றுக் கொள்ளப்பட்டு ஒவ்வெரு இனமக்களும் அக்கறையோடு பேணிப் பாதுகாக்க வேண்டிய தனித்துவமான கலாசாரத்தையும், மொழியையும் கொண்டுள்ளவர்கள் என்பதும் அங்கீகரிக்கப்பட்டுள்ளன. வடக்கு கிழக்கு மாகாணங்கள் தமிழ் பேசும் மக்களின் வரலாற்று வசிப்பிடம் என்றும் இவர்கள் எக்காலத்திலும் மற்ற இன மக்களோடு இங்கு சேர்ந்து வாழ்ந்து வந்திருக்கிறார்கள் என்பதும் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளன.

மாகாணசபைகள் ஏற்படுத்தல், மாகாணங்களை ஒன்றிணைத்தல், மாகாண சபைகளுக்கான தேர்தல்கள், கிழக்கு மாகாணத்தில் நடத்த வேண்டிய உத்தேச சர்வசன வாக்கெடுப்பு, அரசகரும மொழிச்சட்ட அமுலாக்கம் ஆகியவை சம்பந்தமான பிரேரணைகளை நடைமுறைப்படுத்த இலங்கைப் பாராளுமன்றத்தில் சட்டம் ஏற்படுத்த வெண்டும் என்றும் இலங்கை-இந்திய உடன்படிக்கையில் முக்கிமாகக் கூறப்பட்டுள்ளன.

ஜனாதிபதியின் பிரகடனத்தைத் தொடர்ந்து வடக்கு கிழக்கு மாகாணங்களின் தற்காலிக இணைப்பு 1988 செப்டம்பர் 7ஆம் திகதி அறிவிக்கப்பட்டது. செப்டம்பர் 19ஆம் திகதி ஒன்றிணைந்த வடகிழக்கு மாகாண சபைக்கான தேர்தல் அறிவிக்கப்பட்டு, ஒக்டோபர் 10ஆம் திகதி தேர்தல் ஆணையாளரால் நியமனப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டன. தேர்தல் 1988 நவம்பர் 19ஆம் திகதி நடைபெறும் என்றும் அறிவிக்கப்பட்டது.

போட்டியிட எவரும் முன்வராததால் வடமாகாணத்தில் தேர்தல் நடைபெறவில்லை. இங்கு அங்கத்தவர்கள் அனைவரும் மக்களால் தேர்ந்தெடுக்கப்படாமல், ஈ.பி.ஆர்.எல்.எப்., ஈ.என்.டி.எல்.எப்., டெலோ ஆகிய இயக்க உறுப்பினர்களும் வேறு சிலரும் அங்கத்தவர்களாக நியமிக்கப்பட்டனர். 1988 நவம்பர் 19ஆம் திகதி கிழக்கு மாகாணத்தில் நடந்த தேர்தலின்படி வடக்கு கிழக்கு மாகாண சபைக்கு அங்கத்தவர்கள் தெரிவு செய்யப்பட்டனர்

**<u>வடகிழக்கு மாகாண சபை எதிர் கொண்ட முக்கிய பிரச்சினைகள்</u>**

வடகிழக்கு மாகாண சபை 1988 டிசம்பர் தொடக்கம் 1990 மார்ச் மாத காலத்தில் அரசியல் யாப்பின் 13வது திருத்தத்தினால் மாகாணசபைகளுக்குப் பகிர்ந்தளிக்கப்பட்ட அதிகாரங்களை

நடைமுறைப்படுத்துவதில் பல பிரச்சினைகளுக்கு முகங்கொடுக்க நேர்ந்தது. ஒன்றிணைந்த வடகிழக்கு மாகாணசபை அதன் 14மாத நிருவாகத்தில் பலதரப்பட்ட பிரச்சினைகளால் ஆட்சி நடத்த முடியாமல் தத்தளித்தது.

வடகிழக்கு மாகாணசபையின் அன்றைய முதலமைச்சராகவிருந்த வரதராஜப் பெறுமாள் 1990ம் ஆண்டு மார்ச்சு மாதம் முதலாம் திகதி நடந்த மாகாணசபையின் விஷேட கூட்டத்தில் ஜனாதிபதி பிரேமதாச அவர்களின் அரசாங்கத்திற்கு உடனடியாக நிறைவேற்றுவதற்காகச் சமர்ப்பிக்கப்பட்ட 19 அம்சக் கோரிக்கைகள் நிறைவேற்றப்படாமை காரணமாகத் தன்னிச்சையாக தமிழ் ஈழத் தனி நாட்டினைப் பிரகடனம் செய்தார். அதனைத் தொடர்ந்து வடகிழக்கு மாகாணசபை கலைக்கப்பட்டது.

பலத்த எதிர்ப்புக்கு மத்தியில் ஜனாதிபதிகளாகப் பதவி வகித்துவந்த ரணசிங்க பிரேமதாச, டி.பீ. விஜேதுங்க மற்றும் சந்திரிகா பண்டாரநாயகா குமாரணதுங்க ஆகியோர் பேச்சுவார்த்தை மூலம் ஒரு இணக்கப்பாட்டிற்கு வந்ததன் பின் வடக்கு கிழக்கு மாகாணங்களின் எதிர்காலம் பற்றி இறுதிமுடிவு எடுக்கமுடியும் என்ற நல்லெண்ணத்தின் பேரில் தற்காலிக ஒன்றிணைப்பை தொடர்ந்து நீடித்து வந்தனர்.

பின்பு 2006 ஒக்டோபர் 16, திங்கட்கழமை உச்ச நீதிமன்றத்தால் அரசாங்க வர்த்தமானியில் ஜனாதிபதியினால் அவசரகால நிலமையில் வெளியிடப்பட்ட பிரகடனத்தால் வடமாகாணமும் கிழக்குமாகாணமும் ஒன்றிணைக்கப்பட்டமை செல்லுபடியாகாது எனத்தீர்ப்பளிக்கப்பட்டது.

**ஒன்றிணைந்த வடகிழக்குப் பிரிக்கப்பட்டதன் பின்னர் கிழக்கு மாகாணத்தில் ஏற்பட்டுவரும் மாற்றங்கள்**

ஒன்றிணைந்த வடகிழக்கு பிரிக்கப்பட்டதன் பின் கிழக்கு மாகாணத்தை சிங்கள மயமாக்கும் திட்டம் மிகவும் தீவிரமாக நடைபெற்று வருகிறது.

இத்திட்டத்தின் குறிக்கோள் அதிவிரைவில் சிங்கள மக்களைக் கிழக்கு மாகாணத்தில் ஆகக்கூடிய இனத்தவராக்குவதுதான். இந்த மறைமுகமான திட்டம் திருகோணமலை மாவட்டத்தில் அரச உதவியோடுகூடிய திட்டமிட்ட சிங்களவர் குடியேற்றம், உல்லாசப் பிரயாணம், பௌத்தமத மறுமலர்ச்சி ஆகியவற்றினை நோக்கமாகக் கொண்ட அபிவிருத்தித் திட்டங்கள், அம்பாறை மாவட்டத்தில் அட்டாளைச்சேனைப் பிரதேச சபைப் பிரதேசத்தில் உள்ள ஒலுவில் துறைமுகம், தென்கிழக்குப் பல்கலைக்கழகம் உட்பட தீகவாபி பிரதேசத்தையும் உள்ளடக்கிய ஒரு பிரதேசசபையையும் செயலகத்தையும் புதிதாக ஏற்படுத்தி இப்பிரதேசத்தில் சிங்களவரைக் குடியேற்றல், தொப்பிகல (குடும்பிமலை) பிரதேசத்தில் விவசாயத்தை அடிப்படையாகக் கொண்ட அபிவிருத்தித் திட்டங்களை மட்டக்களப்பு மாவட்டத்தில் உடனடியாக ஆரம்பித்து சிங்களமக்கள் அதிகப்படியாக வரக்கூடிய குடிசன மாற்றத்துக்கான ஏற்பாடுகள் மிக மும்மூரமாக நடைபெற்று வருகின்றன.

கிழக்கு மாகாண சிங்களமயமாக்கல் திட்டப்படி வடகிழக்குப் பிரிக்கப்பட்டதன் பின் கிழக்கு மாகாண நிருவாகம் இனரீதியாகப் பெரும் மாற்றமடைந்து வருகிறது. முன்னாள் திருகோணமலை அரசாங்க அதிபர்கள் கிழக்கு மாகாண முதற் செயலாளராகவும், பொதுநிர்வாகச் செயலாளராகவும் பதவியேற்றுள்ளனர். முன்னாள் மாத்தளை அரசாங்க அதிபர் மாகாண பொது நிர்வாகசேவை ஆணைக்குழுவின் செயலாளர். மேலும் கிழக்கு மாகாண ஆளுனர் போன்ற உயர் பதவிகளுக்கு பல முன்னாள் இராணுவ அதிகாரிகள் நியமிக்கப் பட்டிருக்கின்றனர். ஆனால் முஸ்லிம்கள் பெரும்பான்மையாகவுள்ள அம்பாறை, திருகோணமலை மாவட்டங்களுக்கு இற்றைவரை முஸ்லிம் மாவட்ட செயலாளர் எவரும் நியமிக்கப்படவில்லை. ஊவா மாகாணத்தில் ஒருபகுதியாகவிருந்த பிந்தனைப்பத்து சிங்களவர் ஒரு இலட்சம் பேர் கிழக்கு மாகாண அம்பாறை மாவட்டத்துடன் சேர்க்கப்பட்டுள்ளனர்.

மேற்படி நடவடிக்கைகளை தடுத்து நிறுத்த கிழக்கு மாகாண சபையிலுள்ள தமிழ் பேசும் அங்கத்தவர்களாலோ அல்லது கிழக்கு மாகாண அமைச்சர்களாலோ இயலாமலிருக்கிறது.

ஒன்றிணைந்த வடகிழக்குப் பிரிக்கப்பட்டபின் நடைபெற்ற கிழக்கு மாகாண சபைக்கான தேர்தலின் போது ஆகக்கூடுதலான பிரதிநிதிகளைத் தெரிவு செய்யும் இனத்தவர்களில் ஒருவர் கிழக்கு மாகாண முதலமைச்சராக நியமிக்கப்படுவார் என்ற வாக்குறுதி கொடுக்கப்பட்டது. 2008 மே மாதம் 10ஆம் திகதி நடந்த கிழக்கு மாகாணசபைக்கான தேர்தலில் முஸ்லிம்கள் 17 அங்கத்தவர்களும், தமிழர் 11 அங்த்தவர்களும், சிங்களவர் 7 அங்கத்தவர்களும் தெரிவு செய்யப்பட்டனர். ஆனால் கிழக்கு மாகாண சபைக்கு ஆகக்கூடுதலான அங்கத்தவர்களைத் தெரிவு செய்த முஸ்லிம் இனத்தைச் சேர்ந்த ஒருவருக்கு முதலமைச்சர் பதவி கொடுக்கப்படாமல் கிழக்கு மாகாண முஸ்லிம்கள் ஏமாற்றப்பட்டனர்

**வடகிழக்கு முஸ்லிம்களுடன் சில வார்த்தைகள்**

இந்திய அரசாங்கத்தின் உறுதியான தலையீட்டினால் இலங்கை - இந்திய உடன்படிக்கையும் அரசியல் சாசன 13வது திருத்தச் சட்டமும் ஏற்பட்டன. தமிழர்களின் பிரச்சினைக்கு ஒரு தீர்வாக தற்காலிகமாக ஒன்றிணைக்கப்பட்ட வடகிழக்கு மாகாண சபை ஏற்படுத்தப்பட்டது. மேலும் கிழக்கில் சர்வசன வாக்கெடுப்பு இல்லாமலே வடக்கும் கிழக்கும் நிரந்தரமாக ஒன்றிணைந்தே இருக்க வேண்டும் என்பதும் அரசியல் சாசனத்தின் 13வது திருத்தத்தில் குறிப்பிட்டிருக்கும் காணி உரிமையும் பொலிஸ் அதிகாரங்களும் மாகாண சபைகளுக்கு கொடுக்கப்பட வேண்டும் என்பதே பெரும்பான்மையான தமிழர்களின் கோரிக்கையாகும். இந்த நிலையில் வடகிழக்கு முஸ்லிம்கள் எவ்வாறு நடந்துகொள்வது? இதுதான் முஸ்லிம்கள் இன்று எதிர்நோக்கும் பாரிய பிரச்சினை. இச் சூழலில் இது பற்றிய எமது நிலைப்பாட்டை நாம் இன்றைய அரசியல் அரங்குக்குள் உறுதியாக முன்வைக்க வேண்டியவர்களாகவுள்ளோம்.

**நல்லிணக்க நடவடிக்கைகள்**

1964ல் திருகோணமலையில் தமிழரசிக் கட்சியின் 9வது மாநாட்டில் தலைவர் தந்தை செல்வநாயகம் அவர்கள் வடகிழக்கு அரசியல் அதிகாரம் தமிழ் முஸ்லிம் இனங்களுக்கிடையே பகிர்ந்து கொள்ளப்பட வேண்டும் எனப் பேசினார்.

அதிகாரங்களை நியாயமான அடிப்படையில் தமிழர்களும் முஸ்லிம்களும் பகிர்ந்து கொள்வதற்கான நல்லிணக்க ஏற்பாட்டைச் செய்து கொள்வதற்கான முயற்சிகள் எம்மால் கடந்த காலங்களில் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இதன் பயனாக தமிழர் விடுதலைக் கூட்டணிக்கும் இலங்கை முஸ்லிம் கவுன்சிலுக்கும் 1987ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 16-17ம் திகதிகளில் சென்னையில் நடந்த பேச்சுவார்த்தையில் பெரும்பான்மையான விடயங்களில் இணக்கம் காணப்பட்டன.

முஸ்லிம்களின் நலன்குறித்துப் பேச்சுவார்த்தை நடத்த தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைமைப்பீடம் முஸ்லிம் ஐக்கய விடுதலை முன்னனிக்கு அழைப்பு விடுத்தது. தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர்களுடன் 1988 ஏப்ரல் 15ம், 16ம், 19ம் திகதிகளில் சென்னையில் மிகச் சினேகபூர்வமான பேச்சுவார்த்தைகள் நடத்தப்பட்டு 1988 ஏப்ரல் 21ம் திகதி ஒரு கூட்டறிக்கையும் வெளியிடப்பட்டது.

இதே சந்தர்ப்பத்தில் ஏனைய தமிழ் அமைப்புகளின் தலைவர்களும் எங்களைச் சந்தித்து முஸ்லிம்களுடன் தாங்கள் கொண்டுள்ள நட்புறவையும், இரு இனங்களும் இணக்கமாக நடந்து கொள்ளத் தாங்கள் கொண்டுள்ள விருப்பத்தையும் எங்களிடம் வெளிப்படையாகத் தெரிவித்தனர். இந்தப் பேச்சுவார்த்தைகள் யாவும் இலங்கை, இந்திய அரசாங்கங்களின் அனுசரணையுடனேயே நடைபெற்றன. தமிழர் விடுதலைக் கூட்டணியுடனும், தமிழீழ விடுதலைப் புலிகளுடனும், நடத்திய பேச்சுவார்த்தைகளின் பின் வெளியிடப்பட்ட கூட்டறிக்கைகள் தமிழ் முஸ்லிம் இன ஒற்றுமையினதும் நல்லிணக்கத்தினதும் சாசனங்களாக வரலாற்றில் உள்ளன.

முஸ்லிம்களின் தனித்துவத்தையும், நலன்களையும் பேணிப் பாதுகாப்பதற்கென வடக்கு கிழக்கு மாகாணங்களில் செயற்படுத்தக் கூடிய ஏற்பாடுகள் குறித்து முஸ்லிம் அமைப்புகளும் தமிழ் அமைப்புகளும் பின்வரும் விடயங்களில் கருத்தொருமைப்பாடு கண்டுள்ளன.

- முஸ்லிம்களின் தனியானதும் வேறுபட்டதுமான இன, மத, சலாச்சாரம் பேணிப்பாதுகாக்கப்படுதல்.
- தமிழ் பேசும் மக்களின் வரலாற்று வசிப்பிடமென அங்கீகரிக்கப்பட்டுள்ள வடக்கு கிழக்கு மாநிலத்தில் முஸ்லிம்களது வரலாற்று வசிப்பிடங்கள் முஸ்லிம் இனத்தவரின் சனத்தொகைக்கேற்ப காணி நிலங்கள், இயற்கை வளங்கள் உள்ளடக்கப்பட்டு தனித்தனியான அரசியல் நிருவாகப் பிரிவுகளாக அடையாளம் காணப்படுதல்.
- முஸ்லிம் வரலாற்று வாழ்விடங்களில் சட்டம், ஒழுங்கு ஆகியவை சம்பந்தமான நிறைவேற்று அதிகாரம் முஸ்லிம்கள் கைவசம் இருத்தல்.
- வேலைவாய்ப்பு, காணிப்பகிர்வு, பொருளாதார அபிவிருத்தித் திட்டங்கள், முதலீடு சம்பந்தமானவற்றில் முஸ்லிம்கள் வரலாற்று வாழ்விடங்களுக்கு நியாயமான பங்கு கொடுத்தல்.
- காணிப்பங்கீட்டில் முஸ்லிம்கள் கிழக்கு மாகாணத்தில் 35%க்கு குறைவில்லாமலும், மன்னார் மாவட்டத்தில் 30%க்கும் எஞ்சிய வடமாகாணத்தில் 10%க்கும் உரித்துடையவர்களென அங்கீகரித்தல்.
- ஒனறிணைந்த வடகிழக்கு மாகாண சபைக்கு 35%க்குக் குறைவில்லாத முஸ்லிம் பிரதிநிதிகளை தெரிவு செய்வதற்கு அவசியமான திருத்தங்களை அரசியல் சாசனத்தில் ஏற்படுத்துவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படுதல்.

**ஒன்றிணைந்த வடகிழக்கு மாகாண சபை ஏற்படுத்துவதற்கான முஸ்லிம்களின் இணக்கப்பாட்டிற்க்கு தேவயான முக்கிய நடவடிக்கைகள்**

- **தமிழ் போராளிகளினால் வடகிழக்கிலிருந்து சட்டவிரோதமாக வெளியேற்றப்பட்ட முஸ்லிம்கள், அவர்களிடமிருந்து அபகரிக்கப்பட்ட காணி, வீடுவாசல்கள், சொத்துடைமைகள் ஆகியவற்றின் பூரண விபரம் முஸ்லிம் உரிமைகள் மன்றத்தினால் சேகரிக்கப்பட்டிருக்கிறது. இப்பிரச்சினைகள் சுமூகமாகத் தீர்க்கப்படுமானால் வடகிழக்கில் வாழும் தமிழருக்கும் முஸ்லிம்களுக்குமிடையில் நிலவும் விரோதம் நீங்கி நல்லிணக்கத்கிற்கான சாந்தியும் சமாதானமும் ஏற்பட வழிபிறக்கும்.**
- **ஏற்கனவே தமிழர்களுக்கும் முஸ்லிம்களுமிடையில் ஏற்பட்ட உடன்பாடுகள் நடைமுறைப்படுத்தப்படுதல் வேண்டும்.**
- **ஒன்றிணைந்த வடகிழக்கு மாகாண சபைாக்கான பிரதிநிதித்துவத்தில் சிறுபான்மையினருக்குச் சம பிரதிநிதித்துவம் - தமிழர் 50% - 37 அங்கத்தவர்கள், முஸ்லிம்கள் 35% - 26 அங்கத்தவர்கள், சிங்களவர் 15% - 11 அங்கத்தவர்கள். 5 அங்கத்தவர்களைக் கொண்ட வடகிழக்கு அமைச்சரவையில் தமிழர் 2 அமைச்சர்கள், முஸ்லிம்கள் 2 அமைச்சர்கள், சிங்களவர் 1 அமைச்சர் என்ற ரீதியில் ஆட்சி அதிகாரங்கள் பங்கிடப்பட வேண்டும்.**

**இவ்வாறான அதிகாரப் பகிர்வினைச் சாத்தியப்படுத்துவதற்கு மூன்று முக்கிய அம்சங்கள் பூர்த்தியாக்கப்பட வேண்டும்.**

**முதலாவது - முஸ்லிம்களின் கோரிக்கைகளை நிறைவேற்றுவதற்கு வடகிழக்கு தமிழர்களின் இணக்கம்.**

**இரண்டாவது - தமிழர் கோரும் ஒன்றிணைந்த வடகிழக்கு மாகாண சபை ஏற்படுத்துவதற்கு முஸ்லிம்களின் இணக்கம்.**

**மூன்றாவது - வடகிழக்கில் தமிழருக்கும் முஸ்லிம்களுமிடையில் ஏற்படும் இணக்கப்பாட்டினை சட்டபூர்வமாக்குவதற்கு இலங்கை அரசாங்கத்தின் உறுதியான நிலைப்பாடு.**

முஸ்லிம் இனத்தவரின் உரிமைகளை பாதுகாக்க நியாயமான நடவடிக்கைகள் எடுக்கப்படும்போது அத்தகைய நடவடிக்கைகளினால் தமிழரின் கோரிக்கைப்படி அரசியல், நிருவாக தேவைகளுக்காக ஒன்றிணைக்கப்படும் வடகிழக்கு மாகாணங்களின் தனித்துவம் குந்தகப்படுத்தப்படவோ அல்லது குலைக்கப்படவோ கூடாது.

வடகிழக்கு தமிழரும் முஸ்லிம்களும் ஒன்றிணைந்தால்தான் உண்டு வாழ்வு. அ∴தில்லை எனில் நம்அனைவருக்கும் தாழ்வு.

RECEIVED ON
27 FEB 2017
B363
SEUSL LIBRARY

வடகிழக்கு முஸ்லிமகளால் தெரிவு செய்யப்பட்டு இன்றய அரசாங்கத்தில் உள்ள அமைச்சர்களும் பாராளுமன்ற மாகாணசபை உறுப்பினர்களும் இனக்கலவரத்தால் நேரடியாகப் பாதிக்கப்பட்ட முஸ்லிம்களின் முக்கிய பிரச்சினைகள்பற்றி இலங்கை இனப்பிரச்சினை தீர்வுக்காக ஏற்படவிருக்கும் பேச்சுவார்த்தையின் போது சுதந்திரமாகவும், உறுதியாகவும் முன்வைப்பார்களா? இதுதான் இன்று வடகிழக்கு முஸ்லிம்களுக்குள்ள பெரும் சந்தேகமாகும்.

கிழக்கு மாகாண முதலமைச்சர், பொத்துவில் முஸ்லிம்கள் படுகொலை, அக்கரைப்பற்று நொறச் சோலையில் சவுதி அரேபிய நன்கொடையால் கட்டப்பட்ட சுனாமி வீடுகள், கருங்கொடித்தீவுப் பிரதேசம் அநியாயமாகப் பிரிக்கப்பட்டமை, கல்முனைக் கரையோர மாவட்டம், காத்தான்குடி முஸ்லிம் எல்லைக் கிராமங்கள், மட்டக்களப்பு முஸ்லிம் கொலனி, இனச்சுத்திகரிப்பின் போது சட்டவிரோதமாக அபகரிக்கப்பட்டுள்ள வடகிழக்கு முஸ்லிம்களின் விவசாயக்காணிகள், வீடுவாசல்கள், சொத்துக்கள், மீள்குடியேற்றம், மூதூர் முஸ்லிம்களுக் கெதிராக நடத்தப்பட்ட போர்குற்றங்கள், கிண்ணியா குரங்குபாஞ்சான் பள்ளிவாசல் ஆகிய வடகிழக்கு முஸ்லிம்களின் முக்கிய பிரச்சினைகள்பற்றி வடக்கு கிழக்கு முஸ்லிம்களால் தெரிவு செய்யப்பட்ட முஸ்லிம் பாராளுமன்றம் மற்றும் மாகாணசபை அங்கத்தவர்கள் அமைச்சர்கள் ஆகியோர்களின் நடவடிக்கைகள் சம்பந்தமாக நாம் கற்றுக்கொண்ட கசப்பான பாடங்கள் ஏராளம் ஏராளம்.

உத்தேச பேச்சுவார்த்தையின் போது முஸ்லிம் பிரதிநதிகளால் முன்வைக்க வேண்டிய முக்கிய விஷயங்கள் இனப்பிரச்சினையினால் நேரடியாகப் பாதிக்கப்பட்ட வடகிழக்கு முஸ்லிம்கள் சம்பந்தப்பட்டவையாக இருக்கவேண்டியது மிக மிக முக்கியமானதாகும். உடநடியாக நடைமுறைப்படுத்த வேண்டிய அரசியல்யாப்பின் 13வது திருத்தம் - மாகாணங்களுக்கு இன்னும் பகிர்ந்தழ்க்கப்படாமல் இருக்கும் காணி, பொலிஸ் அதிகாரங்கள், வடகிழக்கு ஒன்றிணைப்புக்கு, கிழக்குமாகாணத்தில் நடத்தபட வேண்டிய சர்வஜன வாக்கெடுப்பு, கிழக்கில் ஏற்படுத்த வேண்டிய முஸ்லிம் பெரும்பான்மை மாகாணசபை போன்ற முக்கிய பிரச்சினைகளே பேச்சுவார்த்தையின் போது வடகிழக்கு முஸ்லிம்கள் சார்பாக முன்வைக்க வேண்டிய அதி முக்கிய விஷயங்களாகும். அரசியல் சாசனத்தில் கூறப்பட்ட சரத்துக்களை நடைமுறைப்படுத்த மறுப்பது தண்டிக்கப்பட வேண்டிய குற்றம் மட்டுமல்லாமல் தேசத்துரோகமுமாகும்.

RECEIVED ON
27 FEB 2017
3262
SEUSL LIBRARY



எம்.ஐ.எம். முஹியத்தீன்

011966

**National Digitization Project**

***National Science Foundation***

Institute : South Eastern University of Sri Lanka

1. Place of Scanning : Main Library, South Eastern University of Sri Lanka, Oluvil
2. Date Scanned : 2018.02.14
3. Name of Digitizing Company : Sanje (Private) Ltd, No 435/16, Kottawa Rd, Hokandara North, Arangala, Hokandara
4. Scanning Officer

Name : I.W.A.C.J. Chandrasena

Signature : Charith

Certification of Scanning

*I hereby certify that the scanning of this document was carried out under my supervision, according to the norms and standards of digital scanning accurately, also keeping with the originality of the original document to be accepted in a court of law.*

Certifying Officer

Designation : Acting Librarian

Name : M. M. Mashroofa

Signature : [signature]

Date : 2018.02.14

*"This document/publication was digitized under National Digitization Project of the National Science Foundation, Sri Lanka"*